# கலைநிலம்



கலாசாரப் பேரவை
வலி தெற்கு பிரதேச செயலகம்
உடுவில்
2014/2015

பெற்றுக்கொள்ளப்பட்டது
06 JUL 2015
J/VC/43/CC€95

# கலைநிலம்

பிரதேச செயலகம்
உடுவில்.
2014/2015

| | | |
|---|---|---|
| **நூல்** | : | கலைநிலம் |
| **வெளியீடு** | : | வலிதெற்கு பிரதேச கலாசாரப் பேரவை<br>உடுவில் |
| **முதற்பதிப்பு** | : | 2015 |
| **இதழாசிரியர்** | : | திருமதி.பத்மராணி சிவஞானராசா<br>(கலாசார உத்தியோகத்தர்) |
| **அட்டைப்பட வடிவமைப்பு** | : | கு.குமணன் |
| **அச்சுப்பதிப்பு** | : | அறிவகம் (நெனசல)<br>இணுவில் பொது நூலகம் |
| **அளவு** | : | B5 |
| **பக்கங்கள்** | : | xiii+144 |
| **பிரதிகள்** | : | 400 |

# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

**மகாகவி சுப்பிரமணிய பாரதியார்**

# மலராக்கக் குழு

**தலைவர்**

**திரு.முத்துலிங்கம் நந்தகோபாலன்**

பிரதேச செயலாளர், உடுவில்

**மலராசிரியர்**

**திருமதி.பத்மராணி சிவஞானராசா,**

கலாசார உத்தியோகத்தர்,

**உறுப்பினர்கள்**

**திரு.வை.பிரபாகரன்,** கிராம உத்தியோகத்தர்.

**திரு.வே.நாகேந்திரராஜா,** கிராம உத்தியோகத்தர்.

**திரு.பா.பாலபத்மன்,** கிராம உத்தியோகத்தர்.

**திருமதி.ஜெ.ஆனந்தகௌரி,** முகாமையாளர், திவிநெகும திணைக்களம்.

**திருமதி.தி.நேசபவானி,** பிரதம முகாமைத்துவ உதவியாளர்.

**திரு.ம.ஜெயகாந்தன்,** அபிவிருத்தி உத்தியோகத்தர்.

**திரு.ப.சுதர்சன்,** அபிவிருத்தி உத்தியோகத்தர்.

**திருமதி. பி. வைலற் சுபாசினி,** அபிவிருத்தி உத்தியோகத்தர்.

**செல்வி.அ.பிரியாந்தி,** அபிவிருத்தி உத்தியோகத்தர்.

**திருமதி.ஸ்ரீ.தனிகா,** அபிவிருத்தி உத்தியோகத்தர்.

# தமிழ்த்தாய் வணக்கம்

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதில் சிறந்த திரவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே (1)

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பது போல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையா உன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே. (2)

**மனோன்மணியம்**

**பேராசிரியர் பெ.சுந்தரம்பிள்ளை**

## வலிகாமம் தெற்கு பிரதேச செயலகம், உடுவில்
# பிரதேச கீதம்

**பல்லவி**

வளம்சேரும் வலிகாமம் தென்பகுதி வாழ்கவே
வளர்பயிரும் கால்நடையும் மானிடரும் வாழ்கவே

வளம்சேரும் ....

**அனுபல்லவி**

உளம்மகிழ ஊக்கமுடன் ஒருகுடையில் வாழுவோம்
உத்தமர்கள் காட்டியபண் பாட்டினிலே நாளுமே

வளம்சேரும்..

**சரணங்கள்**

மரபுதரும் மக்கள்கலைப் பாரம்பரியத்துடன்
மாண்புமிகும் புத்துணர்வுப் பொலிவுதரும் இலக்கியம்
உரம்சேர்க்கும் கைத்தொழில் வாணிப வளங்களும்
உயர்ஆன்ம நலம்சேர்க்கும் தெய்வீக நிலைகளும்

வளம்சேரும்...

உழவர்களும் தொழிலாளர் உத்தியோ கத்தரும்
உயர்வுதரு கல்விகலை பண்பாட்டுச் செல்வரும்
வளம்சேர்க்கும் வணிகரும் சைவமொடு கிறீஸ்தவ
மதநெறியில் நலம்சேர்க்கும் குரவர்களும் வாழ்கவே

வளம்சேரும...

ஆணிவே ரெனநிற்கும் பாரம்பரி யத்துடன்
அழகுபொலி மலர்போலும் அறிவார்ந்த செல்வமும்
பேணிவளர் விஞ்ஞானம் தொழில்நுட்பம் தொடர்பாடல்
பெருமையுடன் இவையாவும் ஒருமையுடன் உயர்ந்தோங்க

வளம்சேரும்...

**கவியாக்கம்**

**வித்யாபூஷணம், பிரம்மஸ்ரீ ப.சிவானந்தசர்மா** B.A (Hons)

**(கோப்பாய் சிவம்)**

# பிரதேச கலாசாரப் பேரவை நிர்வாகசபை 2014-2015

**தலைவர்** :– திரு.மு.நந்தகோபாலன் – பிரதேச செயலாளர்

**செயலாளர்** :– திருமதி பத்மராணி சிவஞானராசா, கலாசார உத்தியோகத்தர்

**உபதலைவர்** :– கலாபூஷணம் திரு.ஆ.தெய்வேந்திரம்,

**உபசெயலாளர்** :– திரு.கா.சசிதரன்

**பொருளாளர்** :– கலாபூஷணம் திரு.மா.சீவரத்தினம்

**நிர்வாக உறுப்பினர்கள்** :– திரு.சி.மகாலிங்கம்

திரு.வே.நாகேந்திரராஜா

திரு.மா.ந.பரமேஸ்வரன்

கலாபூசணம் திருமதி.ஞானகுமாரி சிவநேசன்

திரு.இ.எயுயீன் மசனட்

திரு.மு.பொன்னுத்துரை

திரு.க.கஜன்

செல்வி.யோகேஸ்வரி சின்னத்தம்பி

திரு.எஸ்.சண்முகானந்தன்

திரு.பொ.ஜெயகரன்

පාර්ලිමේන්තුව

*பாராளுமன்றம்*

**PARLIAMENT**



## கலை நிலம் மலரட்டும் வாழ்த்துச் செய்தி

வலிதெற்கு பிரதேச செயலகத்தின் கலாசார பேரவை கலைநிலம் எனும் தலைப்பில் மலர் வெளியிடுவதறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன.

வலிதெற்குப் பிரதேசம் "உடுவில்", "கந்தரோடை" எனும் பழம் பெரும் ஊர்களை மையப்படுத்தி அழைக்கப்படுவதும் உண்டு.

"கந்தரோடை"யில் தமிழர் பௌத்த கோவிலும் ஏனைய இடங்களில் கிறீஸ்தவ தேவாலங்களும், சைவத் திருத்தலங்களும் நல்லிணக்கத்துடன் வளம் பெற்று நின்ற வரலாற்றுப் புகழையும் கொண்டதும் இப்பிரதேசமாகும்.

தமிழ்மொழி, பண்பாடு கலைகள் செழித்த பிரதேசம். இன்னும் சொன்னால் சைவமும் தமிழும் தழைத்தோங்கிய தேசம் என்றும் கூறலாம்.

இலங்கையில் பெயர் பெற்ற இராமநாதன் மகளிர் கல்லூரி மற்றும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி முதலான கல்விக் கலைக் கூடங்களும் சைவத் திருத்தலங்களும் வளம்பெற்ற பிரதேசமாகும்.

காங்கேசன்துறை தேர்தல் தொகுதி முன்னாளில் உடுவில் பிரதேசத்தை உள்ளடக்கியிருந்த பொழுதுதான் தந்தை செல்வநாயம் அவர்கள் தலைவராகத் தேர்தெடுக்கப் பெற்றுத் தமிழ் பேசும் மக்களின் தமிழரசுத் தலைவராக விளங்க வைத்த பிரதேசமிதுவாகும். அதன் பின் உடுவிலின் நல்லதொரு மனிதன் வி.தருமலிங்கம் அவர்களைத் தலைவனாகத் தேர்ந்தெடுத்த தேசமும் ஆகும்.

இப்பிரதேச செயலர் பிரிவில் கலைவளம் ஆடல் பாடல் நாட்டிய நாடகம், கூத்து என்பன பாரம்பரியமாகவும், நவீன உத்திகளுடனும் வளம் பெற்றுள்ளன.

நீர்வளம் நிலவளமும் வேளாண்மை மற்றும் பலதுறை விருத்திகளும் வளம் பெற்று வளரும் பிரதேசமாகும். பெரியார்களான குமாரசாமிப்புலவர். சி.வை.தாமோதரம் பிள்ளை, சிறுகதை எழுத்தாளர் இலங்கையர்கோன், இணுவை சின்னத்தம்பிப்புலவர், பண்டிமணி கந்தையா, வீரமணிஐயர் முதலானோர் சைவத்திற்கும், தமிழிற்கும் இசைக்கும் பெருந் தொண்டாற்றியுள்ளனர்.

உடுவில் பிரதேச செயலகம் மற்றும் உடுவில் பிரதேச சபை மக்கள் நலனுக்காக தம் நலன் பேணாது பயனுறும் நல்லதோர் நிர்வாக ஆளுமை கொண்டு மக்கள் மனம் கவரும் மையங்களாக வளர்ந்து வருகின்றன.

போரினால் பேரழிவை நம் மக்கள் சந்தித்த பின் இப் பிரதேசத்தில் பலதுறைகளிலும் இளைஞர் சமுதாயம் விழிப்பும் எழுச்சியும் கொண்டு உலகோடு ஒட்டி உயரும் மாண்பினை மெச்ச வேண்டும்.

மனித குலத்தின் கலை கலாசாரம் மற்றும் தமிழர் உரிமைகளைப் பேணி நம்மை நாமே ஆளும் எதிர்காலம் உருவாகிட உழைப்போம் எனும் உறுதியுடன் வலி தெற்குப் பிரதேச செயலகம் அதன் கலாசாரப் பேரவை வடக்கு மாகாணசபையுடன் இணைந்து வெளியிடும் "கலைநிலம்" மலர் சமுதாயத்தில் புதியதோர் உலகம் செய்ய வழிகாட்டுதல் வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

மாவை.சோ.சேனாதிராசா பா.உ

පාර්ලිමේන්තුව

***பாராளுமன்றம்***

**PARLIAMENT**



## வாழ்த்துச்செய்தி

வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேசசெயலகத்தின் கன்னி முயற்சியான "கலைநிலம்" சஞ்சிகைக்கு எனது வாழ்த்துசெய்தியினை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

எமதுபிரதேசத்தின் வரலாற்றுப் பதிவுகள் மற்றும் கலாச்சார விழுமியங் களை எடுத்து இயம்பும் நல் நோக்கத்தோடு தொடங்கப்படும் இச் சஞ்சிகை பலருக்கு உபயோகமாக இருப்பதோடு எமது பிரதேசத்தின் சிறப்பியல்புகளை பறைசாற்றுவ தாகவும் அனைத்து சமூகங்களினதும் கலை, சமய நிகழ்வுகளையும் பதிவு செய்வ தாகவும் இருக்கும் என எதிர்பார்க்கின்றேன்.

சஞ்சிகைகளின் வெற்றியானது செய்திகள் மற்றும் தரவுகளின் தரம் அவற்றின் உண்மைத்தன்மை, சாதாரண மக்களும் புரிந்து கொள்ளக்கூடிய மொழிநடை, செய்திகளின் பன்முகத்தன்மை போன்றவற்றில் தங்கியுள்ளது.

இவ்வாறான பிரதேசரீதியில் வெளிவரும் சஞ்சிகைகள் குறைந்துவரும் இக்காலகட்டத்தில் உங்களது இம்முயற்சியானது எமது மாணவர் மற்றும் சிறுவர் மத்தியில் அருகிவரும் வாசிப்புப் பழக்கத்தினை ஊக்குவிக்க உதவியாக இருக்கும் என்பதுடன் சமூகம் சார் அறிவையும் விழிப்புணர்வினையும் மேம்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

எமதுசமூகத்தினை கட்டியெழுப்பும் பெரும் பணியில் உங்களுடைய பங்குமிக முக்கியமானது என்பதுடன் உங்கள் நற்பணி சிறப்புற தொடர என் மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ம. ஆ. சுமந்திரன்**
**(பா. உ. தமிழுத் தேசிய கூட்டமைப்பு)**

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர் செயலகம்
வடக்கு மாகாணம், 124, ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

OFFICE OF THE MINISTER OF EDUCATION, CULTURAL AFFAIRS, SPORTS & YOUTH AFFAIRS
Northern Province, 124, Adiyapatham Road, Kalviyankadu, Jaffna.

අධ්‍යාපන, සංස්කෘතික කටයුතු, ක්‍රීඩා සහ යෞවන කටයුතු අමාත්‍යතුමාගේ කාර්යාලය
උතුරු පළාත, 124, ආඩියපාදම් වීදිය කල්වියංකාඩු යාපනය



# வாழ்த்துச்செய்தி

ஒவ்வொரு மனிதனும் தனது இனம் சார்ந்த பண்பாட்டம்சங்களையும் வரலாறுகளையும் தெரிந்திருக்க வேண்டும். ஏனெனில் ஓர் இனத்தின் தனித்துவம் அவ் இனத்தின் பண்பாட்டம்சங்களிலேயே தங்கியுள்ளது. ஓர் இனம் வாழ்ந்ததற்கான அடையாளம் அவ்வினத்தின் தொல்லியல் சான்றுகளினாலேயே உறுதிப்படுத்தப்படுகின்றது. இதனாலேயே ஒவ்வோர் நாடும் இனமும் தமது வரலாற்றம்சங்களைப் பாதுகாப்பதில் முன்னிற்கின்றது.

இந்த வகையில் தமிழர்கள் வாழ்ந்ததற்கான பல வரலாற்றம்சங்களைக் கொண்ட வலிதெற்கு பிரதேச செயலக கலாசார பேரவையானது "கலை நிலம்" என்ற பிரதேச மலரினை வெளியிடுவதையிட்டு பெருமையடைகின்றேன்.

இப்பிரதேசத்தின் தொல்லியல் வரலாற்றம்சங்கள், கலைகள், கலை வளர்த்த கலைஞர்கள், சமய சமூகப் பணியாற்றி மக்கள் மனங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற பெரியார்களைப் பற்றியும் இப்பிரதேசத்தின் வழிபாட்டுத் தலங்களின் வரலாறுகள், சுதேச மருத்துவத்தில் இப்பிரதேச சுதேச மருத்துவர்களின் பங்களிப்பு போன்ற பல்வேறுபட்ட வரலாற்று அம்சங்களை ஆவணப்படுத்தி மக்களுக்கு கையளிக்கும் நோக்கில் இம்மலர் வெளிவருவது பாராட்டுக்குரியதாகும்.

"கலை நிலம்" என்ற இம்மலர் சிறப்புடன் வெளிவரவும் இதற்காக முன்னின்று உழைத்த அனைவரையும் பாராட்டுவதுடன் இம்மலரானது சிறப்புடன் வெளிவர வேண்டுமென இறைவனை வேண்டி எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

திரு.த.குருகுலராசா,
கௌரவ கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சர்.
வடக்கு மாகாணம்

**வடக்கு மாகாண சபை** 14820

උතුරු පළාත් සභාව

Northern Provincial Council

# வாழ்த்துச்செய்தி



வலிதெற்கு கலாசாரப் பேரவையும் பிரதேச செயலகமும் இணைந்து வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வெளியிடப்படுகின்ற இப்பிரதேச மலருக்கான வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பேருவகை அடைகின்றேன். வலி தெற்குப் பிரதேசம் பழம் பெரும் கலாச்சார விழுமியங்களை பேணிப்பாதுகாத்து வருகின்றது. இது விவசாயத்தைப் பிரதான தொழிலாகக் கொண்ட பிரதேசம்.

அறிஞர்கள் புலவர்கள், பண்டிதர்கள், தொழில் வல்லுநர்கள், வைத்தியர்கள், பரம்பரை சித்த வைத்தியர்கள் வாழ்ந்த பிரதேசம். கல்வி, கலாசார விழுமியங்களையும் பாரம்பரியங்களையும் இப்பிரதேசத்தில் அண்ணளவாக உள்ளமுப்பது பாடசாலை களும் அவற்றுள் மகளிருக்காக நிறுவப்பட்ட இராமநாதன் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, என்பன சிறப்பான இடத்தை வகிக்கின்றன. இவற்றுடன் இராமநாதன் நுண்கலைக் கல்லூரியும், தற்பொழுது வட இலங்கை சங்கீத சபையும் முக்கிய பங்களித்து வருவதுடன் நாடகங்கள், நடனம், சங்கீதம், வாயிலாக இவை பேணப்பட்டு வந்துள்ளன. பொது நூல் நிலையங்கள், சனசமூக நிலையங்கள், வாசிகசாலைகள், ஆலயங்கள், தேவாலயங்கள் என்பனவும் தத்தம் சுற்றாடலுக்குரிய பாரம்பரியங்களை வளர்த்து வருகின்றன.

கந்தரோடையில் கண்டெடுக்கப்பட்ட புராதன பொருட்களும் அக்கால கலாசார முறையை எமக்குத் தெரிவிக்கின்றன. இவை மேலும் ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டியனவையாகவே காணப்படுகின்றது. உடுவில் பகுதியில் அண்மையில் புதிதாக திறந்து வைக்கப்பட்ட கலாசார மத்திய நிலையம் இப்பகுதிக்கு கலாசார பாரம்பரியங்களை மேம்படுத்தி வருகின்றதென்பது எனது உறுதியான நம்பிக்கை. இந்தப் பிரதேச மலரைச் சிறப்பாக வெளியிடுவதற்கு உறுதுணையாக இருக்கும் வலி தெற்கு பிரதேச செயலர் உட்பட மலர் ஆசிரியர் மலர்க் குழுவினரையும் பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இப் பயனுள்ள மலரைப் இப் பிரதேச மக்கள் விரும்பி வரவேற்பர் என்பதில் சந்தேகமில்லை. இம்மலர் வெளியீடு சிறப்பாக நடைபெற வாழ்த்துவதுடன் தொடர்ந்து எமது கலாசாரம், பண்பாடுகளை அடுத்துவரும் இளம் சமுதாயத்தினரும் அறிந்து பேணிப் பாதுகாக்கும் வகையில் நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துவதுடன் வருடா வருடம் வெளிவரும் இத்தகைய மலர்கள் எமக்கு வழிகாட்டும் பொக்கிஷங்களாக விளங்க வேண்டும் எனக் கூறி எனது வாழ்த்துரையை நிறைவு செய்கிறேன்.

**த.சித்தார்த்தன்**
**மாகாணசபை உறுப்பினர்**
**வடமாகாணம்.**

දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்
Government Agent / District Secretary

දුරකථනය පොදු
பொது தொலைபேசி
General Telephone } 021 222 2233
021 222 2234

දුරකථනය
தொலைபேசி
Telephone } 021 -222 2235

**දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.**
**மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.**
**District Secretariat, Jaffna.**

ෆැක්ස්
தொலைநகல்
Fax } 021- 222 2355

E-mail: gajaffna@sltnet.lk

මගේ අංකය
எனது இல.
My No:

ඔබේ අංකය
உமது இல:
Your No.

දිනය
திகதி
Date



# அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாண மாவட்டத்தின் பத்துக்கிராமங்களை உள்ளடக்கிய பிரதேசமாக வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச செயலகம் மிளிர்கின்றது. இப்பிரதேசத்தின் கிராமங்கள் விவசாயத்திற்கு சிறப்பான மண்வளத்தினைக் கொண்டதாக அமைவதோடு கலைஞர்களின் கலைத்திறத்திற்கும் குறைவில்லாத பிரதேசமாகக் காட்சியளிக்கிறது.

இலங்கையில் வரலாற்றுக்கால தொடர்புடன் கூடிய தொல்லியல் சான்றாதாரங்களையும் (கந்தரோடை) தன்னகத்தே கொண்ட பிரதேசமாக விளங்குவதும் குறிப்பிடத்தக்கது. இப்பிரதேச மக்களின் வழிபாட்டுக்குரிய ஆலயங்களில் பரராஜ சேகரப்பிள்ளையார் ஆலயம், இணுவில் கந்தசுவாமி ஆலயம் என்பன தொன்மையான வரலாற்றுச்சிறப்பை எடுத்துக் கூறும் ஆலயங்கள் எனலாம்.

இப்பிரதேசத்தின் வரலாற்று ஆவணமாக வெளிவரும் "கலை நிலம்" என்னும் இப்பிரதேச செயலக மலர் கலைஞர்களின் விபரங்களையும் இசை, நடனக்கலை, தொடர்பான பல விடயங்களையும் உள்ளடக்கி வெளிவருவதும் தொல்லியல் சார் விபரங்களோடு ஆலய வரலாறு இப்பிரதேசத்தின் சமூக பெரியார்கள், சுதேச மருத்துவர்கள் சுதேச மருத்துவம் தொடர்பான விபரங்களை உள்ளடக்கியிருப்பதும் போற்றுதற்குரியது.

"கலைநிலம்" இப்பிரதேச மக்களின் ஆவணங்களாக எதிர்கால சந்ததியினரும் அறிய உதவும் வகையில் இக்கலை நிலம் செழிக்க வளமாக உழைத்த பிரதேச செயலர், மலர்க் குழுவினர் மற்றும் இக்கலைநிலத்தில் பயிரிட்ட படைப்பாளர்கள் என அனைவரையும் மனப்பூர்வமாக வாழ்த்தி கலைநிலம் நன்கு செழிக்க நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நா.வேதநாயகன்
அரசாங்க அதிபர்/ மாவட்டசெயலாளர்
மாவட்டச்செயலகம்
யாழ்ப்பாணம்.

## வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளரின் வாழ்த்துச்செய்தி



உடுவில் பிரதேச செயலகத்தால் வெளியிடப்படும் பிரதேச மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இம்மலரானது உடுவில் பிரதேசத்தின் கலை, கலாசாரம், பண்பாடு மற்றும் மக்களின் வாழ்க்கை முறைகளைத் தாங்கி வெளிவருவதுடன் சான்றுப்படுத்தக்கூடிய ஆவணமாக அமையும் என்பதிலும் ஐயமில்லை.

பிரதேசத்தின் அபிவிருத்தி, பொருளாதாரம், கல்வி, மருத்துவம் கலைத்துறை சார்ந்த முக்கிய அடைவுகளையும் சாதனைகளையும் ஆவணப்படுத்தி அடுத்த சந்ததிக்கு கையளிக்கும் முக்கிய வரலாற்று பதிவாக பிரதேச மலர்கள் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

காலத்தின் தேவையறிந்து முன்னெடுக்கப்படும் இம்முயற்சியானது எழுத்தாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுப்பதுடன் பிரதேச அபிவிருத்தியின் முக்கிய பதிவாக இருக்கும் என்பது பேருண்மையாகும். இம்மலரானது தொடர்ந்தும் வெளிவரவேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டி இச்செயற்பாட்டினை முன்னெடுத்து வரும் பிரதேச செயலர், கலாசார உத்தியோகத்தர் மற்றும் கலாசார பேரவையினர் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இ.இரவீந்திரன்**
**செயலாளர்,**
**கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை**
**மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,**
**வடமாகாணம்.**
**05.06.2015**

# வாழ்த்துச்செய்தி



யாழ் குடாநாட்டின் வலிகாமம் பிரதேசத்தின் ஆரம்ப பகுதியாக விளங்கும் வலிகாமம் தெற்குப் பிரதேசத்தின் பிரதேச செயலகத்தினால் வெளியிடப்படும் "கலைநிலம்" மலருக்கான வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பேருவகையடைகின்றேன்.

பயிர் செய் நிலங்கள் பழமைவாய்ந்த சைவ ஆலயங்கள், புகழ் பூத்த கல்லூரிகள் மட்டுமன்றி பல அரச நிறுவனங்களையும் பாரம்பரியமான சந்தைகள் என்பவற்றையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்ற வலிகாமம் தெற்கு பிரதேசத்தின் கலை பண்பாடு விசேடங்களை வெளிக் கொண்டு வருவதற்கான சிறப்பான ஏற்பாடாக இந்த மலர் வெளியிடப்படுவது மிகவும் வரவேற்கத்தக்கதாகும். பொதுவாக ஒரு காலப்பகுதியில் குறித்த பிரதேசத்தில் வாழ்ந்த மக்களின் பொருளா தாரம், சமூகநிலை, நடையடை பாவனை என்பவற்றை எடுத்தியம்புபவையாகும்.

அந்த வகையில் வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்தினரின் பெரும் முயற்சியின் பயனாக இப்பிரதேசத்தின் கலையம்சங்களைத் தாங்கி வெளிவரும் "கலைநிலம்" மலர் செழிப்பதற்கு உழைத்த பிரதேச செயலாளர், கலாசாரப் பேரவையினர், மலர்க்குழுவினர், வடமாகாண பண்பாட்டு திணைக்களம், கல்வி மான்கள், மலருக்கான ஆக்கங்களை வழங்கி மெருகேற்றினோர் போன்றவர்களின் பணி விதந்து பாராட்டத்தக்கதாகும். இம்மலரை வெளியிட உதவிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்து மலர் வெளியீடு சிறப்புற எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

**பா. செந்தில்நந்தனன்**
**மேலதிக அரசாங்க அதிபர்**
**மாவட்டச் செயலகம்**
**யாழ்ப்பாணம்**

14820



# கலை நிலம் மலர்

"ஒரு நாடு ஒரு இனம், ஒரு சமூகம், ஜனநாயக அடிப்படையில் அமைதியான முறையில் இருந்து வருகின்றது என்றால் அந்த நாடு, இனம், சமூகம், நல்ல புத்தகங்களிலிருக்கும் கருத்துக்களின் அடிப்படையில் நிர்வகிக்கப்படுகின்றது" என்கிறார்

"வால்டர்" எனும் அறிஞர் பெருமகன்.

அந்தளவிற்கு நல்ல கருத்துக்கள் அடங்கிய ஒரு புத்தகம் மக்கள் மத்தியிலே செல்வாக்குச் செலுத்துகிறது. "கலை நிலமும்" அப்படியானதொரு புத்தகமாக இருக்குமென்று நம்புகின்றேன். நான் அறிந்த வகையில் "கலைநிலம்" தான் சார்ந்த தனது பிரதேசம் சார்ந்த (உடுவில் பிரதேசம்) வரலாற்று ஆவணமாக துலங்குகின்றது. இங்கிருந்த, இருக்கின்ற, சமய, சமூக பொருளாதார ஆட்சி முறை சார்ந்த மேன்மைகளை வெளிக்கொண்டுவர முயன்றிருக்கின்றது. அதனது முயற்சி வெற்றியளித்திட வாழ்த்துகின்றேன். இச்செயற்பாட்டை சிறப்பாக மேற்கொண்டுவர உழைத்துநிற்கும் பிரதேச செயலர் திரு.மு.நந்தகோபாலன் அவர்களுக்கும் அவரோடு சேர்ந்து பணியாற்றும் சகல உத்தியோகத்தர்களுக்கும் எனது பாராட்டுக்களை தெரிவிப்பதில் மகிழ்வடை கின்றேன்.

நன்றி

**பா. கஜதீபன்**
**மாகாணசபை உறுப்பினர்.**
**வடமாகாணம்**

# வாழ்த்துச்செய்தி



வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்தினால் வெளியிடப் படுகின்ற "கலைநிலம்" எனும் பிரதேச மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்தக் கலை நிலம் பிரதேச மலரில் கலைஞர்கள்,பெரியோர்கள், ஆலயங்கள், புராண இடங்கள் எனப் பல்வேறு விடயங்கள் இணைக்கப்பட்டு ஆவணப் படுத்தப்பட்டிருப்பது மிகவும் மகிழ்ச்சியான விடயமாக இருக்கின்றது. ஒரு தலைமுறை மனிதர்கள் தம் வாழ்க்கை நிகழ்வுகளை தம் கால வரலாற்றுப் பெருமைகளை அடுத்த சந்ததிக்கு கைமாற்றம் செய்ய வேண்டியது காலத்தின் தேவையாக இருக்கின்றது.

ஒவ்வொரு தனிமனிதனுக்கும் சிறப்பான இயல்புகள் இருப்பதைப்போல ஒவ்வொரு கிராமங்களுக்கும் கூட தனிப்பட்ட அடையாளங்களும், சிறப்பியல்புகளும் இருக்கின்றன என்பதை ஒவ்வொரு ஊரினதும் தகவல்கள் எமக்கு வெளிப் படுத்துகின்றன. சில தகவல்கள் செவிவழிக் கதைகளாக கையாளப்பட்டு பின்னர் கால ஓட்டத்தில் கலக்கும் போது கரைந்தும் போய் விடக் கூடிய நிலையும் கூட ஆபத்தானதுதான். அதற்காகத்தான் ஆவணப்படுத்தல் என்பது மிகவும் அவசியமானது என்பது உணரப்படுகின்றது.

இவ்வாறான ஒரு சூழ்நிலையிலே வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்தினரும் கலாசாரப்பேரவையினரும் இணைந்து வடமாகாண கல்விப்பண்பாட்டலுவல்கள் விளையாட்டு அமைச்சின் அனுசரனையுடன் வெளியிடுகின்ற இந்தக் "கலைநிலம்" என்கின்ற பிரதேச மலரானது இப்பகுதி வரலாற்றினை எதிர்காலச் சந்ததியினருக்கு எடுத்துச் சொல்வதில் ஒரு சிறு பங்களிப்பினையாவது செய்யும் என்பதில் ஐயமில்லை.

இம் மலரானது தனது "கலைநிலம்" எனும் பெயருக்கேற்ப வலிகாமம் தெற்கு பிரதேசத்தின் கிராமங்களின் அடையாளங்களை வெளிக்கொண்டு வந்திருக்கின்றது என்பதில் எது விதமான ஐயமில்லை. இந்தக் கிராமங்கள் கலை வளர்த்த, வளர்கின்ற வளரும் இடமாகத் தொடர்ந்து கொண்டே செல்லும்.

**திரு.முத்துலிங்கம் நந்தகோபாலன்**
**பிரதேச செயலர்**
**வலி தெற்கு உடுவில்**

# வாழ்த்துச்செய்தி



கலை என்பது மனிதப் பண்புகளை வெளிப்படுத்தும் ஒரு அழகிய சாதனமாகும். அத்தகையதான கலைகள் யாவும் மனிதனால் படைக்கப்பட்டவையே. எனவே மனிதன் தன் சிறப்பான பண்புகளை வெளிப்படுத்தும் வகையில் படைக்கப்பட்டதான கலைகள் காலத்திற்குக் காலம் மெருகூட்டப்பட்டு மிளிர்ந்து வந்துள்ளன. அவ்வாறு பல்வேறு பண்புகளுடன் வளர்ந்து வந்துள்ள கலை, பண்பாட்டு அம்சங்களை பாதுகாத்தலும் அவற்றை எதிர்கால சந்ததியினருக்கு கையளித்தலும் எமது இன்றைய மிகப்பாரிய தேவையாகும். அந்தவகையில் வலிதெற்கு பிரதேச செயலகத்தினால் வெளியிடப்படும் "கலை நிலம்" எனும் மலரானது பல விடயம் சார் சிறப்புக் கட்டுரைகள், தொல்பொருள் வரலாற்றம்சங்கள், மறைந்தும் இன்றும் நம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கும் சமய சமூகப் பெரியார்கள் பற்றிய பல்சுவை விடயங்கள், சுதேச மருத்துவம், பிரதேச சுதேச வைத்தியர்கள் பற்றிய கட்டுரைகள் மற்றும் வலிதெற்கு பிரதேசத்திற்குட்பட்ட ஆலயங்களின் வரலாறுகள் என பலவற்றையும் தன்னகத்தே சுமந்து வெளி வருகின்றமை மிகவும் வரவேற்கத்தக்க ஒன்றாகும். இத்தகைய அரிய தகவல்களை ஆவணப்படுத்தி வைத்தல் இன்றைய காலத்தில் மிக வேண்டியதொன்றாகும். அந்த வகையில் "கலை நிலம்" எனும் இப் பிரதேச மலர் நன்முறையில் உருப்பெற்று அனைவரது கையிலும் அரும்பெரும் பொக்கிஷமாக தவழ்ந்து அரிய தகவல்களை மக்கள் மத்தியில் பரவச் செய்ய எனது ஆசிச் செய்தியினை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**திருமதி.ந.வனஜா**
**உதவிப் பணிப்பாளர்**
**பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம்**
**வடமாகாணம்**

# மலராசிரியரின் உள்ளத்திலிருந்து ...



ஒவ்வொரு பிரதேசத்திற்கும் தனித்துவமான வரலாறு, கலை, இலக்கியம், பண்பாட்டம்சங்கள் உள்ளன. இத்தனித்துவமான வரலாற்றம்சங்கள் காலப்போக்கில் மறைந்து போகக்கூடிய சந்தர்ப்பங்களும் ஏற்படுகின்றன. இதனால் இவற்றை பேணிப் பாதுகாத்து ஆவணப் படுத்தி எதிர்காலச்சந்ததியினருக்கு கையளிக்க வேண்டிய பெரும் பொறுப்பு எம்மிடம் உள்ளது. இந்நோக்கத்தினை அடையும் பொருட்டே இன்று வலிதெற்கு பிரதேச செலகமும் வலி தெற்கு கலாசாரப்பேரவையும், இணைந்து "கலைநிலம்" என்ற இப் பண்பாட்டு மலரினை வெளிக்கொணர்வதனையிட்டு பெருமகிழ்சியடை கின்றோம்.

சிங்கை அரசுக்கு முன்னமே வட இலங்கையில் தோன்றிய முதலாவது தமிழ் அரசின் தலைநகரமென வரலாற்றறிஞர்களால் குறிப்பிடப்படும் கதிரமலையை அதாவது இன்று கந்தரோடை என அழைக்கப்படும் பிரதேசத்தை தன்னகத்தே கொண்டுள்ள எமது வலி தெற்கு பிரதேசமானது, தொல்லியல் சான்றாதாரங்களை யும், பல தமிழ் மன்னர்களால் வழிபடப்பட்ட தல வரலாறுகளையும் தாங்கி நிற்கின்றது. வரலாறுகள் தொடர்ந்து பேணப்படவேண்டும் என்ற நோக்கத்தினால் இவ்வரலாற்றுக்கட்டுரைகளை இம்மலரில் சேர்த்துள்ளோம்.

மேலும் இப்பிரதேசமானது பல சமூக சேவையாளர்களையும், பல்வேறுபட்ட கலைகளையும், கலைஞர்களையும், பல தமிழ் அறிஞர்களையும், சுதேச வைத்தியர் களையும் தந்த பிரதேசமாகும். கலையால் வளர்ந்த பல கலைஞர்களும், பல அறிஞர்களும் இருந்தபோதிலும் பக்கங்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு, எல்லோரையும் இம்மலரில் சேர்க்க முடியாதமையால் அவர்களில் சிலரைப்பற்றிய கட்டுரைகளையே இம்மலரில் இணைத்துள்ளோம்.

இப்பிரதேசத்தில் பல பாடசாலைகள் இருக்கின்றன. எனினும் நீண்ட கல்விப் பாரம்பரியத்தையும், ஆசியாவிலேயே முதன்முதலாக பெண்களுக்கென தனியான பெண்கள் கல்லூரி என்ற பெருமையையும் பெற்ற உடுவில் மகளிர் கல்லூரியினதும், தமிழறிஞரான சேர்பொன் இராமநாதனால் பெண் பிள்ளைகளுக்கென அமைக்கப்பட்ட யாழ் இராமநாதன் கல்லூரியினதும், இவ்வாண்டு தனது நூற்றி

ஐம்பதாவது ஆண்டு நிறைவினை கொண்டாடிக் கொண்டிருக்கும் இணுவில் இந்துக் கல்லூரியினது வரலாற்றினையும் இம்மலர் தாங்கிவருகின்றது.

மேலும் "கலைநிலம்" செழிப்பாக வளர்வதற்கு உரமிட்டு உதவிய வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சிற்கும் நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

தங்கள் சிரமங்களைப் பாராது இம்மலரில் வெளிவந்துள்ள கட்டுரைகளை நாம் கேட்டவுடன் அவற்றை வழங்கி உதவிய பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், துறைசார் வல்லுனர்கள், மற்றும் கட்டுரையாளர்கள் ஆகியோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இம்மலருக்கு வாழ்த்துச்செய்திகளை வழங்கி, இம்மலர் சிறப்புடன் வெளிவர வாழ்த்திய அனைத்துப் பெருந்தகைகளுக்கும் எமது உளம்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் கலைநிலம் செழிப்படைய தங்களது முழு ஒத்துழைப்பையும் வழங்கிய பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இம்மலரினை அழகாக வடிவமைத்து அச்சேற்றித் தந்த அறிவகம் (நெனசல) இணுவில் பொது நூலக நிறுவனத்தினருக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

**திருமதி. பத்மராணி சிவஞானராசா**
B.A(Hons), M.A (Culture)
கலாசார உத்தியோகத்தர்,
செயலாளர், கலாசாரப்பேரவை
பிரதேச செயலகம், உடுவில்.

# பொருளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| 01. கந்தரோடையிற் கிடைத்த தொல்லியற் சின்னங்கள் | 1-13 |
| 02. இணுவில் அருள்மிகு ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் திருக்கோயில் – வரலாறு | 14-18 |
| 03. இணுவில் கந்தசுவாமி கோவில் ஆலய வரலாறு | 19-25 |
| 04. இணுவில் செகராசசேகரப்பிள்ளையார் கோவில் | 26-28 |
| 05. கதிரமலை சிவன் வரலாற்றுச் சிறப்பும் தோற்றமும் வளர்ச்சியும் | 29-31 |
| 06. ஆலடி கட்டுக்குள நாச்சிமார் ஆலயம் | 32-33 |
| 07. ஏழாலை தம்புவத்தை வைரவ சுவாமி கோவில் ஆலய வரலாறு | 34-35 |
| 08. சாளம்பை முருகமூர்த்தி தேவஸ்தான வரலாறு | 36-38 |
| 09. சுன்னாகம் தாழையடி ஐயனார் கோயில் தோற்றமும் வளர்ச்சியும் | 39-41 |
| 10. சுன்னாகம் வருஷப்புல ஸ்ரீ மகாமாரி அம்பாள் ஆலய வரலாறு | 42-43 |
| 11. சூராவத்தை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வரலாற்றுச் சுருக்கம் | 44-46 |
| 12. சுன்னாகம் ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் தேவஸ்தான வரலாறு | 47-48 |
| 13. சேர் பொன் இராமநாதன் அவர்களின் சமாதி ஆலய வரலாறு | 49-51 |
| 14. சுன்னாகம் குமாரசாமிப் புலவர் | 52-55 |
| 15. சி.வை.தாமோதரம்பிள்ளை வாழ்க்கை | 56-67 |
| 16. பொதுப்பணிக்கு தம்மை அர்ப்பணித்த பெரியார். விசுவநாதர் தர்மலிங்கம் | 68-71 |
| 17. சங்குவேலி பெற்றெடுத்த தவப்புதல்வன் சீமான் கா.வ.வைத்திலிங்கம் முதலியார் | 72-75 |
| 18. ஆத்மீக வாழ்வில் ஆத்மஜோதி நா. முத்தையா | 76-80 |
| 19. நான் கண்ட வீரமணி ஐயர் | 81-86 |
| 20. ஆலயக் கிரியைகள் சிறக்க இணுவிலில் ஒளிரும் மகாதேவக் குருக்கள் எனும் ஞானாக்கினி | 87-88 |
| 21. இணுவையூரின் பெருமையை உலகறியச் செய்த தவில் மேதை வி.தட்சணாமூர்த்தி | 89-92 |
| 22. நாதஸ்வர இசைக்கலைஞர் கலாபூஷணம் இராசு சுந்தரமூர்த்தியுடனான ஓர் நேர் காணல் | 93-96 |
| 23. பண்ணிசைக்கலைஞர் தாவடியூர் திருஞானசம்பந்தன் | 97-99 |

| | | |
|---|---|---|
| 24. | சவாரிக் கலை விற்பன்னர் திரு.பொன்னையா திருபாலசிங்கத்துடனான ஓர் சந்திப்பு | 100–102 |
| 25. | எனது மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய வலி தெற்குப் பிரதேச முது இசைக் கலைஞர்கள் | 103–107 |
| 26. | காசிவாசி செந்திநாதையர் பிறந்த ஊர், கலையும் தமிழும் சைவமும் வளர்ந்த மண் – குப்பிளான் கிராமம் கிராமத்தின் முந்திய நிலையும் பிந்திய நிலையும் | 108–111 |
| 27. | வலிகாமம் தெற்கு பிரதேச செயலக பிரிவுக்குள் கலை இலக்கிய வளர்ச்சி | 112–116 |
| 28. | வலி தெற்கு பிரதேச செயலக பிரிவின் கீழ்வரும் எழுத்தாளர்கள் | 117–124 |
| 29. | வலி தெற்கு சிற்பக் கலை பாரம்பரியம் – ஓர் பார்வை | 125–127 |
| 30. | சுதேச மருத்துவ வளர்ச்சியில் வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த சுதேச மருத்துவர்களின் பங்களிப்பு அன்றும் – இன்றும் | 128–134 |
| 31. | அமெரிக்கன் மிசனரியின் வருகையும் உடுவில் பிரதேசத்தின் வளர்ச்சியும் | 135–137 |
| 32. | இணுவில் இந்துக்கல்லூரியின் வளர்ச்சிப் பாதை | 138–139 |
| 33. | இராமநாதன் கல்லூரியும் நூற்றாண்டு விழாவும் | 140–144 |
| 34. | கலாசார அபிவிருத்தி செயற்திட்டம் 2014 | 145–146 |

# மலராக்கக்குழு



இருப்பவர்கள்

**இ.வ:** திரு.வே.நாகேந்திரராஜா *(கிராம உத்தியோகத்தர்)*, திரு.வை.பிரபாகரன் *(கிராம உத்தியோகத்தர்)*, திரு.மு.நந்தகோபாலன் *(பிரதேச செயலாளர்)*, திருமதி.சி.பத்மராணி *(கலாசார உத்தியோகத்தர்)*, திருமதி.தி.நேசபவானி *(பிரதம முகாமைத்துவ உதவியாளர்)*

நிற்பவர்கள்

**இ.வ:** திருமதி.ஸ்ரீ.தனிகா *(அபிவிருத்தி உத்தியோகத்தர்)*, திருமதி.பி.வைலற் சுபாசினி *(அபிவிருத்தி உத்தியோகத்தர்)*, திரு.ம.ஜெயகாந்தன் *(அபிவிருத்தி உத்தியோகத்தர்)*, திரு.பா.பாலபத்மன் *(கிராம உத்தியோகத்தர்)*, திரு.ப.சுதர்சன் *(அபிவிருத்தி உத்தியோகத்தர்)*, திருமதி.ஜெ.ஆனந்தகௌரி *(முகாமையாளர், வாழ்வின் எழுச்சித் திணைக்களம்)*, செல்வி.அ.பிரியாந்தி *(அபிவிருத்தி உத்தியோகத்தர்)*

# கந்தரோடையிற் கிடைத்த தொல்லியற் சின்னங்கள்

பேராசிரியர் செ.கிருஸ்ணராசா
வரலாற்றுத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் புராதன, மத்தியகால பண்பாட்டு மரபுகள் பற்றிய வரலாறானது இற்றைவரைக்கும் தெளிவாக ஆராயப்படாத ஓர் அலகாகக் காணப்படு கின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு வெளியே அனுராதபுரம், பொலனறுவை, திருகோணமலை, கந்தளாய், பதவியா, குருநாகல், மாந்தை ஆகிய புராதன–மத்திய கால தொல்லியல் மையங்களிலிருந்து எண்ணிக்கையில் அதிகமான தொல்லியற் சின்னங்கள் கண்டுபிடிக்கப் பெற்று ஆராயப் பட்டுள்ளமையைப் போன்று யாழ்ப்பாணக் குடாநாட்டினுள் அத்துறை எண்ணிக்கையில் தொல்லியல் மையங்கள் இதுவரையில் விரிவான விஞ்ஞான அடிப்படையிலான முறையியலின் அடிப்படையில் அகழ் வாய்விற்கு உட்படுத்தப்பட்டு, புலமை ரீதி யான ஆராய்விற்கு உட்படுத்தப்படவு மில்லை – அம்முயற்சியும் மேற்கொள்ளப் படவுமில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆனாலும் அண்மைக்காலத்தில் தனிப்பட்ட ரீதியில் சிலர் பண்பாடு பற்றிய ஈடுபாட்டுடன் தொல்லியற் சான்றுகளை இப் பிராந்தியத் தோடு இணைத்த வகையில் சேகரிக்கப்பட்டு வந்திருக்கக் கூடிய ஒரு முறையில் பிரதேச தனித்துவம் வாய்ந்த தொல்லியல் சான்று களையும், உலோக மற்றும் கற்சிற்பங்களை யும், நாணயங்களையும் புராதன, மத்திய கால அரசிருக்கை ( நல்லூர், கந்தரோடை, இணுவில் – காரைக்காடு) மையங்களிலிரு ந்து வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்ற வகையைக் காண்கின்றோம். 1 இவ்வாறான ஒரு நிலையை மேலும் வலுப்படுத்தி, இப்பிரதேச தனித்துவத்தினைத் துல்லியமாக அடையாளம் கண்டு கொள்ளும் வகையி லானதுமான சில தொல்லியற் சான்றாதாரங் கள் வழுக்கியாற்று மருங்கிலுள்ள கந்த ரோடையிலிருந்தும் அண்மைக் காலங்களில் கிடைத்துள்ளன. அவ்வகையான சான்று களைப் பற்றிய ஆய்வினை உள்ளடக்கிய வகையில் இவ் ஆய்வுக்கட்டுரையின் பிரதான நோக்கம் அமைந்துள்ளது.

### கந்தரோடை பற்றிய ஆய்வினைத் தொடக்கி வைத்தவர்கள்

கந்தரோடை மீதான ஆய்வுகளை முதன்முதலில் முனைப்பாக முன்னெடுத்த வர்கள் தெற்கிலிருந்து வந்த சிங்கள ஆய் வாளர்கள் என்பதில் சந்தேகமேயில்லை. அவ்வாறான ஆய்வாளர்களுள் குறிப்பிடத் தக்க ஒருவராக விளங்கியவர் போல் நு.பீரிஸ் என்பவராவார்.

இவர் 1917 ஆம் ஆண்டிலிருந்து அடிக்கடி கந்தரோடைக்கு வருகை தந்து, கந்தரோடையின் மேற்பரப்பிலும் மண் மேடுகளிலும் காணப்பட்டிருக்கக்கூடிய பௌத்த சின்னங்களையும், தொல்லியல் எச்சங்களையும் சேகரித்துச் சென்றதுமன்றி, காலத்துக்குக் காலம் கந்தரோடை வாழ் மக்களால் சேகரித்துக் கொடுக்கப்படுகின்ற நாணயங்கள் போன்ற அருமையான சான்று

களையும் தென்னிலங்கைக்கு எடுத்துச் சென்று அந்த நாணயங்களிலே காணப்படு கின்ற வடிவங்கள், எழுத்துக்கள் போன்ற வற்றை அடிப்படையாகக் கொண்டு அவை பௌத்த சிங்கள மக்கள் வாழ்ந்த குடியிருப்புக்களையும், பண்பாட்டினையும் உறுதிப்படுத்துகின்ற தொல்லியல் எச்சங் களாகவே காட்டப்பட்டு, கணிக்கப்பட்டு பெரும்பாலான ஆய்வுக்கட்டுரைகளிலே எழுதப்பட்டுள்ளமையை நாம் காண்கி றோம். அவ்வாறு எழுதப்படும் பொழுது சிங்கள – பௌத்தம் என்ற உணர்வினை மட்டும் கருத்தில் எடுத்தவராக அத்தொல் பொருட்களை கையாண்டுள்ளமையைக் காண்கின்றோம்.

அவருடைய ஞாபகார்த்தமாக வெளியிடப்பட்ட Poul E.Peiris இன் Felicitation Volume இலும் கூட கந்தரோடையிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட எழுத்துப் பொறிக் காத இரு சங்க காலத்துப் பாண்டிய நாணயங்களை Buddhist Chakkara Type coins என்ற தலைப்பிலே ஓர் ஆய்வுக் கட்டுரையாக வெளியி டப்பட்டுள்ளதைக் காண்கிறோம். கந்த ரோடையிலிருந்து அகழ் வாய்வுகளின் போதும் மேலாய்வுகளின் போதும் மீட்கப்பட்ட வெள்ளி உலோகத்தாலான அச்சுக்குட்படுத் தப்பட்ட நாணயங்களிலே காணப்படுகின்ற குறியீடுகள் யாவற்றையும் பௌத்த குறியீட்டு எச்சங்களாகக் கொண்டு அதனை கந்தரோடையில் வாழ்ந்த பௌத்த – சிங்கள மக்களினுடைய இருப்பிற்கான ஆதாரமாக போல் இ பீரிஸின் ஞாபகார்த்த மலரில் ஆய்வுக்கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளமை யைக் காண்கின்றோம்.



உண்மையிலே முதலில் குறிப்பிட்ட அந்த இரண்டு நாணயங்களும் சங்க காலத்து பாண்டிய மரபுக்குரிய நாணயங்கள் என்ப தனை அறியும்பொழுது, அந்த நாணயம் தொடர்பாக கொடுக்கப்பட்ட விளக்கம் சற்றுத் திரிபுபடுத்தப்பட்டு, எவ்வாறு அந்தக் காலகட்டத்திலே பௌத்த சிங்கள அடை யாளத்தினை கந்தரோடையினூடாக வளர்த்தெடுக்கும் நோக்குடன் அக்கட்டுரை எழுதப்பட்டிருப்பதனை நாம் காணலாம். பாண்டியன் பெருவழுதி என்ற பாண்டிய மன்னனால் வெளியிட்டு வைக்கப்பட்ட பெயர் பொறித்ததும் பொறிக்காததுமான பல நாணயங்கள் எமக்கும் கந்தரோடையி லிருந்து கிடைத்துள்ளன.



பாண்டிய மன்னன் வெளியிட்ட நாணயங்கள் –முற்பக்கம் (பெருவழுதி நாணயங்கள்)

இவற்றிலே குறிப்பாக பெருங் கற்கால பண்பாட்டு செல்வாக்கினை உறுதிப் படுத்தும் குறியீட்டு வடிவங்களை காணக் கூடியதாகவுள்ளது. எமக்கு கிடைத்த நாணய வகைகளுள் வெள்ளியிலான அச்சுக்குத்தப் பட்ட நாணயங்களைத் தொடர்ந்து தமிழகத்து பாண்டியர் நாணயங்கள் பலவும், சங்ககாலத்து சோழர் மரபுக்குரிய செம்பினா லான அச்சுக் குத்தப்பட்ட நாணயங்கள் சிலவும் கிடைத்திருக்கின்ற வகையை இங்கு குறிப்பிடலாம். சங்ககாலச் சோழர் வம்சத் திற்குரிய செம்பு உலோகத்தாலான புலி உருவம் பொறித்த நாணயங்களும் கிடைத் துள்ளன.

இவற்றைவிட நாணய ஆதார மென்று பார்க்கும்போது சுடு மண்ணிலான சூலம் வரையப்பட்ட சதுரமானதும் வட்ட மானதுமான நாணய வகைகள் பல எமக்குக் கிடைத்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. வட்ட வடிவமானதும் சதுரமானதும் சற்சதுர மானதுமான நாணயங்கள் கந்தரோடை என்ற நகரத்தின் தொடக்க கால வாணிப நட வடிக்கைகளின் புராதன தன்மையை வெளிப் படுத்துகின்ற ஆதாரமாக இங்கு குறிப்பிட லாம்.

இந்த ஒரு பின்னணியில் எமது பிரதேசத்து தொல்லியல் வளத்தில் கந்த ரோடை பெறுகின்ற முக்கியத்துவத்தை நீண்ட காலமாக (32 வருடங்கள்) சேகரித் துப் பெற்றுக்கொண்ட தொல்லியல் எச்சங் களை அடிப்படையாகக் கொண்டு, அதன் தொல்லியல் – வரலாற்று முக்கியத்து வத்தை ஆராயும்போது, பெருங்கற்கால (வரலாற்று உதய காலம்) பண்பாட்டுக்குரிய எச்சங்களிலிருந்து ஆங்கிலேயர் ஆட்சிக் காலம் வரைக்கும் தொடர்ச்சியான வகை யில் பண்பாட்டு வளர்ச்சி கந்தரோடையில் ஏற்பட்டிருந்தது என்பதனை தொல்லியல் மூலங்கள் ஊடாக அறிய முடிந்தது. வர லாற்று உதய காலத் தொல்லியல் எச்சங்கள் என்ற வகையில் பெருங்கற்காலப் பண் பாட்டு இருப்பினை நன்கு உறுதிப்படுத்தக் கூடிய வகையிலான, இரும்பினால் செய்யப் பட்ட வேல் ஆயுதங்கள், கறுப்பு சிவப்பு மண்பாண்டத்தினால் செய்யப்பட்ட தாழிகள், பெருங்கற்கால மக்களால் பயன்படுத்தப் பட்டதாகக் கருதப்படுகின்ற மோதிரங்கள் (நாகர் மோதிரங்கள்), காப்புகள், சங்கு வளையல்கள், விலையுயர்ந்த மணிகளுடன் கி.மு. 8ஆம் நூற்றாண்டுக்கும் கி.மு. 1ஆம் நூற்றாண்டுக்கும் உரியதாகக் கருதப்படு கின்ற சாணைக்கல் அம்மியும், குழவியும் பெற்றுக் கொள்ளப்பட்டன.

உண்மையில் கந்தரோடை என்ற புராதன நகரத்தினுடைய அடித்தளத்தில் சிதறிக் காணப்படுகின்ற எச்சங்களுள் பெரும்பாலானவை கறுப்பு – சிவப்பு மட் பாண்டங்களை உபயோகித்த பெருங்கற் கால மக்களினுடைய பண்பாட்டுச் சிதறல் களாகவே காணப்படுகின்றன. தற்போது சர்ச்சைக்குள்ளாகியிருக்கின்ற தொல்லியல் திணைக்களத்தினுடைய காணிப்பரப்பான “கயற்கண்ணி” என்றழைக்கப்படுகின்ற அந்த இடத்தில் அகழ்ந்து வெளிப்படுத்தப்பட்டுள்ள வட்டமானதும், சதுரமானதும், நீள்சதுர மானதும், ஒன்றுக்குள் ஒன்று செருகப்பட்ட வட்டவடிவமான நிலையில் ஈமப் புதையல் சின்னங்கள் கொண்டுள்ள அடித்தளத்தில் கூட பெருங்கற்கால எச்சங்கள் சிதறிக் காணப்படுகின்றன.



முச்சூலக்குறியீடு பொறித்த சிவத்த மட்பாண்டம்– பெருங்கற்காலம்– அகழ்வு செய்யப்பட்டுக் கிடைத்த மையம் – உச்சாப்பனை, கந்தரோடை

ஆனால் துரதிஸ்டவசமாக அரசாங் கத்தினால் (தொல்லியல் திணைக்களத்தி னால்) மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வின் போது, குறிப்பாக வட்டவடிவமாக அமைந்து ள்ள அத்திவாரக் கட்டடத்துக்குக் கீழே திட்ட வட்டமாக எப்பொருட்களையும் அகழக் கூடாது என்ற கட்டுப்பாடு விதிக்கப்பட்டதன் அடிப்படையில், அந்த பௌத்த ஈமச் சின்னங் கள் புதைக்கப்பட்ட அந்த மையத்துக்கு கீழே என்ன இருக்கின்றதென்பதை எவருமே அறிந்து கொள்ளாத வாறு தடுக்கப்பட்டன.

இத்தகைய நோக்கு இலங்கைத் தொல்லியல் திணைக்களத்தினுடைய பொதுவான நோக்கமாக இருந்தாலும்கூட,

வளர்ந்து வருகின்ற தென்னாசிய தொல்லியல் பண்பாட்டு அறிவியல்துறைக்கு இவர்களால் ஒரு சாவுமணி அடித்தது போன்றே இருப்பதனை நாம் இங்கு காண்கின்றோம்.

தென்னாசியாவில் குறிப்பாக, இந்தியாவைப் பொறுத்த வரையும் சரி, பாகிஸ்தானைப் பொறுத்த வரையிலும் சரி, இலங்கையைப் பொறுத்தவரையிலும் சரி Fundamentalism என்று குறிப்பிடப்படுகின்ற மத அடிப்படைவாதக் கருத்துக்களினால் தொல்லியல் ஆய்வுகள் சிதிலமடைந்து போய் இருந்ததற்கு கந்தரோடையும் ஓர் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

இலங்கைத் தொல்லியல் திணைக்களத்தை இயக்குபவர்களாக, மகாசங்கத்திலுள்ள பிரபல்யம் வாய்ந்த பௌத்த மகா தேரர்கள் (சிங்கள உறுமய கட்சியினர்) விளங்குவதனால், தொல்லியல் என்ற அறிவியற்துறையானது இன்று அதன் உண்மையான நோக்கில் இருந்து விலக்கப்பட்டு, மழுங்கடிக்கப்பட்டு அடிப்படைவாதிகளினுடைய கருத்துக்களைக் காவிச் செல்கின்ற ஓர் ஊடகமாக மாற்றப்பட்டதைக் காண்கின்றோம். இது எப்பொழுது, எவ்வாறு அச்சிக்கல்களிலிருந்து விடுபடும் என்பதைப் பொறுத்துத்தான், இலங்கையில் ஒரு பல்தேசிய மொழி பேசுகின்ற மக்கள் கூட்டம் உண்மையான சமாதான முறையில் வாழக் கூடிய ஒரு சுவாரசியமான காலம் உருவாகும் என்பதில் நான் அசையாத நம்பிக்கை கொண்டிருக்கிறேன்.

1980ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை மற்றும் தொல்லியல்துறை இணைந்து நடாத்திய ஓர் அகழ்வாராய்ச்சி ஆனைக்கோட்டையில் மேற்கொள்ளப்பட்டது. இங்கு மேற் கொள்ளப்பட்ட ஆய்வின்படி யாழ்ப்பாணக் குடாநாட்டினுடைய புராதன குடியிருப்பு பற்றிய தொல்லியல் எச்சத்தை மட்டுமல்லாது, யாழ்ப்பாணத்து தமிழ் மக்களுக்குரிய அரச பாரம்பரியம் தொடர்பான புதிய செய்தியைக்கூட அகழ்வாராய்ச்சிச் சான்றுகள் உலகுக்கு வெளிப்படுத்த உதவியது. அதற்குப் பின்னர் யாழ்ப்பாண ஆய்வாளர்கள் எவரும், இலங்கைத் தொல்லியல் திணைக்களத்தின் அனுமதியின்றி எங்கும் அகழ்ந்து, வெட்டிப் புராதன தொல்பொருட்களை மீட்டெடுத்து அவற்றுக்கு விளக்கம்கண்டு, அவற்றைப் பிரசுரித்து மக்களினுடைய இருப்பை வெளிப்படுத்துவதற்கு உரிமை அற்றவர்கள் என்ற நிலையில் தமிழ்ப் பிரதேசத்துத் தொல்லியல் ஆய்வாளர்களுக்குத் தடைகள் விதிக்கப்பட்டிருந்தது. அந்த நிலைமை இப்பொழுதும் தொடர்கின்றது. தொல்லியல் திணைக்களத்தில் விசேட அனுமதி பெற்றுத்தான் எமது துறை அகழ்வுப் பணிகளிலேயோ அல்லது மேலாய்வுப் பணிகளிலேயோ ஈடுபடவேண்டிய சூழல் இன்றும் இருந்து கொண்டிருக்கின்றது.



கோவேதம் / கோவேத எனப் பொறிக்கப்பட்ட முத்திரை மோதிரச் சாசனம் – ஆனைக் கோட்டை

1971ஆம் ஆண்டில் பென்சில்வேனிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விமலா பெக்லி "விளா மரத்தடியில்" ஒரு பரீட்சார்த்த அகழ்வுக் குழி ஒன்றினைத் தோண்டி விஞ்ஞான பூர்வமாக முதன் முதலில் பெருங்கற்கால மண்படையடுக்குகளை இனம் கண்டுகொண்டார். அவர் அவ் விளாமரத்தடிக் குழியிலிருந்தே செம்பிலாலான முச்சூலம் ஒன்றையும் அகழ்ந்தெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர் P. இரகுபதியின் தொல்லியல் மேலாய்வே கந்த ரோடையில் காணப்பட்ட பெருங்கற்காலப் பண்பாட்டின் சிறப்புக்களை இனங்காண உதவியது எனலாம். வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கின் மீதான தொல்லியல் மேலாய்வின்போது ஆனைக்கோட்டையில் உள்ள கரையாம் பிட்டி ஈடுகாட்டு மையம் அடையாளம் காணப்பட்டு அகழ்வாய்வுக்கு உட்படுத்தப் பட்டது. 1980ஆம் ஆண்டில் மேற்கொள்ளப் பட்ட இவ்வகழ்வாய்வினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையினர் கா.இந்திரபாலாவின் தலைமையில் மேற் கொண்டிருந்தனர். இங்கு மேற்கொள்ளப் பட்ட அகழ்வாய்வின் விளைவாக பெருங் கற்கால மண்படையடுக்குகளிலிருந்து இரு மனித எலும்புக்கூடுகளும் உணவு எச்சங் களும் பண்பாட்டுச் சான்றுகளும் சேகரிக்கப் பட்டன. அவற்றுள் ஓர் எலும்புக்கூட்டின் தலைப்பாகத்துக்கு அண்மித்த வகையில் கறுப்பு – சிவப்பு மண்பாண்டைச் சட்டி ஒன்றுக்குள் முத்திரை மோதிரம் ஒன்று வைக்கப்பட்டிருந்தமையை அடையாளம் காண முடிந்தது. ஆண் எலும்புக்கூட்டுக்குரிய தலைப்பாகத்திலேயே இச்செம்பிலாலான முத்திரை காணப்பட்டது.

கந்தரோடை மிகநீண்ட கால மாகவே சிங்கள – பௌத்த மக்களினுடைய குடியிருப்பு மையம் என்று சொல்லப்பட்டு வந்ததன் பின்னணியில், தமிழ் மக்கள் இன்றும் அதனை அவ்வாறே சிந்தித்துக் கொண்டிருப்பதன் அடிப்படையில் ஆனைக் கோட்டை அகழ்வாய்வின் மூலம் கிடைத்த சான்றுகளின்அடிப்படையில் அந்த எண்ணக் கரு சற்று கைவிடப்பட்ட நிலையினை இன்று நாம் காண்கின்றோம்.

தென்னிந்திய – ஈழத்தொடர்பு களைப் பண்பாட்டு அடிப்படையில் ஊடகப் படுத்திய முக்கியமான அலகுகளில் (Units) மகாயான பௌத்த மதமும் ஒன்றாகும் என்பதனை எவருமே மறைக்க முடியாது. சிலப்பதிகாரம், மணிமேகலை தொடக்கம், வீரசோழியம், கண்ணகி கதாவ வரைக்கும் ஈழத்திலும், தமிழகத்திலும் மகாயான பௌத் தம் தமிழரது பண்பாட்டுச் செய்திகளைத் தொடர்ச்சியான வகையில் காவிச் சென்றிருந்தன. தமிழ் இலக்கிய இலக்கண மரபுகள்கூட மகாயான பௌத்த சமயத்தினூ டாகப் பேணப்பட்டுக் கிடைத்துள்ள நிலையில், ஈழத்தமிழரது வாழ்க்கை பற்றிய இலக்கண – இலக்கிய – பண்பாட்டு மரபுகளுக்கு என்ன நேர்ந்தது என்ற வினாவிற்கு கந்தரோடையே பதிலைத்தர இருக்கின்றது என்பதனை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஈழத்தமிழரது மகாயானப் பௌத்தப் பண்பாட்டு வாழ்வின் தொட்டிலாகக் கந்த ரோடை திகழ்ந்து வந்திருந்தது என்பதே வரலாற்று வளர்ச்சியில் நாம் காண்கின்ற யதார்த்தமாகும். அந்த வரலாறு எங்கேயோ வொரு இடத்தில் மறைக்கப்பட்டு, உரு வழிக்கப்பட்டுவிட்ட நிலையில் இலங்கையி லுள்ள பாளி – பௌத்த இலக்கியங்களினூ டாகவே அவற்றைத் தேடிப் பார்க்கின்ற





துர்ப்பாக்கிய நிலை எமக்கு ஏற்பட்டுவிட்டது. அநுராதபுரத்தினை மகா வம்சம் என்ற பாளி மொழி இலக்கியத்தினூ டாகப் பார்த்தது போல், அதே இலக்கியத்தி னூடாக கந்தரோடையையும் நாம் பார்த்துப் பார்த்துப் பழக்கப்பட்டுவிட்டோம் இல்லை இல்லை பழக்கப்படுத்தப்பட்டுவிட்டோம் என்பதே யதார்த்தம். இந்நிலை ஒழிய வேண்டும். பதிலாகச் சிலப்பதிகாரம், மணி மேகலையூடாகக் கந்தரோடையைப்

பார்க்கப் பழகிக் கொள்ளுங்கள். அப்போது தான் இழந்து போன ஈழத்தமிழர் வரலாறு துலக்கம் பெறும். கபாடபுரம் கந்தரோடை யாகிய செய்தியை மறந்து, கதிரகொட கந்த ரோடையான செய்தியையே நீங்கள் உங்கள் கைகளில் தூக்கி வைத்துக் கொண்டு, கந்தரோடைக்கு சிங்கள – பௌத்த சாய லையும் பூசிவிட்டீர்கள் – பூச வைக்கப்பட்டு விட்டீர்கள். ஆனால் கந்தரோடையின் புதை மண்படையடுக்குகளை விஞ்ஞான ரீதியில் உரித்துரித்து எடுத்தோமாயின், பழந்தமிழர் பண்பாட்டுத் தளத்தின் காலத்தால் முந்திய மையமென கந்தரோடையை இனங்காண முடியும். இதனை உறுதிப்படுத்துமாப் போல் நாகதுவீபத்திற்கும் (நாகதீபம் – யாழ்ப் பாணக் குடாநாடு) நாகபட்டினத்திற்கும் இடையே இருந்த பண்பாட்டுத் தொடர்பு களை அடையாளம் காணும் விதத்தில் எமக்குப் பண்பாட்டுச் சான்றுகள் பல கிடைத் துள்ளன. அவற்றுள் மிகவும் குறிப்பிடத் தக்கதாயுள்ள அம்சம் யாதெனில், சோழர் காலத் தமிழக – வடஇலங்கை உறவுப் பாலத்தை மேலும் மெருகூட்டும் வகையில் எமக்குக் கிடைத்துள்ள ஒரு வெண்கலச் சமாதி புத்தர் சிற்பம் என்றால் உங்களில் பலரும் ஆச்சரியம் அடைய நேரிடும். தங்க முலாம் பூசப்பெற்ற அவ்வரிய பொக்கிஷமே மகாயான பௌத்தத்திற்கும் – ஈழத் தமிழருக்கும் இடையே இருந்திருக்கக் கூடிய இறுக்கமான தொடர்பினைக் கந்தரோடை யூடாக வெளிப்படுத்தியுள்ளது. இதுவே தமிழ்ப் பௌத்தத்தின் உச்சமான கால கட்டத் தில் கந்தரோடையைப் பிரதிநிதித்துவம் செய்த வரலாற்றுச் சின்னமாகவும் அமைந் தது என்றால் அது மிகையில்லை. இச் செய்திக்குப் பின்னராவது கந்தரோடை யைத் தமிழ்ப் பௌத்தப் பாரம்பரியத்தின் ஒரு தொட்டிலாக இலங்கை வாழ் தமிழ் மக்களும் பாளி – பௌத்த மத ஜீவிகளான – சிங்கள மக்களும் ஏற்றுக்கொள்வர் என நாம் திடமாக நம்புகின்றோம். இதற்குப் பின்னும் கந்தரோடை மீதான எமது பண்பாட்டி ருக்கை மீது அவநம்பிக்கை உங்களில் யாராவது ஒருவருக்கு ஏற்படும் பட்சத்தில் அவர் சித்தசுவாதீனம் அற்றவர் என்றே முடிவுகட்ட வேண்டும்.

தென்னிந்திய – ஈழத்தொடர்பு களைப் பண்பாட்டு அடிப்படையில் ஊடகப் படுத்திய முக்கியமான அலகுகளில் (Units) மகாயான பௌத்த மதமும் ஒன்றாகும் என்ப தனை எவருமே மறைக்க முடியாது. சிலப் பதிகாரம், மணிமேகலை தொடக்கம், வீர சோழியம், கண்ணகி கதாவ வரைக்கும் ஈழத்திலும், தமிழகத்திலும் மகாயான பௌத்தம் தமிழரது பண்பாட்டுச் செய்திக ளைத் தொடர்ச்சியான வகையில் காவிச் சென்றிருந்தன. தமிழ் இலக்கிய இலக்கண மரபுகள்கூட மகாயான பௌத்த சமயத்தினூ டாகப் பேணப்பட்டுக் கிடைத்துள்ள நிலை யில், ஈழத்தமிழரது வாழ்க்கை பற்றிய இலக்கண – இலக்கிய மரபுகளுக்கு என்ன நேர்ந்தது என்பதையிட்டு நீங்கள் யாராவது சிந்தித்தது உண்டா? அவ்வாறு சிந்தித்திருந் தால் கந்தரோடையை உங்கள் சிந்தனையி லிருந்து நீங்கள் கைவிட்டிருக்கவே மாட்டீர்கள்.

ஈழத்தமிழரது மகாயானப் பௌத்தப் பண்பாட்டு வாழ்வின் தொட்டிலாகக் கந்தரோடை திகழ்ந்து வந்திருந்தது என்பதே வரலாற்று வளர்ச்சியில் நாம் காண்கின்ற யதார்த்தமாகும். அந்த வரலாறு எங்கேயோ வொரு இடத்தில் மறைக்கப்பட்டு, உரு



தவழும் பால கிருஸ்ணருடைய செப்புப்படிமம். கற்பொக்குணை – கந்தரோடை (சோழர் கலைப்பாணி)

வழிக்கப்பட்டுவிட்ட நிலையில் இலங்கையிலுள்ள பாளி - பௌத்த இலக்கியங்களினூடாகவே அவற்றைத் தேடிப் பார்க்கின்ற துர்ப்பாக்கிய நிலை எமக்கு ஏற்பட்டுவிட்டது. அநுராதபுரத்தினை மகாவம்சம் என்ற பாளி மொழி இலக்கியத்தினூடாகப் பார்த்தது போல், அதே இலக்கியத்தினூடாக கந்தரோடையையும் பார்த்துப் பார்த்துப் பழக்கப்பட்டுவிட்டோம். ஆனால் கந்தரோடையின் புதை மண்படையடுக்குகளை விஞ்ஞான ரீதியில் உரித்துரித்து எடுத்துப் பார்த்தோமாயின், பழந்தமிழர் பண்பாட்டுத் தளத்தின் காலத்தால் முந்திய மையமொன்றினைக் கந்தரோடை தாங்கியிருந்த முறைமையைக் கண்டு கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படும். Sir ஐராவதம் மகாதேவன் கூட கந்தரோடையின் மட்படைப் படிமானத்தினுள் கபாடபுரத்தின் எச்சங்கள் புதையுண்டு போன வரன் முறையை மீட்டெடுக்க முடியும் என நம்புகின்றார். அவருடைய நம்பிக்கை வீண் போகாது என்பதனையே எமது அண்மைக்காலக் கண்டுபிடிப்புகள் கந்தரோடை மீதான சமுத்திரவியல் நாகரிகம் தொடர்பான இருப்பினை உறுதிப்படுத்தியுள்ளன.

**வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கில் பெருங் கற்காலப் படிமங்கள்:**

தென்னாசிய நாகரிக வரலாற்றில் ஒரு மாபெரும் திருப்பு முனையை ஏற்படுத்தியிருந்த சம்பவமானது சிந்து மாகாணத்திலுள்ள லார்க்கான மாவட்டத்தில் பௌத்த ஸ்தூபி ஒன்றின் கண்டுபிடிப்புடன் நிகழ்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது. அதன் விளைவாக சிந்துவெளி நாகரிகம் வெளிவந்தது. அதேபோன்று கந்தரோடையில் கண்டுபிடிக்கப்பட்ட பௌத்த எச்சங்களே கந்தரோடையில் ஒரு மாபெரும் வாணிப சர்வதேச நாகரிகம் மறைந்துள்ளது என்பதனைக் காட்டிக் கொடுத்துள்ளது. அன்று இந்த மையமானது (பெரு) வழுதி ஆற்றின் இரு புறங்களிலும் சமத்துவமான முறையில் கட்டட, நிறுவன அலகுகளைக் கொண்டு வளர்ச்சிபெற்று இருந்தமையை தொல்லியல் மேலாய்வுகளின்போது அவதானிக்க முடிந்தது. றோமானிய வாணிபக்கிடங்கு ஒன்று வழுக்கையாற்றுக்கும் தற்போதைய உடுவில் குளத்திற்கும் (திரும்பு துறைக்கும்) இடையே காணப்பட்டிருந்தது என்பதற்கான சான்றுகள் அண்மையில் கிடைத்துள்ளன.

புராதன தோணித்துறை ஒன்றினை "திரும்புதுறை" என்ற பரப்புக் கொண்டிருந்தது. இப்பிராந்தியம் தற்போதைய உடுவில் குளத்தின் ஒரு முனையைக் குறிப்பிட்டு நின்றதெனலாம். புதைந்து போன மரத்தோணியின் பல பாகங்கள் இங்கிருந்து மீட்கப்பட்டிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

தனித்துவம் வாய்ந்த பல்வேறு பண்பாட்டுக் கூறுகளைத் தாங்கிய தளங்களில் தென்னிந்தியாவிலிருந்து கிளர்ந்தெழுந்த திராவிடமொழிக் குழுமங்களையும் மதக் குழுக்களையும் கொண்டு, பிராந்திய சூழலுக்கேற்ப பண்பாட்டுக் கோலங்களை உருவாக்கித் தத்தம் பண்பாட்டுப் பகைபுலங்களில் பண்பாட்டு வேரினை நன்றாகப் பாய்ச்சி, வரலாற்றுக்காலச் சமூக உருவாக்கத்திற்கு வித்திட்டு நின்ற ஒரு காலப் பகுதியாகவே இலங்கையிலும் பண்பாடு தோற்றுவிக்கப்பட்டது என்பது பேராசிரியர் சிற்றம்பலம் அவர்களின் கருத்தாகும். அவ்வகையில் உருவான இனக் குழுமங்களுள் நாகர் வம்சத்தினரே குறுணிக் கற்காலப் பண்பாட்டினை முற்றுவித்து வரலாற்று உதய காலத்தினை இலங்கையில் தொடக்கிவைத்த முதன் மக்களாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளமையைக் காணலாம். அவ்வகையில் நாகர் வம்சத்தவரே இலங்கையின் முதல் வரலாற்றுக் குடிகள் என்பதும், இவர்களே

முதன்முதலாக குளம்கட்டி வளம் பெருக்கிய நீர்ப்பாசனவியல் நிறுவனங்களை உரு வாக்கிய மக்கள் கூட்டம் என்பதும், இரும் பின் உபயோகத்தினையும், சில்லின் (Wheel) பாவனையையும் தமது வாழ்வில் இணைத்து வைத்தவர்கள் என்பதும் அண்மைக்காலத் தொல்லியல் ஆய்வுகளின் அடிப்படையில் நிறுவப்பட்ட அம்சங் களாகும். இதேபோன்று கந்தரோடையில் மேற்பரப்பிற் காணப்பட்ட பௌத்த கலாசார அழிபாடுகளின் எச்சங் களே வழுக்கையாற்றுப் பரப்பில் உள்ள வண்டல் மண்படிவுகளுக்குள் மறைந்திருந்த பெருங்கற்காலத் திராவிடக் கலாசாரத்தை வெளிக்கொணர உதவியிருந்ததென்றால் அதில் சந்தேகம் எழமுடியாது.

வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கில் மிகவும் அண்மைக் காலத்தில் எமக்குக் கிடைத்த தொல்லியற் கருவூலமான சாணைக்கல் அம்மியும் குழவியும் திராவிடப் பண்பாட்டு ரீதியாக வரலாற்று முக்கியத்து வம் பெற்றுக் காணப்படுகின்றன. அதாவது பெருங்கற்கால மிருக வடிவங்களுள் ஒன்றான பன்றியின் உருவவியலை அடிப் படையாகக் கொண்ட இச்சாணைக்கல் அம்மியானது நான்கு கால்களைக் கொண்டு ஒரு விளிம்பில் வரைபு ஒன்றினையும் கொண்டும், முச்சூழக் குறியீடு ஒன்றினைக் கொண்டும் காணப்படுவது ஆதித்திராவிடப் பண்பாட்டின் அடிப்படை மூலத்தினை எமக்குக் கோடிட்டுக் காட்டுகின்றது.



சிந்துநதிப் பள்ளத்தாக்கு நாகரிகம் ஒன்றில் பயிலப்பட்ட வரைபுமுறை ஒன்று மிக நீண்ட பிரதேசங்களையும் காலத்தினை யும் கடந்து வந்து வழுக்கையாற்றுப் பள்ளத் தாக்கிலுள்ள கந்தரோடையில் உளள "கற்பொக்கணை" என்ற மையத்தில் புதைந் திருந்த சாணைக்கல் அம்மியில் பதியப் பட்டிருந்தமையே ஆதித்திராவிட பண்பாட்டு மூலமொன்றில் சிறந்த வெளிப்பாடாக அமைந்தது எனலாம். அவ்வரைபினை நிலைக்குத்தாக நோக்கும்போது படகு ஒன்று பாய்மரத்துடன் காணப்படும் தோற்றத் தினையும், பக்கவாட்டாக நோக்கும்போது மீன் தலையொன்றின் தோற்றத்தினையும் கொண்டுள்ளது. இவ்வரைபு சிந்துவெளி முத்திரைகளில் பெருமளவிற்கு வெளிப் படுத்தப்பட்டுள்ளவையாகவும் காணப் படுவது குறிப்பிடத்தக்கது.

**கந்தரோடை ஆபதி தமிழ்ப் பிராமிச் சாசனம்:**

மிகவும் அண்மைக் காலத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட ஒரு தொல்லியற் சான்று என்ற வகையில் கந்தரோடையி லிருந்து மீட்டெடுத்த "ஆபதி" மட்பாண்டத் தமிழ்ப் பிராமிச் சாசனம் ஈழத்தமிழர் வரலாற்றிற்கு மேலும் உதவுவதாக உள்ளது. கறுப்பு – சிவப்பு மட்கலத்தில் பொறிக்கப் பட்ட இச்சாசனம் சங்ககால வாழ்வியல் முறையை எமது அறிவிற்கு தெளிவாக்கு கின்றது. அதாவது ஈழத்தமிழர் பண்பாட்டுப் பகைப்புலமானது தென்னிந்தியத் தமிழகப் பண்பாட்டுப் பகைப்புலத்துடனான தொடர்பு களையும் சமாந்தரமான உறவுகளையும் காலாதிகாலமாகக் கொண்டிருந்திருப்பினும் ஈழத்துக்கெனத் தனித்துவமான வெளிப்பாட் டினை தமிழகத்திலிருந்தும் சிறப்புக் கூறாக வேறுபடுத்திய நிலையில் தாங்கிக் கொண்டி ருப்பதனை இச்சாசனத்தினூடாக இப்போது காணமுடிகிறது. தற்கால நிலையில் தமிழ் மொழி வழக்காறானது யாழ்ப்பாணத்தில் இதன் தனித்துவத்தினையும் இலக்கிய வழ

மைகளையும், இலக்கணச் செழுமைகளை யும் கொண்டு எவ்வாறு தமிழக மொழிப் பயன்பாட்டின் விழுமியங்களிலிருந்து தனித்துவப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கின் றதோ அவ்வாறே புராதன ஈழத்தமிழர் பண் பாட்டு மரபுகளில் மட்பாண்ட சாசன வழக் காறும் குடாநாட்டினுள் பரவலாக மக்களது தனித்துவமான பாவனையிலிருந்து வந்தமையைக் காண்கின்றோம்.



மிகவும் அண்மைக் காலத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட ஒரு தொல்லியற் சான்று என்ற வகையில் கந்தரோடையி லிருந்து மீட்டெடுத்த "ஆபதி" மட்பாண்டத் தமிழ்ப் பிராமிச் சாசனம் ஈழத்தமிழர் வரலாற்றிற்கு மேலும் உதவுவதாக உள்ளது. கறுப்பு – சிவப்பு மட்கலத்தில் பொறிக்கப் பட்ட இச்சாசனம் சங்ககால வாழ்வியல் முறையை எமது அறிவிற்கு தெளிவாக்கு கின்றது. அதாவது ஈழத்தமிழர் பண்பாட்டுப் பகைப்புலமானது தென்னிந்தியத் தமிழகப் பண்பாட்டுப் பகைப்புலத்துடனான தொடர்பு களையும் சமாந்தரமான உறவுகளையும் காலாதிகாலமாகக் கொண்டிருந்திருப்பினும் ஈழத்துக்கெனத் தனித்துவமான வெளிப் பாட்டினை தமிழகத்திலிருந்தும் சிறப்புக் கூறாக வேறுபடுத்திய நிலையில் தாங்கிக் கொண்டிருப்பதனை இச்சாசனத்தினூடாக இப்போது காணமுடிகிறது. தற்கால நிலை யில் தமிழ்மொழி வழக்காறானது யாழ்ப் பாணத்தில் இதன் தனித்துவத்தினையும் இலக்கிய வழமைகளையும் இலக்கணச் செழுமைகளையும் கொண்டு எவ்வாறு தமிழக மொழிப் பயன்பாட்டின் விழுமியங் களிலிருந்து தனித்துவப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கின்றதோ அவ்வாறே புராதன ஈழத்தமிழர் பண்பாட்டு மரபுகளில் மட் பாண்ட சாசன வழக்காறும் குடாநாட்டினுள் பரவலாக மக்களது தனித்துவமான பாவனையிலிருந்து வந்தமையைக் காண் கின்றோம். இச்சாசனம் பொறிக்கப்பட்டுக் கிடைத்த மட்பாண்டத்துண்டில் சாசனம் தொடர்ச்சியானதாக பொறிக்கப்பட்டிருந்தும் எமக்கு ஆபதிஎ ...... என மட்டுமேயுள்ள வாசகம் மாத்திரம் கிடைத்துள்ளது. தென் தமிழ்ப்பிராமி முறையிலமைந்த வாசகத் தினைக் கொண்டுள்ள இச்சாசனம் கி.பி. முதலாம் நூற்றாண்டுக்கும் முற்பட்டது என்ப தனை அதன் வரிவடிவ முறையிலிருந்து கண்டுகொள்ளமுடிகிறது. பழந்தமிழ் வழக்கில் "ஆ" என்பது பசுவினையும் "பதி" என்பது தலைவனையும் குறித்து நிற்கின்ற மையால் "ஆபதி" என்பது பசுக்களின் தலைவன் என்ற பொருளில் கொள்ள முடியும். அவ்வாறாயின் அதுவும் "கோன்மை" தொடர்பாகவே சங்ககால வாழ்வு மரபில் கையாளப்பட்டிருந்த தன்மையை சங்க இலக்கியங்கள் வாயி லாகக் கண்டுகொள்ள முடிகிறது. ஆநிரை கவர்தல், ஆநிரை மீட்டல் என்பன சங்க காலத்து அரச முறையோடு தொடர்புபட்டதாக எடுத்துக்காட்டப்பட்டுள் ளது. பசுக்களைச் செல்வமாக உடையவனே அரசன் என்பது இதனாற் பெறப்படும். அவ் வகையில் குடாநாட்டுப் பரப்பினுள் கந்த ரோடையிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட "ஆபதி" என்ற தமிழ்ப் பிராமிச் சாசனமானது ஈழத்தமிழர் வரலாற்றின் கோன்மையை எடுத்துக் காட்டியுள்ளது. ஆழத்திலுள்ள வரலாற்று இலக்கிய மூலாதாரங்களில் குறிப்பிடப்படாத இச்செய்தியை கந்தரோடை தமிழ்ப் பிராமி மட்பாண்டச் சாசனம் தருவதி லிருந்து அம் மக்கட் கூட்டத்தின் தொன்மை யான பண்பாட்டு எல்லையை கிறிஸ்தவ சகாப்த காலத்திற்கும் முற்பட்ட நூற்றாண்டு

களுக்கு எடுத்துச் செல்ல முடிகின்றது.


வரிவடிவ அமைதிக்குரிய சாசன மாக "ஆபதி" என்று எழுதப்பட்ட தமிழ் பிராமி சாசனம் ஒன்று கந்தரோடையினு டைய திராவிட பண்பாட்டினுடைய வளர்ச்சி க்கு வேண்டிய ஆவணமாக அமைவதை நாம் காண்கின்றோம். ஆபதி என்பது சங்ககால தமிழ் இலக்கியங்களிலே அடிக்கடி இடம் பெறுகின்ற ஒரு சொற்தொடராக இருப்பத னைக் காணலாம். பசுக்களுக்கு ஒரு கூட்டத் தினுடைய தலைவன் என்ற கருத்திலே, ஒரு ஊரினுடைய தலைவன் என்ற கருத்திலே, ஆபதி என்ற சொற் பிரயோகத்துக்குரிய பொருள் கொள்ளப்படுகின்றது. எவ் வாறாக அது பொருள் கொண்டாலும் ஆபதி என்பது தமிழ் பிராமி ஓசையைக் கொண்ட ஒரு சாசனம் என்பதை எந்த ஆய்வாளருமே மறுக்க முடியாது.

இந்தவகையில் கறுப்பு, சிவப்பு மண்பாண்டத்தில் வரையப்பட்ட வரிவடிவம் கந்தரோடை மீது திராவிடர் கொண்டிருந்த பங்கும், பணியும் பற்றி எடுத்துரைக்க வல்ல தாகக் காணப்படுவதை அவதானிக்கின் றோம்.

இரண்டாவது தமிழ் பிராமி சாசனம் ஒன்று "குணி" என்ற ஒரு வாசகத்தைக் கொண்டு விளங்குவதனை நாம் காண் கின்றோம். அதனுடைய முற்பாகம் உடைந்து விட்டதினால், அதனுடைய பிற்பாகம் தான் எமக்குக் கிடைத்திருக்கிறது. அந்தக் குணி என்ற சொல்லு அதனுடைய முன்னொட்டுப் பலவற்றுடன் இணைந்து வந்திருப்பதாக எடுத்துக் காட்டப்படுகின்றது. நாங்கள் உதாரணமாக "அம்மணி" என்று சொல் கின்றோம். அம்மணி என்பதில் வருகின்ற மணிபோல,குணி என்ற சொல்லுக்கும் பல முன்னொட்டுக்கள் இருந்திருக்கக்கூடிய வாய்ப்புக்கள் இருந்தாலும் கூட, நாம் ஒரு வரலாற்று தொல்லியல் ஆய்வாளர் என்ற அடிப்படையில் அது "பிக்குணி" என்ற சொல் லினுடைய இறுதிப்பக்கமாக இருந்திருக்கும் என்ற ஓர் அனுமானத்தில், கந்தரோடையில் தமிழர்கள், பௌத்தர்களாக இருந்ததற்கான ஓர் ஆதாரமாக அதனைக் கொள்ள முடிகிற தென்பது குறிப்பிடத்தக்கது. ஏனென்றால் பிக்குணி என்ற சொற்றொடர் சிலப்பதி காரத்தில் குறிப்பாக மணிமேகலையில் இடம்பெறுகின்ற சொற்றொடராக இருந்து கொண்டிருப்பதன் அடிப்படையில், பெண்கள் கந்தரோடையில் பௌத்த துறவிகளாக இருந்துள்ளார்களா? என்ற ஐயத்தை எழுப்பக் கூடிய சாசனமாகவும் அமைந்து விட்டதென்றால் அது மிகையல்ல.



இதேபோன்று "அபிசிதன்" என்று வாசிக்கக்கூடிய வகையில் அன்விகுதியுடன் முடிவடைகின்ற ஒரு கறுப்பு, சிவப்பு மட் பாண்ட சாசனம் எமக்குக் கிடைத்திருக்கிறது. அபி என்ற சொல் தமிழ் நாட்டிலும், இலங் கையிலும் கிறிஸ்துவுக்கு முற்பட்ட தசாப்த காலங்களில் பொதுவழக்காக இருந்திருப் பினும் அல்லது ஈழத்து பிராமிக் கல்வெட்டுக் களில் அபி என்ற பெயர் ஒரு பொதுநடை முறையாக இருந்திருக்கின்ற நடைமுறை யையும் நாம் காணும்பொழுது அது கந்த ரோடையிலும் அபி என்ற அடியுடன் தொடர்பு படக் கூடிய பெயரை நாம் காண்கின்றோம்.



**ABHICHITHAN**
ஆபிசிதன்
தமிழ்நாட்டு வரிவடிவ முறையில்
(தென்பிராமி) எழுதப்பட்டுள்ளது.




**பூநகரி வேளிர் சாசனம்:**

திராவிடப் பண்பாட்டுப் பாரம்பரிய இருக்கையை யாழ்ப்பாணக் குடாநாட்டில் தமிழ்ப் பிராமி மட்பாண்ட சாசனங்கள் திட்ட வட்டமாகவே உறுதிப்படுத்தியுள்ளன. அவற்றுள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குவது “வேளிர்” என்ற குலப் பெயர் பொறிக்கப்பட்டுக் கிடைத்த ஒரு மட்பாண்ட சாசனம் ஆகும். ஈழத்தினதும் தென்னிந்தியத் தொல்லியலாளரதும் கவனத்தினை ஒருங்கே ஈர்த்த இச்சாசனமானது சங்ககால வாழ்க்கை முறையை ஒத்த பண்பாடும், குலமுறையும் “ஈழத்தின் வடபகுதியில் பூநகரியில் இருந்தது என்பதனைத் திட்ட வட்டமாகவே உறுதிப்படுத்தியுள்ளது.

சங்ககால இலக்கியங்களில் வேளிர் மரபு பற்றி பல அரிய வரலாற்றுச் செய்திகளை நாம் காண்கிறோம். சிற்றரச மரபு ஒன்று வேளிர் குலமக்களிடம் காணப்பட்டிருந்த தன்மையை அச்சான்றுகள் எமக்கு எடுத்துக் காட்டுகின்றன. எனவே இப் பின்னணியில் பூநகரி வேளிர் தமிழ்ப் பிராமி மட்பாண்ட சாசனத்தையும் அதன் வரலாற்று முக்கியத்துவத்தையும் நோக்கும்போது கி.பி. முதலாம் நூற்றாண்டளவில் பூநகரியில் கோன்மை முறையைத் தழுவிய அரச குடும்பம் ஒன்று ஆட்சி புரிந்திருக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளலாம். இதனை அங்கிருந்து பெற்றுக் கொள்ளப் பட்ட சங்ககால நாணயங்களும் உறுதிப் படுத்தி நிற்கின்றன. பூநகரியில் கிடைத்த பெருங்கற் பண்பாட்டுத் தடயங்களும் அவ் வாறான ஒரு கோன்மை முறையை மேலும் உறுதிப்படுத்துகின்றன. குடாநாட்டினுள் பரவலாக மக்களது தனித்துவமான பாவனையிலிருந்து வந்தமையைக் காண்கின்றோம்.

இவற்றைவிட நாணய ஆதாரமென்று பார்க்கும்போது – சுடுமண்ணிலான சூலம் வரையப்பட்ட சதுரமானதும், வட்டமானதுமான நாணய வகைகள் எமக்குக் கிடைத்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த வட்டவடிவமானதும், சதுரமானதும், சற் சதுரமானதுமான நாணயங்கள் கந்தரோடை நகரத்தின் புராதனத் தன்மையை வெளிப் படுத்துவதாக இருப்பதை இங்கு குறிப்பிட லாம். ஏனென்றால் சுடுமண் நாணயங்களினுடைய உபயோகமானது, உலோக நாணயங்களின் பரிமாற்றம் அல்லது உபயோகம் அறிமுகப்படுத்துவதற்கு முன்னதாக இருந்து வந்ததென்பது குறிப்பிடத்தக்கது. எனவே நாணய ஆதாரங்கள் மூலம் கந்தரோடை என்ற புராதன நகரினுடைய தோற்றத்தைக் கால வரையறை செய்ய முடியுமென்பது எனது திடமான நம்பிக்கை. குறிப்பாகச் சுடுமண் நாணயங்களை அடிப்படையாகக் கொண்டு அந்த நாணயங்களை வெப்ப இயக்கவியல் முறைக்கு உட்படுத்துவோமானால் கந்தரோடையினுடைய நகர உருவாக்கத்தின் தொடக்கத்தினை நன்கு கண்டு கொள்ள முடியும்.



**தாதுகோபம் அல்லது தூபி பௌத்தருக்கு மட்டும் உரிய வழிபாட்டுச் சின்னம் அல்ல!**

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் ஆட்சிக்காலத்தில் பழம்பெருமை வாய்ந்த புத்தர் சிலைகள் குண்டு வைத்து தகர்க்கப் பட்டன. வரலாற்றுப் பெருமை வாய்ந்ததும், உலகத்திலேயே பழைமையானதுமான புத்தர் சிலைகள் உடைத்து அழிக்கப்பட்டன. கலைப் பொக்கிசங்களாக விளங்கிய புத்தர் சிலைகள் சிதைந்து சீரழிந்து போயின.

புத்தர் சிலைகளின் வரலாற்றுப் பெருமையயோ, பௌத்த சமயத்தின் கொள்கைகளோ, புத்தர் சிலைகளின் கலை வெளிப்பாடுகளோ அங்கு நோக்கப்பட வில்லை. தற்கால வாழ்வியல் மாற்றங்களி னூடாகத் தமது சமயக் கொள்கைக்கு இவை மாறானவை என்பது மட்டுமே நோக்கப் பட்டது. கணத்தில் அவை சுக்குநூறாக உடைக்கப்பட்டன.

புத்தரின் உருவச்சிலைகள் சாந்த மும், கருணையும், அமைதியும் கொண்ட முகத்தை உடையதாகவே அமைக்கப்படு கின்றன. கண்கள் மூடிய நிலையில் தியானத்தில் அமர்ந்திருப்பது போல் காணப் படும். பெரும்பாலான உருவச் சிலைகள் பெரிய அளவிலேயே அமைக்கப்பட்டிருக் கும். இவை பார்ப்பவர்களின் உள்ளத்திலும் அமைதியையும், சாந்தத்தையும் ஏற்படுத்த வல்லன. அப்படியிருக்கும் போது தமது சமயக் கொள்கைக்கு மாறானது என்னும் ஒரே நோக்கில் தலிபான்களால் ஆப்கானிஸ் தானில் கலைப் பொக்கிஷங்களாக விளங் கிய பல புத்தர் சிலைகள் சில மணி நேரத்தில் உடைக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் பழைமை வாய்ந்த கலைப் பொக்கிஷங்களைக் கொண்டு விளங்கும் பல பகுதிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. கந்தரோடை அப்பகுதி களில் ஒன்று. அங்கே வியத்தகு அரிய கலைப் பொக்கிஷங்கள் கடந்த 60 வருடங் களுக்கு மேலாக மண்படைகளுக்கு அடியில் இருந்து எடுக்கப்பட்டு வருகின்றன. நாண யங்கள், சுடுமண்சிற்பங்கள், தந்தத்தாலான கலைவேலைப்பாடுகள், மட்பாண்டத்தினா லான பாவனைப் பொருட்கள் என அவை பலப்பல. இவை அனைத்திலும் சிறந்த கலை வேலைப்பாடுகளைக் காணமுடிவது குறிப் பிடத்தக்கது.

எடுக்கப்பட்ட சிற்பங்களில் சுடுமண் சிற்பங்கள், ஆண், பெண், உருவங்கள், உலோகத்தாலான ஆஞ்சநேயர் சிற்பம், புத்தரின் உலோகப்படிமம் என்பன மிகுந்த கலை அமைதியும் அழகும் கொண்டனவாக வடிவமைக்கப்பட்டுள்ளன.






இதனைவிட அங்கு விகாரை போன்ற அமைப்பில் காணப்படும் ஒரு குறிப்பிட்ட பகுதிக்குள் நெருக்கமாக அமைக்கப்பட்டுள்ள சிறிய அளவிலான வட்ட வடிவ கட்டடங்கள்.

இதனைப் பார்ப்பவர்கள் பௌத்த சமயக் கட்டடங்களைப் பார்த்துப் பழகிய தால் அதனைப் பௌத்த சமயத்தோடு தொடர்புபடுத்தி நோக்குகின்றார்கள். அங்கே விகாரை அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவை பழைமை வாய்ந்த விகாரை எனவும் பௌத்த சமயம் நிலை பெற்றிருந்த இடம் எனவும் முத்திரை குத்திவிட்டுள்ளனர்.

# கந்தரோடையிற் கிடைத்த தொல்லியற் சின்னங்கள்



எருதுவரையப்பட்டஎன்பினாலானகத்தி
(நோஸஸ் நகரில் வரையப்பட்டதனைஒத்தது.)




விநாயகர் உருவங்களைத்தாங்கியசுடுமண்
சிற்பங்கள்(கி.மு.1ம்நூ.)



தவழும் பாலகிருஸ்ணன்
வெண்கலம்–சோழர்பாணி.
10ம்நூற்றாண்டு



புறாசெதுக்கல் வேலைப்பாடுள்ளரௌலட்டட்
மட்பாண்டம்



கந்தரோடையிலுள்ளகும்மட்டங்கள் (அரசாங்கஅதிபர்
லாயனல் பெர்னான்டோ என்பவரால்
மேலேயுள்ளகும்மட்டங்கள் வடிவமைக்கப்பட்டன



மட்குத்துவிளக்கின் அடிப்பாகம்



1995 இல் அகழ்வாய்வு–உச்சாப்பனை
(படிக்கட்டுஅகழ்வுமுறை)



நாகநாணயம் செம்பு




கார்னேலியன் முத்துக்கள்
(பெருங்கற்காலம்)

## கந்தரோடையிற் கிடைத்த தொல்லியற் சின்னங்கள்














கந்தரோடையில் காணப்படும் வட்ட வடிவ அடித்தளப் பரிதிவிட்டத்தின் கட்டடத் தொகுதியின் மேல் அமைக்கப்பட்டுள்ள வளைந்த கும்மட்ட மேற்பரப்புகள் யாவும் மிக அண்மையில் அமைக்கப்பட்டவை. பரிதிவட்டத்திற்குக் கீழே காணப்பட்டவை அவை அஸ்திகளாகவோ அல்லது தாதுக் களாகவோ இருக்கக்கூடும் என்பதும் நிரூபிக்கக் கூடியது. ஏனெனில், புத்த பக வானின் அல்லது அவரது அடியார்களது தாதுக்கள் அடக்கம் செய்யப்பட்ட தாது கோபம் அல்லது தூபி விகாரை க்கு அவசிய மானது. அவையே அங்கு முக்கிய உறுப் பாகவும் விளங்குகின்றன. ஆனாலும், அது பௌத்தர்களுக்கு மட்டுமே உரித்தான ஒரு வழிபாட்டுச் சின்னமல்ல. பல நிலைகளில், பல்வேறு பண்பாட்டுத் தட்டுக்களில் அஞ் ஞாபகார்த்தச் சின்னம் சீராக்கப்பட்ட போதே பௌத்தமதத்திற்குரிய கும்மட்ட வடிவம் கொடுக்கப்பட்டது என்பது இங்கு குறிப் பிடத்தக்கது.

**முடிவுரை:**

தென்னிந்திய – ஈழத் தொடர்பு களைப் பண்பாட்டு அடிப்படையில் ஊடகப் படுத்திய முக்கியமான நிறுவனங்களில் மகாயான பௌத்த மதமும் ஒன்றாகும் என்பதனை ஏற்கனவே பார்த்தோம். சிலப் பதிகாரம், மணிமேகலை தொடக்கம், வீர சோழியம், கண்ணகி கதாவ வரைக்கும் ஈழத்திலும், தமிழகத்திலும் யாழ்ப்பாணத் திலும் மகாயான பௌத்தம் தமிழரது பண்பாட்டுச் செய்திகளைத் தொடர்ச்சி யான வகையில் காவிச் சென்றிருந்தன. தமிழ் இலக்கிய, இலக்கண மரபுகள் கூட மகாயான பௌத்த சமயத்தினூடாகப் பேணப்பட்டுக் கிடைத்துள்ள நிலையில், பூர்வீக ஈழத் தமிழரது வாழ்க்கை பற்றிய இலக்கண – இலக்கிய மரபுகளுக்கு என்ன நேர்ந்தது என்பதையிட்டு இன்னும் ஆராய வேண்டி யுள்ளது. கந்தரோடையை எங்கள் சிந்தனையி லிருந்து இன்னும் காப்பாற்றிக் கொண்டி ருக்கின்ற ஒரேயொரு ஐதீகமாக உக்கிர சிங்கன் – மாருதப்புரவீகவல்லி பற்றிய கதைத்தொகுப்பே காணப்படுகின்றது. இக் கதைப்பின்னணியிலே மகாயான திராவிட பௌத்தப்பண்பாட்டின் செல்வாக்கினையும் கண்டுகொள்ள முடிகின்றது.

ஈழத் தமிழரது மகாயானப் பௌத் தப் பண்பாட்டு வாழ்வின் தொட்டிலாகத் திகழ்ந்து வந்திருந்திருந்த கந்தரோடையின் திராவிட இலக்கிய மரபுகள் எங்கேயோ வொரு இடத்தில் மறைக்கப்பட்டு, உருவழிக் கப்பட்டுவிட்ட நிலையில் தென்னிலங்கையி லுள்ள இன்னொரு இனத்தினருக்குரிய பாளி – பௌத்த இலக்கியங்களினூடாகவே அந்த வரலாற்றைத் தேடிப் பார்க்கின்ற துர்ப் பாக்கியநிலை எமக்கு ஏற்பட்டுவிட்டது. அனுராதபுரத்தினை மகாவம்சம் என்ற பாளி மொழி இலக்கியத்தினூடாகப் பார்த்தது போல், தமிழ் இலக்கியத்தினூடாக கந்த ரோடையை நாம் பார்க்கமுடியாதுள்ளது. கிடைக்கின்ற தொல்லியல் எச்சங்கள் ஊடாகவே இழந்த தொன்மையை மீள் நிர்மாணம் செய்ய வேண்டியவர்களாக உள்ளோம். ஆதலால் கந்தரோடைக்குரிய அகழ்வாராய்ச்சியாளர்களாக நாம் மாற வேண்டும். அப்போதுதான் தென்னாசியப் பண்பாட்டிருப்பிற்குரிய அடிப்படைகளை நாம் கண்டுகொள்வதற்குச் சந்தர்ப்பம் கிட்டு மென எதிர்பார்க்கலாம். இம்மையத்தினை நாம் தவறவிடும் பட்சத்தில் சமூகங்களுக் கிடையிலான ஒற்றுமை நிலைபெறப் போவதில்லை என்பது யதார்த்தமே.





# இணுவில் அருள்மிகு ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் திருக்கோவில் - வரலாறு

கும்பாபிஷேக மலர் 2009

**"ஏரார் இணுவில்வாழ் எந்தை கணபதியின்**
**தாரார் திருவடியைத் தாழ்பணிந்தோர் – ஆரா**
**அமிழ்தம்போல் வாழ்வர் அருட்செல்வம் சூழ்வர்**
**தமிழுள்ளளவுந் தழைத்து"**

*-திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்.*

**இணுவில்**

சைவமும் செந்தமிழும் தழைத் தோங்கும் புராதன வரலாற்றுச் சிறப்புமிக்க கிராமமே இணுவையம்பதியாகும். ஈழத் திருநாட்டின் மணிமகுடமாம் யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்துள்ள ஓர் இயற்கை எழில் கொஞ்சும் கிராமம் ஆகும். இது யாழ்ப் பாண நகரத்தில் இருந்து சுமார் நான்கு மைல் தூரத்தில் இருக்கின்றது. யாழ்ப்பாணத்தில் இருந்து காங்கேசன்துறை நோக்கிச்செல்லும் நெடுஞ்சாலையானது இணுவில் கிராமத்தை ஊடறுத்துச் செல்கின்றது. சுமார் 650 ஏக்கர் நிலப்பரப்புடைய அழகிய சிறிய ஒரு கிராமமே இணுவில். இங்குள்ள பெருங்குடி மக்கள் சைவத்தையும், தமிழையும், தமது இரண்டு கண்களாக போற்றி வளர்த்து வருகின்றார்கள்.

தெற்கே பிள்ளையாரையும், மேற்கே கந்தசுவாமியாரையும், கிழக்கே சிவகாமி அம்மன், காரைக்கால் சிவன் கோயிலையும் மேலும் பல தலங்களையும் கொண்ட, திருக்கோயில்களாலே சூழப் பட்ட தெய்வீக மணம்பரப்பும் கிராமம் இது. இங்கு வாழ்கின்ற மக்கள் சிறந்த கலைஞர் களாகவும், பக்தி மிகுந்தவர்களாகவும், தான, தர்ம காரியங்களில் ஈடுபடும் தர்மவான்களா கவும், ஒழுக்க சீலர்களாகவும் வாழ்ந்து வருகின்றார்கள்.

**ஸ்ரீ பரராஜசேகர மன்னன்**

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் திருக்கோயில் வரலாறு என்பது நல்லூரைத் தலைநகராகக்கொண்டு யாழ்ப்பாணத்தை ஆரியச் சக்கரவர்த்திகள் அரசாண்ட காலத்தில் இருந்து தொடங்குகின்றது. இவர்கள் பரராஜசேகரன், செகராஜ சேகரன் என்ற சிம்மாசனப் பெயர்களைக் கொண்டும், சிங்கை நகரை, யாழ்பாண இராச்சியத்தின் தலைநகராகக் கொண்டும் நல்லாட்சி புரிந்து வந்தனர். இவர்கள் "சிங்கை" என்ற ஆரியப் பட்டத்தைச் சுருக்கி தம் பெயர்கட்கு முன்னால் இட்டுக் கொண்டார்கள். "சிங்கைப் பரராஜசேகரன்." இரண்டாம் தமிழ்ச்சங்கம் இவன் காலத்தில் நிறுவப்பட்டதெனவும், "இரகு வமிசம்" இக்காலத்தில் இயற்றப்பட்ட தெனவும் இராசநாயகம் முதலியார் உடன் படுகின்றார். யா.ச.ப–77

**ஆதிச்சிங்கை நகர்.**

தமிழ் அரசர் ஆட்சிக்காலம். சிங்கை ஆரியன் (விஜயகூளங்கைச்சக்கரவர்த்தி) முதற்கொண்டு கி.பி 948ல் இருந்து பதி னொராவது தலைமுறையைச் சேர்ந்த கனக சூரிய சிங்கையாரியன் 1440 – 1450 வரை என அறியமுடிகிறது. (வைபவமாலை, ப26)

"சிங்கை" எனும் தலைநகர்ப்பெயர், "சாதிக் காரன்" எனும் பொருளில் வரும் "ஆரியன்", என்ற பெயரையும் சேர்த்து "சிங்கையாரி யன்" என்ற பெயரை வைத்துக்கொண்ட இவர்களது குலம், ஆரியச்சக்கரவர்த்திகள் குலம் என அழைக்கப்பட்டது. இவர்கள் ஒருவர்பின் ஒருவராக தலைநகரை மாற்றாது நீண்ட காலத்திற்கு ஆட்சிபுரிந்து வந்தனர். 1450ல் கொழும்புக் கோட்டையை ஆண்ட செண்பகப்பெருமான் எனும் அரசன் படையெடுப்பில், கனகசூரிய சிங்கையாரி யன் தோற்று தமிழகம் சென்றான். செண்பகப் பெருமானால் நியமிக்கப்பட்ட விஜயவாகு என்ற சிங்களப் பிரதிநிதி (மன்னன்) பதினேழு ஆண்டுகள் வரை தமிழர்களை அடக்கியொடுக்கி அரசாண்டான். (யா.வை. மா.–45) போரில் தோற்று காசியாத்திரை சென்ற கனகசூரிய சிங்கையாரியன் திருக் கோவலூர் சென்று அங்கு கல்வி பயின்று கொண்டிருந்த தம் பிள்ளைகளான பரராஜ சேகரன், செகராஜசேகரன் உடன் சேர்ந்து மீண்டும் படையெடுத் தான்.

கனகசூரிய சிங்கையாரியன் பாண்டிய சிற்றரசர்களின் உதவியுடன் விஜய பாகு மீது மீண்டும் படையெடுத்து பெரும் சமர் செய்தான். செகராஜசேகரன் ஒரு அணி யாக சண்டைசெய்ய, பரராஜசேகரன் அஞ்சா நெஞ்சனாக தனது வாள்ப்படையுடன், விஜய பாகுவுடன் பெரும் யுத்தம் செய்து அவனை தன் வாளுக்கு இரையாக்கினான். மீண்டும் சிங்கைநகர், சிங்கையாரியர் வசமாகியது. பரராஜசேகரன் தனது தந்தை கனகசூரிய ஆரியனை ஆட்சியில் வைத்து தான் தேச விசாரணை செய்ய முயன்றான். ஆனால், பிதாவாகிய கனகசூரியன் பரராஜசேகரனை அரியணை ஏற்றி தான் இளைப்பாறினான். இது தமிழ் அரசர்களின் இரண்டாவது ஆட்சிக்காலம் என்று கூறலாம்.

கனகசூரியன் – கி.பி– 1467.

பரராஜசேகரன்– கி.பி– 1478.

சங்கிலி – கி.பி– 1519.

இவர்கள் 1620 வரை சுதந்திரமாக ஆட்சி புரிந்தார்கள். அதன்பின் போர்த்துக் கேயர் வருகை ஆரம்பமாகியது.

இந்த ஆரியச்சக்கரவர்த்திகள் வரிசையில் ஸ்ரீ பரராஜசேகரமன்னன், நல்லூரை தலைநகராக கொண்டு நீதிநெறி தவறாது நல்லாட்சி புரிந்து வந்தான். சிங்கைப் பரராஜசேகரன் என்று அழைக்கப் பட்ட இவன் மக்களிடையே அன்பும் கரு ணையும் கொண்டவனாகவும், இறைபக்தி மிகுந்தவனாகவும், சிறந்த நிர்வாகத்திறன் உடையவனாகவும் திகழ்ந்தான் என்பது வரலாறு. யாழ்ப்பாண இராச்சியத்தில் ஆரியச்சக்கரவர்த்திகள் மரபில் 1478ம் ஆண்டு இவன் அரியணை ஏறினான். பதினொராவது தலைமுறையைச்சேர்ந்த இவனது ஆட்சிக்காலம் பொற்காலம் என்று அழைக்கப்படுகின்றது. "இக்காலத்திலோ, அல்லது இதற்கு முன்னைய காலங்களிலோ இக்கோயில் அமைக்கப்பட்டிருக்கலாம்". தமிழ்ச்சங்கம் நிறுவி சமயம் வளர்த்தது அல்லாமல் "பரராஜசேகரன் உலா", "இரகுவமிசம்" போன்ற நூல்கள் இவனது ஆட்சிக்காலத்திலே அரங்கேற்றப்பட்டன. தமிழகத்தில் இருந்து அழைத்துவரப்பட்ட வைத்தியர்களைக்கொண்டு "பரராஜசேகரம்" என்ற வைத்திய நூல் ஒன்றும் இவனது ஆட்சிக்காலத்திலே உருவாக்கப்பட்டது. "செகராசசேகர மாலை," "தட்சிண கைலாய புராணம்" என்பன சிங்கை நகர் இராச்சியம் பற்றிக் கூறுகின்றன.

நல்லூரிலே சங்கம் அமைத்து தமிழ் வளர்த்த ஆரியச்சக்கரவர்த்திகள் சிறந்த நூலாசிரியர்களாகவும் விளங்கியிருக்கின் றனர். நாயன்மார்க்கட்டு, நல்லூர், இணுவில் போன்ற பன்னிரண்டு ஊர்களும் அறிஞர்கள், கலைஞர்கள், புலவர்கள் நிறைந்த பேரூர்க

ளாக திகழ்ந்திருக்கின்றன. இந்த ஆரியச் சக்கரவர்த்திகளுள் சிறந்து விளங்கிய "செகராஜசேகரன்" என்ற மன்னன் தமிழகத்தில் இருந்து அரியநூல்கள், ஏட்டுச்சுவடிகள், ஆவணங்களையெல்லாம் சேகரித்துக் கொண்டுவந்து "சரஸ்வதிமகால்" என்ற நூலகத்தை அமைத்தான் என்றும், அறிய முடிகின்றது.

ஸ்ரீ பரராஜசேகரமன்னன் ஆட்சிக் காலத்தில் சமயவழிபாடு, ஆலயம் அமைத்தல், பரிபாலனம் செய்தல் என்பன அக்காலத்தில் அமையப்பெற்றதாக கருதப் படும் கோயில்கள் பற்றிய கர்ணபரம்பரைக் கதைகள் மூலமாக அறிய முடிகிறது. மேலும் யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் அவர்கள் தமது "யாழ்ப்பாண இராச்சியம்" (ப–218) எனும் நூலில் "விநாயகர் வழிபாடு இக்காலத்தில் மேன்மை பெற்று இருந்ததை ஆரியச்சக்கரவர்த்திகள் அமைத்த காவல் தெய்வங்களில் விநாயகர் ஆலயம் முக்கியம் பெறுவதை எடுத்துக்காட்டுகின்றார். இது மட்டுமின்றி இவர்கள் காலத்துக்குரிய உரும்பிராய் கருணாகரப்பிள்ளையார் கோயில், அரசகேசரி பிள்ளையார்கோயில், இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் கோயில் ஆகியனவும் இக்காலத்துக்குரிய சிறப்புப் பெற்ற "விநாயகர் வழிபாட்டிடங்கள்" ஆகும் என்று குறிப்பிடுகின்றார்.

பரராஜசேகரப்பிள்ளையார் என்னும் ஆரியச்சக்கரவர்த்திகள் வழிவந்த தமிழ் அரசனின் பெயரை தாங்கி நிற்கும் இவ்வாலயம் ஆனது சுமார் 500 ஆண்டுகள் பழமை வாய்ந்த வரலாற்றுச் சிறப்பை பெறுகின்றது. பரராஜசேகர மன்னனால் இவ்வாலயம் கட்டப்பட்டதாகவோ, பரராஜ சேகர மன்னனின் மந்திரி பிரதானிகளால் அல்லது பேரூரின் ஆட்சித் தலைவர்களினால் கட்டப்பட்டதாகவோ அன்றியும் பரராஜ சேகர மன்னனால் வழிபடப்பெற்று வந்தமையினால் பரராஜசேகரப் பிள்ளையார் என்ற பெயரை பெற்றிருக்கலாம். "அக்காலத்தில் இருந்து நீடித்து நிலைத்திருந்த இக்கோயில் பரராஜசேகரன் சகாப்தத்தில் அரசனது செல்வாக்கையும் ஆதரவையும் பெற்று, அரசனது நாமம் சூட்டபட்டிருக்கலாம்" என்று கூறுகின்றார் தொல்பொருள் ஆய்வாளர் திரு ம.பொ.செல்வரத்தினம் அவர்கள். இணுவில் எனும் பேரூரானது சான்றோர் புகழும் ஆன்றோர்க்கு உறைவிடமாய் சைவ வேளாண்மக்கள் வசிக்கப்பெற்றது. "மாய கொன்றையும், கூவிளையும், மருதும், அரசும், தேமாவும், தீம்பலாவும், புட்பங்களுமான வசீகரமிகு நந்தவன பூமியான இணுவையெம்பதியை விநாயகப்பெருமானுக்கு கோயில் எழுப்பும் புண்ணிய பூமியாக பரராசேகரன் கருதினான்போலும் அதனாலேயே இங்கு ஆலயம் எழுப்ப துணிந்தனன்" என மகாவித்துவான் வை கதிர்காமநாதன் ஆசிரியர் அவர்கள் கும்பாபிசேக மலர்–1972ல் குறிப்பிடுகின்றார்.

பரராஜசேகர மன்னன் ஆட்சிக்குட்பட்ட இணுவில் என்னும் பேரூரானது கரும்பும் பருத்தியும் நெல்வயல்களும், குளங்களுடன் கூடிய கமுகு தென்னை பனை போன்ற வானுயர்ந்த மரங்களுடன் ஒரு பூஞ்சோலைக் கிராமமாக செழுமை மிகுந்து காட்சியளித்தது. பரராஜசேகர மன்னன் தனது மந்திரி பிரதானிகளுடன் இணுவையம்பதியினிலே எழுந்தருளி அருள்பாலிக்கின்ற பிள்ளையாரை வணங்கி வந்தான் என்று கர்ணபரம்பரைக் கதைகள் மூலமாக அறிய முடிகின்றது.

யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் அவர்கள் "இணுவிலும் ஆரியசக்கரவர்த்தி காலத்தில் ஏற்பட்ட வேளாளர் குடியேற்றத்துடன் தொடர்புடையதாக காணப்படு

வதால் இவ்வாலயம் இவர்கள் ஆட்சியின் ஆரம்பக் கட்டத்தில் அமைக்கப்பட்டிருக்க லாம்" என்று தமது யாழ்ப்பாண இராச்சியம் என்ற நூலிலே குறிப்பிடுகின்றார். (ப-220)

போர்த்துக்கேயர் காலத்திலே பல கோயில்கள் பறங்கியரால் இடிக்கப்பட்டன. உடுவில் கோவில்பற்றை முற்றுகையிட்ட போர்ததுக் கேயர், இணுவில் என்னும் பேரூர் பரராஜசேகரப்பிள்ளையார் கோவிலையும் இடிக்கத் தலைப்பட்டார்கள். மன்னனால் வணங்கப் பெற்ற இக்கோயிலை பாதுகாக்க எண்ணிய மக்கள் இங்குள்ள பிள்ளையாரை மறைத்து வைத்து, இத்தலத்தை "மடம்" என்று கூறினார்கள். கோயிலின் முன் மண்டபம் மடம்போன்று காணப்பட்டது. இப்படியாக பாதுகாத்தனர் என்று கர்ணபரம்பரைக் கதை மூலம் அறியமுடிகிறது. "மடம்" என்று சொல்லி வணங்கியமையால் இக்கோயிலை "மடத்துவாசல் பிள்ளையார் கோயில்" என் றும் வழங்கலாயினர். இந்த மடத்துவாசல் பிள்ளையார் கோயில் பற்றிய வரலாறு என்பது இந்த போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தில் இப்படியாகத்தான் இருந்திருக்க வேண்டும். இருந்திருக்கின்றது. பூசைகளோ, திருவிழாக்களோ நடைபெற முடியாமைக் குரிய காலச்சூழலில் இவ்வாலயமானது பாது காக்கப்பட்டது. ஆனாலும் போதிய பராமரிப் பின்றி ஆலயம் கீலமுற்றுக் கிடந்தது.

**மடத்துவாசல் பிள்ளையார் கோவில்**

ஆங்கிலேயர் தங்கள் பலத்தினாலும் நுண்ணறிவினாலும் 1718ம் வருடத்தில் ஒல்லாந்தரிடம் இருந்து யாழ்ப்பாணத்தை கைப்பற்றிக் கொண்டார்கள். இவர்கள் முன்னிருந்த அரசுகளைப்போல குடிகளை வருத்தாது சமயசுதந்திரம் பேணினார்கள். சமயம் பரப்பும் விடயத்தில் இவர்கள் மூர்க்க மல்லாது சாதுரியமான வழிகளை கையாண் டார்கள். வித்தியாசாலைகள் இவர்கள் அனுமதியுடன் எழுந்தன. கல்வியறிவும் விருத்தியடைய தொடங்கியது. சமய அறிவு, பற்று, திருப்பணிவேலைகள் மெல்ல மெல்ல தொடங்கியது. சமயம் பல பெரியார்கள் மூலம் மறுமலர்ச்சி பெறத்தொடங்கியது. இக்காலப் பகுதியில் மடத்துவாசல் பிள்ளையார் கோயில் மீண்டும் பரராஜசேகரப்பிள்ளை யார் கோயிலாக மாற்றங்காணத் தலைப் பட்டது. இம்மாற்றமானது, சமய மறுமலர்ச்சி யல்லாமல் சுதந்திர மத வழிபாடுகளாக பரிணமித்தது. 1800 களில் மடாலயமாக இருந்த கோயில் திருத்தி அமைக்கப்பட்டு சுன்னாம்புக் கற்களால் முறைப்படி கட்டப் பட்டு கும்பாபிசேகமும் நடைபெற்றிருக்கின் றது என்பதை அறியமுடிந்தாலும் சரியான ஆண்டு விபரங்களை பெறமுடியவில்லை.

1800களில் சுன்னாம்பு கற்களால் ஆன விமானம், கர்ப்பக்கிரகம் உடன் அர்த்த மண்டபம் மகாமண்டபமும் ஆனால் சற்று கிழக்கே சிறிதாக இருந்தன. மூலமூர்த்தி யைத் தவிர இங்கு எழுந்தருளிப் பிள்ளை யாரும், சண்டேசுவரர் மூர்த்தியும், வைரவ ரும் அக்காலப்பகுதியில் அடியார்களால் வழிபடப்பெற்றிருக்கின்றது. சுப்பிரமணி யரோ வேறுஎந்த தெய்வங்களோ அக்காலப் பகுதியில் இருக்கவில்லை. சதய நட்சத்திரத் தில் கொடியேறி திருவாதிரையில் தேர் இழுத்திருக்கின்றார்கள். புனர்பூசநட்சத்திரத் தில் தீர்த்தமும் நடைபெற்று அன்றே கொடி இறக்கல் திருவிழாவும் நடைபெற்றுள்ளது. திருக்கல்யாணம் இல்லை. ஆனால் தேரடி வைரவர் பொங்கல் நடைபெற்று இருந்தது. அந்தந்த காலச்சூழலுக்கு ஏற்ப ஆகம விதிப்படி நடைபெற்றிருக்கின்றன.

இந்தக்காலப்பகுதியில் வருடாந்த உற்சவங்களைத் தவிர, பல திருவிழாக்கள், உற்சவங்கள், அபிசேகங்கள் என்பன நடை பெற்றுள்ளன. குறிப்பாக விநாயகர் பெருங் கதை 21 நாட்களும் அபிசேக ஆராதனை களுடன் படிப்பும் நடந்துள்ளது. 21ம் நாள்

சூரன்போர் நடந்தது. தற்போதைய சூரன் அல்ல, இது பழையசூரன் 1928ம் ஆண்டிற்கு முன்னரே பழுதடைந்து விட்டது. மற்றும் திருவெம்பாவை, ஐப்பசிவெள்ளி, தைப்பொங்கல், வருடப்பிறப்பு, சிவராத்திரி, நவராத்திரி மானம்பூ போன்றன விசேடதினங்களாக அக்காலத்தில் கோயிலில் இடம்பெற்றுள்ளது.

கோயில் அமைந்துள்ள இடம் தம்பிளாவத்தை என்ற குறிச்சிப்பெயரால் அழைக்கப்பட்டது. (இப்பெயர் தற்பொழுதும் அரச கோவையில் இடம்பெற்று இருக்கின்றது.) கோயிலுக்கு வடக்கே சிறிதாக ஒரு வசந்தமண்டபமும், தென்கிழக்கு மூலையிலே தலவிருட்சமான நெல்லி மரமும். தெற்கே தீர்த்தக்கேணியும், அதற்கு சற்று மேற்குத்திசையாக ஓலையால் மேயப்பட்ட பள்ளிக்கூடமும் இருந்தது. (1864) கோயிலின் முன்பக்கம் தற்போதைய பால முருகன் கோயிலுக்கு அருகாமையில் கிணறு இருந்தது. திருமஞ்சரக்கிணறு வசந்த மண்டபத்திற்கு மேற்காக இருந்தது. தேர்க் கொட்டகை இல்லாத காரணத்தால் கட்டுத் தேர் ஒன்று கோயிலின் தெற்கு வீதியின் வேலிக்கருகே ஓலையால் மூடப்பட்ட நிலையில் இருந்தது. தம்பமண்டபம் கற் தூணினால் நிறுவப்பட்டு வேயப்பட்டிருந்தது. கோயிலில் மணியும் இருந்தது. அது தற்போதைய மணிஅல்ல. தற்போதைய வைரவர் கோயிலுக்கு அருகே சற்று உயரத்தில் இருந்தது. கோயிலின் உட்பிரகாரத்தை அதிகாலையில் கூட்டி சாணியால் மெழுகி விடுவார்கள்.

பரராஜசேகரப்பிள்ளையார் கோயிலின் ஆரம்பம் முதலே அந்தணர்கள் பூசைகளை நடாத்தி வந்துள்ளார்கள் என்பதை அறியமுடிகிறது. தமது வாழ்வை இத்தலத்திற்கே அர்ப்பணித்த அந்தணர் பரம்பரையொன்று தொடர்ச்சியாக இக்கோயிற் கிரியைகளை முறைப்படி செய்து வந்துள்ளார்கள். 1800 களில் திருவிழாக்கள் இங்கு சிறப்பாக நடைபெற்றுள்ளது என்பதற்கு நிறைய சான்றுகள் இருக்கின்றன. இங்கு மூலமூர்த்தியாக எழுந்தருளியிருக்கும் இறைவன் விநாயகப்பெருமானது திருவுருவம் தமிழகத்து சிற்பவிற்பன்னர்களால் அமைக்கப்பட்டு இங்கு கொண்டு வரப்பட்டது என்று அறியமுடிகிறது. மேலும் அக்காலத்திலேயே மகோற்சவம் நடந்துள்ளது. இங்குள்ள எம்பெருமான் வீதியுலா வரும் மூர்ஷிகம் (எலி வாகனம்) மிகவும் பழமை வாய்ந்த வாகனமாகும் இதுவும் 1867ம் ஆண்டைச் சேர்ந்ததாகும். இங்குள்ள கொடித்தம்ப கவசம் ஒன்றில் “இது இணுவில் தம்பிளாவத்தை எனுங் காணியில் எழுந்தருளியிருக்கும் பரராசசேகரப்பிள்ளையார் என்னுங் குருநாமத்திற்கு மெஷகுடிகாலிங்கர் இராமநாதராஜ கொடுக்கப்பட்டது பராமரிப்பும் மயிலர் ஆறுமுகம். 1867” என்னும் வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் எழுத்துருக்கள் 1867ம் ஆண்டைச் சேர்ந்தது என்பதை எடுத்துக் காட்டுகிறது.

1928ம் ஆண்டிற்கு முன்னைய பரராஜசேகரப்பிள்ளையார் ஆலயம் எப்படி இருந்திருக்கும் என்பதை இலகுவாக கற்பனை செய்து பார்ப்பதைவிட அக்காலப் பகுதியில் வாழ்ந்த, இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற எம்மூர் பெரியவர்களிடம் இருந்து அத்தகவல்களை இன்னமும் பெறக்கூடியதாக இருப்பது பலமே!

மேலும் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருதடவை கும்பாபிஷேகம் செய்தல் வேண்டும் என்ற விதிக்கமைய காலத்திற்கு காலம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு புனருத்தாரணம் மேற்கொள்ளப்பட்டு இன்று வரை பல கும்பாபிஷேகங்களை கண்ட கோயிலாக திகழ்ந்து மக்களுக்கு அருள் பாலித்து கொண்டிருக்கிறது.

நன்றி – கும்பாபிஷேகமலர் – 2009

# இணுவில் கந்தசுவாமி கோவில் ஆலய வரலாறு

ஞானஏந்தல்
மா.ந.பரமேஸ்வரன்

தமிழ்த் தெய்வமாம் முருகப் பெருமானுக்கு தமிழ் கூறும் நல்லுலகெங்கும் கோவில்கள் அமைக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் ஈழமணித் திருநாட்டில் அமையப்பெற்ற முருகன் ஆலயங்கள் பலவற்றையும் நாம் காணலாம். யாழ்ப்பாணம் வலி தெற்கில் அமைந்துள்ள இவ்வாலயம் யாழ் நகரில் நின்றும் காங்கேசன்துறை வீதியில் 7km தொலைவில் அமைந்துள்ளது. காங்கேசன்துறை வீதியில் கோவில் வாசல் என அழைக்கப்படும் இணுவில் சந்தியில் நின்றும் மேற்குத்திசையில் உற்றுநோக்கின் இவ்வாலய வளாகம் கண்ணுக்குப் புலப்படும்.

இணுவில் கிராமத்தில் அமைந்துள்ள இவ்வாலயம் காலத்தால் முற்பட்ட வரலாற்றுச்சான்றுகளையும் கந்தப்பெருமானது அற்புதத் திருவிளையாடற் திறத்தினையும் தன்னகத்தே கொண்டு காணப்படுகின்றது.

இவ்வாலயம் அமையப்பெற்ற காலம் 12ம், 13ஆம் நூற்றாண்டென ஆய்வுகள் கூறுகின்றன. ஆலயத்தின் வீதியோரத்தில் காணப்படும் பழமை வாய்ந்த தூண்களும், யானைச் சிற்பமும் ஆலய இடிபாடுகளும் 12 ஆம் 13ஆம் நூற்றாண்டு காலத்தையொத்தவை எனவும் பல்லவர் கால சிற்ப மரபுக்குரியவையெனவும், இவ்வாலயம் தமிழ் அரசர் காலத்தது எனப் பேராசிரியர் பத்மநாதன் அவர்கள் இந்துக் கலாசார அமைச்சினால் வெளியிடப்பட்ட இந்து ஆலயங்களும் கல்வெட்டுக்களும் பகுதி II எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இதற்குச் சான்றாக இவ்வாலயம் பற்றிய கர்ண பரம்பரைக் கதை ஒன்று சான்று பகர்கின்றது. இக்கதையில் வரும் பேராயிரமுடையோன் முதலி பற்றி யாழ்ப்பாணச் சரித்திரம் என்னும் ஆய்வுநூலில் முதலியார் இராசநாயகம் அவர்கள் குறிப்பிடுகையில் திருக்கோவலூர் பேராயிரமுடையோன் முதலி இணுவிலில் ஆட்சித் தலைவனாகக் குடியமர்த்தப்பட்டானெனவும் அவனது காலம் கி.பி 13ம் நூற்றாண்டென வும் கூறியுள்ளார்.

இனிக் கர்ண பரம்பரைக் கதையை அவதானிப்போம். காக்காய்க் குளம், முதலி குளம் என்னும் இருகுளங்களால் நீர் பாய்ச்சப்பட்டு (இணைவில் இணுவிலாக மருவியது. வில் ஸ்ரீ குளம், இணைவில் ஸ்ரீ இணைந்த குளம்) செந்நெல்லும், செங் கரும்பும், தென்னை, கமுகும், கனிதரு வாழையும், பலாவும் செழிப்புறத் திகழ்ந்த திவ்விய பூமி. அன்று இத்திவ்விய இணையிலி எனும் நிலப்பரப்பில் திருக்கோவிலூர் பேராயிரமுடையோன் முதலி ஆட்சித் தலைவனாக இருந்து மக்களை வழிப்படுத்தினான். (அன்றைய இணுவிலின் நிலப்பரப்பு ஆனைக்கோட்டை, உயரப்புலம் முதல் சுன்னாகம் மயிலங்காடு வரை பரவியிருந்தது. ஆதாரம் யாழ்ப்பாணச் சரித்திரம் குலசபாநாத


முதலியார்) அவனது வழிப்படுத்தலில் மக்கள் சீரும் சிறப்பும் பெற்று வாழ்ந்தனர். நெல்லறுவடைக் காலங்களில் நெல்லினை அறுவடை செய்து முதலியார் வீட்டில் நெற் போர்களை அடுக்கி வைத்து களஞ்சியப் படுத்தி வந்தனர். ஒரு நாள் நெல்லை அறுவடை செய்து நெற் போர்களை முதலி யார் வீட்டில் அடுக்கி வைத்து விட்டு தமது இல்லம் சென்று மக்கள் ஓய்வெடுத்து அமைதியடைந்தனர். அவ்வமைதியைக் குலைத்தாற் போல் ஓர் பெரிய ஒளிப்பிளம்பு முதலியார் வீட்டுத் திசையில் தெரிவதை நாலாபுறத்து மக்களும் கண்டனர்.

முதலியார் வீட்டில் அடுக்கி வைத் திருந்த நெற்போரே தீப்பற்றி எரிவதால் வந்த தீச்சுவாலையே அதுவென மக்கள் அனை வரும் தீர்மானித்து முதலியார் வீட்டை நோக்கி நாலா புறத்திலும் நின்று ஓடிச் சென்றனர். முதலியார் வீட்டை அடைந்த மக்கள் தாம் எண்ணியவாறு அங்கு எதுவித அனர்த்தமும் நிகழாதிருப்பது கண்டு வியந்தனர். மக்கள் கூட்டத்தைக் கண்ட முதலியார் மக்களிடம் வந்த காரணத்தை வினவ மக்களோ தமது மனதில் உதித்திருந்த எண்ணத்தை முதலியாரிடம் கூறினர்.

அதற்கு முதலியார் இக்கணத்திலே எனது வீட்டில் நிகழ்ந்த நிகழ்வொன்றைக் கூறுகின்றேன் கேளுங்கள் என உரைக் கலானார். நான் ஓய்வெடுத்துக் கொண்டு எனது வீட்டுத் திண்ணையில் அமர்ந் திருந்தேன். இரண்டு பிராமணச் சிறுவர்கள் எனது இல்லத்திற்கு வருகை தந்திருந் தார்கள். அவர்களை நான் வரவேற்றேன். அவர்களுக்கான உபசார வரிசைகளைச் செய்து அவர்களை அமர வைப்பதற்கு ஆயத்தமானேன். அவர்கள் என்னை நோக்கி நாங்கள் காஞ்சிபுரத்தில் நின்று வருகிறோம். எங்களை ஆதரிப்பீரா? எனக் கேள்வி எழுப்பினர். நான் ஆம் எனப் பதிலளித்தேன். மறுகணம் இருவரும் மறைந்து விட்டார்கள். இங்கு வந்தது யாருமல்ல காஞ்சிபுரத்துக் கந்தக் கோட்டத்தில் இருந்து அருளாட்சி புரியும் எமது குலத்தெய்வமான முருகனும் காலபைரவருமே. பரம்பொருள் ஏக காலத் தில் எனக்கும் காட்சி கொடுத்து எனது குடி மக்களாகிய உங்களுக்கும் காட்சி கொடுத் துள்ளார் எனக்கூறி, முருகனுக்கும் கால வைரவப் பெருமானுக்கும் ஆலயம் அமைத்து வழிபட்டனர்.

இக்காஞ்சிபுரத்து கந்த கோட்டத் திருப்பதியே கச்சியப்பசிவாச்சாரியரால் கந்தபுராணம் அரங்கேற்றம் செய்யப்பட்ட பெரும்பதி. இக்கோவிலின் உட்பிரகாரத் திலே காலபைரவப் பெருமானால் உரு வாக்கப்பட்ட காஞ்சிபுரத்து தீர்த்தம் காணப் படுகின்றது. இணுவிலில் அருளாட்சி செய்யும் கந்தப்பெருமானும் காஞ்சிபுரத்து கந்தக்கோட்ட திருப்பதியை ஒத்த பெரு மானே என்பதால் இவ்வாலயம் இணுவைக் காஞ்சி எனவும், கந்தக்கோட்டம் எனவும் அழைக்கப்படுகின்றது. காஞ்சிபுரத்துக் கந்தக்கோட்டத்துடன் இவ்வாலயத்தையும் ஒப்பிட்டு நோக்குகையில் காஞ்சிபுரத்துக் கந்தக்கோட்டத்தில் அமைந்திருப்பதைப் போன்று பைரவதீர்த்தம், காசிலிங்கம், சோமாஸ்கந்தமூர்த்தம், சத்துருசங்கார வேற்பெருமான், காலபைரவப்பெருமான் சந்நிதி என்பனவும் அமைந்துள்ளன.

திருக்கோவலூர் பேராயிரமுடை யோன் முதலியால் ஆலயம் அமைக்கப்பட்டு கந்தக்கோட்டத்தில் நின்று காஞ்சிபுரத்து தீர்த்தம் கொண்டு வரப்பட்டு தீர்த்தமும் அமைக்கப்பட்டதாகவும் பின்னர் அவன் மரபினனான கனகராச முதலியினால் ஆலயச் சூழலில் குளம் ஒன்றும் அமைக்கப் பட்டு காஞ்சிபுரத்துக் கந்தக்கோட்டத்தை ஒத்த ஆலயமும் அமைக்கப்பட்டு ஆலயச் சூழலில் காஞ்சிக்கந்தக் கோட்டத்தில் காணப்



இணுவில் கந்தசுவாமி கோவிலில் காணப்படும் உலகப்பெருமஞ்சம்

படும் விருட்சங்களை ஒத்த மரங்களும் நாட்டப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

இக்கூற்றிற்கேற்றாற்போல் ஆலயச் சூழலில் இயற்கையாகவே அருள்தரும் விருட்சங்களான சாம்பிராணிமரம், சந்தண மரம், உருத்திராக்கமரம், வன்னி மரம், பன்னீர்மரம், நொச்சிமரம், நாகலிங்கப்பூ மரம், மருதமரம், கடம்பமரம், மகிழமரம், புன்னைமரம், வில்வமரம், கொண்டல்மரம் போன்ற தேடற்கரிய விருட்சங்கள் இன்றும் நிற்பதைக் காணலாம்.

முதலிமாரால் வணக்கத்தலமாக அமைக்கப்பட்ட இவ்வாலயம் அந்நியர் படையெடுப்புகளால் அழிவுற்றுப் போக மீண்டும் குழந்தையர் வேலாயுதர் என்பவரால் 1735 ஆம் ஆண்டளவில் அமையப் பெற்றதே இன்றும் நாம் காணும் ஆலயம். வேளாண்மையைத் தொழிலாகக் கொண்ட வேலாயுதரின் கனவில் எம்பெருமான் தோன்றி "உனது மூதாதையர் என்னை வைத்து வணங்கியதைப் போன்று நீயும் என்னை வைத்து வணங்கு" எனப் பணிந்தருள அக் கூற்றினை உணர்ந்த வேலாயுதரோ "நான் உன்னை எங்கு வைத்து வணங்குவேன். உனக்கு என்ன பொருளை நிவேதிப்பேன்" என வினவ எம்பெருமானோ அதற்கு விடையாக "உனது வெற்றிலைத் தோட்டத்தில் நொச்சித்தடி ஒன்றினை ஊன்றி காலால் மிதித்து பாதச்சுவடு பதித்து அடையாளமிட்டிருப்பேன். அதுவே நான் உறையும் இடம். நீ தினமும் அருந்தும் உணவே எனது நிவேதனப் பொருள் என உரைத்து மறைந்தருளினார். இக்கூற்றிற்கமைவாக மறுநாள் காலை தனது தோட்டத்திற்குச் சென்ற வேலாயுதருக்கு புதிதாக ஓர் நொச்சித் தடி தென்பட்டது. அதனருகே சென்று நோக்கிய போது அங்கே பாதச் சுவடுகள் பதிக்கப்பட்டு அடையாளமிடப் பட்டது தெளிவாகத் தெரிந்தது. இறைவன் கனவில் உணர்த்திய இடம் இதுவே என துணிந்த வேலாயுதர் அவ்விடத்தில் வேற் பெருமானைப் பிரதிஸ்டை செய்து தாம் உண்ணும் உணவினையே பெருமானுக்கு நிவேதனம் பண்ணி இறைவழிபாட்டைத் தொடங்கினார். இவ்வாறு வழிபட்டுவரும் நாளில் ஒரு நாள் எம்பெருமானால் ஊன்றப் பெற்ற நொச்சித்தடி வாடி இருப்பதை வேலாயுதர் அவதானித்தார். ஆண்டவனால் ஊன்றப்பெற்ற புனிதமான நொச்சித்தடி வாடிவிட்டதே இதற்கு எப்படி நீரூற்றிக் காப் பாற்றுவேன் என மனம் நொந்தார். மனம் நொந்தவருக்கு மீண்டும் கனவில் காட்சி கொடுத்த எம்பெருமான் நீ வணங்கும் இடத் திற்கு அண்மையாக காவிளாய்ப் பற்றைக் குள் இருவர் கிணறு வெட்டுகிறார்கள்" எனக் கூறியருளினார்.

மறுநாள் காலை வழமை போல் இறைவனை வணங்கச் சென்றவர் சூழலை உற்று நோக்கினார். நோக்கியவருக்கு அண்மித்த தூரத்தில் காவிளாய் பற்றை தென் பட்டது. பற்றைக்கு அருகே சென்று கையால் பற்றையை விலக்கியவருக்கு பற்றைக் குள்ளே புதர் தென்பட்டது. புதருக்குள் இரண்டு மண்டூகம் தவளைகள் மண்ணைக் கிளறியவாறு இருப்பது கண்ணுக்குத் தெரிந்தது. தவளைகளை வெளியேற்ற புதருக்குள் இறங்கியவருக்கு புதரில் உள்ள மண்படை நீர்ப்பற்றுள்ள சேற்றுமண்ணாக இருப்பது தெரியவந்தது. அந்த மண்ணை வாரி வெளியே கொட்டிய போது வந்ததே இன்று நாம் காணும் வைரவ தீர்த்தம். நீர்ச்சுனையைக் கண்டு மனம் பூரிப்படைந் தவரின் காதில் "உரியவன் இங்குளேன்" என்னும் சொல்லொன்று காதில் ஒலித்தது. ஒலி வந்த திசையை உற்று நோக்கியவரு க்கு பற்றைகளால் மறைக்கப்பட்ட நிலையில் விளாத்தி மரத்தின் கீழ் வைரவசூலம் ஒன்று தென்பட்டது. (இச்சூலமும் தீர்த்தமும் பேராயிரமுடையோன் முதலியாரால் 13ம்

நூற்றாண்டளவில் அமைக்கப்பட்டவை) இந்நிகழ்வுகளால் உவகையுற்ற வேலாயுதர் வைரவ சூலத்தையும் வேற்பெருமானையும், புனித தீர்த்தத்தையும் எம்பெருமான் தமக் களித்த பெருங்கொடையே என எண்ணி தம் சுற்றத்தாருடன் சேர்ந்து வழிபடத் தொடங்கி னார்.

இந்த வேலாயுதருக்கு நான்கு ஆண் மகவுகளும் பெண் பிள்ளை ஒருவருமாக ஐந்து மக்கட் செல்வங்களை ஆண்டவன் கொடுத்தார். அவர்கள் முறையே இராம நாதன், கந்தர், கதிர்காமர், அருணாசலம், வள்ளியம்மை. இவர்களில் மூத்த மகன் இராமநாதன் ஒல்லாந்த அரசிடமிருந்து அனுமதி பெற்று 1765ஆம் ஆண்டளவில் செங்கற் கோவிலாக ஆகம விதிப்படி ஆலயத்தை அமைத்தார். வேலாயுதர் இராம நாதன் பற்றி யாழ்ப்பாணச் சரித்திரத்தில் முதலியார் இராசநாயகம் பின்வருமாறு உரைக்கின்றார். (பக்கம் 176, 2ம் பந்தி)

“மன்னர் முதற்கணப் பிள்ளையாகிய டென் இமானுவேல் இராசகாரியமான முதலி உத்தியோகம் இளைப்பாற அவர் மரு மகனாகிய மானிப்பாய் வெள்ன்: வேலாயு தன் சுவான் இராமநாதன் அவ்விடத்திற்கு 1761ல் ஆகஸ்து மாதம் 10ம் திகதியில் டொன் சுவான் இராசகாரிய இரத்தினசிங்க முதலி யார் என்னும் பெயருடன் நியமனமான பொழுது”

இக்கூற்றானது கி.பி 1765ஆம் ஆண்டளவில் வேலாயுதர் இராமநாதனால் ஒல்லாந்த அரசிடம் அனுமதி பெற்றுச் செங்கற் கோவிலாக ஆலயம் அமையப் பெற்று குடமுழுக்குச் செய்யப்பட்டதற்கான தக்க சான்றாகக் கருதுவதற்கு ஏதுவாக அமைகின்றது. இராமநாதனால் ஆலயம் முறைப்படி அமைப்பதற்கு அனுமதி ஒல்லாந்த அரசிடம் பெறப்பட்டவேளை அதற்கான காணி உறுதியும் பெறப்பட்டது. அக்காணியானது குழந்தையர் வேலாயுதர் தோம்பு என்னும் தோம்புப் பெயரையும் ஆலயத்தின் அமைவிடமானது இறைவனது அருட் திருவிளையாடலை வெளிப்படுத்தும் வகையில் அமைவிடக் காணிப் பெயர் நொச்சி ஒல்லை மிதியன் எனவும் அமைந் திருப்பதும் இறையருள் என்றே கொள்ள வேண்டும். இப்படியாக இறைவனது திரு விளையாடல் அருட்பொலிவும் யாழ்பாணச் சரித்திரத்துடன் ஒப்பிட்டு நோக்கும் தனித் தன்மை கொண்டு காணப்படும் இவ்வாலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய சிறப்புத் தன்மை ஒருங்கமைந்த புண்ணிய ஸ்தல மாகக் காணப்படுகின்றது.

**மூர்த்தி :**

ஆலயத்தில் அமையப் பெற்றிருக் கும் ஆறுமுகசுவாமியின் கீர்த்தி மிகவும் பெரியது. இத்திருவுருவம் அமையப் பெற்ற காலம் கி.பி 1886 ஆம் ஆண்டெனக் கூறப்படுகின்றது.

இவ்வாலயத்திற்கு நித்திய நைமித் திய பூசைகளைச் செய்துவந்த செல்லையர் சின்னையர் என்பவர் புத்திரப் பேறின்மை யால் புத்திரப்பேற்றினை எம் பெருமானிடம் வேண்டி நின்றார். அதன் பொருட்டு சண்முகப்பெருமானை மயில் மேல் இருந்த பாவனையில் உருவாக்குவதற்கு எண்ணி னார். ஆலய வளாகத்தில் விக்கிரகத்தை பஞ்சலோகத்தால் வார்ப்பதற்கு எடுத்த முயற்சி இருமுறை கைகூடவில்லை. இது கண்டு மனம் நொந்த சின்னையருக்கு கனவில் எம்பெருமான் தோன்றி “நான் திருச் செந்தூரில் இருப்பதைப் போன்று நின்ற பாவனையில் வண்ணார்பண்ணையில் ஸ்தபதி வீட்டில் அமையப் போவதாக” கூறி அருளினார். அதற்கமைய பஞ்சலோகங்க ளையும் ஏற்றிக் கொண்டு ஸ்தபதியின் வீட்டை அடைந்தார் சின்னையர். நடந்த

வற்றை கேட்டறிந்த ஸ்தபதி உவகையுற்று அந்த இறைவனிடமே அமையப்போகும் சண்முகத்து அளவுப் பிரமாணத்தையும் கேட்டுரைக்குமாறு ஐயரிடம் வேண்டினார். இக்கூற்றிற்கேற்ப ஆண்டவனிடம் விண்ணப் பஞ் செய்த ஐயருக்கு அவரது தியான நித்திரையில் காட்சி கொடுத்த பெருமான் சீர்குக்குட ஆசனமாக இருப்பீரேயானால் என்ன உயரம் தோன்றுமோ அதுவே எனது அளவு எனக்கூறியருளினார். ஐயரின் குக்குடாசனத்தை அளவுப் பரிமாணமாகக் கொண்ட ஸ்தபதி அவ்வுயரமே விக்கிரகங் களின் அளவுப் பரிமாணத்தின் அதிகூடிய உயரம் என்பதையும் உணர்ந்தார்.

அதற்கமைய வார்க்கப்பட்டதே இன்று நாம் தரிசிக்கும் சண்முகப்பெருமான். இது போன்ற திருவுருவை வேறெங்கும் காண்பது அரிது. சண்முகப் பெருமானது வாசலில் தியானத்தில் ஈடுபடுபவர்கள் பெறும் பயன் எண்ணிலடங்கா.

**தலம் :**

இத்தலத்தில் முன்னைய ஆலய அமைப்பானது பல்லவர் காலச் சிற்ப மரபை ஒத்ததாகவே மூலஸ்தானம், அர்த்தமண்ட பம், வசந்தமண்டபம், இராஜகோபுரம், கேணி ஆகியவை அமையப் பெற்று மூன்று தள இராஜ கோபுரத்தையும் தன்னகத்தே கொண்டு காணப்பட்டது. பரிவார மூர்த் தங்களுக்கான ஆலயங்களாக விநாயகர், சோமாஸ்கந்தர், வேணுகோபாலர், தண்டாயுதபாணி வைரவர், நாகதம்பிரான், சண்டேஸ்வரர், சந்திரசூரியர், நவக்கிரகம் ஆகியவை காணப்படுகின்றன. முன்னைய ஆலயம் 1765 ஆம் ஆண்டளவில் செங்கற் கோவிலாகவும் பின்னர் 1852ஆம் ஆண்டள வில் வெள்ளைக் கற்கோவிலாகவும் குடமுழுக்குச் செய்யப்பட்டதாகக் கருதப் படுகின்றது.

1852 ஆம் ஆண்டளவில் கற் கோவில் அமைக்கப்பட்ட வேளை கல் வேலைகளைச் செய்த சிற்பி ஒருவர் கோறைக்கல்லொன்றை ஆலயச் சுவரில் வைத்துக் கட்டியதாகவும் தனது இருப் பிடத்தில் கோறைக்கல்லொன்று வைக்கப் பட்டுள்ளது என்பதை ஆலய முகாமையாள ருக்கு ஆண்டவன் கனவில் கூறியதாகவும் "நான் எப்படி அக்கல்லினைக் கண்டு பிடிப் பேன்" என எண்ணியவருக்கு "நீ அங்கு செல் நான் உனக்கு அக்கல்லைக் காட்டுவேன்" என இறைவன் கனவில் கூறி மறைந்தார்.

மறுநாள் ஆலயவேலையைக் கவனிப்பதற்கு சென்ற முகாமையாளருக்கு ஆலயத்தில் கட்டப்பட்ட கல் ஒன்றில் ஓர் அணில் இருப்பதையும் அவ்வணிலை ஸ்தபதி கலைக்க அவ்வணில் மீண்டும் மீண்டும் அக்கல்லில் இருப்பதையும் கண்டார். இக்காட்சியைக் கண்ட கோவிலார் குற்றி கல்லினை அகற்றும்படி ஸ்தபதியிடம் பணித்தார். அகற்றப்பட்ட கல் கோறைக் கல்லாக காட்சியளித்தது. இறைவனது அருள் விளையாட்டை எண்ணி பூரிப்படைந்தார் முகாமையாளர். வேலையாட்களோ இறை வனது அருட்பார்வை அவ்விடத்தில் இருப் பதை உணர்ந்து மிகவும் பயபக்தியுடன் ஆலய வேலைகளில் ஈடுபடலாயினர்.

இவ்வாலயத்தில் அமையப் பெற்ற இராசகோபுரம் கி.பி. 1905 ஆம் ஆண்டளவில் சுதுமலை முத்துநாகலிங்கம் என்பவரால் அமையப் பெற்றதாக கோபுர வரலாற்றுக் கல்வெட்டு சான்று பகர்கின்றது. வைத்தியரான முத்துநாகலிங்கத்திற்கு அவரது மகன் அண்ணாமலைக்கு ஏற்பட்ட குன்ம நோயினை மாற்ற முடியவில்லை. இந் நிலையில் மகனைக் குணப்படுத்துவதற்கு முத்துநாகலிங்கத்தால் எடுத்த முயற்சிகள் கைகூடாத நிலையில் அவர் இணுவில் கந்தசுவாமி கோவிலில் தவசீலராக இருந்து

அருட்திருவிளையாடல்களைச் செய்து கொண்டிருந்த சித்தர் பெரிய சந்நியாசியா ரென அழைக்கப்படும் சுப்பிரமணியம் சந்நியாசியாரை நாடி தனது மகனின் பிணிக் குறையைத் தீர்க்க வேண்டு மென வேண்டி நின்றார்.

பெரிய சந்நியாசியார் நோயினால் பீடிக்கப்பட்டு அசைவற்ற நிலையில் முண்டம் போல் கிடந்த அண்ணாமலையை ஆலய முன்றலிற்கு கொண்டு வருமாறு பணித்தார். ஆலய முன்றலில் சோற்றினைக் குவியலாகப் படையல் செய்து அச்சோற்றுக் குவியலின் மேல் நோயாளியைக் கிடத்தி உடலில் உள்ள ஏழு சக்கரஸ்தானங்களிலும் கற்பூரத்தைக் கொழுத்தி தான் தியானத்தில் ஆழ்ந்தார். கற்பூரங்கள் நோயாளியின் உடலின் ஏழுஸ்தானங்களிலும் எரிந்து முடிவுற்றதும் நோயாளி குணமடைந்து எழுந்து நின்றார். இதற்குக் காணிக்கையாக முத்துநாகலிங் கத்தினால் மூன்றுதள இராஜகோபுரம் எம்பெருமானுக்கு அமைக்கப்பட்டது.

காலத்துக்குக் காலம் நடைபெற்ற கும்பாபிசேகங்களின் போதும் திருப்பணி வேலைகள் இடம் பெற்றன. அந்த வகையில் 1966ம் ஆண்டளவில் முன்னைய கருவறை அகற்றப்பட்டு இருதள விமானங்களைக் கொண்ட கருவறை அமைக்கப்பட்டு மூல வேராக இருந்த வேற்பெருமானுக்குப் பதிலாக முத்துக்குமாரசுவாமி பிரதிஸ்டை செய்யப்பட்டது. மூன்று தளங்களை உடைய இராஜகோபுரம் 2002ம் ஆண்டளவில் ஐந்து தளங்களைக் கொண்ட இராஜகோபுரமாக அமையப் பெற்றுள்ளது. ஆறுமுகசுவாமி வாசலிலும் புதிதாக ஓர் இராஜகோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. ஆலயத்தில் கிழக்குப் புற கோபுர வாசலை அண்டி ஏற்கனவே இருந்த இடதுபுறமணிக் கோபுரம் போன்று வலது புறத்திலும் ஓர் மணிக்கோபுரம் அமை யப்பெற்று இரு தள மூலஸ்தான விமானத்து டன் இரண்டு ராஜகோபுரங்களுடனும் இரண்டு மணிக் கோபுரங்களுடனும் ஆலயம் அழகுறக் காட்சி கொடுக்கின்றது.

**தீர்த்தம் :**

இங்கு அமையப்பெற்ற தீர்த்தம் வைரவ தீர்த்தமெனப் பெயர் பெற்றுள்ளது. காஞ்சிபுரத்து கந்தக்கோட்டத்து காஞ்சித் தீர்த்தமே இது எனக் கூறுவர். தீராவினை களையும் பிறவித் துன்பத்தையும் போக்கும் தன்மை கொண்ட இத்தீர்த்தத்தில் யாழ்ப் பாண அரசனான கனகசூரியன் நீராடி வைரப் பெருமானை வணங்கி தான் செண்பகப் பெருமாளிடம் இழந்த இராச்சியத்தை மீண்டும் பெற்றதான வரலாற்றுக் கதை யொன்றும் உண்டு. தீராப் பிணிகளைத் தீர்க்கும் இத்தீர்த்தத்தில் இரவு பகல் பாராது அடியவர்கள் நீராடியும் பிரசாதமாகப் பருகியும் இறையருள் வேண்டி நிற்பதை இன்றும் நாம் காணலாம். இவ்வாலயத்தின் முருகப்பெருமான் ஆனி மாத அமாவாசை தினத்தில் இப்பைரவ தீர்த்தத்தில் தீர்த்தமாடி அடியவர்களுக்கு அருள் பாலிப்பார். மூர்த்தி, தலம், தீர்த்தம் இவை மூன்றும் முறையாக அமையப் பெற்ற திருத்தலம். ஆறு காலப் பூசையையும் நித்திய உற்சவத்தையும், இருபத்தைந்து நாட்கள் மகோற்சவத்தையும் தனித்துவம் மிக்க தைப்பூசம் மஞ்சத் திரு விழாவையும் சிறப்புப் பொருந்திய கந்தஷ்ஷ்டி திருவிழாவையும் தன்னகத்தே கொண்டு காணப்படுகின்றது. தல விருட்ச மாக நொச்சி மரம் மூலஸ்தானமருகில் காணப்படுகின்றது.

மகோற்சவமாக வைகாசிச் சஷ்டி திதியில் கொடியேற்ற விழாவினைத் தொடர்ந்து ஆனி அமாவாசையில் தீர்த்த உற்சவத்தையும் கொண்ட 25 திருவிழாக் களை தன்னகத்தே கொண்டு காணப்படுகின் றது. மகோற்சவ தினங்களில் விசேட திரு விழாக்களாக 12ம் திருவிழா, பெருமஞ்சத்



இணுவில் கந்தசுவாமி கோவிலில் காணப்படும் மிகவும் பழமைவாய்ந்த ஆட்டுக்கடா வாகனம்

திருவிழாவாகக் கொண்டாடப்படுகின்றது. மாம்பழத்திருவிழா, சப்பறத் திருவிழா, வேட்டைத் திருவிழா போன்றவையும் சிறப்பு மிக்க திருவிழாக்களே. தேர்த்திருவிழாவின் போது சண்முகப்பெருமான் வள்ளி, தெய் வானை சமேதராக தேரில் எழுந்தருளுவார். அத்துடன் விநாயகர், சந்திரசேகரர் ஆகிய திருமூர்த்திகளும் எழுந்தருளி மூன்று தேர்கள் வீதி உலாவரும்.

ஏனைய திருவிழாக்களில் கந்த சஷ்டி தனிச் சிறப்புப் பெற்ற திருவிழாவாக இவ்வாலயத்தில் நடைபெறுகின்றது. ஆறு நாட்களும் யாகபூசை இடம்பெற்று உற்சவ மூர்த்தியாக சண்முகப்பெருமான் எழுந் தருளி அருட்காட்சி கொடுப்பார். ஆறாம் நாளாகிய சூரசங்ஹார திருவிழா கண் கொள்ளாக் காட்சியாகும். கடா வாகனத்தில் சண்முகப்பெருமான் எழுந்தருளி சூரசங் ஹாரம் செய்து அடியவர்களுக்கு காட்சி கொடுப்பார்.

தைப்பூசத் திருவிழாவும் இவ்வால யத்தில் சிறப்புமிக்க திருவிழாக்களில் மகுடமெனத் திகழ்கின்றது. உலகப் பெரு மஞ்சமாகவும் சைவ உலகின் முதல் பெரு மஞ்சமாகவும் நூற்றாண்டு கடந்த தனிச் சிறப்பும் கொண்ட திருமஞ்சத்தில் சண்முகர் பவனிவரும் காட்சியைக் காண்பதற்கு நாட்டின் பல பாகங்களில் நின்றும் மக்கள் ஆலயத்தில் ஒன்றுகூடி இத் திருவிழாவில் ஆறுமுகப்பெருமானின் அருள்மழையில் நனைவர்.

நித்திய உற்சவமாக அதிகாலை 5.15 மணிக்கு உட்சுற்றுப் பிரகாரத்தில் அமையப் பெற்ற பள்ளியறையில் திருப்பள்ளி எழுச் சிப் பாடல் ஓதப்பெற்று எம் பெருமானுக்கு தீபாராதனை செய்யப்பட்டு பாலமுருகன் தேரிலே ஆரோகணித்து பக்தர்கள் புடைசூழ கருவறைக்கு எழுந்தருளுவார். மீண்டும் அர்த்தசாமப் பூசையின் போது (பி.ப 7.00 மணி) மூலஸ்தானத்தில் நின்றும் எழுந் தருளி தேரேறி பள்ளியறை சென்று திரு வூஞ்சல் பாடப் பெற்று ஆலயத்தின் திருக் கதவுகள் சாத்தப்படும்.

ஏனைய திருவிழாக்களாக மாதப் பிறப்பு, வெள்ளிக்கிழமை, கார்த்திகைத் திருவிழா, சஷ்டி போன்ற நாட்களில் எம் பெருமான் விழாக் கோலம்பூண்டு எழுந் தருளுவார். இவ்வாலயமானது அளவுப் பரி மாணத்தில் அதி உயர் கட்டுமானத்தையும், விக்கிரக அமைப்புகள், வாகனங்கள், மஞ்சம் போன்றவற்றால் அதி உயர் அளவுப் பரி மாணத்தையும் ஆலயத்துக்குரிய ஆதன நன் கொடைகளாக 26 ஆதனங்களைக் கொண்ட 600 பரப்பு காணிகளையும் தன்னகத்தே கொண்டு காணப்படுவதோடு காங்கேசன் துறை வீதியில் கோவில் வாசல் எனக் கூறப்படும் இடக்குறிப்பினையும் தன்னகத்தே கொண்டு இணுவைப் பெரிய கோவில் என்னும் திருப்பெயரைத் தன்னகத்தே தாங்கி நிற்கின்றது.

**உசாத்துணை நூல்கள் :**

இலங்கையில் இந்து ஆலயங்களும் கல்வெட்டுகளும் பகுதி II
(இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம்)
யாழ்ப்பாண வைபவமாலை
(மயில் வாகனப்புலவர்)
யாழ்ப்பாணச் சரித்திரம்
(முதலியார் இராசநாயகம்)
இணுவில் அம்பலவாணக் கந்தசுவாமி கோவில் சரித்திர வரலாறும் கணக்கு விபரமும் 1967
இணுவில் அம்பலவாணக் கந்தசுவாமி கோவில்
விடுதலை இயக்க வரலாறு 11-02-1960
இணுவை அப்பர் (க.செ.நடராசா)
இணுவில் கந்தசுவாமி கோவில் மல்லாகம் மாவட்ட நீதி மன்றத் தீர்ப்பு 01-12-1986

# இணுவில் செகராசசேகரப்பிள்ளையார் கோவில்

இணையிலி மு.சிவலிங்கம்

சீரோங்கு புகழ் மலிந்த பேரிணுவைத் திருவூரில் கருணை மழை பொழியும் ஆலயங்கள் மிகுந்ததால் மக்களும் சிவநெறி பேணி நலமுடன் நல்வாழ்வை மேற்கொண்டுள்ளனர். அதிகாலையில் அனைவரும் துயிலெழுப்பும் ஆலய மணியோசை நற்சிந்தனையுடன் அறப்பணியாற்றத் தூண்டுகிறது. இணுவையூர் மக்களை நற்பண்புடன் வாழ உறுதுணை புரியும் ஆலயங்கள் பல உள. பண்டைய தமிழ் மன்னர்களால் அமைக்கப்பட்ட நான்கு முதுபெரும் ஆலயங்களுள் இணுவில் மேற்கில் அமைந்த செகராசசேகரப்பிள்ளையார் ஆலயமும் ஒன்றாகும்.

இற்றைக்கு எழுநூறு ஆண்டுகளுக்கு முன் தமிழ் மன்னனான செகராசசேகரனால் அமைக்கப்பட்டு வழிபட்ட திருத்தலம் செகராசசேகரப்பிள்ளையார் கோயில் என அழைக்கப்படுகிறது. இவ்வாலயம் இயற்கை வனப்பின் சரித்திரத்தை எடுத்துக் கூறும் நற்பெயருடன் கணபதி நாமத்தை எடுத்தோதுகிறது. முற்காலத்தில் இணுவில் மத்தியில் அமைந்த இணைந்த குளங்களால் நீர் பாய்ச்சப்பட்டு இப்பகுதியில் பருத்திச் செய்கையை இன்றும் நினைவூட்டும் சான்றாக இவ்வாலயம் "பருத்தி அடைப்பு பிள்ளையார் கோயில்" என எம் மக்களால் போற்றப்படுகிறது. சரித்திரப் பிரசித்தி பெற்ற வனப்புடன் கூடிய இவ்வாலயத்தை பண்டைய மக்கள் உள்ளன்போடு பூசித்து வந்தனர். இயற்கை அன்னையின் திருவருளும், செகராசசேகரப் பிள்ளையாரின் இறையருளும் நிறைந்ததால் இவ்வூர் மக்கள் அகப் பொலிவுடன் அறப்பணியாற்றி நற்பண்புடன் இனிதே வாழ்ந்தனர். இதனால் சிவநெறியும் தமிழ் மரபும் மேலோங்கியிருந்தன. காலங்கள் கடந்தன. அந்நியராட்சியில் யாவும் சிதைந்தன. சைவமும் தமிழும் தடை செய்யப்பட்டபோது எம்மக்கள் அகத்தளவில் சிவநெறியைப் பேணினர்.

சைவத்தையும் தமிழையும் வளர்க்கவென அவதாரஞ் செய்த நாவலர்பெருமானிடம் பயின்ற இவ்வூர் சுப்பிரமணியம் சட்டம்பியார் நாவலர் பெருமானின் தூண்டுதலால் இவ்வாலயத்தின் தென்பகுதியில் அமைந்த திண்ணைப் பள்ளியை நடாத்தினார். இவர் மூலம் இணுவில் மேற்கில் சைவமும் தமிழும் வளர்ந்தன. இவரின் மருமகனான சங்கரப்பிள்ளை என்பவர் தமது இறைபக்தி மேலீட்டினால் சிறு குடிசையிலிருந்த இவ்வாலயத்தைப் பராமரித்து வந்தார். விவசாயியான சங்கரப்பிள்ளை தமது ஓய்வு நேரத்தில் இவ்வூரில் பிடியரிசி எடுத்து வந்து ஆலயத் திருப்பணியை மேற்கொண்டார். சிறு மண்குடிசை சுண்ணச் சாந்துக் கட்டடமாக மாறியது. இவ்வாலய வழிபாடும் மேம்பட்டது. சங்கரப்பிள்ளை தமது முதுமைக் காலத்தையும் நோக்காது தொடர்ந்து பிடியரசி எடுத்துத் தள்ளாடும் வயதிலும் ஆலயப் பணியே தமது மூச்செனப்

போற்றிப் பணியாற்றினார். வெள்ளை வைரக் கற்களால் கருவறை, அர்த்த மண்டபம் ஆகியவை நிறை வேறின. சங்கரப்பிள்ளை யின் பணிச்சிறப்பால் கவரப்பட்ட அவரது மகன் சின்னத்துரையும் தம்பணி சிறக்க ஆலயப் பணியைச் சிறப்புடன் செயலாற்றி னார். சின்னத்துரையின் மூத்தமகன் சுந்தர லிங்கம் தமது மூதாதையர் போற்றிப் பணிந்து வந்த ஆலயப் பணியைப் பொறுப் பேற்றார்.

தமது ஆன்மிக உணர்வினால் ஆலயப் பணிக்காகத் தமது முழு நேரத்தை யும் அர்ப்பணித்தார். இதன் பேறாக அத்தியா வசிய கட்டுமானப் பணிகளைப் பொது மக்களின் உதவியுடன் நிறைவேற்றினார். தேர்த்திருவிழா உபயகாரரான பண்டிதர் வித்துவான் சைவப் புலவரான திருநாவுக் கரசு என்பவர் தமது குடும்ப உறவினர்களி னதும் நெருங்கிய நண்பர்களினதும் உதவி யுடன் புதிய சித்திரத்தேரொன்றை அமைக்க உதவினார். இத்தேர் பாதுகாப்பான தேர்த் தரிப்பிட மண்டபத்தில் நிறுத்தப்பட்டுள்ளது.

ஆலய அறங்காவலரின் அயராத முயற்சியால் ஆலயத் திருப்பணிகள் மேலோங்கவும் விநாயகப் பெருமானின் அடியார்களின் பக்தியும் மேம்பட்டது. ஒவ்வொரு மாதப் பிறப்பன்றும் யாவரும் தவறாது காலையில் விசேட பொங்கலிட்டு எம்பெருமானின் விசேட பூசைகளிலும் வழி பாட்டிலும் இன்புறுகின்றனர். விநாயகப்பெரு மானின் கருணையின் சிறப்பால் ஆலய இராஜகோபுர வேலை தொடங்கியது. நீடிய திட்டத்தில் எம்பெருமானுக்கு பஞ்சதளங் கொண்ட நெடிய கோபுரம் அமைந்து குடமுழுக்கை யாவரும் கண்டுகளிக்கும் பேற்றினையும் பெற்றனர்.

பண்டைய வரலாற்றுச் சிறப்புமிக்க இவ்வாலயத்தின் வருடாந்தப் பெருவிழா சித்திரை மாத வளர்பிறை சதுர்த்தியில் கொடியேற்ற விழாவுடன் ஆரம்பிக்கிறது. பத்தாம் நாளான தேர்த் திருவிழா வெகு சிறப்பாக அமைகிறது. அடுத்த நாளான சித்தி ரைப் பூரணை தினத்தன்று தீர்த்த விழாவும் சிறப்புடன் நடைபெறுகின்றது. இவ்வாலயத் தின் பெருவிழாவினைத் தொடர்ந்து மாதந் தோறும் மாதப் பிறப்பன்று பொங்கல் பூசை யாவும் சிறப்பாக அமைகிறது. மேலும் வருடம் முழுவதும் சதுர்த்தி விழாவும் கார்த்திகையில் விநாயகர் விரத காலம் 21 நாளும் சிறப்பான பூசை விழாக்களும் இறுதி நாளன்று அதிவிசேட விழாவும் விநாயகப் பெருமானின் வீதியுலாவும் நடைபெறும். மார்கழி மாதத்தில் திருவெம்பாவை உற்சவ மும் சிறப்பாக நடைபெறுகிறது.

இவ்வாலய ஊஞ்சற் பாடலை தேர்த்திருவிழா உபயகாரர் பண்டிதர் இ.திரு நாவுக்கரசு பாடி வைத்தா. பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம் செகராசசேகரப்பிள்ளையார் பிள்ளைத்தமிழ் நூலை எழுதி ஆலயத்துக் காக அன்பளிப்புச் செய்தார்.

ஆலய நித்திய, நைமித்திய பூசைகள் விழாக்கள், பெரு விழாக்கள் மற்றும் திருப் பணிகள், ஆலயத் தொண்டுகள் யாவும் ஆலய அறங்காவலரின் பேருதவியுடன் ஊர்ப் பொதுமக்களே முன்னின்று சிறப்புடன் நிறைவேற்றுகின்றனர்.

செகராசசேகரப் பிள்ளையாரின் பேரருளால் அவரின் பக்தர் யாவரும் சைவமும் தமிழும் சிறக்கவும் வாழ்வாதாரம் சிறக்கவும் திருவும் கல்வியும் சகல சிறப்புகளும் பெற்று இனிது வாழ்கின்றனர்.

செகராசசேகரப்பிள்ளையாரின் மீதிருந்த எம் மக்களின் பக்தியும் பெரு மானின் வற்றாத பெருங்கருணையும் மக்களின் இடையறாத பெருமுயற்சியும்

ஒன்று சேர பலனும் சிறக்கிறது. தம்மை வாழ வைக்கும் தெய்வத்தை மேலும் பூசிப்பதற் காக ஆலயத்தை அணி செய்யவும் திருப் பணிகளை நிறைவேற்றவும் எவரும் பின் நிற்பதில்லை. இவ் ஆலயத்தின் தெற்கு வாசலில் அரியதோர் கோபுரத்தை அமைக்கு மாறு எம்பெருமான் உணர்த்தியதால் அறங் காவலர் ஆலய தெற்கு வாசல் கோபுரத்தை 2011 இல் ஆரம்பித்து மூன்று தளத்தில் அமைத்துள்ளார். விநாயகப் பெருமான் தம் மக்களுக்கு அள்ளிக் கொடுத்ததை நன்றி யாக ஏற்றே இக்கோபுரத் திருப்பணிக்கு யாவரும் தாராளமாகத் தந்துதவினர்.

2012 இல் செகராசசேகரப்பிள்ளை யாரின் பெருங் கருணையால் அவரின் தயவில் நல்வாழ்வு மேற்கொண்ட இவ்வூர் வாலிபர்கள் வெளிநாடுகளில் வாழ்ந்தாலும் எம்பெருமானின் கருணையை வியந்து பாடலாக்கி ஒலிப்பதிவு நாடாவில் வெளியிட் டனர். இவ் ஒலிப்பதிவு நாடா எம்மக்களின் இல்லங்கள் தோறும் அருள் நாதத்தை ஒலிக்க வைத்ததும் சரித்திரப் பிரசித்தி பெற்ற செகராசசேகரப் பிள்ளையாரின் அற்புதமே யாகும்.

இப்புதுமை மிகு விநாயகப் பெரு மானின் ஆலயச் சிறப்பு நோக்கி பக்தர்கள் எம்பெருமான் உலாவருவதற்கென அழகிய திருச் சப்பறமொன்றை உருவாக்கியுள்ள னர். இச்சிறப்பை நோக்கினால் கோபுரங் களின் அமைப்புகளுள்ள பெருவிழாக் காணும் இணுவில் திருவூரின் நான்கு திருத் தலங்களிலும் தெய்வங்களின் அருள்மிகு ஊர்வலச் சிறப்புக்கான சிறப்பான சப்பறங் கள் அமைந்ததும் இறையருளேயாகும்.

மேலும் தேர்த்திருவிழாவின் போது முருகப் பெருமானின் ஊர்வலத்துக்கான சித்திரத்தேரொன்றை தேர்த் திருவிழா உபயஞ் செய்து வந்த பண்டிதர் இ. திரு நாவுக்கரசுவின் குடும்பத்தினர் உபய மளித் துள்ளனர். அருள்மிகு கணபதியின் சிறப்பு மேலும் இணுவை மக்களுக்குக் கிடைக்க வேண்டுமென உள்ளன்போடு பூசைப்பணி களைச் சிறப்புடன் நடாத்தும் பிரதம சிவாச் சாரியான சிவஸ்ரீ சி. குமாரராஜக்குருக் களின் பணிச்சிறப்பே இவ்வாலயத்தின் இன்றைய சிறப்புக்களுக்கு உதவ எம் பெருமான் அருள் பாலிக்கிறார்.




இணுவில் ஸ்ரீ பரராஜ சேகர பிள்ளையார் கோவில்



இணுவில் கந்தசுவாமி கோவில்



இணுவில் செகராச சேகரப் பிள்ளையார் கோவில்



சுன்னாகம் கதிரைமலைச்சிவன் கோவில்

# கதிரமலை சிவன் வரலாற்றுச் சிறப்பும் தோற்றமும் வளர்ச்சியும்

**சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை தேவஸ்தானம்**

இயற்கை எழில் கொஞ்சும் இலங்கை வள நாட்டின் வட பகுதியில் முதல் தமிழ் இராச்சியமாக கதிரமலை திகழ்ந்தது என வரலாற்றாய்வாளர்கள் உறுதிப்படுத்தி யுள்ளனர். இக்கதிரமலை இராச்சியத்தை கிபி 8ம் நூற்றாண்டளவில் ஆட்சி செய்த உக்கிரசேனன் தனது திருமணம் இடையூறு இன்றி நடைபெற வேண்டும் என நேர்த்தி வைத்து உருவாக்கிய ஆலயமாக கதிரை ஆண்டான் என்ற பொருள்படும் கதிரமலை சிவன் ஆலயம் அமைந்துள்ளது. இவ் வாலயம் தற்போது யாழ்ப்பாணத்தையும் காங்கேசன்துறையையும் இணைக்கும் பெருந்தெருவில் சுன்னாகம்சந்தியில் இருந்து புன்னாலைக் கட்டுவன் சந்தி நோக்கிச் செல்லும் புத்தூர் வீதியில் சுன்னாகம் சந்தியில் இருந்து 200m தொலை வில் அமைந்துள்ளது. ஆலயம் ஏறத்தாழ 2.2½ ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. சுன்னாகத்தில் மிக உயரமான மலை போன்ற பிரதேசமாக இப்பிரதேசம் காணப்படுகிறது. இத் தரைப்பிரதேசம் சிவப்பு நிறமான இருவாட்டி மண்வகையைச் சேர்ந்ததுடன் என்றும் வற்றாத நிலத்தடி நீரூற்றுக்களைக் கொண்ட கிணறுகளையும் கொண்டுள்ளது. இவ்வாலயம் விசாலமான உள்வீதியையும் தேரோடும் வெளிவீதியையும் கொண்டது.

ஆலயத்தின் வெளிவீதியில் மருது மலைவேம்பு போன்ற பெருவிருட்சங்கள் நிழல் தரும் இடமாக அமைந்துள்ளதால் வெளிமாவட்டங்களில் இருந்து சுன்னாகத்து க்கு பொருட்களை ஏற்றிக் கொண்டு வரும் பாரவூர்திகளின் தற்காலிக தரிப்பிடமாகவும் விளங்குகிறது. இவ்வாலயத்தில் நகரமாக விருத்தியடையத் தொடங்கும் ஒரு பெரிய கிராமத்தின் பரபரப்பையும் செல்வ செழிப் பையும் நவீனத்துவ கடைத்தொகுதிகளை யும் புகழ் பெற்ற சந்தையையும் கொண்ட தாக விருத்தியடைந்து வருவதுடன் சுன்னா கத்தில் முதல் இராசகோபுரம் அமைக்கப்பட்ட பெருமைக்குரிய தலமாகவும் காணப்படுகி றது.

இவ்வாலயம் உருவான வரலாற்றை எடுத்து நோக்குவோமானால் 17,18ம் நூற்றாண்டுகளில் எழுந்த கைலாயமாலை யாழ்ப்பாண வைபவமாலை முதலான தமிழ் இலக்கியங்களின் கூற்றுப்படி கி.பி 8ம் நூற்றாண்டளவில் கதிரமலை ஆண்ட உக்கிர சேனன் மாருதபுரவீக வல்லி திருமணத்துக்கு இருந்த இடையூறை நீக்கும் பொருட்டு உக்கிர சேனனால் கதிரமலை இராச்சியத்து க்கு கிழக்கு புறமாக காசிவளநாட்டின் இருந்து தருவிக்கப்பட்ட இயற்கையாக உரு வான உயிர்ப்பான என்றும் வளர்ச்சியடை யும் தன்மை கொண்ட பாணலிங்கத்தை மூலஸ்தான லிங்கமாக பிரதிஸ்டை செய்து அமைக்கப்பட்ட ஆலயமாக கதிரைமலை சிவன் ஆலயம் கூறப்படுகிறது. அவ்வகையில் இன்றும் சுன்னாகம் கதிரமலை சிவன் ஆலயத்தின் கருவறையில் காணப்படும்

இலிங்கம் மிகப்பழமை வாய்ந்த பாணலிங்க வகையை சேர்ந்ததாகும், என கூறப்படுகிறது. இவ் புராதன இலிங்கத்தில் மூன்று கண்களைப் போன்ற செந்நிற அடையாளம் இயற்கையாக காணப்படுவதுடன் சங்கு சக்கரம் என்பவையும் செந்நிறத்தில் காணப்படுவது சிறப்பம்சமாகும்.

புராதன சிவன் ஆலயங்கள் அரசர் களாலும் செட்டிமார்களாலுமே அமைக்கப் பட்டவையாகும். ஏனெனில் மற்றைய இந்து கிராமிய தெய்வங்களுக்கான கோயில்க ளைப் போல் அல்லாது சிவாலயங்களின் அமைப்பு, பூசை வழிபாட்டு, பராமரிப்பு, என்பன முறைமை சார்ந்த நியதிகளுக்குட் பட்டது. எனவே இவற்றை சாதாரண குடிமக்க ளால் நிறைவேற்ற முடியாது என்ற காரணத் தால் புராதன பெரும் சிவாலயங்கள் அரசர் களாலும் செட்டிமார்களாலும் அமைக்கப் பட்டதாக புராதன சிவாலயங்களின் வரலாறு கள் சான்று பகர்கின்றது. அந்த வகையில் சுன்னாகம் கதிரமலை சிவனாலயமும் கதிரமலை இராச்சியத்தினை ஆண்ட உக்கிர சேனனால் அமைக்கப்பட்டு பராமரிக்கப் பட்டது. என்ற உண்மை வெளிப்படுகிறது.

கதிரமலை என்பது கதிரவளை என்ற காரணப்பெயர் கொண்டழைக்கப்படுவதாக கூறப்படுகிறது. இதற்கு சான்றாக கர்ண பரம்பரைக் கதையொன்றும் கூறப்படுகிறது. ஒரு காலத்தில் சுன்னாகம் பகுதியில் பெரும் மழை பொழிந்தது. வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. மக்கள் செய்வதறியாது புகலிட மின்றி சிவனே கதி என ஆலயத்தில் சரண் புகுந்தனர். அப்போது சிவன் திருவருளால் ஆலய மூலவருக்கு மேற்கு புறமாக பிள வொன்று ஏற்பட்டது. அப்பிளவின் ஊடாக முழுவெள்ளமும் புகுந்து பிறை மூடிக் கொண்டது. இதன் காரணமாக சுன்னாகத்தை வளைத்து நின்ற வெள்ளம் புகுந்த வளை என்ற பொருள்படும் வகையில் கதிரவளை என்ற பெயரும் உருவானது. இன்றும் கூட அவ்வெள்ளம் ஓடிய பள்ளங்களை ஆலயத் தின் வடக்கு, தெற்கு, புற வெளி வீதிகளில் காணக்கூடியதாக உள்ளதுடன் சுன்னாகம் நிலப்பரப்பின் தரையின் கீழ் பல குழிகள் காணப்படுவதாகவும், அவை நீர் நிரம்பிய குளம் போல் காட்சியளிப்பதாகவும், சுன்னாகம் தரை தோற்ற அமைப்பின் கீழ் சுண்ணாம்புக்கல்லால் சூழப்பட்ட பல குழிகள் காணப்படுவதாகவும் அவற்றில் நீர் நிரம்பிக்குளம் போல் காட்சியளிப்பதாகவும் நவீன விஞ்ஞான கருவிகள் மூலம் (றேடர்) அறியக் கூடியதாக உள்ளது. எனவே பெரும் மழை பொழியும் சந்தர்ப்பங்களில் நிலமேற்பரப்பில் நீரின் திணிவு அதிகரிக்கும் போது அந்நீர் பிளவுகள் வெடிப்புக்கள் மூலம் தரையின் கீழ் உள்ள குழிகளில் வடிந்து நிரம்பும் என்பதற்கு இணங்க கதிரவளை என்ற காரணப் பெயருக்கான விஞ்ஞான ரீதியான விளக்கம் கிடைக்கிறது. விஞ் ஞானம் என்பது மெய்ஞான இரகசியங்களை வெளிப்படுத்தும் ஊடகம் என்பதற் கிணங்க கதிரவளை என்பது இரகசியம் கொண்ட இடமாக போற்றப்பட வேண்டியது என்பது மறுக்கப்பட முடியாத விடயமாகும்.

இக்காட்சிகளும் உக்கிரசேனன் மாருத புரவீக வல்லி திருமணக்காட்சிகளும் கோயிலின் சித்திரத்தேரில் செதுக்கப்பட்டுள் ளது. அரிய காட்சிகளாக பக்தர்களுக்கு வியப்பை ஏற்படுத்துகிறது.

ஈழத்து சித்தர் பரம்பரையைச் சேர்ந்த யோகர் சுவாமிகள் கீரிமலைக்கு சென்று வரும் வழியில் சுன்னாகம் கதிர மலை சிவன் ஆலயத்தில் தங்கியிருந்து ஓய் வெடுத்து செல்வார் எனவும், அவர் வந்து தங்கும் நாட்களில் சிலபேருக்கு என மத்தி யானச் சமையல் செய்யும் சந்தர்ப்பங்களில் யோகர் சுவாமிகள் கோவிலுக்கு வடக்கு புறத்தில் சுமை தாங்கி அருகில் நின்று

அவ்வீதியால் போக்குவரத்து செய்யும் நூற்றுக்கணக்கானோரை அழைத்து உண வருந்தச் செய்வார். உணவும் சிலபேருக்கு என சமைத்த உணவு நூற்றுக்காணக்கா னோருக்கு போதிய உணவாக மாறியமை கண்டு உணவு சமைத்தவர்கள் அதிர்ச்சி அடைவார்கள் எனவும், செவிவழிக்கதை களில் இருந்து அறியக்கூடியதாக உள்ளது. இன்றும் அதை ஞாபகப்படுத்தும் விதமாக கோயில் வடக்குபுற வீதியோரத்தில் காணப் படும் சுமைதாங்கியில் யோகர் சுவாமி களின் சிலை வைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிட தக்க விடயமாகும்.

உலகில் என்றும் மாறாதது காலத்தின் மாற்றமே என்பதற் கேற்ப சுன்னாகத்தில் விடியற்காலையில் முதல் சூரியகதிர்படும் தலமாக கதிரமலை சிவனின் இராசகோபுரம் நிமிர்ந்து நிற்கின்றது மேலும் குறிப்பிட்ட காலத்துக்கு முன்பு பொன்னாம் பிகை சமேத பொன்னம்பலவாணர் என்ற சுவாமியின் பெயரானது தற்போது சுவர் ணாம்பிகை சமேத பொன்னம்பலவாணர் என மாற்றப்பட்டுள்ளது.

பொன்னம்பலவாணருடைய திரு வுருவச் சிலையின் மற்றைய பகுதிகளை விட முகம் மிகவும் பிரகாசம் மிகுந்ததாக ஒளி வீசுவதாக அமைந்திருப்பது பெயருக் கேற்றவாறு இறைவனின் திருவருள் பிரதிபலிப்பதாக பக்தர்களின் மத்தியில் பிரமிப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஒரு நாளில் அதிகாலை மதியம் மாலை என்ற மூன்று பொழுதுகள் காணப் படுகின்றது. ஒரு வருடத்தில் இந்த மூன்று பொழுதுகளிலும் தேர்த்திருவிழா நடைபெறும் தலமாகவும் கதிரமலை சிவன் ஆலயம் அமைந்துள்ளது. அதாவது திரு வெம்பாவை உற்சவத்தின் போது காலை வேளையிலும், மஹோற்சவத்தின் போது மதிய வேளையிலும், அம்பாளின் மகோற் சவத்தின் போது மாலை வேளையிலும் தேர்த்திருவிழா நடைபெறும் தலமாக கதிரமலைச் சிவாலயம் சிறப்படைந்துள்ளது.

**உசாத்துணை நூல்கள்**


1. ஈழத்து இந்துமதம் :- சி.க. சிற்றம்பலம்
2. யாழ்ப்பாண வைபவ விமர்சனம் :- சுவாமி ஞானப்பிரகாசம் :- 1928
3. யாழ்ப்பாண சரித்திரம் :- செ. இராச நாயகம்
4. பூர்வீக நாகதம்பிரான ஆலய வரலாறு :- வி. கனகராசா

# ஆலடி கட்டுக்குள நாச்சிமார் ஆலயம்

ஆலய தர்மகர்த்தா சபை

யாழ்ப்பாண நகரிலே புன்னாலைக் கட்டுவன் எனும் ஊரிலே புன்னை மாநகரிலே அருளாட்சி புரிந்து கொண்டிருப்பது ஆலடி கட்டுக்குள நாச்சிமார் ஆலயம் ஆகும். ஆன்றோர்களினால் வழிபாடாற்றி வந்த நாச்சிமார் என்று அழைக்கப்படுகின்ற ஏழு கன்னிகைகள் வந்து பல்லாங்குழி விளையாடியதை நேரடியாகப் பார்த்தவர்கள் எங்களுடைய ஆன்றோர்கள். அத்துடன் பழைய மூதாதையர்கள் என்று பெயர் வழங்கி வழிபாடாற்றி வந்தது குறிப்பிடத் தக்கது.

எமது ஆலயத்துக்கு கிழக்குப் பக்கத்திலே விவசாயத்தை தமது குலத்தொழிலாக செய்து வருபவர்கள் எமது ஊர் மக்கள். அந்த வகையிலே சுமார் 300 வருடங்களுக்கு முன்பாக சாமைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது. ஒரு நாள் நள்ளிரவிலே திருடர்கள் சாமைக் கதிரை வெட்டி எடுத்து செல்ல முயன்ற போது எங்களுடைய அம்பிகை கமக்காரனிடம் சென்று உன்னுடைய தோட்டத்திலே திருடர்கள் திருட முயல்கின்றார்கள். உடனடியாக போய் தடுக்குமாறு கூறியமை எங்களுடைய அம்பாளின் வரலாற்றிலே முக்கிய இடம் பெற்றுள்ளது. இதன் காரணமாகவே தற்போது அந்த காணியின் பெயர் "கள்ளனை பிடித்த கலட்டி" என வழங்கப்பட்டு வருகிறது. அடுத்து எமது ஆலயத்தினுடைய தீர்த்தக் குளத்திலே பழைய காலத்தில் எருதுவையும், கலப்பையையும் இழுத்துச் சென்றதாக ஆன்றோர்கள் கூறி வருகின்றனர். தற்போது ஆலமரத்தினை தல விருட்சமாகக் கொண்டு நாச்சிமாருக்கு சிறந்த ஓர் ஆலயம் நிறுவப்பட்டிருப்பதோடு, மூல மூர்த்தியாக துர்க்காதேவி அருள் பாலிக்கின்றார். ஆலமரத்தின் கீழே சப்த கன்னிகைகள் என அழைக்கப்படுகின்ற ஏழு கன்னிகைகளுக்கு சிறிய ஒரு ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. அருகாமையிலே முருகப் பெருமானுடைய ஆலயம் அமைந்துள்ளது. அதுவும் பழமை வாய்ந்த ஆலயம் சுமார் 300 வருடம் பழமை வாய்ந்தது. வரலாற்றுப் பெருஞ் சின்னமாக மணிக்கூட்டுக் கோபுரத்தை இன்றுவரை பாதுகாத்து வருகின்றோம்.

இன்றய எமது ஆலயம், மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம், என்று சொல்லப்படுகின்ற நான்கும் ஒருங்கே அமையப்பெற்றுள்ளது. 2003ம் ஆண்டு ஆவணி மாதம் கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக இடம் பெற்றதனை தொடர்ந்து மகோற்சவத் திருவிழாவும் நடைபெற்று வருகிறது. ஆண்டு தோறும் ஆலய மகோற்சவமானது மாசி மகத்திற்கு முன்னதாக 15 நாட்கள் நடைபெற்று மாசி மகத்தன்று தீர்த்தோற்சவம் இடம் பெறுகின்றது. மாதம் தோறும் பௌர்ணமி உற்சவம் நடைபெறுகின்றது. முருகப் பெருமானுக்குரிய கந்தசஷ்டி, உற்சவம் சிறப்பாக நடைபெறுகின்றது. அம்பிகைக்கு நவராத்திரி

விழா கொலு வைத்து, ஸ்ரீசக்கர பூசை மாலை வேளையில் சிறப்பாக நடை பெறுகின்றது. நித்திய, நைமித்திய, பூசை களும் இடையூறில்லாமல் சிறப்பாக நடை பெற்று வருவதோடு அந்தண குலத்தினால் பரிபாலனம் செய்யப்பட்டு வருகிறது.

வடக்கு புன்னாலைக்கட்டுவன் மக்களின் பெரும் முயற்சியினாலும் வெளி நாட்டு மக்களின் உதவியோடும் ஆலயம் மீள் எழுச்சி பெற்றுள்ளது. ஆலயத்திற்கு அருகாமையில் விளையாட்டு மைதானம், பொதுநோக்கு மைதானம் என்பன தற்போது நிறுவப்பட்டுள்ளது. துர்க்கா சனசமூக நிலையம் ஆலயத்திற்கு அழகு சேர்க் கின்றது. எமது ஆலயம் மேலும் புத்தொளி வீசிட பல திருப்பணி வேலைகள் இருக்கின் றன. முக்கிய திருப்பணி வேலைகளாக வெளிவீதி புனரமைப்பு, (செப்பமிடல்) முரு கனுடைய மகாமண்டபம், அர்த்த மண்டபம், தரிசனமண்டபம், அமைத்தல் அம்பாளுடைய உட்பிரகாரகொட்டகைகள் அமைத்தல், சண்டேஸ்வரருக்கு சிறிய ஆலயம் அமைத்தல், அம்பாளுக்கு சித்திரத் தேர் அமைத்தல். எமது ஆலயம் மென்மேலும் வளர்ச்சி அடைவதற்கு தங்கள் எல்லோரதும் உதவிகளையும் எதிர்பார்ப்பதோடு அம்பிகையுடைய திருவருள் தங்கள் ஒவ் வொருவருக்கும் கிடைத்திடப் பிரார்த்திக் கின்றோம்.



ஆலடி கட்டுக்குள நாச்சிமார் கோவிலில் காணப்படும் மிகவும் பழமை வாய்ந்த மணிக்கூட்டுக் கோபுரம்

# ஏழாலை தம்புவத்தை வைரவ சுவாமி கோவில்
# ஆலய வரலாறு

**ஆலய தர்மகர்த்தா சபை**

இந்த ஆலயம் மல்லாகம் குப்பிளான் வீதியில் ஏழாலை மகாவித்தியாலத்தின் முன்பாக மருது போன்ற சோலைவனம் நடுவே அமைந்திருக்கின்றது.

இற்றைக்கு சுமார் 125 ஆண்டுகளின் முன் பெரிய தம்பிரான் கோவில் படிமாத்தான் மூன்று எலுமிச்சை பழங்கள் எறிந்ததாகவும் அதில் ஒன்று தம்புவத்தை வைரவர் கோவில் அமைந்துள்ள இடத்தி லும் மற்றையது மதியாம்பத்தனை வைரவர் கோவில் அமைந்துள்ள இடத்திலும் மூன்றா வது சுன்னாகத்தைச் சேர்ந்த மந்திரவாதி சிதம்பரநாதர் வளவிலும் விழுந்ததாகக் கர்ண பரம்பரைச் செய்தி ஒன்று கூறுகிறது.

ஏழு கோவில்கள் அமைந்துள்ள தால் தான் ஏழாலை என்று பெயர் வந்ததென வும் அந்த ஏழு கோவில்கள் தம்புவத்தை வைரவர் கோவிலும் ஒன்றாகுமென்பதால் மிகப் பழமை வாய்ந்தது என்பதை அறிய முடிகிறது.

இக் கோயில்கள் அமைந்துள்ள இடத்தில் வாகை மரமொன்று பெரு விருட்ச மாக வளர்ந்திருப்பது அவ்விடத்தில் இருந்தவர்களுக்கெல்லாம் நிழல் பரப்பி இருந்ததெனவும் குழந்தைகள் எல்லாம் பகல் முழுவதும் அந்த மரநிழலிலே விளையாடு வார்கள் எனவும் பெரியவர்கள் குழந்தை களின் விளையாட்டுக்களைக் கண்டு மகிழ்வ துடன் ஊர் உலகப் புகழ்களைக் கதைத்து மகிழ்வார்களெனவும் அறியப்படுகின்றது.

பெரியதம்பிரான் ஆலய படிமத்தான் எறிந்த எலுமிச்சம்பழம் அந்த மரத்திற்குப் பக்கத்தில் விழுந்ததால் அவ்விடம் வழிபாட்டிற்குரிய இடமாக கருதப்பட்டது. காலப் போக்கில் வாகைமரம் தானாகவே பட்டு விழுந்தது. அதன் பின்னர் அக்குறிஞ்சி மக்கள் அவ்விடத்தில் சிறு கொட்டகை அமைத்து வழிபாடு நடாத்தத் தொடங்கினார் கள். மக்கள் அனைவரினதும் வழிபாட்டுச் சக்தி நம்பிக்கை பெருகப் பெருக மக்களின் வாழ்க்கை நிலையும் செழிப்பாக மாறத் தொடங்கியது. இதன் காரணமாக மக்கள் அனைவரும் ஒன்று கூடி ஒரு கோவில் அமைக்க எண்ணி ஆறுபேர் கொண்ட குழு ஒன்றினை அமைத்து அக்குழுவின் வழிநடத்தலில் அனைவரும் இணைந்து இற்றைக்கு 50 ஆண்டுகளுக்கு முன்பு கல்லினால் ஒரு கோவில் அமைத்தார்கள். சிறிய அளவிலான கட்டடம் என்றாலும் உரிய முறையில் கூடி கும்பாபிஷேகம் செய்யப் பட்டு அந்தணப் பெருமக்கள் மூலம் நித்திய பூசை ஒழுங்குகளும் மேற் கொள்ளப்பட்டது.

வைரவப் பெருமானின் அருள் ஒளி மூலம் மக்கள் மேன்மேலும் நம்பிக்கை வைத்து தைப்பொங்கல் விழா, தைப்பூசத் திருவிழா, சித்திரா பூரணை, சித்திர புத்திரனார் கதையுடன் பூசை வழிபாடு



ஆலடி கட்டுக்குள நாச்சிமார் கோவில்



ஏழாலை தம்புவத்தை வைரவசுவாமி கோவில்



சாளம்பை முருகமூர்த்தி கோவில்



சுன்னாகம் தாழையடி ஐயனார் கோவில்

அன்னதான நிகழ்வு, சித்திரை மூல நட்சத்திரத்தில் கடைசித் திருவிழா வரக்கூடியதாக அலங்காரத்திருவிழா, ஆனிமாத முதல் வெள்ளி பொங்கல், நவராத்திரி சக்தி வழிபாட்டு விழாவும் மார்கழித் திருவெம்பாவை என சகல விழாக்களுடன் பிரதி வெள்ளி தோறும் கூட்டுப்பிரார்த்தனையுடன் விசேட பூசை வழிபாடுகளும் சிறப்பாக நடைபெறுகின்றன.

கடந்த கால வரலாற்றினை சீர் தூக்கிப் பார்க்கும் போது நவராத்திரி உற்சவத்தின் பத்தாம் நாளான மானம்பூ உற்சவத்தன்று அத்தியடி புவனேஸ்வரி அம்பாள் இங்கு எழுந்தருளி சிறப்பிப்பதாக அறியக் கிடக்கின்றது.

வைரவப் பெருமானின் அளப்பெரும் அருளாட்சிக்குச் சான்றாக பல அற்புதங்கள் கடந்த காலங்களில் இடம் பெற்றதாக பலர் கூறுகின்றனர். அந்த வகையில் ஒரு முறை கோவிலுள்ள இயந்திரம் களவு போய் விட்டது. களவு போன இயந்திரம் கிடைக்கும் வரை ஆலயத்திற்குச் செல்வதில்லை என பக்தர்கள் யாவரும் தீர்மானம் செய்தார்கள். அடுத்த நாளே அந்த இயந்திரம் கோவில் வாசலிலே வைக்கப் பட்டிருந்தது. மீண்டுமொருமுறை கோவில் குத்துவிளக்கு முதலான கோவில் பொருட்கள் காணாமல் போயின. பக்தர்கள் ஒன்று கூடி பொருட்கள் பதுக்கி வைக்கப்பட்ட இடத்தைக் கூறியதையடுத்து சகல பொருட்களையும் மீட்டனர். கண்பார்வையற்ற ஒருவருக்கு கண்பார்வை கிடைக்க அருள் பாலித்ததாக தெரிய வருகின்றது. இப்படியான அற்புதங்கள் பக்தர்களை மெய் சிலிர்க்க வைத்து பக்தியையும் நம்பிக்கையையும் பெருகச் செய்தது.

1970 ம் ஆண்டு ஆலயம் மீண்டும் விரிவுபடுத்தப்பட்டு பிள்ளையார் முருகன் காளி ஆகிய தெய்வங்களுக்கு தனித்தனி சிறு கோவில்கள் அமைக்கப்பட்டு சிறந்த முறையில் பூசை வழிபாடுகளும் தொடர்ந்தது. ஊரும் மக்களும் செழிப்புப் பெற்று வளமான வாழ்வு வாழ்ந்தார்கள். 1995ம் ஆண்டு நாட்டு நிலை காரணமாக ஏற்பட்ட இடம் பெயர்வுகளின் போது ஆலய கட்டடத் தொகுதிகள் சேதமாக்கப்பட்டதுடன் ஆலயத்திற்குச் சொந்தமான உடமைகளும் இல்லாமல் போயின.

2000 ம் ஆண்டு மீளக் குடியமர்ந்த பின் பல இழப்புக்கள் காரணமாக உடற் சோர்வு மனச்சோர்வு இருந்த போதும் தெய்வமே நமக்குத் துணையென மக்களும் "யாமிருக்கப் பயமேன்" எனத் தெய்வமும் அருள் சேர்க்க மக்களும் ஒன்றிணைந்து அருள்மிகு தம்புவத்தை ஞானவைரவர் ஆலய பரிபாலன சபையை உருவாக்கினர். அச்சபை பொதுமக்களின் முழுப் பங்களிப்பையும் இணைத்து பழைய நிலைக்கு மேல் புனரமைப்புச் செய்து 2001ம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்து சிறப்புற விழாக்கள் நடைபெற்றன. தனிப்பட்ட உபயமாகவும் ஒரு அன்பர் மணிக்கூட்டுக் கோபுரம் அமைத்து கண்திறந்து வைத்தமையும் குறிப்பிடத் தக்கது.

12 வருடங்களுக்கொருமுறை ஆலய புனரமைப்புச் செய்து கும்பாபிஷேகம் செய்ய வேண்டுமென்ற ஆகம நியதிக்கமைய 2012 ம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்யப்பட்டு பரிபாலனசபையினர் திருப்பணிச் சபையினர் முக்கியமாக பொது மக்கள் அனைவரும் இணைந்து முழுப் பங்களிப்புடன் புனரமைப்புச் செய்யப்பட்டு உள்வீதி மண்டபம், காளி மண்டபம், சாமுண்டீஸ்வரி மண்டபம் சுற்றுமதில் யாவும் நிறைவேற்றப்பட்டு 2013 ம் ஆண்டு கும்பாபிஷேகமும் சிறப்பாக நடைபெற்று பூசை வழிபாடுகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

# சாளம்பை முருகமூர்த்தி தேவஸ்தான வரலாறு

ஆலய தர்மகர்த்தா சபை

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் இலங்கைத் திருநாட்டின், யாழ் மாவட்டத்தில் பக்திமார்க்கமும் ஆன்மீகத்தோடு ஒன்றிய வாழ்க்கை நெறியும் பொருந்திய கோட்டைக் காடு, மல்லாகம், எனும் இடத்தில் அமைந்துள்ள சாளம்பை முருகமூர்த்தி தேவஸ்தானத்தின் வரலாறு அதிசயமும் ஆச்சரியமும் நிறைந்த சம்பவத்தோடும், முருகனின் அளப்பரிய கருணையோடும் தொடர்புடையது.

அசுரர்கள் அழித்து தேவர்களை காக்கவென அவதாரம் கொண்ட முருகப் பெருமான் தனது படைத்தளம் அமைந்த கதிர்காமத்திலிருந்து எம் ஊரையும் எம் மக்களையும் காக்கவென வரவிரும்பி அழகரின் கைக்கு வேலாக வந்து அசரீரியாக மொழி சொல்லி மறைந்தான். அழகரின் வாழ்க்கையும் அழகரின் கைக்கு வேல்வந்த விதமும் அதிசயமும் ஆச்சரியமும் மிக்கது.

ஏழாலை தெற்கு அளவாவோடை என்னும் ஊரிலே இளையவி இளையவள் தம்பதியினருக்கு ஆண்பிள்ளைகளில் மூத்த மகனாகப் பிறந்தவர் அழகர். இவர் அவ்வூர் மூத்தார் மகளாகிய சின்னக்குட்டி என்னும் அம்மையாரைத் தனது வாழ்க்கைத் துணைவியாக ஏற்று இனிதாக இல்லறம் நடாத்தி சுந்தரம் என்னும் அழகிய பெண் மகவு ஒன்றைப் பெற்றெடுத்து சீராட்டி பாராட்டி வளர்த்து உரிய பருவம் எய்தியதும் அதிபர் திரு.மூ. வைரவநாதன் அவர்களுக்கு திருமாங்கல்யம் செய்து வைத்து அக மகிழ்வடைந்து வாழ்க்கையை இனிதே நடாத்தி வந்தார்.

அன்றைய கால கட்டடத்தில் கதிர் காமம் செல்வதாயின் கதிர்காமக் கந்தனின் அழைப்புக் கிடைத்தால் மட்டுமே செல்ல முடியும் என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் நிலவியது. இவ்வேளையில் அழகர் அவர்களும் தனக்கு கதிர்காமக் கந்தனின் அழைப்புக் கிடைத்திருப்பதாக தனது மனைவியாரிடமும் பெற்றோரிடமும் கூறிவிட்டு பல அடியவர்களுடன் பாத யாத்திரையாக கதிர்காமம் சென்றார்.

கதிர்காமக் கந்தனின் திருவிழா முடிந்தும் அழகர் வீடு திரும்பி வராத காரணத்தால் அவரோடு கூடச் சென்ற சுன்னாகம் மயிலணியைச் சேர்ந்த குமார சுவாமிப் புலவர் அவர்களின் உறவினர்களிடம் சென்று விசாரித்த வேளை அழகர் அவர்கள் சந்நியாசியைப் போல் கோயில் சூழலில் திரிவதாகவும் தான் தற்போது ஊருக்கு வரவில்லை என்றும் ஆறுதலாக வருவதாகக் கூறியதாகவும் தெரிவித்தார்கள்.

ஆறு மாதங்கள் கழிந்த பின் ஒரு நாள் அழகர் அவர்கள் தலையில் திருநீற்று மூடையுடன் பெற்றோர் முன் சந்நியாசி போல் வந்து நின்றார். அப்பொழுது தான்

தனக்கு கதிர்காமத்தில் மாணிக்க கங்கைக் கரையில் நடந்த ஓர் அதிசயத்தை மனைவிக்கும் தனது பெற்றோருக்கும் மெய் சிலிர்க்கும் வண்ணம் கூறினார். தான் மாணிக்க கங்கையில் நீராடி விட்டு வெளியே வரும் போது ஒரு சந்நியாசியார் ஓடி வந்து “இந்தா இதைப்பிடி” என்று தனது கையில் ஒரு தங்க வேலைக் கொடுத்ததாகவும் மல்லாகம், செல்லப்பருடைய காணியில் அதனைப் பிரதிஷ்டை செய்யும் படியும் கூறி விட்டு மிக அவசரமாக ஓடிச் சென்று மறைந்து விட்ட தாவும் அவர் கூறினார். ஒரு வாரகாலமாக அந்த சந்நியாசியைத் தேடியதாகவும் அவரைக் கண்டு பிடிக்க முடியவில்லை என்றும் அதனால் கதிர்காமக் கந்தனே சந்நியாசி வடிவில் வந்து அந்த வேலைத்தந்ததாகவும் எண்ணி தான் ஊர் திரும்பியதாகவும் கூறினார்.

அழகரை இக்கோலத்தில் கண்டதும் உறவினர் எல்லோருக்கும் பெரும் அதிசயமும் ஆச்சரியமாகவும் இருந்தது. அழகர் வந்ததை அறிந்த செல்லப்பர் அவர் வீட்டிற்கு வந்து அழகர் கையில் வேலைக் கொடுத்த குருநாதர் தனது கனவில் தோன்றி அழகன் கையில் வேலுடன் வருகின்றான். அதனை வைத்து ஆதரிக்க காணி கொடு என்று கூறியதாகக் கூறினார்.

அன்றைய தினமே அழகர் ஒரு ஆலமரத்தின் கீழ் ஒரு சிறிய கொட்டிலை அமைத்து அத் தங்கவேலை வைத்துப் பூசைகள் செய்ய ஆரம்பித்தார். பின்பு அழகர் அவர்கள் ஊரிலே உள்ள பெரியவர்கள் சிலரிடம் பண உதவி பெற்று சில மாதங்களிலேயே செல்லப்பரிடம் இருந்து நான்கு பரப்புக் காணியைக் கொள்வனவு செய்தார். அந்த காலத்திலேயே (1925 ஆம் ஆண்டு) அழகர் சுவாமி அடிகளார் தனது சமூகத்தினரையெல்லாம் ஒன்று சேர்த்து ஆலயத்தையும் அமைத்து ஏழாலை தெற்கு மேற்கு சைவ அபிவிருத்தி சங்கத்தையும் ஸ்தாபித்து அத்தோடு ஜீவ காருண்ய சபையையும் ஏற்படுத்தி மது உண்ணாமை, கொல்லாமை, மாமிசம் புசியாமை என்ற கட்டுப்பாட்டிற்குள் எல்லோரையும் நிறுத்தினார். இங்கிருந்து யாழ்ப்பாணம் சென்று கொன்று சாப்பிட வென்று வாங்கி வந்த ஆமையையும் கொல்லவிடாது தடுத்து அவர்களுக்கு அன்பான பல கதைகள் சொல்லி ஆமைக்குரிய பணத்தையும் கொடுத்து ஆமையை மாட்டு வண்டியில் ஏற்றிக் கொண்டுபோய் காங்கேசன்துறைக் கடலில் விடும்படி பணித்து தான் கண்ட கடவுளின் பேரின்பத்தை எல்லோரும் காண வேண்டும், எல்லோரும் அள்ளிப்பருக வேண்டும் என்பதற்காக உட்பிரகாரத்தில் உள்ள பிள்ளையார் உட்பட மூலஸ்தானத்தில் இருந்து மகா மண்டபம் வரை வெள்ளை வைரக்கல் வேலைகளாக செய்து கிணறுகள் வெட்டி ஊர் மக்கள் அனைவரினதும் ஒத்துழைப்போடு தன்னாலான பூசைகள் விழாக்கள் ஆகியவற்றைச் செய்து வந்தார். இவ்வாறாகத் தோற்றம் பெற்றதே இன்று எமக்கெல்லாம் அருள் பாலித்துக் கொண்டிருக்கும் சாளம்பை முருகமூர்த்தி ஆலயமாகும்.


ஆலயத்தைப் பராமரிப்பதற்கும் பூசைகள் விழாக்கள் ஆகியவற்றை நடாத்துவதற்கும் ஏழாலை தெற்கு மேற்கு சைவ அபிவிருத்தி சங்கத்தின் மூலம் நிர்வாகசபையும் தெரிந்து அச்சபைக்கு அழகர் சுவாமி அவர்களே தலைவராக நியமிக்கப்பட்டு ஆலய பரிபாலனம் வழி நடாத்தப்பட்டது. பின்பு 1928 ஆம் ஆண்டு அழகர் சுவாமி அவர்களின் பெயரில் ஆலயக் காணியும் ஆலயமும் ஏழாலை தெற்கு மேற்கு சைவ அபிவிருத்தி சங்கத்திற்கு அழகர்சுவாமி அவர்களால் தர்மசாசன உறுதி எழுதப்பட்டது. அக்காலத்தில் ஏழாலை தெற்கு மேற்கு சைவ அபிவிருத்திச் சங்கத்திற்கு அழகர்சுவாமி அவர்களால் தர்மசாசன உறுதி எழுதப்பட்டது. அக்காலத்

தில் ஏழாலை தெற்கு மேற்கு சைவ அபிவிருத்திச் சங்கம் என்ற பெயருடன் ஆலயத்தைப் பரிபாலித்து வந்த சங்கமே தற்பொழுது "சாளம்பை முருக மூர்த்தி ஆலய பரிபாலன சபை" என்ற பெயரில் ஆலயத்தைப் பரிபாலித்து வருகின்றது.

அழகர்சுவாமி அவர்களால் கதிர்காமக் கந்தனின் வேலினை வைத்து ஆரம்பிக்கப்பட்ட இத்திருக்கோயில் இன்று மேலோங்கி வளர்ந்து மூலஸ்தானம், அர்த்த மண்டபம்,மகாமண்டபம், கொடித்தம்ப மண்டபம், வசந்த மண்டபம், என்பவற்றுடன் மணிக்கூடு கோபுரமும் அமையப் பெற்று பரிவார மூர்த்திகளாக பிள்ளையார், கஜ லட்சுமி, சிவன் அம்மன், சிவன் பார்வதி, நட ராஜர் அம்மன், வைரவர், நவக்கிரகம், நாக தம்பிரான், சண்டேஸ்வரர், வெளி வைரவர், காளி ஆகியோரைக் கொண்ட திருக் கோயில்களையும் மடப்பள்ளி, யாகசாலை, அலுவலகம், உள்வீதியில் அமைந்துள்ள மண்டபங்கள் அன்னதான மண்டபம், துவார பாலகர், ஆலய முன்றலில் காணப்படும் அலங்காரவளைவு கொடித்தம்பம், நந்தி பலிபீடம், தட்சணாமூர்த்தி, மூன்று சித்திரத் தேர்கள், தீர்த்தத்தடாகம், சுவாமி தரிசன மண்டபம் ஆகியவற்றையும் உள்ளடக்கி இன்று பஞ்ச தள இராஜகோபுரத்தோடு ஒரு பெரிய தேவஸ்தானமாக வளர்ச்சி கண்டிருப் பது எமது மக்கள் செய்த பெரும் பேறாகும்.

இவ்வாறு இராஜகோபுரத்தோடு சிறப்புற விளங்கும் எமது ஆலயத்தில் காலை மாலை என இரு நேரங்கள் நித்திய பூசைகள் நடைபெறுகின்றன. சனிக்கிழமைகளில் மதியம் திருமுழுக்குப் பூசையும், மாலைப் பூசையும் நடைபெறுகின்றது. அத்தோடு விஷேட பூசைகளாக மாதந்தோறும் சங்கிராந்தி தீர்த்தம், கார்த்திகை அபிஷேகம், பரணி அபிஷேகம் நடைபெற்று வருகின்றன. இவற்றை விட தைப்பொங்கல், தைப்பூசம், புதுவருடப்பிறப்பு, மாசிமகம், மகா சிவராத்திரி, வைரவர் அபிஷேகம், பங்குனித் திங்கள், சித்திராப்பூரணைவிரதம், சங்காபி ஷேகம், வைகாசி விசாகம், ஆடிச் செவ்வாய் கதிர்காமக் கொடியேற்றம், ஆடிப்பூரம், வரலக்ஷ்மி பூஜை கதிர்காமத் தீர்த்தம், ஆவணி ஞாயிறு, ஆவணிச் சதுர்த்தி, புரட்டாதிச் சனி, நவராத்திரிபூஜை நாக தம்பிரான் அபிஷேகம், தீபாவளி, கேதார கௌரி விரதம் , கந்தஷஷ்டி, ஐப்பசி வெள்ளி, சூரன்போர், திருக்கல்யாணம், பார்வதி, பரமேஸ்வரன், அபிஷேகம், அழகர் சுவாமி குருபூஜை, குமாராலயதீபம், பிள்ளையார் கதை திருவெம்பாவை போன்ற விழாக்கள் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

அந்த வகையில் ஓர் ஆலயத்தின் விழாக்களில் மிகச் சிறப்பானது ஆலய மஹோற்சவமாகும். சாளம்பைக் கந்தனின் மஹோற்சவமானது ஆனி உத்தரத்தில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இரண்டாம் நாள் வசந்த உற்சவமும், ஐந்தாம் நாள் மாம்பழத் திருவிழாவும், ஆறாம் நாள் கைலாய வாகனத் திருவிழாவும், ஏழாம் நாள் வேட்டைத்திருவிழாவும், ஒன்பதாம் நாள் சப்பறத் திருவிழாவும், பத்தாம் நாள் தேர்த்திருவிழாவும், பதினோராம் நாள் திருவோண நட்சத்திரத்தில் தீர்த்தத் திரு விழாவும், கொடியிறக்கத் திருவிழாவும், பன்னிரண்டாம் நாள் பூங்காவனத் திரு விழாவை அடுத்து பிராயச்சித்த அபிஷேகம், வெள்ளிக்கிழமை வைரவர் பொங்கல், அடுத்த வார வெள்ளிக்கிழமை எட்டாம் மடைப் பொங்கல் நடைபெற்று வருகின் றமை சிறப்பம்சமாகும். ஆலய பரிபாலன சபையினர் தொண்டர் சபையினர் ஊர் மக்கள் வெளிநாடுகளில் வாழும் அடியார் கள் அனைவரினதும் பூரண ஒத்துழைப் போடு பல வளர்ச்சிகளைக் கண்ட ஆலயம் இன்று பஞ்ச தள இராஜகோபுரத்தோடு மிளிர்வது மக்கள் செய்த பெரும் பேறாகும்.



சுன்னாகம் தாளையடி ஐயனார் கோவிலில் காணப்படும் நூறு வருடம் பழமை வாய்ந்த காராம்பசு வாகனம்

# சுன்னாகம் தாழையடி ஐயனார் கோயில் தோற்றமும் வளர்ச்சியும்

சுன்னாகம் ஐயனார் தேவஸ்தானம்

இந்து சமுத்திரத்தின் முத்து என திகழும் இலங்கையின் வட பகுதியில் சுன்னாகம் என்னும் நகரில் வயல் சார்ந்த இடமாக மருத நிலப்பரப்பில் பச்சை பசேல் என இயற்கை எழில் நிறைந்த சூழலில் ஐயனார் பெருமான் அழகுற தோன்றிய வரலாற்றினை நோக்குவோம்.

சீர்பூர்த்த வளநகர் சுன்னாகத்தில் ஆண் சமூகம் மட்டும் அல்ல பெண்டிரும் வயல் பெருக்கி வயிற்றிற்கு சோறிட்டு வந்த மரபிலே "கன்னி" என்னும் பெண்ணின் வயல் செய்கையின் போது ஏர் பூட்டி உழுத வேளையில் பெரும் கல் போன்ற பொருள் ஏரில் மாட்டிக் கொண்டது. இப்பொருளை வயலிருந்து அகற்றி வயல் ஓரமாக கொண்டு வந்த போது அக்கல்லில் திருவுருவ வடிவம் காட்சி அளித்தது. இதை கண்ணுற்று கன்னி யும், பெரியாரும், அச்சூழல் வாழ் மக்களும் தாழையும், மருதமும் சேர்ந்த மரநிழலில் வைத்து வழிபட ஆரம்பித்தனர்.

சில காலங்களின் பின் எம்பெரு மானுக்கு ஓலையினால் பந்தலிட்டு காய் மடை, பூமடை, பொங்கல், வேள்வி, போன்ற கிராமிய தெய்வங்களுக்குரிய முறையில் வழிபட்டு வந்தனர். காலப்போக்கில் கன்னியின் கணவன் பெரியார், தன்னுடைய காலத்திலே எம்பெருமானுக்கு கற்கோவில் திருப்பணிகளை 1905 ல் ஆனித்திங்கள் 20ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது என ஆலய தென்புறச் சுவரில் பொறிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம், என்னும் சிறப்புக்களை உடையதாக காணப்படுகின்றது. புதிதாக அமைக்கப்பட்ட ஆலய முதல் கும்பாபி ஷேகம் 1907 ம் ஆண்டு ஆனி மாதம் விசாக நட்சத்திரத்தன்று இந்தியாவின் வேதராணி யத்தில் இருந்து வந்த சைவ அந்தணர்களால் ஆகம சார் வழிபாட்டு முறைகளோடு சிறப்புற நிகழ்த்தப்பட்டதாக அறியப்படுகிறது. பின்னர் இங்கு கும்பாபிஷேகங்கள் 1965, 1984, 1994, 2010 ஆம் ஆண்டுகளில் நடை பெற்றுள்ளது.

ஐயனார் பெருமானுடைய அற்புதங் களை வரலாற்று ரீதியில் எடுத்து நோக்கும் போது தர்மநெறி நீதியைக்காக்கும் பொருட்டு எம் பெருமான் நீதிமன்றத்தில் வழக்குரைத்த நிகழ்வு யாவரும் அறிந்ததே. எவ்வாறெனில் வயலிலே வேலை செய்து கொண்டிருந்த இருவர் தமக்குள் ஏற்பட்ட வாக்குவாதத்தினால் ஒருவரை மற்றவர் மண்வெட்டியால் கழுத்தை வெட்டி கொலை செய்து மறைவாக புதைத்து விட்டதனால் இவ் வழக்கின் பிரகாரம் சாட்சிகள் இல்லாததால் அக்குற்றவாளி தப்பிக்க முயன்ற போது எம்பெருமான் நீதிமன்றத்துக்கு கிழவர் வேடம் பூண்டு சாட்சி சொல்லி மறைந்தருளி னார். அன்று முதல் எம்பெருமானை "தாளை யடிக்கிழவன்" என்று அழைக்கலாயினர் கெடுதி செய்கிறவர்களையும், பொய்ச்

சத்தியம் பண்ணுகிறவர்களையும் இத் தெய்வம் துன்பத்திற்குள்ளாக்குமென நம்பப் படுகிறது. குரோதத்தால் அங்கிருந்த கொடிச் சேலையை அவிழ்த்த ஒருவன் குருடாகி மூன்றாண்டு துன்புற்று மாண்டதாகக் கூறப் படுகிறது. மேலும் எம்பெருமானுடைய தேர்த்திருவிழாவின் போது ஒரு பெண்மணி யின் தங்கச்சங்கிலி திருடப்பட்டு அப் பெண்ணின் முறைப்பாடான பக்தி பிரகாரம் அத்திருடன் கண் செயலிழந்து தங்கச் சங்கிலியை அப்பெண்ணிடமே ஒப்படைத் தான் என்று வரலாறு கூறுகிறது.

ஆரம்ப காலங்களில் பொங்கல் விழாவின் போது மிருகபலியான வேள்வி இடம்பெற்று வந்துள்ளது. காலப்போக்கில் மனிதநேயம் மிக்கவர்களாலும், அறிவிய லாளர்களாலும் உயிர்களை வதைத்து கொலை செய்வது இரக்கமற்ற செயல் என்று பழனி ஈசான சிவாச்சாரியாரின் அறிவுறுத்த லின் பிரகாரம் 1950 களில் வேள்வி வழிபாடு நிறுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். இன்று ஐயனார் அடியவர்கள் அந்த வேள்வியின் பிரகாரமாக ஆடு, கோழி போன்றவற்றை உயிருடன் கோயிலுக்கு காணிக்கையாக வழங்குவதும் ஒரு சிறப்பு அம்சமாகும். இவ்வாலயத்தில் திருவிழா, வேள்வி, வாணவேடிக்கைகள் ஆகியவற்று க்கு பெயர் பெற்றதாகக் கூறப்படுகின்றது. அத்துடன் ஏறக்குறைய கடந்த 75 ஆண்டுக ளாக சனிக்கிழமை தோறும் அன்னதானம் நடைபெறுகின்ற சிறப்பினையும் உடைய தாக காணப்படுகிறது. எல்லாக் கோயில் களிலும் தேர்த்திருவிழா, நடைபெற்றாலும் ஐயனாரின் தேர் குறிப்பிட்டு சொல்லக்கூடிய தாக இருக்கின்றது.

ஐயனார் மீது சுன்னாகம் முத்துக் குமாரக் கவிராஜர் 1800 ம் ஆண்டுகளில் ஊஞ்சல்பாட்டு, கப்பல்பாட்டு, பிரபந்தம் போன்ற பாடல்களை பாடியுள்ளார். மற்றும் இணுவையூர் வீரமணிஐயர் அவர்களால் 1977ம், 2000ம், ஆண்டுகளில் கீர்த்தனை கள் பாடியுள்ளார். இவ்வாலயத்தில் நித்திய பூசைகள் மூன்று வேளையும் இடம் பெறுகின்றன. காலை, மதியம், மாலை, என்ற ஒழுங்கில் இவ் ஆலயத்தை பரம்பரையாக ஸ்தாபித்த வம்சத்தவர்களாகிய ஆதீன கர்த் தாக்களுமாகிய சைவபூசாரிமாரே சிறப்புற நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்க தாகும். ஐயனார் பெருமானுடைய மகோற்ச வம் பங்குனி மாத உத்தர நட்சத்திரத்தினை தீர்த்தமாக கொண்டு 13 தினங்கள் மகோற்ச வம் இடம் பெறுகின்றன. இம் மகோற்சவ தினங்களில் சுன்னாகம் கதிரமலை சிவன் தேவஸ்தான பிரதம குருக்கள் ஆகம முறைப் படி சிறப்புற மகோற்சவம் நடாத்தி வருகின் றார். இம்மகோற்சவத்தை தொடர்ந்து நடைபெறு கின்ற பொங்கல் உற்சவம் என்பது சுன்னாகம் வாழ் மக்கள் மட்டுமன்றி மற்றும் அயல் ஊர் மக்களும் தமது நேர்த்திக்கடன் களையும் தமது குறைகளையும் நிவர்த்தி செய்து எம் பெருமான் திருவருள் பெறும் நாள் என்பதில் ஐயமில்லை.

ஐயனார் பெருமானின் இராஜ கோபுர அமைப்பினை நோக்கின் ஆரம்ப காலங்களிலே அடித்தளம் இட்டு ஆரம்பிக்கப் பட்ட போது எம்பெருமானின் அனுக்கிரகம் இல்லாப்பிரகாரம் நிறுத்தப்பட்டதாக முன்னோர்கள் கூறுவர். மேலும் இப்பணி பல முறை முயற்சி செய்யப்பட்ட போதும் அது தடங்கலாக ஏற்பட்டது. என்பது குறிப்பிடத் தக்க விடயமாகும். எனவே இராஜகோபுர திருப்பணியானது இடம் பெற ஐயனாரே திருவருள் புரிய வேண்டும் என ஐயன் அடி யார்களின் எதிர்பார்ப்புகளாக காணப் படுகிறது.

ஐயன் பெருமான் சுன்னாகம் நகரின் மேற்கில் எழுந்தருளி அயல் ஊர் அடியவர் களை காத்து அருள் பாலிக்கின்றார். தர்மத்

தின் காவலனாய், வில்லாதி வீரனாய், வீர மணி கண்டனாய், சுன்னாகம் தாளையப் பதியே பூரண புஸ்கலா தேவி சமேதராய் அரிஹரபுத்திரனாய் எழுந்தருளி எல்லோரும் காக்கும் காவல் தெய்வமாக விளங்குகின்றார்.

**உசாத்துணை நூல்கள்:-**


1. சமூக தீபம் – 22.06.2001 வெளியீடு
2. அனலைதீவு ஸ்ரீஹரிபுத்திர ஐயனார் ஆலய இராஜகோபுர கும்பாபிஷேகச் சிறப்பு மலர் – 2012
3. சுன்னாகம் ஐயனார் தேவஸ்தான மலர் – ஆண்டு அறிக்கை –1965




**சுன்னாகம் தாழையடி ஐயனார் கோவில் கோபுர வாசலில் அமைக்கப்பெற்ற சுமார் 15அடி உயரமான பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட நான்கு கருங்கற் தூண்கள்**

# சுன்னாகம் வருஷப்புல ஸ்ரீ மகாமாரி அம்பாள் ஆலய வரலாறு

ஆலய தர்மகர்த்தா சபை

**இட அமைவும் தோற்றமும்**

யாழ் மாவட்டத்தின் வளம் மிக்க நகரமாகத் திகழ்கின்ற சுன்னாகம் எனும் புனித பூமியின் வடபால் அமைந்துள்ளதே வருஷப்புலம் எனும் கிராமமாகும். இக் கிராமம் வலிகாமம் தெற்கு பிரதேச செயலகப்பிரிவில் சுன்னாகம் நகர் வடக்கு (J/195) கிராம அலுவலர் பகுதியில் அமையப் பெற்றுள்ளது. யாழ்ப்பாண நகரிலிருந்து காங்கேசன்துறை வீதி வழியாக 10 கிலோமீற்றர் வடக்காகப் பயணம் செய்து சுன்னாகத்தை அடைந்த பின் சுன்னாகம் நகரின் முடிவு எல்லையிலும் மல்லாகம் நகரின் ஆரம்ப எல்லையிலும் யா/சுன்னா கம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலைக்கு அருகே வருஷப்புல மகாமாரி அம்பாளின் நுழைவாயில் எல்லோரையும் அன்புடன் வரவேற்று கிராமத்தினுள் உள்ள அம்பாள் ஆலயத்திற்கு அழைத்துச் செல்கின்றது. அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய இந்நுழைவாயில் 2014 ஆம் ஆண்டு ஆனித்திங்கள் 07 ஆம் நாள் (கும்பாபி ஷேகத்திற்கு முன்னைய நாள்) வைபவ ரீதியாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

இற்றைக்கு இருநூறு வருடங் களுக்கு முன்னர் வருஷப்புல கிராமத்தில் வாழ்ந்த மக்களின் பக்தியைச் சோதிப்பதன் பேரில் மாரியம்மன் சித்தம் கொண்டார். அக்காலப்பகுதியில் ஆட்கொல்லித் தொற்று நோய்களான வாந்திபேதி,கொலரா போன்ற நோய்கள் வந்து மக்களை வாட்டின. வருஷப்புலப் பகுதியிலும் இந்நோய் காரண மாகப் பலர் இறந்தார்கள். தக்க மருந்துகள் அற்ற நிலையில் அக்கால மக்கள் கடவு ளையே நம்பி வாழ்ந்து வந்தனர். இவ்வாந்தி பேதி நோய் காரணமாக இப்பகுதியில் அன்று ஒரு பெண் இறந்து விட்டாள். அடை மழை காரணமாக அப்பெண்ணின் உடலை ஒரு பாயினால் சுற்றி ஒரு மரத்தினடியில் புறம்பாக வைத்து விட்டார்கள். மறுநாள் அவ் உடலை எடுத்துத் தகனம் செய்வதற்கென உறவினர் சென்றபோது அப்பெண் தன்னை இங்கேயே வைத்து ஆதரிக்குமாறும் தான் இவ்வூர் மக்களை காத்தருள வேண்டும் என்றும் அசரீரியாக வாக்களித்தாள். இதனைக்கேட்ட மக்கள் அன்றே அதே இடத்திலேயே அவளைத் தெய்வமாக மதித்து விளக்கேற்றி வழிபடத் தொடங்கினர். சிறிது காலத்தில் தீபம் வைத்த இடத்தில் ஒரு சிறு குடிசை அமைத்து பூசைகளை நடாத்தி வரலாயினர். ஆரம்ப காலத்தில் ஆசார சீலரான ஒரு முதியவர் வெள்ளி, செவ்வாய் நாட்களில் பூசை செய்து வந்தார். காலப் போக்கில் அம்மனின் அருட்கடாச்சம் பெற்று மக்களெல்லாம் மேன்மையுறத் தொடங்க அன்னையவளுக்கு கட்டடம் அமைத்து சிறு கோவிலாக்கினர். பூசை செய்வதற்கு பூசகர் ஒருவரை ஒழுங்கு செய்தனர். அவர் சிவஸ்ரீ சபாரத்தினக் குருக்களின் தந்தையாவார். அவரின் பக்திச் சேவையால் முத்துமாரி அம்

மனின் கோவில் பொலிவு பெற்றது. நித்திய பூசைகள் நடைபெற்றன. பக்தர்களின் தொகை நாளுக்கு நாள் கூடிச் சென்றது. தந்தையாரின் உடல் நிலை தளர்வடைந்த தால் சபாரத்தினக் குருக்கள் அவர்கள் நித்திய பூசைகளை நடாத்தத் தொடங்கினார்.

இவ் ஆலயத்தில் 1910 களில் நைமித் திய பூசைகள் இடம் பெறத் தொடங்கிய தாகக் கூறப்படுகின்றது. 1950 களிற்கு பின் வருஷப்புலம் ஸ்ரீ மகாமாரியென்று பெயர் பெற்ற இக்கோவில் அபரிமித வளர்ச்சி பெற்றமை அம்பாளின் அருட்கடாச்சம் என்றே கூறலாம். ஆரம்பத்தில் திருவெம் பாவை, நவராத்திரி விழா, போன்றவைகளு டன் காலப் போக்கில் அலங்கார உற்சவற் களும் நடைபெறத் தொடங்கின. எழுந்தருளி விக்கிரகம் செய்யப்பட்டது. சுவாமி வீதி வலம் வருவது வழக்கமாகியது. இறைவியை ஊஞ்சலில் இருத்தி பூசைகள் செய்தனர். 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சுன்னாகம் குமார சுவாமிப் புலவர் இத்தலத்திற்கு ஊஞ்சற் பாடல் பாடியதுடன் பன்னெடுங்கால மாக இப்பாடல் பாடப்பெற்று வந்துள்ளமை யும் யாவரும் அறிந்ததே. இவ் ஊஞ்சற் பாட்டு அனர்த்தங்களால் தவறி விட்டதால் இணுவில் கலாபூஷணம் நா. வீரமணிஐயர் அவர்களால் ஊஞ்சல் பாடல் மீள எழுதப் பெற்று பாடப்பட்டு வருகின்றது. அப் பாடலின் சில வரிகள்:

**மஞ்சளினி குங்குமமும் மாலையாட**
**மன்ன செவிக் குண்டலங்கள் மின்னி ஆட**
**கஞ்ச மலர் விழியருளைப் பொழிந்து ஆட**
**கரம் அபய விரமங்கள் கனிந்தே ஆட**

நீண்ட காலமாக அலங்காரத் திரு விழாவாக இருந்து வந்த உற்சவத்தை மஹோற்சவமாக மாற்றி விட வேண்டும் என ஊர் மக்கள் விரும்பினர். அம்பாள் கிருபை யால் 2000 ஆம் ஆண்டில் மஹோற்சவம் நடைபெறும் கோவிலாக மாற்றம் பெற்றது. அந்த ஆண்டிலேயே கொடித்தம்பம் அமைக் கப்பட்டு சித்திரத் தேர் வெள்ளோட்டமும் இடம் பெற்று தேரில் திருவீதியுலாவும் நடைபெற்றது.

கோயிலின் முன்றலில் இராஜ கோபுரம் இல்லாமல் தனியே மணிக் கோபுரம் தலைநிமிர்ந்து நின்றது. பலரது மனத்திலும் கோபுரம் ஒன்று கட்ட வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்திய அன்னை தனக்குக் குறுகிய காலப்பகுதியிலே அழகிய திரிதள கோபுரத்தினை அமைக்க அருள் பாலித்தாள். "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" ஒரு கோபுரத்தை அமைத்தல் என்பது சாதாரண விடயமல்ல பாரிய பணி அப்பணி சீரிய முறையில் நிறைவுற்று இன்று கோவில் முன்றலில் தலைநிமிர்ந்து நிற்கின்றது இராஜகோபுரம்.

ஆலயத்தில் வருடாந்த உற்சவங்கள் தவிர பல திருவிழாக்கள் உற்சவங்கள் விஷேட அபிஷேகங்கள் என்பன சிறப்புற நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சூராவத்தை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வரலாற்றுச் சுருக்கம்

ஆலய தர்மகர்த்தா சபை

ஆன்மிக ஆய்வாளர்களின் முடிவில் சக்தி வணக்கமே முதல் தோன்றியதாக கண்டுள்ளார்கள். அந்த சக்தியை தெய்வ இனங்கண்டு நாமமிட்டு வழிபடத் தொடங்கினார்கள். சக்தியை முதன் முதலாக அம்பிகை, யுவாலமாலினி, பத்மாவதி, சித்தாக்கியா, போன்ற பெயர்களால் நாமமிட்டு வணங்கி வந்தார்கள். இது எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் அதாவது இந்து நதி பள்ளத்தாக்கு நாகரிகத்திற்கு முன்னமே இந்த சக்தி வழிபாடு மனித நாகரிகத்துடன் ஒன்றியதாக வளர்ந்து வந்துள்ளது.

இந்த சக்தியானவள் குண்டலினி சக்தியாகவும், மகா குண்டலினி சக்தியாகவும் மக்களுக்கும் மற்றைய ஜீவராசிகளுக்கும் உயிரூட்டும் ஜீவ ஆன்மிக பிரவாகமாக திகழ்ந்து வரும் காலத்தில் சிற்சில இடங்களில் கிராமங்கள் தோறும் நகரங்கள் தோறும் சில விருட்ஷங்களில் திரட்சி பெற்று அந்த சூழலில் வசிக்கும் ஜீவராசிகளுக்குள் நிலை கொண்டது.

அங்ஙனமே ஏழாலை தெற்கு, சூராவத்தையம்பதியில் ஏறக்குறைய 200 ஆண்டுகளுக்கு முன் புன்னாலை வளவு என்று அழைக்கப்பட்ட வளவில் வேப்ப மரத்தில் அருள் திரட்சி பெற்று திகழ்ந்தது. ஓர் அற்புத நாயகியாக நோய் நிவாரணம் அளிக்கும் தாயாக முத்துமாரி அம்மன் என்ற நாமத்தில் இக்கிராம மக்களுக்கு ஒளியாகவோ, ஒலியாகவோ, அற்புத நிகழ்ச்சியாகவோ காட்சி கொடுத்து தன் அருள் நிலையை பிரகடனப்படுத்திக் கொண்டார். இன்றைய தேவஸ்தானத்தில் கற்பக்கிரகம் அமைந்துள்ள இடத்திலே அந்த வேப்ப விருட்ஷம் இருந்ததாக ஆன்றோர் கூறி வந்தனர்.

ஆன்றோர்கள் அந்த விருட்சத்தை சுற்றியுள்ள இடத்தை புனித நிலையமாக்கி விளக்கேற்றி காலப்போக்கில் சில சமய நிகழ்வுகளை ஏற்படுத்தினார்கள். நோய் தீர்க்கும் முத்துமாரி அம்பாளுக்கு பங்குனி திங்கள் நாட்களில் குளிர்த்தியும் வைகாசி விசாகத்தில் பொங்கலும் நடத்தி வந்தார்கள். அடியார்கள் அம்பாளின் அனுக்கிரகத்துக்கு நன்றி கூறும் வகையில் ஓர் சிறிய கர்ப்பக்கிரகமும் ஒரு சிறிய மண்டபமும் அமைத்து ஈசானியத்தில் 2 அடி விட்டங் கொண்ட ஓர் கிணற்றையும் தோண்டி வெள்ளிக்கிழமைகளில் பூசையும் மார்கழி மாதத்தில் திருவெம்பாவை நிகழ்ச்சியையும் சிறப்பாக நடாத்தி வந்தார்கள். சக்தி வணக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தாலும் சிவ வணக்கத்திற்குரிய திருவெம்பாவை உற்சவம் சிறப்பாக ஏழாலை, சூராவத்தை, மயிலங்காடு, மலப்பை, விழிசிட்டி ஆகிய குறிச்சிகளில் இருந்த மக்கள் பெருந்திரளாக கூடி நடாத்தி வந்தார்கள்.

இன்று எழுந்தருளிய ஐம்பொன் விக்கிரமாக இருக்கும் முத்துமாரி அம்பாளை பிரதிஸ்டை செய்து அதற்கு உகந்த ஓர் பார்வையந்திரம் தயாரித்து அதை கற்பக் கிரகத்தில் வைத்து வணங்கி வந்தார்கள்.

சூராவத்தை ஓர் விவசாய கிராமம். இந்த கிராமத்திலுள்ள மக்கள் அம்பாளுக்கு ஓர் சிறந்த ஆலயம் அமைக்க வேண்டுமென எண்ணி அதாவது புன்னாலை வளவில் உள்ள சிறு கோவில் பெருங் கோயிலாக அமைய வேண்டும் என எண்ணி 1928ம் ஆண்டு புன்னாலை வளவு உரிமையாளர் களும் அந்த வளவை சுற்றியுள்ள நில சொந்தக்காரர்களும் கூடி ஓர் திருப்பணி சபையை அமைத்து அந்தச் சபையை நிர்வகிக்கும் பொறுப்பை திரு.முருகேசு – தம்பிப்பிள்ளையவர்களிடம் கொடுத்து திருப்பணி வேலைகள் ஆரம்பமாகின.

திருப்பணி வேலைகள் 17 ஆண்டு களாக நடைபெற்று 1945ம் ஆண்டு ஆனி மாதம் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகா மண்டபம், நிருத்த மண்டபம், தம்ப மண்டபம், வெளி மண்டபம், அவற்றுடன் கூடிய உள் வீதியை மட்டும் கொண்ட அலங்கார உற்சவம் நடக்கும் ஓர் கோயிலாகவும் சுற்று பிரகார விக்கிரகங்களாக விநாயகர் பழனி யாண்டி வைரவர், நாகதம்பிரான், மணிக் கூட்டு கோபுரம், மடப்பள்ளி, களஞ்சிய வசதி, கொண்ட வாகன அறை அமைந்த கோயிலாக திகழ்ந்திருக்கிறது.

மேற்கே வேம்பினால் சுற்றி பின்னப் பட்டிருந்த வெள்ளரசும், வடக்கில் ஓர் வில்வ மரமும், ஒழுங்கையை அண்டிய கிழக்கு திசையில் அரசமரமும், தென் கிழக்கில் ஓர் மகிழமரமும் நீண்ட கால விருட்சங்களாக இருந்த சூழலில் இந்த கோயில் அமைந்திருந்தது.

தம்ப மண்டப, வெளிமண்டப, கொட்டகைகள் யாவும் தென்னந் தூண், முகட்டு அமைப்பு கிடுகினால் வேயப்பட்டு மிருந்த கோயில் காலப்போக்கில் திருப்பணி வேலைகள் தொடர சதுர தூண்களையும் ஓலைகளால் வேயப்பட்ட கூரையும் அதனை தொடர்ந்து ஓட்டினாலான கூரையுமாக அமைக்கப்பட்டு வளர்ந்து வந்தது. அம்பாள் அடியவர்களுக்கு நிர்வாகத்தில் நாட்டம் ஏற்பட்டு கோயில் பொதுமக்களால் தெரிவு செய்யப்பட்ட பரிபாலன சபையினால் நீதி மன்றத்தின் கட்டளையின் பேரில் விதிகள் அமைக்கப்பட்டு நிர்வாகம் இயங்கி வருகிறது.

இங்ஙனம் வளர்ந்து வரும் காலத் தில் வசந்த மண்டபம், கொடிமரம், ஸ்தாபிக் கப்பட்டு வெளிவீதி ஒன்றை ஏற்படுத்தி அலங்கார உற்சவ நிலையிலிருந்தவை தேர் செய்யப்பட்டு மகோற்சவங்கள் ஏற்படுத்தப் பட்டன.

பழமையை மாறாத வகையில் தைப்பூசம், மகாசிவராத்திரி, பங்குனி திங்கள், பொங்கலும் குளிர்த்தியும், சித்திரா பௌர்ணமி நிகழ்ச்சியும் வைகாசி விசாகப் பொங்கலும், ஆடிப்பூரம் இதற்குள்ளே ஆனி மாதத்தில் 1945ம் ஆண்டு முதல் கும்பாபி ஷேகம், வருடாந்த சங்காபிஷேகம் என்பன போர்க் காலச் சூழ்நிலையாக இருந்தாலும் கூட இனிதாக நிறைவேறியது. இத் திருவிழாக்கள் இன்றும் நடந்து வருகின்றன.

ஆடி மகோற்சவங்கள் ஆடி மாத பௌர்ணமி தினத்தை தீர்த்தோற்சவமாக கொண்டு அதற்கு முந்தைய 10 தினங்களுக்கு முன் கொடி ஏறி பௌர்ணமிக்கு முதல் நாள் தேர் உற்சவமும், பௌர்ணமி அன்று தீர்த்த மும் அதனை தொடர்ந்து வரும் செவ்வாய்க் கிழமை வைரவர் பொங்கலும் அன்றிலிருந்து இன்று வரை இடம் பெற்று வருகின்றது.
கோயிலின் சரித்திர வரலாற்று முக்கியத்துவம்.

1. இக் கிராமத்தில் பிற மத தாக்கங்களுக்கு ஈடுகொடுத்து இந்தக் கிராமத்து மக்கள் சைவ சமயத்தையே பேணும் வகையில் இந்த தேவஸ்தானம் பெரும் பணி யாற்றியது.
2. இலங்கையிலே முதன்முதலாக கூட்டு பிரார்த்தனை நிகழ்வை ஏற்படுத்திய சில கோயில்களிலே ஓர் ஆதி கோயில் சூராவத்தை முத்துமாரி அம்மன் கோயில் இங்கு கூட்டு பிரார்த்தனையை எல்லோரும் அன்புடன் கற்கண்டப்பா என அழைக்கும் சுப்பிரமணியம் –இராமசாமி பெரியார் அவர்கள் ஏறக்குறைய 100 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பித்து இங்கு பெருந்தொண்டு புரிந்துள்ளார்.

நலமே தழைக!



ஏழாலை ஸ்ரீகருணாகரப் பிள்ளையார் மடாலயத்தில் காணப்படும் பழமைவாய்ந்த யானை வடிவ மணி



சுன்னாகம் வருஷப்புல ஸ்ரீ மகாமாரி அம்பாள் கோவில்



சூராவத்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில்



சுன்னாகம் ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் கோவில்



சேர் பொன் இராமநாதன் அவர்களின் சமாதி கோவில்

# சுன்னாகம் ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் தேவஸ்தான வரலாறு

ஆலய தர்மகர்த்தா சபை

**அமைவிடம்**

சுன்னாகம் பல்வேறு வழிகளிலும் வளம் பொருந்திய பட்டினம் முன்பு உடுவில் கிராமச் சபையாகவும் வலி வடக்கு DRO பிரிவாகவும் (தற்போது DRO பிரிவு பிரதேச செயலர் பிரிவு என்று அழைக்கப்படு கின்றது.) இன்று வலி தெற்கு பிரதேச செயலக பிரிவில் வலி தெற்கு பிரதேச செயலக எல்லையினுள் சுன்னாகம் நகர் மத்தி J/198 கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ளது. யாழ்ப்பாண நகரில் இருந்து காங்கேசன்துறை வீதிவழியாக 10 கிலோமீற்றர் வடக்காக பிரயாணம் செய்து சுன்னாகத்தை அடைந்த பின் ஆலயத்தை ஐயான் வீதியூடாக சென்றடையலாம். இவ்வாலயத்துக்கு அருகில் இப்பிரதேசத்தின் பழைய ஆலயங்களுள் ஒன்றான அருள் பாலிக்கும் ஐயனார் ஆலயம் அமைந்துள் ளது. இவ்வாலயத்துடன் தாளை விருட்சமும் வானளாவி வளர்ந்துள்ள மருத மரமும் காணப்படுகின்றது.

சந்திரசேகரப்பிள்ளையார் ஆலயம் மிக அமைதியான இடத்தில் எவருக்கும் மனச் சாந்தியையும் இன்பத்தையும் அளிக்கக் கூடிய சூழலில் அமைந்துள்ளது. அதிகாலையிலேயே உழவர்கள் ஆலயச் சூழலில் தம் வேலைகளை ஆரம்பித்து மாலை வரை வேலை செய்வார்கள். பறவை களின் ஒலியும் நடமாட்டமும் கேட்பதற்கும் பார்ப்பதற்கும் இனிமையாகவிருக்கும் ஆவினங்கள் அணிவகுத்துச் செல்வதை இன்றும் காணலாம். நெல் உட்பட தானியப் பயிர்கள் காய்கறிப் பயிர்கள் சிறப்பாக விளைவிக்கப்படுகின்றன. ஆலயத்தின் வட மேற்குப் புறமாக அழகான நன்னீர்த் தடாகம் காணப்படுகின்றது. இன்று தாமரை வளர்ந்துள்ளமை கண் கொள்ளாக் காட்சியாகவுள்ளது. கோயிலின் வடக்காக கேணி உண்டு. ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களில் ஆலயச் சூழலில் நெல் மட்டும் பயிரிடப்பட்டு பசுமையாகக் காட்சியளிக் கும். மழைகாரணமாக வெள்ளம் தேங்கி வரம்புகளின் மேல் உயர்ந்து நெல்லை மூடி சமுத்திரம் போலவும் சில சமயங்களில் காட்சியளிக்கும் பெருங்கதை விரதம் அனுஷ்டிக்கும் பக்தர்கள் பிள்ளையார் கதை. கேட்பதற்கு வெள்ளத்தினைத் தாண்டி ஆலயத்திற்கு வருவதும் ஒரு காட்சியாகத் தான் இன்றும் காணலாம். இவ்வாலயத்திலே தான் வரதபண்டிதர் பிள்ளையார் கதையை அரங்கேற்றினார். அத்துடன் சுன்னாகம் தவஞானி செல்லாச்சியம்மையார் இக் கோயிலில் வழிபாடாற்றியமையும் குறிப்பிடத்தக்கது.

**ஆரம்பம்**


விநாயகப் பெருமான் இக்கிராமத் தவர்களுக்கு மட்டுமல்லாது அயற்கிராமத்த வர்களுக்கும் "சந்திர சேகரப்பிள்ளை யாராக" அருள் பாலிக்கத் தொடங்கி 400

வருடங்களுக்கு மேலாகின்றதாக அறிய முடிகின்றது. இலங்கையில் உள்ள தொன்மையான கோயில்களுள் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

சுன்னாகம் ஐயனார் வீதியிலுள்ள "தோப்பு வளவில்" இறைபக்தி மிகுந்த சைவ பரம்பரையினர் வாழ்ந்து வந்தனர். இக்காணி சிறந்த தோட்ட நிலமாக வும் விளங்கியது, இந்த இடத்தில் வெள்ளரிக் கொடிகள் பயிரிடப்படுவது வழமையாக விருந்தது. ஒரு நாள் அந்த வெள்ளரிக் கொடிகளுக்கு நீர் பாய்ச்சும் பொழுது கொடிகளின் நடுவில் எமது பெருமானாராகிய பிள்ளையார் சிலை யாகக் காட்சியளித்தார். அவர்களுக்கு ஏற்பட்ட ஆனந்தம் எல்லை மீறிச் சென்றது. பக்தி மேலிட்டது.

அவர்கள் புனிதமான இடத்தில் பெருமானை அமரச் செய்ய வேண்டும் என்று விரும்பி தற்போதுள்ள ஆலயம் அமைந்துள்ள இடத்தில் ஒரு சிறு கொட்டகை அமைத்து வழிபாடு செய்ததாக பரம்பரைக் கதைகள் மூலம் அறிய முடிகிறது.





சுன்னாகம் சந்திரசேகரப்பிள்ளையார் ஆலயத்தில் இன்றும் காணப்படும் 18ம் நூற்றாண்டில் சுன்னாகம் வரதபண்டிதரால் எழுதப்பட்ட பழமை வாய்ந்த ஓலைச்சுவடி இதில் விநாயகர் புராணமும், பிள்ளையார் பெருங்கதையும் காணப்படுகிறது

# சேர் பொன் இராமநாதன் அவர்களின் சமாதி ஆலய வரலாறு

**பண்டிதை திருமதி.வை.கணேசபிள்ளை**
ஆசிரியர்,
இணுவில்

ஈழமணித் திருநாட்டின் வடபால் இருப்பதும், சைவச் சான்றோர்களையும், ஞானிகளையும் தோற்றுவித்த யாழ்ப்பாணப் பட்டினம் இதன் பால் பல ஞானிகளின் சமாதி களைத் தாங்கி நிற்பது மருதனார்மடம். இங்கே சேர்.பொன் இராமநாதனுடைய சமாதி ஆலயம் விளங்குவது மேலுமொரு சிறப்பினை உடையது. இது யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ளது. தெற்கு நோக்கிய இவ்வாலயத்தையும், பல்லப்ப வைரவர் ஆலயத்தையும் ஊடறுத் துக் கிழக்கு நோக்கி உரும்பிராய் வீதி செல்கிறது.

இவ்வாலயம் இற்றைக்கு எண்பது ஆண்டுகள் பழமை வாய்ந்தது. இராமநாதன் கல்லூரி வளாகத்தில் தென்மேற்குத் திசை யில் அமைந்துள்ளது. தெற்கு நோக்கி அமைந்துள்ள இவ்வாலயம் தனிக் கருங்கற் பொழிவினால் திராவிட சிற்பமுறை தழுவிக் கட்டப்பட்ட சிறப்பினையுடையது. மேற் கூரை, விமானம், தூண்கள், நிலம், படிகள், நந்தி, பலிபீடம், யாவும் கருங்கற் பொழி வினால் ஆனவை. இருபது தூண்கள் ஆலயத் தைத் தாங்கி நிற்கின்றன. கருவறையில் இராமநாதன் அவர்களின் சமாதி மேல் லிங்கப் பிரதிட்டை அமைந்துள்ளது. தூண் களில் அழகிய சிற்ப வேலைப்பாடுகள் காணப்படுகின்றன. நாயன்மார்களின் (சமய குரவர்) உருவங்கள், இராமர் மகாவிஷ்ணு, முருகன், விநாயகர், சிவன், பார்வதி, முதலிய தெய்வங்களும் புராண இதிகாசக் கதைகள் கூறும் இரணிய வதம் போன்ற கதைகளும் சிறப்பமாக வடிக்கப்பட்டுள்ளன. ஆலயப்படிக் கட்டுக்கள் யானையின் துதிக்கை போன்ற அமைப்புக்கள் காணப்படு கின்றன. அருகே அமைந்த வசந்த மண்டபத் தில் பார்வதி பரமேஸ்வரன், விநாயகர், முருகன், கோதண்ட இராமன், நடராஜர், சண்டேசுவரர் முதலிய எழுந்தருளி விக்கிர கங்கள் உள்ளன. ஏற்கனவே அமைக்கப் பெற்றிருந்த சமாதிக் கட்டடத்தைக் கோயி லாகக் கருங்கற்றளியாகக் கட்டியவர் சேர் பொன் இராமநாதன் அவர்களின் மனைவி லேடி இராமநாதன் ஆவார். இவருக்கு உறுதுணையாக நின்றவர்கள் இவரது மருமகர் திரு சு. நடேசபிள்ளை அவர்களும் அப்பொழுது இருந்த தலைமைக் கிளாக்கர் தம்பித்துரையுமாவர்.

### சமாதி ஆலயத் தோற்றம்

பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப் பிரஸ்தம், சந்நியாசம், என்ற வாழ்க்கைப் படிநிலைகளில் வாழ்ந்து அருட்பரானந்த சுவாமிகளிடம் குரு உபதேசம் பெற்று முழுத் துறவு பூண்டு வாழ்ந்த ஆத்ம ஞானியே சேர் பொன் இராமநாதன் அவர்கள். இவர் 1851ம் ஆண்டு மானிப்பாயைச் சேர்ந்த பொன்னம் பலம் முதலியாருக்கும் செல்லாச்சி அம்மை யாருக்கும் 2வது மகனாக அவதரித்து எண்பது ஆண்டுகள் நிலவுலகில் வாழ்ந்து செயற்கரிய சாதனைகளை நிலைநாட்டி

1930 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 26ஆம் நாள் இறைவனுடன் இரண்டறக் கலந்தார்.

இவர் இறைபதம் அடைந்த கொழும்பு உவார்ட் பிளேசிலுள்ள சுக வாசஸ்தலத்தில் இருந்து இவரது பூதவுடல் கொழும்பு புகையிரத நிலையத்திற்கு ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டது. இலட்சோப இலட்சம் மக்கள், அரசினர், அறிஞர்கள், கல்விமான்கள், அஞ்சலி செலுத்திய பின் புகையிரதம் மூலம் அவரது பூதவுடல் யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வரப்பட்டு ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த கட்டடத்தில் சமாதியாக இருத்தி வேண்டிய கிரியைகள் உரிய முறைப்படி செய்து மேலே லிங்க பிரதிட்டை வைக்கப் பெற்று அபிஷேக ஆராதனை வழிபாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

ஆண்டு தோறும் இராமநாதன் குருபூசைத்தினம் மணவாளக் கோல விழா சிறப்பாகக் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்களினால் கொண்டாடப் பட்டு வருகின்றது. மணவாளக் கோல விழாவின்போது பார்வதி சமேத இராம நாதேஸ்வரருக்கு ஊஞ்சல் வைபவமும் நிகழும்.

**அறுபது ஆண்டுகளின் பின் நடந்த கும்பாபி ஷேகங்கள்.**

1930 இல் அமைக்கப்பட்ட ஆலயம் நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்களால் கூரை, தூண்கள் பழுதடைந்தன. புனருத் தாரண வேலைகளுக்காக லிங்கம் பாலஸ் தாபனம் செய்யப்பட்டது. கும்பாபி டேகத்தை நடாத்த முடியாத நிலை காணப்பட்டது. இந்த நிலையில் 1990 ஆம் ஆண்டு கல்லூரி அதிபராக நியமிக்கப்பட்டிருந்த சுன்னாகம் குமராசுவாமிப் புலவரின் பேர்த்தி திருமதி.மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் அவர்கள் முழுக்கவனம் எடுத்தார்.

இவரது விடாமுயற்சியினால் துர்க்கா துர்ந்தரி செல்வி அப்பாக்குட்டி தங்கம்மா அவர்களின் உதவியோடு பழுதடைந்த தூண்கள் சரிபார்த்தும் திருத்த வேலைகள் செய்யப்பட்டும் 1992 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 14 ஆம் திகதி அப்பொழுது இருந்த ஆலயப் பிரதமகுரு சோமஸ்கந்தக்குருக்கள் தலைமையில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. இது லிங்கம் பாலஸ்தாபனம் செய்து வைத்து புனருத்தாரண வேலைகள் முடித்துச் செய் யப்பட்ட கும்பாபிஷேகமாகும். ஆலயம் எழுந்து அறுபது ஆண்டுகளின் பின் நடை பெற்ற முதற் கும்பாபிஷேகம் என்பது பெருமைக்குரியதாகும்.

இதனைத் தொடர்ந்து பூசை வழிபாடு கள், மணவாளக்கோல விழா, இராமநாதன் குருபூசை யாவற்றையும் இராமநாதன் அறங்காவலர் சபை ஒத்துழைப்புடன் கல்லூரிச் சமூகமும் பழைய மாணவர் சங்கமும் இணைந்து செய்து வந்தது. இந்த வகையில் 12 ஆண்டுகட்கு ஒருமுறை செய்யப்படும் இரண்டாவது புனராவர்த்தன கும்பாபிஷேகம் 06.07.2003 ஆம் ஆண்டு நடைபெற்றது. இக்கும்பாபிஷேகத்தைப் பிரதம சிவச்சாரியராக இருந்து சிவஸ்ரீ சு.தியாக ராசாக் குருக்கள் (தெல்லிப்பழை காசிப் பிள்ளையார் கோயில்) நடாத்தி வைத்தார். அப்பொழுது கல்லூரி அதிபராக இருந்த திருமதி. ஆனந்தி சிவஞானசுந்தரம் அவர்களின் தலைமையில் இக்கும்பாபி ஷேகம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. இக்காலத்தில் ஆலயப் பிரதம குருவாக இருந்தவர் சிவஸ்ரீ க.குகானந்தக் குருக்களா வார். இவரைத் தொடர்ந்து சுதன்சர்மா அவர்கள் ஆலயப் பிரதம குருவாக இருந்து பூசை வழிபாடுகளை நடாத்தி வந்தார். (ஆரம்ப காலத்தில் இருந்தே ஆலயக்

குருமாராகப் பலர் இருந்து வந்துள்ளனர். அவர்களது பெயர்கள் எடுக்க முடிய வில்லை.)

மீண்டும் ஆலயத் திருத்த வேலைகள் பல செய்ய வேண்டியிருந்தன. ஆலயக் கூரை வெடிப்புகள் காணப்பட்டன. இவற்றை உரிய முறையில் திருத்தியமைக்க சேர். பொன். இராமநாதன் அவர்களின் வழித்தோன்றல் D.M. சுவாமிநாதன் (பா.உ) அவர்கள் முன் வந்தார். இந்தியச் சிற்பிகளை வரவழைத்துச் சிறந்த முறையில் திருத்த வேலைகளை முடித்துப் பிராயச்சித்த கும்பாபிஷேகம் ஒன்று நிகழ்த்தி ஆனி உத்தர மணவாளக் கோல விழா சிறப்பாக நடை பெற்றது. பூசைகள் ஒழுங்காக நடைபெறுவ தற்கு அந்தணர்களையும் திருப்பணி வேலை கட்கு தொண்டரையும் நியமித்துத் தந்துள்ளார். தற்போது ஆலயப் பொறுப்புகள் யாவற்றையும் தானே ஏற்று நடாத்த முன் வந்துள்ளார். இது போற்றப்பட வேண்டிய தொன்றாகும்.

இதுவரை காலமும் நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்களினாலும் பாதிக்கப்பட்ட ஆலயங்கள் கல்லூரி என்பன பல இடர் பாடுகளை எதிர் கொண்டது. ஆலயப் பூசை வழிபாடுகளைச் செய்ய போதிய பணவசதி இல்லாத குறைபாடுகள் இருந்து வந்துள்ளன. ஆயினும் கல்லூரிச் சமூகம், இராமநாதன் அறங்காவலர் உதவியுடன் ஆலயங்களைச் சிறந்த முறையில் கவனித்து வந்தது. D.M சுவாமிநாதன் (பா.உ) அவர்கள் ஆலயத் தைப் பொறுப்பேற்றதும் கல்லூரிச் சமூகத்தி ற்கு இதுவரை இருந்து வந்த சிரமங்கள் குறைந்து விட்டன.

தற்போது ஆலயம் பல்வேறு திருப்பணிகளால் சிறந்து விளங்குகின்றது. ஆலய மதில்கள் திருத்தப்பட்டுள்ளன. சூழல் சுற்றுப்புறங்கள் யாவும் திருத்தப்பட்டு பூந்தோட்டம் அமைத்தும் ஆலயத்திற்கே யுரிய கேணியும் திருத்தி அமைக்கப்பட்டுள் ளது. ஆலயச் சுற்றுப் பிரகாரம், நிலம் நடை பாதை யாவும் சீமெந்து போடப்பட்டுள்ளது. கல்லும் முள்ளுமாக இருந்த இடங்கள் சீமெந்து நிலமாக மாறியமை தொண்டர்கள் வழிபாடாற்றுவதற்கு இலகுவாகவும் வசதி யாகவும் அமைந்துள்ளது. மக்களுடைய தரிசனத்திற்காக ஆலயம் திறந்து விடப் பட்டுள்ளது. மீண்டும் விஜய வருடம் தைத்திங்கள் 9ஆம் நாள் (22.01.2014) புதன் கிழமை இராம நாதேஸ்வரப் பெருமானுக்கு பிரம்மஸ்ரீ பாலசண்முகக் குருக்கள் புனருத் தாரண மகா கும்பாபிஷேகத்தை நடாத்தி வைத்துள்ளார். ஆலய நாளாந்த பூசைகளை சின்மயசர்மா அவர்கள் செய்து வருகின்ற னர். யாவற்றையும் அறங்காவலர் சபைத் தலைவர் D.M சுவாமிநாதன் (பா.உ) அவர்களே நடாத்துகின்றனர்.

தொடர்ந்து 12 நாட்கள் மண்டலாபி ஷேகம் நடைபெற்று 02.02.2014 இல் மண்டலாபிடேகப் பூர்த்தி விழாவும் மண வாளக் கோல விழாவும் நடைபெற்றது.

பேரறிஞர்களாலும் வெளிநாடு களில் இருந்து வரும் பிரமுகர்களாலும் வணக்கத்திற்குரிய தலமாக விளங்குவது ஒரு தனிச்சிறப்பாகும். ஆலயம் ஒளிமய மாகக் காட்சி தருகின்றது. இராமநாதேஸ் வரப் பெருமான் யாவருக்கும் அருள் பாலித்த வண்ணமிருக்கின்றார்.

# சுன்னாகம் குமாரசாமிப் புலவர்

**மா.இராமலிங்கம் J.P**
ஓய்வுநிலை கிராம அலுவலர்
சுன்னாகம்.


சுன்னாகம் மயிலணியில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவர். வட மொழியிலும், தென் மொழியிலும் ஆழ்ந்த புலமை உள்ளவர். இயல் பாகவே கவிதை படைக்கும் ஆற்றல் உள்ளவர். கட்டுரை எழுதுவதிலும், கவிதை இயற்றுவதிலும் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத் தனிப் பெருமையோடு விளங்கினார். செந்தமிழ் வளர்ச்சிக்கும், சைவத்திற்கும் அரும்பணி புரிந்தவர் இவர். புலவர் அவர்கள் பல செய்யுள் நூல்களையும் இலக்கண நூல்களையும் உரை நடை நூல்களையும் வெளியிட்டதோடு அல்லாமல் இலக்கியச் சொல்லகராதி என்ற நூலையும் வெளியிட்டார்.

புலவர் ஆரம்பத்தில் இயற்றிய நூல்களுள் பெரும்பாலானவை செய்யுள் வடிவில் அமைந்தவை ஆகும். அவை பதிகம், ஊஞ்சல், சிந்து, இரட்டைமணிமாலை, அட்டகம், கும்மி என்பனவாகும். அவற்றுள் பதுளைக் கதிரேசன் ஊஞ்சல், மாவைப் பதிகம், மேக தூதக்காரிகை, மாவை இரட்டை மணிமாலை, சாணக்கிய நீதி வெண்பா, இராமோதந்தம் என்பவை குறிப்பிடத்தக்க சில நூல்களாகும்.

புலவர் அவர்களின் உரை நூல்களோ பல. அவற்றை எல்லாம் இச்சிறு கட்டுரையில் குறிப்பிடுவது சிரமம் எனினும் ஒரு சிலவற்றையாவது கூறுவது பொருத்தமாகும். திருக்கரசை புராணப் பொழிப்புரை, சூடாமணி நிகண்டு, முதலாம் இரண்டாம் தொகுதிப் பரம்பொருள், மறைசை அந்தாதி அரும்பத உரை, நீதி நெறி விளக்கப் பத்துரை, இராமாயணம் பால காண்ட அரும்பத உரை, ஏர் எழுபது பொழிப்புரை, கல்வளை அந்தாதி முதலியனவையாகும்.

இவருடைய இலக்கண உரை நூல்கள் யாப்பருங்கலப் பொழிப்புரை, வெண்பாட்டியல் பொழிப்புரை, தண்டியலங் காரப் புத்துரை, யாப்பருங்கலக்காரிகைப் புத்துரை, அகப்பொருள் விளக்கப் புத்துரை, இவற்றை விட இலக்கண சந்திரிகை, வினைப் பகுபத விளக்கம் என்னும் இரண்டு ஆராய்ச்சி நூல்களையும் எழுதி வெளியிட்டார்.

கண்ணகி கதை, தமிழ்ப்புலவர் சரிதம், இதோபதேசம், சிசுபால சரிதம், இரகு வம்சம், சரிதாமிர்தம் போன்ற வசன நூல்களையும் எழுதினார். மேலும் இதோபதேசம், நகுலமலைக் குறவஞ்சி நாடகம், யாப்பருங்கலக்காரிகை (பழைய உரை) ஆசாரக் கோவை, ஆத்திசூடி வெண்பா, நான்மணிக் கடிகை, சிவராத்திரி விளக்கம், உரிச் சொல் நிகண்டு, திருவாதவூரர் புராண மூலம், பழமொழி விளக்கம் ஆகிய பதிப்பு நூல்களையும் எழுதி உள்ளார். சதாசாரக் கவித்திரட்டு, சிவதோத்திரக் கவித்திரட்டு என்பன இவரது தொகுப்பு நூல்களாகும்.



சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர்

குமாரசுவாமிப் புலவர் அவர்கள் ஆறுமுக நாவலரைச் சந்தித்தது முதலாக அவர்தம் காந்த சக்தியால் ஈர்க்கப்பட்டார். புலவரின் ஆற்றலை நாவலரும் கண்டார். உற்சாகப்படுத்தினார். இந்த உற்சாகம் புலவர் அவர்களை நாவலரைப் பின்தொடருமாறு செய்தது. நாவலரின் பிரசுரங்களைத்தப் பாமற் பெற்று வந்தார். அவர் எழுதிய வசனங்களையும் கண்டனங்களையும் கருத் தூன்றிப் படித்தார். புலவரின் அறிவு வளர்பிறையாய் வளர்ந்தது.

புலவர் அதுமட்டும் அல்லாமல் தமது படைப்புக்களை அவரிடம் காட்டி அவர் அபிப்பிராயத்தைக் கேட்பதிலும் ஆர்வம் மிக்கவராக விளங்கினார்.

நாவரலது மாணாக்கர் பரம்பரை யில் நேரடியாக வராதவராயினும் புலவர் அவர்கள் நாவலர் பரம்பரையின் முக்கியத் தருள் ஒருவராக கருதப்படுவார். சிலர் புலவர் அவர்களுடன் நாவலர் பரம்பரை முடிந்து விட்டதாகவும் கூறுவார். இதற்குக் காரணம் புலவர்கள் செய்த பணிகளாகும்.

வண்ணைச் சைவப் பிரகாச வித்தி யாசாலையை நாவலர்களுக்குப் பின்பு உயர் கல்விப் பீடமாக உயர்த்திய பெருமை யில் புலவர்களுக்கு முக்கிய பங்குண்டு. அங்கு நடைபெற்ற காவிய வகுப்பில் உயிர் நாடியாக விளங்கியவர் புலவர் அவர்களே.

புலவர் அவர்கள் 1878–1888 வரை உள்ள காலப்பகுதியில் கிறீஸ்தவ மத கண்டனத்தில் முதல்வராக நின்றவர். ஆரம்ப காலத்தில் சிறந்த சமயப் பிரசங்கியாகவும் விளங்கியவர்.

புலவர் அவர்களை ஆறுமுகநாவலர் பெரிதும் பாராட்டி யுள்ளார். தனக்கு ஏற்பட்ட சந்தேகங்களை ஆறுமுகநாவலர் மூலமாக புலவர் அவர்கள் தெளிவுபடுத்திக் கொண டார்.

1900 ஆம் ஆண்டில் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் நிறுவப் பட்ட தமிழ்ச்சங்கத்தின் ஆலோசகராகவும், பரீட்சகராகவும் குமாரசாமிப் புலவர் அவர் கள் விளங்கினார்.

1903 ஆம் ஆண்டில் பாண்டித்துரை தேவர் அவர்கள் மதுரைத் தமிழ் சங்கத்தை நிறுவினார். இதன் உறுப்பினராக இருக்கு மாறு பாண்டித்துரைத் தேவர் அவர்கள் இவரைக் கேட்டுக்கொண்டமை குமாரசாமிப் புலவர் அவர்களுக்கு வழங்கப்பட்ட பெரும் கௌரவ மாகக் கருதப்படுகின்றது.

இவ்வாறாகத் தம் வாழ்நாள் முழுவதையும் சைவத்திற்கும், செந்தமிழ் மறுமலர்ச்சிக்கும் அர்ப்பணித்த புலவர் அவர்கள் 09.03.1922 ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார். இவருடைய மறைவு தமிழ் உலகத்திற்குப் பேரிடியாக விளங்கி யது. இவரது பிள்ளைகள் உறவினர்கள், மாணவர்கள், நண்பர்கள், அனைவரும் சோகக் கடலில் மூழ்கினர். புலவர் அவர் களின் இறுதிக் கிரியைகளில் பல நூற்றுக் கணக்கான மக்கள் கூடியிருந்தனர். அவர்கள் தங்கள் ஆழ்ந்த அனுதாபங்களை இரங்கல் பாக்கள் மூலமும், உரைகள் மூலமும் வெளியிட்டனர். புலவர் அவர்களின் தலை சிறந்த மாணவனாகிய பண்டிதமணி சி. கண பதிப்பிள்ளை கையாறுற்றுக் கவலையில் மூழ்கிப் பின்வருஞ் செய்யுளைக் கூறித் தமது குரவருக்கு இறுதி அஞ்சலி செலுத்தி னார். அச்செய்யுள் வருமாறு.

**செந்தமிழும் ஆரியமுந் தேர்ந்து வீறித்தேய**
**மெலாம் சென்றிலகும் சீர்த்தி ஒன்றே இந்த**
**நிலமிசையிருப்ப இணையிலாத எண்ணில்பல**
**கவிதை தழைத்த இனிய வாயும் அந்தமிலாக்**

கவிகள் பல எழுதி வைத்த அம்புயநேர் திருக்கரமும், அந்தோ! அந்தோ!

இந்தனத்திற் செந்தழலில் உருகி வீய யாமிதனைப் பார்த்திருத்தல் என்னே! என்னே!

**புலவர் இயற்றிய நூல்களின் அட்டவணை**

**செய்யுள் நூல்கள்**

1. வதுளைக் கதிரேசன் பதிகம் (1884)
2. வதுளைக் கதிரேசன் சிந்து (1884)
3. வதுளைக் கதிரேசன் ஊஞ்சல் (1884)
4. வதுளை மாணிக்க விநாயகர் பதிகம் (1884)
5. துணைவை அரசடி விநாயகர் பதிப்பகம் (1887)
6. துணைவை சண்முகர் ஊஞ்சல் (1887)
7. துணைவை அரசடி வைரவர் தோத்திரம் (1887)
8. மிலேச்ச மதவிகற்பக் கும்மி (188)
9. மாவைப் பதிகம் (1892)
10. மாவையிரட்டை மணிமாலை (1892)
11. மேகதூதக் காரிகை (1892)
12. நகுலேசுரர் ஊஞ்சல் (1896)
13. ஏகவிருத்த பாரதம் முதலியன (1896)
14. அத்தியடி விநாயகர் ஊஞ்சல் (1897)
15. அமராவதி பூதூர்பாலவிநாயகர் பதிகம் (1897)
16. கைலாயப்பிள்ளையார் ஊஞ்சல் (1904)
17. கோப்பாய் வெள்ளெருவை விநாயகர் பதிகம்(1905)
18. விளிசிட்டி பொற்கலந்தம்பை வைரவர் ஊஞ்சல் (1912)
19. சாணக்கிய நீதி வெண்பா (1914)
20. தெல்லிப்பழை தில்லையிட்டி அம்மன் ஊஞ்சல் (1915)
21. பன்னாலை வள்ளிமலைக் கந்தசுவாமி ஊஞ்சல் ( 1916)
22. இராமே தந்தம் (1921)
23. அராலி முத்துமாரியம்மன் ஊஞ்சல் (1921)

**உரைநூல்கள்(இலக்கியம்)**

24. திருக்கரசைப் புராணம் பொழிப்பு (1890)
25. சூடாமணி நிகண்டு 1ம் தொகு பதப் பொருள் (1895)
26. சூடாமணி நிகண்டு 2ம் தொகுபதப் பொருள் (1895)
27. சூடாமணி நிகண்டு முதலைந்து தொகுதி (1900)
28. கலைச்சிலேடை வெண்பா அரும் பதவுரை (1901)
29. மறையந்தாதி அரும்பதவுரை (1901)
30. நீதிநெறி விளக்கப் புத்துரை (1904)
31. திருவாதவூரர் புராணப் புத்துரை (1904)
32. முத்தக பஞ்சவிஞ்சதி குறிப்புரை (1909)
33. இராமாணயம் பாலகாண்டம் அரும் பதவுரை (1918)
34. ஏரெழுபது பொழிப்புரை (1920)
35. கல்வளையந்தாதி பதவுரை (1921)

**உரைநூல்கள் இலக்கணம்**

36. யாப்பருங்கலப் பொழிப்புரை (1900)
37. வெண்பாப்பாட்டியல் பொழிப்புரை (1900)
38. தண்டியலங்காரப் புத்துரை (1908)
39. யாப்பருங்கலக்காரிகைப் புத்துரை (1908)
40. அகப்பொருள் விளக்கப் புத்துரை (1912)

**இலக்கண ஆராய்ச்சி நூல்கள்**

41. இலக்கண சந்திரிகை (1897)
42. வினைப் பகுபத விளக்கம் (1913)

**வசன நூல்கள்**

43. கண்ணகி கதை (1900)
44. தமிழ்ப்புலவர் சரித்திரம் (1916)
45. இதோபதேசம் (1920)
46. சிசுபாலசரிதம் (1921)

47. இரகுவமிச சரிதாமிர்தம் ( 1922)

**பதிப்பு நூல்கள்**

48. இதோபதேசம் (மொழிபெயர்ப்பு) (1886)
49. நகுலமலைக் குறவஞ்சி நாடகம் (1895)
50. யாப்பருங்கலக்காரிகைப் பழையவுரை (1900)
51. ஆசாரக்கோவை(1900)
52. நான்மணிக்கடிகை (1900)
53. ஆத்திசூடி வெண்பா (1901)
54. சிவசேஷத்திர விளக்கம் (1901)
55. உரிச்சொல் நிகண்டு (1902)
56. திருவாதவூரர் புராண மூலம் (1902)
57. பழமொழி விளக்கம் (1903)

**தொகுப்பு நூல்கள்**

58. சதாசாரக் கவித்திரட்டு (1911)
59. சிவதோத்திரத் திரட்டு (1911)

**அகராதி**

60. இலக்கியச் சொல்லகராதி (1915)

**உசாத்துணை**

குமாரசாமிப்புலவர் வரலாறு (1970)

# சி.வை.தாமோதரம்பிள்ளை
## வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்

**பேராசிரியர் சி.சிவலிங்கராஜா**
தமிழ்த்துறை
யாழ். பல்கலைக்கழகம்.

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு பூதந்தேவனார் எனும் சங்கப்புலவரிலிருந்து தொடங்குகிறது என்பர். வரலாற்றாதாரங்களோடு கூடிய ஈழத்து இலக்கியவரலாறு யாழ்ப்பாண மன்னர்களுடனேயே துலக்கமடையத் தொடங்குகிறது எனலாம். யாழ்ப்பாண மன்னர் காலத்திலிருந்து செழிப்படைந்த ஈழத்து இலக்கிய வரலாறு குறிப்பிடத்தக்க சில துறைகளில் தனித்துவமுடையதாகக் காணப்படுகின்றது. தமிழ்நாட்டிற்கு வழிகாட்டிகளாகவும் முன்னோடிகளாகவும் ஈழத்துத் தமிழறிஞர்கள் பலர் அமைந்தனர்.

தமிழ் இலக்கியவரலாற்றில் 19 ஆம் நூற்றாண்டு ஈழத்திற்குரியது என்பர். இப்பெருமையைப் பெற்றுத்தந்தவர்களுள் ஆறுமுகநாவலரும், சி. வை. தாமோதரம்பிள்ளையும் சிறப்பாகக் குறிப்பிடக்கூடியவர்கள். நாவலரும் சி. வை. தாவும் ஏறத்தாழச் சமகாலத்தவர்களே நாவலருக்குப் பத்து ஆண்டுகள் பிந்திப்பிறந்தவர், சி. வை. தாமோதரம்பிள்ளை. நாவலர் இறைவனடி சேர்ந்ததின் பின்பும் ஏறத்தாழ இருபத்திரண்டு ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்தவர் சி. வை. தாவின் சிறப்பான பணிகளிற் பல இவ்விருபத்திரண்டு ஆண்டுக் காலப் பகுதியிலே தான் கைகூடியது உனலாம்.

நாவலரும் சி. வை. தாவும் உற்ற நண்பர்களாகவும் ஒருவருக்கொருவர் துணையாகவும் நின்று தமிழ்ப்பணி புரிந்தவர்கள். நாவலரின் பல முயற்சிகளுக்குச் சி.வை தாவும் சி.வை. தாவின் பல முயற்சிகளுக்கு நாவலரும் பின்னணிக் காரணர்களாக அமைந்தவர்கள் எனலாம். இவர்கள் இருவருக்குமிடையேயிருந்த கேண்மை நிலையை நாவலர் இறந்தபோது சி.வை. தா சொல்லிய செய்யுட்களால் நன்கறியலாம்.

சி.வை. தாமோதரம்பிள்ளையின் "சரித்திரம்" தமிழ்ச்சரித்திரம்" என்பர் பண்டிதமணி நாவலர் மரபின் பழுத்தபழமாக இன்றும் நம்மிடையே வாழும் பண்டிதமணியின் கூற்று மிகவும் ஆழந்தகன்றது. தாமோதரம்பிள்ளை வரலாற்றை அறியமுற்படுவோர் தமிழ் மொழியின் தமிழிலக்கிய இலக்கணங்களின் வரலாற்றை நிச்சயமாக அறிந்தே தீருவார். தமிழ் இலக்கிய வரலாற்றில் 19 ஆம் நூற்றாண்டின் பல முனைப்பட்ட போக்குகளையும் சி.வை. தாவினூடுகண்டு தெளியலாம்.

தமிழியல் ஆய்வின் பல்வேறு துறைகளிலும் ஈடுபாடு கொண்ட சி.வை.தா. அவர்கள் குறிப்பிட்ட சில துறைகளிலே தன் சுவடுகளை மிக ஆழமாகப் பதித்திருக்கிறார். சி.வை தாவினது பணிகளையும் பண்பினையும் முழுமையாக விளங்கிக் கொள்ளப் 19 ஆம் நூற்றாண்டில் ஈழத்தில் குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலவிய கல்விப் பாரம்பரியத்தையும்



ராவ் பகதூர் சி.வை.தாமோதரம்பிள்ளை

விளங்கிக் கொள்ளல் வேண்டும்.

ஈழத்தில் குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலவிய கல்விப் பாரம்பரியம் இறுக்கமானதும் ஆரோக்கியமானதும் எனலாம். யாழ்ப்பாணச் சமூகத்தில் நிலவிய சில குறைபாடுகளைச் தவிர்த்து இக்கல்வி அமைப்பினை ஆராயின் மிக உயர்வான கல்விநிலையென்றே கருத வேண்டும். ஐரோப்பியர் வருகையையொட்டி நிறுவன அடிப்படையிலான பாடசாலைகள் நிறுவப் படுவதற்குப் பல காலத்திற்கு முன்பிருந்தே திண்ணைப்பள்ளிக்கூடங்கள் ஈழத்தில் பலபாகங்களிலும் நிலவிவந்துள்ளன. இத்திண்ணைப்பள்ளிக்கூடங்கள் ஈழத்தின் பலபாகங்களிலும் நிலவிவந்துள்ளன. இத்திண்ணைப் பள்ளிமரபிலே மாணவர் தனது ஆரம்பக்கல்வியைத் தகப்பனிடமோ, மாமனிடமோதான் பெறுவர். பின் ஆசிரியரை யடைந்து குருசிஷ்ஷிய மரபுநெறியில் பாடங்களைப் பயிலுவர். ஆரம்பத்தில் மனனம் செய்வதும் பின் பொருள் விளங்க லும் செய்யுள்யாத்தலும் இம்மரபின் முக்கிய மான அம்சமாகும்.

நிறுவன அடிப்படையில் இயங்கிய பாடசாலைகளும் உயர்கல்விக்கென உருவாகிய கல்லூரிகளிலும் பாடத்திட்டங் களிலும் வேறுபாடு காணப்பட்டது. பொது வாக நிறுவன அடிப்படையில் அமைந்த உயர்கல்லூரிகளில் ஆங்கிலம், கிறிஸ்தவ மதம், ஆங்கில உயர் இலக்கியங்கள், தருக்கம், விஞ்ஞானம் போன்ற பாடங்க ளோடு தமிழலக்கிய இலக்கணங்களும் போதிக்கப்பட்டன.

ஐரோப்பியர் வருகையையொட்டி நிறுவன அடிப்படையிலான பாடசாலை களும் அவற்றோடு தொடர்புடைய பாடப் புத்தகங்களும் (அச்சு, காகித உபயோக) அப்பியாசப் புத்தகங்களுமாய பல்வேறு மாற்றங்களுக்கு மத்தியிலேயும் மிக அண்மைக்காலம் வரை பாரம்பரியக் கல்வி மரபும் நின்று நிலைத்தமை கவனிக்கத் தக்கது.

மரபுரீதியான கல்வியை ஆரம்பத் தில் வரன்முறையாகப் பெற்ற பலர் பின்பு நிறுவனரீதியாக இயங்கிய ஆங்கிலக் கல்விச் சாலைகளிலே கல்வியைப் பெற்றனர். இவ்வாறு இருமரபுந்துய்ய கல்வி பெற்றபலர் அறிஞர்களாகவும் ஆராய்ச்சி யாளர்களாகவும் முதன் முயற்சியாளர்களா கவும் முன்னோடிகளாகவும் திகழ்ந்தனர். இந்த இருமரபுந்துய்த்த நெறியே 19 ஆம் நூற்றாண்டை ஈழத்திற்குரியது என்ற பெரு மைக்குரியதாக்கியது எனலாம். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ராவ்பகதூர் சி.வை. தாமோ தரம்பிள்ளை போன்றே ஈழத்துத் தமிழறிஞர் பலர் இவ்விரு வழிப்பயிற்சியும் பெற்றவர் களே.

சிறுப்பிட்டி குருநாதரவர்களின் புதல்வர் வைரவநாதர் இவர் வட்டுக் கோட்டை செமினறியிலே பயின்று பண் டைத்தரிப்பு அமெரிக்கமிஷன் பாடசாலை யிற் தலைமையாசிரியராக இருந்தவர். பின்பு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் கணிதப் பேராசிரியராகவும் கடமையாற்றியவர்

ஏழாலையைச் சேர்ந்த பெருந் தேவியார் உடுவில் மகளிர் கல்லூரியிற் பயின்றவர். வைரவநாதர் பெருந்தேவியார் தம்பதிகளுக்கு 1832ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12- ந் திகதி சிரேஸ்ட புதல்வராகத் தாமோதரம்பிள்ளை பிறந்தார்.

தனது தந்தையாரிடம் வாக்குண்டாம், நன்னெறி, மூதுரை, திவாகரம், பயின்றவர். வைரவநாதர், உரிச்சொல், நிகண்டு, முதலிய நூல்களை ஐயந்திரிபறக் கற்றுணர்ந்தார்.

பின் சுன்னாகம் முத்துக்குமார கவிராயரிடம், நைடதம், பாரதம், கந்தபுராணம், முதலிய உயரிலக்கியங்களையும் நன்னூல் தொல் காப்பியம், முதலிய உயரிலக்கிணங்களை யும் கற்றுத்தேர்ந்தார்.

தமிழோடு ஆங்கிலத்தையும் கற்க விரும்பிய பிள்ளையவர்கள் தெல்லிப்பளை யில் உள்ள அமெரிக்க மிஷன் கலாசாலை யில் ஆங்கிலக் கல்வியைப் பெற்றார்கள். ஆங்கிலக்கல்வியில் உயர் புலமை பெறும் நோக்கமாக வட்டுக்கோட்டையிலுள்ள யாழ்ப்பாணச் சர்வசாத்திரக் கலாசாலை யென அழைக்கப்பட்ட கலாசாலையிலே 1844 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 12 ஆந் திகதி சேர்ந்து கற்கத் தொடங்கினார். யாழ்ப்பாணத்துக்கல்வி வரலாற்றில் இச்சர்வசாத்திரக் கலாசாலைக்கு அழியாத ஒரு இடம் உண்டு. இக்கலாசாலையிலே கறல் விசுவநாதபிள்ளை வித்துவான் கதிரை வேற்பிள்ளை, நெவின்ஸ், சி.டி. மில்ஸ் முதலாய பேரறிஞர்கள் சி.வை தாமோதரம் பிள்ளைக்கு நல்லாசிரியர்களாக வாய்த் தனர். " தாரமும் குருவும் தலை விதி" என்பது போலப் பிள்ளையவர்களுக்குத் தந்தை யாரைத் தொடர்ந்து தரமான ஆசிரியர்கள் வாய்த்தனர். சி.வை.தா. அவர்கள் பிற காலங்களில் தனது ஆசிரியர்களை மிகவும் நன்றியோடு நினைவுகூர்ந்து வணக்கம் செலுத்தியமை அவரது குருபக்தியையும் வெளிக்காட்டுவன.

பல்கலைக்கழகத் தரத்தில் விளங்கிய வட்டுக்கோட்டைச் சர்வசாத்திர கலாசாலையில் ஆங்கிலம், தமிழ், தத்துவம், வானசாத்திரம், முதலிய பாடங்களிலே விசேடதிறமை பெற்று முதன் மாணவராய் விளங்கினார். தாமோதரம் பிள்ளையிடத்து நிரம்பியிருந்த தமிழறிவைக்கண்டு ஆசிரி யர் நெவின்ஸ் அவர்கள் பிள்ளையவர்க ளைப் "பண்டிதன்" என அழைப்பது வழக்க மாயிற்று. ஆசிரியர்களின் விருப்புக்கும் மதிப்புக்கும் ஆளான பிள்ளையவர்கள் ஏறத்தாழ எட்டு ஆண்டுகள் ஆங்கில உயர் கல்வியில் பயிற்சி பெற்றவர்.

1852 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தனது இருபதாவது வயதிலே போதனா வித்தியாசாலையில் ஆசிரியரானார். இங்கு கற்பித்து வருகின்ற காலத்திலேயே நீதிநெறி விளக்கவுரை சி.வை. தாவால் வெளியிடப் பட்டது. பின்பு தமிழுலகம் வியக்கும் வண்ணம் பதிப்புத்துறையில் ஈடுபடப் போவதற்கான அத்திவாரத்தை இருபது வயதிலேயே போட்டுக்கொண்டார்.

நாவலருக்கு ஆங்கில ஆசிரியரா யும், தமிழ் மாணவராயும் இருந்த பார்சிவல் பாதிரியார் யாழ்ப்பாணத்திலிருந்து சென்னை சென்று தினவர்த்தமானி என் கின்ற தமிழ்பத்திரிகையை நடத்திக் கொண் டிருந்தார். தாமோதரம் பிள்ளையின் திறமைகள் பற்றி நன்கறிந்திருந்த பார்சிவல் தாமோதரம்பிள்ளையைச் சென்னைக் கழைத்து தினவர்த்தமானிக்குப் பத்திராசிரி யராக நியமித்தார். பத்திராசிரியராக இருக் கும் போதே சென்னை இராசதானிக் கல்லூரி யில் தமிழ்ப் பண்டிதராகவும் நியமனம் பெற்றார். இக்காலத்தில் ஓய்வுநேரங்களில் பேர்யர், சேர் உவால்ரர், எலியெற், வஷ் சிங்டன், மிண்டர், போன்ற ஆங்கிலேயப் பிரபுக்களுக்குத் தமிழ்கற்பித்தும் வந்தார். இக்காலப்பகுதியிலே கற்றோர் மத்தியில் சி.வை. தா.பிரபல்யமடைந்தார்.

1857 ஆம் ஆண்டு சென்னைச் சர்வ கலாசாலை ஆரம்பமானது பத்திராசிரியரா யும், தமிழாசிரியராயுமிருந்த சி.வை.தா. அது ஆரம்பமான அதே ஆண்டில் நடத்திய பிரவேசப் பரீட்சையில் திறமான சித்தி பெற்றார். சித்தி பெற்று நான்காவது மாதத்தில் நிகழ்ந்த பீ.ஏ. பரீட்சையிலும்

முதற்பிள்ளையாகத் தேறினார். சி.வை. தாவுக்கு வட்டுக்கோட்டைக் கல்லூரியில் ஆசிரியராக இருந்த கறல் விசுவநாத பிள்ளையும் இப் பீஏ. பரீட்சையில் இவருடன் தேறிய இன்னொரு ஈழத்தவராவர். சி.வை.தா. ஈழத்தில் பெற்ற "இருமரபுக் கல்வி" சென் னைச் சர்வகலாசாலைப் பட்டப் பரீட்சைக்கு "அடி உரமாக அமைந்திருந்தது எனலாம்.

சி.வை.தா பட்டம் பெற்றதும் அவரது பதவியும் படிப்படியாய் உயரத் தொடங்கி யது. பட்டம் பெற்ற பிள்ளையவர்கள் கள்ளிக் கோட்டையிலுள்ள இராசாங்க வித்தியா சாலை உதவியாசிரியராக நியமிக்கப் பெற்றார்கள். அவ்வித்தியாசாலையிற் கட மையாற்றிய ஆறுமாதகாலத்துள் அப் பாடசாலையின் விசேட அபிவிருத்திகள் சீர்த்திருத்தங்கள், காரணமாகப் பிள்ளைய வர்கள் சென்னை அரசாங்க வரவு செலவுக் கணக்குச் சாலையிற் கணக்காய்வாளர் பதவியைப் பெற்றனர். அப்பதவியிற் காட்டிய கரிசனையாலும், உழைப்பாலும், விசாரணைக்கர்த்தர் ஆயினார். பதவி, பதிப்பு, இம்முயற்சிகளினூடும் சி.வை.தா. 1871 ஆம் ஆண்டில் பி.எல். பரீட்சையிலும் சித்தியெய்தினார்.

1882 ஆம் ஆண்டில் அரசாங்க உத்தி யோகத்தினின்றும் இளைப்பாறிச் சிறிது காலத்தின் பின் வாழ்க்கையினின்றும் நீங்கிக் கும்பகோணம் (திருக்குடந்தை) சென்று அமைதியான சுதந்திர வாழ்வை நடத்த விரும்பினார்.

கும்பகோணத்தில் அமைதியாக வாழும்போதுதான் புதுக்கோட்டைச் சமஸ்த்தானத்து நீதிபதிகளுள் ஒருவராக நியமிக்கப்பட்டார். 1895 ஆம் ஆண்டு சென்னை அரசாங்கம் ராவ்பகதூர் எனும் கண்ணியப்பட்டம் நல்கிக் கௌரவித்தது.

சென்னை திராவிட கிரந்த பரிபாலனசபை, நியாயபரிபாலனசபை என்பவற்றில் அங்கத்தவராயும் சென்னைச் சர்வகலாசாலைத் தமிழ்ப் பரீட்சகராயும், இருந்து பணிபுரிந்தார். தமிழ்ச்சரித்திரத்தில் 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி நாவலர் அவர்கள் சரித்திரம் பிற்பகுதி சி.வை. தாமோதரம்பிள்ளை சரித்திரம் என்று பண்டிதமணி குறிப்பிடுவர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பல்வேறு வகையிலும் பேரறிஞராகத் திகழ்ந்த சி.வை. தாமோதரம்பிள்ளை இருபதாம் நூற்றாண் டின் விடியலிலே 1901 ஆம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதி இவ்வுலக வாழ்வை நீத்தார்.

### பணிகள்

**பதிப்புப்பணி**

சி.வை. தாவின் தமிழ்ப்பணிகள் பன்முகப்பட்டவை. அவருடைய பணிகளுள் பதிப்புப்பணியே முதன்மையானதாகக் கருதப்படுகின்றது. பிள்ளையவர்கள் பதிப்பாசிரியராயும், நூலாசிரியராகவும், போதனாசிரியராகவும், உரைநடையாசிரிய ராகவும், தமிழ் இலக்கிய வரலாற்று ஆய்வாளராயும், பாடசாலை நிறுவுனரா கவும் பணியாற்றியுள்ளார்கள். பிள்ளை யவர்கள் வாழ்ந்த காலத்தில் உண்மையான தமிழ்த்தொண்டாக அத்தியாவசியமான தாகக் கருதப்பட்டது பதிப்புப்பணியே யென லாம். ஆறுமுகநாவலர் சி.வை. தாமோதரம் பிள்ளை உ.வே. சாமிநாதையர் போன்ற தமிழறிஞர்கள் பதிப்புப்பணியில் ஈடுபட்டிரா விட்டால் இன்றைய தலைமுறை இணை யிலாத் தமிழ்ச் செல்வங்கள் பலவற்றை இழந்திருக்கும். ஆங்கில மோகமும் அதனாலெழுந்த மேலைத்தேய வாழ்க்கை முறைகளும் பழந்தமிழ் நூல்களைப் படிக்கவும் பாதுகாக்கவும் வழிசெய்வதில் மிக உயர்ந்த இலக்கிய இலக்கணங்கள் தேடுவாரற்று ஓலைச்சுவடியாகவே உயிரை

மாய்த்துக் கொண்டிருந்தன. தீயாலும், நீராலும், கறையானாலும் சுவடிகள் அழிந் தொழியும் நிலையைக்கண்டு தாமோதரம் பிள்ளை கண்ணீர் வடித்தார். அவர் கண்ணீர் அவர் பதிப்பித்த நூல்களின் பதிப்புரையிலே பேராறாக ஓடுவதைக் காணலாம்.

"மெல்லத் தமிழ் இனிச்சாகும்" என்ற நிலையே அக்காலத்தில் நிலவியது. சமய, சமூக, பொருளாதாரக் காரணிகள், இந் நிலைக்குப் பக்கபலமாகவே காணப்பட்டன. கோப்பாய் சாதனாபாடசாலை ஆசிரியரான தாமோதரம்பிள்ளை நீதி நெறி விளக்க உரைப் பதிவோடு பதிப்புத்துறையில் காலடி எடுத்து வைக்கிறார். இவ்வாறு அவர் அன்று வைத்த முதலடியைத் தொடர்ந்து இறக்கும் வரை தனது பாதச் சுவடுகளைப் பதிப்புத் துறையில் மிக ஆழமாகவே பதித்துச் சென்றுள்ளார்.

"உயர்ந்த நீதிபதி உத்தியோகத்தில் அமர்ந்து பரோபகார முயற்சிகளில் பங்கு பற்றி குடும்பப் பொறுப்புக்களைச் சுமந்து நோய்வாய்ப்பட்டு பல கஷ்டங்கள் நேர்ந்த போதும் பிள்ளை காரியத்திற் கண்ணாகவே இருந்தார் என்று பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளையவர்கள் கூறுவது மிகவும் பொருத்தமானதே.

ஆறுமுகநாவலரின் பதிப்புப் பணிக்குத் தோள்கொடுத்துத் தோன்றாத் துணையாக இருந்த சி.வை.தா. அவர்கள். நாவலரின் ஆசியோடும், வழிகாட்டலோடும் 1868ம் ஆண்டு தொல்காப்பியம் சேனா வரையம் உரைப்பதிப்பினை வெளியிட்டார். இப்பதிப்பின் பரிசோதனை வேலைகளை நாவலரவர்களே செய்துதவினர் என்றும் அறியமுடிகின்றது.

தமிழ்நூற் பதிப்புத்துறையில் ஆறுமுகநாவலருக்குத் தனியானதும் சிறப்பானதுமோர் இடமுண்டு. நாவலர் பதிப்புச் சுத்தப்பதிப்பு, என்ற தொடர் நாவலர் பதிப்பாகவே குறுகிச் சுத்தப்பதிப்பு என்ற தொடர் சுத்தப் பதிப்பைக் குறித்து நின்றதை அறிஞர்கள் அறிவர். ஆனால் பதிப்புத்துறை யில் ஈடுபட்ட பிள்ளையவர்கள், பதிப்புத் துறையின் நுட்பங்களை முறையியலை நன்குணர்ந்து செயற்பட்டமையை அவரது பதிப்புக்கள் நிலை நிறுத்துகின்றன. பிள்ளையவர்களின் பதிப்பு முயற்சியை நூல்கள் வெளி வந்த கால அடைவில் வைத்து நோக்கும் பொழுது அவரின் பதிப்புத்துறையறிவுவளர்ச்சியை இலகுவிற் கண்டு கொள்ளலாம். பழந்தமிழ் இலக்கிய வெளியீடுகள் பற்றித் திரு.வி. க. குறிப்பிடும் போது இவ்வாறு சுட்டிச் செல்லுவர்.

"பழந்தமிழ் இலக்கிய வெளியீட்டுக் குக் கால் கொண்டவர் ஆறுமுகநாவலர் சுவர் எழுப்பியவர் தாமோதரம்பிள்ளை கூரை வேய்ந்து நிலையம் கோலியவர் உ. வே. சாமிநாதையர் பழந்தமிழிலக்கியப் பதிப்பு முயற்சியில் எஸ். வையாபுரிப்பிள்ளை போன்ற "பதிப்புச் சூறாவளிகள்" ஈடுபடும் பொழுது கால்கொண்டவரும் சுவரும் அசையாதிருக்கக் கூரை ஆட்டம் கொடுத் ததை நவீன மூலபாடத் திறனாய்வாளர் அறிவர்.

சி.வை.தாமோதரம்பிள்ளையின் பதிப்புக்கள் ஆராய்ச்சிக்குட்பட்டவையாய் மிகச் சிறந்த நீண்ட பதிப்புரைகளுடன் வெளி வந்தன. சி.வை. தாவின் பதிப்பரைகளைத் தொகுத்து யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ் நூற்பதிப்பு விற்பனைக் கழகம் தாமோதரம் என்ற பெயரில் வெளியிட்டிருக்கின்றது. இப்பதிப்புரைகள் தமிழ் இலக்கிய வரலாறா கவும் பதிப்பு முயற்சிகள் தாற்பரியத்தைப் புலப்படுத்துவனவாகவும் மூலபாடத் திற னாய்வுப் பொக்கிஷமாகவும் திகழுகின்றது எனலாம். இப்பதிப்புரைகள் கற்றோர்

நெஞ்சத்தை நெகிழவைப்பனவாகவும் உழைப்பின் சின்னமாகவும் திகழுகின்றன.

சி.வை. தாமோதரம்பிள்ளை மூல ஏடுகளில் இருந்த அமைப்பு முறையைத் தேவையான இடங்களில் மாற்றினார். அரியபெரிய முன்னுரைகள் இயற்றினார். பதிப்பிப்பதில் உள்ள இடர்பாடுகளையும் ஏடுகளையும் நிலையையும் விரிவாகக் குறிப்பிட்டார். கலித் தொகை சூளாமணி, தொல்காப்பியம், ஆகிய நூல்களின் முன்னுரையில் பல அரிய செய்திகளைக் காணலாம். என்று மு.வை. அரவிந்தன் குறிப்பிடுவார்.

சி.வை. தா அவர்களின் தூய்மையான பதிப்புப்பணிக்குக் கிடைத்த வெற்றிகள் மிகப்பல காழ்ப்புணர்வாலும் கையாலாகாத்தனத்தாலும் பிள்ளையவர்களைத் தூஷித்தவர்களும் கண்டித்தவர்களும் இக் காலப்பகுதியில் வாழ்ந்தனர் என்பதையும் நாம் ஒப்புக் கொள்ளுதல் வேண்டும். பிள்ளையவர்கள் தொல்காப்பியம் சேனாவரையத்தைத் தொடர்ந்து 1881ம் ஆண்டு வீரசோழியத்தையும், 1883ம் ஆண்டு இறையனார் களவியல் உரையையும் தணிகைப் புராணத்தையும், 1885ம் ஆண்டு தொல்காப்பியம், பொருளதிகாரத்தையும் 1887ம் ஆண்டு கலித்தொகையையும் 1889ம் ஆண்டு இலக்கண விளக்கத்தையும் சூளாமணியையும் 1892ம் ஆண்டு தொல்காப்பியம் சொல்லதிகாரம் நச்சினார்க்கினியத்தையும் பதிப்பித்து வெளியிட்டார்கள்.

“............... உண்மையான அன்போடு உண்மையான தமிழ்த் தொண்டு புரிதலே பிள்ளையவர்களின் வாழ்க்கையின் பெரு நோக்கமாயிருந்தது.

இவ்வகையான உண்மைத் தொண்டு பயனற்றுப் போகுமா? பிள்ளையவர்கள் வெற்றியெய்தியமை தமிழ்நாடு நன்கறிந்ததே தொல்காப்பியம் கலித்தொகை சூளாமணியென்பன அவர்கள் தந்த தனிப் பெருஞ் செல்வங்களுட் சிறந்தன. தமிழன்னையின் அருங்கலங்களாகத் திகழும் இந்நூல்கள் உள்ளவரை இவர்கள் புகழும் நின்று நிலவுவதாகும். என்று ஆராய்ச்சிப் பேரறிஞரான எஸ்.வையாபுரிப்பிள்ளை குறிப்பிடுவர்.

சி.வை. தாவின் பதிப்புக்கள் வெளிவந்த காலத்தில் அவரின் பதிப்புரைகள் மிகவும் முக்கியம் வாய்ந்தவையாகக் கருதப்பட்டன. இருபதாம் நூற்றாண்டின் மாபெரும் தமிழ்க் கவிஞனான பாரதியாரே பிள்ளையவர்களின் பதிப்புரையை நன்கு மதித்துப் படித்துள்ளார். ஏறத்தாழக் தனது சுய சரிதையையே சின்னச்சங்கரன் கதை என்று புனைகதையாகப் படைத்தவர். அக்கதையிலே ஓரிடத்தில் பாத்திர வாயிலாகப் பின்வருமாறு கூறுவர்.

“சென்னப்பட்டணத்தில் சி.வை. தாமோதரம்பிள்ளையென்று ஒரு மகாவித்துவான் இருந்தாரே கேள்விப்பட்டதுண்டா? அவர் சூளாமணி என்னும் காவியத்தை அச்சிட்ட போது அதற்கெழுதிய முகவுரையை யாரைக்கொண்டேனும் படிக்கச் சொல்லியேனும் கேட்டதுண்டா?

மகாகவி பாரதியாரே சி.வை. தாமோதரம்பிள்ளையையும் இவரது பதிப்புப்பணியையும் பாராட்டியுள்ளமையை ஊன்றிக் கவனிக்கத்தக்கது. தமிழ்நாட்டின் சகல மட்டங்களிலல்லாவிடினும் கற்றோர் மத்தியில் பிள்ளையவர்களுக்குத் தனித்தவமான மதிப்பு இருந்து வந்ததை உய்த்தறிய வேண்டியதில்லை.

பதிப்புப்பணியில் ஈடுபட்ட பிள்ளையவர்கள் பலவிதமான கஷ்டங்களுக்கும் ஆளானார்கள். ஏட்டுப்பிரதிகள் கிடைப்பது

கடினமாக இருந்தது. பிரதிகளை வைத் திருந்த சிலரும் மனமுவந்து கொடுக்காதி ருந்தனர். அரிதின் முயன்று ஏடுகளைப் பெற்ற போதும் அவற்றைப் பரிசோதிப்பது மிகவும் கடினமாக இருந்தது. "எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான்" என்பதற்கிணங்க ஏடெழுதுவோரின் கட்புலனும் கவனக்குறை வாலும் அரைகுறை அறிவினாலும் மதக் கொள்கையாலும் பாடபேதங்கள் மலிந்து கிடந்தன. திறமான புலமையும் ஆய்வு நோக்கும் நடுவுநிலைமையும் இருந்தா லன்றி ஏடுகளைப் பரிசோதிப்பது இயலாத காரியம். திறமான புலமையாளர்களின் உதவியின்றித் தாமே தனித்துநின்று செயற் படவேண்டியதாயிற்று. தமது பதிப்புரைகளிற் பல இடங்களில் இத்துயர நிலையைப் பிள்ளையவர்கள் வாய்விட்டுக் கூறியிருக்கி றார்கள்"

அக்கால நிலையிலே நூல்களைப் பதிப்பிடுதலின் செலவினங்களிலும் பிள்ளை யவர்கள் இடருற்றார்கள். சிற்சில பெரியார் கள் இவ்விஷயத்தில் உதவியது உண்மையே யெனினும் பிள்ளையவர்கள் தம் கைப் பொருளேயே அதிகம் செலவிட்டனர்.

"அரசாங்க சேவையிலிருந்து 1882 ஆம் ஆண்டிலே ஓய்வு பெற்ற பின்பு தமது ஐம்பத்து மூன்றாவது வயதிலே குடந்தைக்கு வக்கீலாகத் தொழில் புரியச் சென்றமைக்கு பிள்ளையவர்களின் ஊதியத்தின் சேமிப்புப் போதாமையும் ஒரு காரணமாகலாம் என்று கலாநிதி பொ. பூலோகசிங்கம் குறிப்பிடுவது ஏற்புடையதே. கலாநிதி அவர்களின் கருத்திற்கு வலுவூட்டுவதாகப் பிள்ளைய வர்களின் பின்வரும் கூற்று அமைகின்றது.

"தேடுவாரும் பரிபாலிப்பாருமின்றி ஒன்றொன்றாய் அழிந்துபோகும் அருமை யான பழைய தமிழ் நூல்களைப் பாதுகாத்தற் பொருட்டு அடியேன் ஏட்டுப் பிரதிகள் தேடிப் பரிசோதித்து அச்சிடுவதற்கு புத்தகங்கள் விலைபோகாமல் நேரிடும். நஷ்டம் எவ்வெம் முயற்சிக்குத் துணைக்காரணம் பணம், அதன் குறைவினால் எனது முயற்சி மிகத் தாமதப்பட்டு நடைபெறுகின்றது. லோகோப காரமாய் யான்கையிட்ட இத் தொழிலைக் தற்காலஞ் சர்வகலாசோதனைச் சங்கத்தில் எனக்கு வரும் பரீஷாநிவே தனம் ஒன்றைக் கொண்டே நடத்தி வருகின்றேன். அது பிரதிகள்தேடி அப்பப்போ யான் செல்லும் பிரயாணங்களுக்கும் பரிசோதனைச் செலவிற்குமே முன்னே பின்னேயென்று கட்டி வருகின்றது.

இவ்வாறான பணமுடையின் மத்தி யிலும் பிள்ளையவர்கள் பதிப்பு முயற்சியி லீடுபட்டமை அவரது உண்மையான தமிழ்ப் பணியையே காட்டுகின்றது எனலாம். பல்வேறுவகையான சோதனைகளின் மத்தியிலும் பிள்ளையவர்கள் கருமமே கண்ணாயிருந்தமை பாராட்டத்தக்கதே. பதிப்புப் பணியிலும் அதனோ டொட்டிய மூல பாடத்திறனாய்விலும் பிள்ளையவர்களின் பங்களிப்பைப் பேராசிரியர் க.கைலாசபதி மிகச்சிறப்பாகச் சுட்டிக் காட்டியுள்ளனர்.

"தமிழிலே மூலபாடத் திறனாய்வு தவழும் பருவத்திலிருந்த வேளையில் தாமோதரம்பிள்ளை அந்நூதனமானதும் துணிகரமானதுமான முயற்சியை மேற் கொண்டது. அவரது ஆராய்ச்சி முதிர்ச்சியை யும் ஆய்வறிவுப் போக்கையும் துல்லிய மாக்குகிறது."

இவ்வாறு பதிப்புத்துறையிலீடு பட்டுப் பழந்தமிழ் நூல்களுக்கு அழியா வாழ் வளித்த பிள்ளையவர்கள் நவீன ஆய்வுத் துறைக்கும் வழிகாட்டியாக அமைந்தமை அவரின் நுண்மாண் நுழைபுலத்தையே புலப்படுத்துகின்றது.

**பிறபணிகள்**

சி.வை. தா அவர்கள் பதிப்பாசிரிய ராக மாத்திரமன்றி நூலாசிரியராகவும் திகழ்ந்தார். கட்டளைக் கலித்துறை வசன சூளாமணி(1898) சைவமகத்துவம், ஆறாம், ஏழாம், வாசகம், ஆதியாகம கீர்த்தனை, நட்சத்திரமாலை முதலிய நூல்களைத்தாமே எழுதி வெளியிட்டார். சைவமகத்துவம் நாவலரின் பாலபாடத்தை அடியொற்றி எழுதப்பட்டது என்பர். இந்நூல்கள் உரை நடையாலும் செய்யுளாலும் ஆனவை.

சி.வை தாவிடம் செய்யுளியற்றுந் திறன் மிக்கிருந்தது. இவர் பதிப்பித்த நூல் களில் கடவுள் வாழ்த்தாகவும் குருவணக்க மாகவும் பல செய்யுட்களை யாத்திருக்கின் றனர். இவரின் அருமை நண்பரும் நரசிங்க புர வீராசாமி முதலியாருக்கு நல்லறிவுச் சுடர் கொழுத்துவித்தவருமான ஆறுமுக நாவலர் இறந்த போது பிள்ளையவர்கள் யாத்த கவிதையில் கவித்துவத்தைக் காணலாம்.

**"நல்லை நகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேற்**
**சொல்லுதமி ழெங்கே கருதியெங்கே – எல்லவரும்**
**ஏத்துபுரா ணாகமங்க ளெங்கேப்ர சங்கமெங்கே**
**ஆத்தனறி வெங்கே யறை"**

நாவலரின் சமய சமூக தமிழ்ப்பணியைப் பிள்ளையவர்கள் சுட்டி இரங்கிப் பாடுவார்.

கலித்தொகைப்பதிப்பு முயற்சிகளில் பிள்ளையவர்கள் ஈடுபட்டிருந்த போது திருவாவடுதுறைச் சற்குருநாத சுவாமிகள் செய்த கைமாறு கருதா உதவியைக் கலித் தொகைப் பதிப்புரையிலே உருக்கமாகக் குறிப்பிட்டுள்ளார். பிள்ளையவர்களின் உள்ளத்தை நன்றியறிதலைப் பின்வரும் செய்யுள் விளக்கும்.

**"விண்ணாடு கைலைவழித் தேசிகர் வெவ்வினைக்கு**
**நெற்றிக்**
**கண்ணா னசுப்ர மண்யசு வாமிகள் கான்மலரை**
**நண்ணாத் தலையி னசைதீரத் தாங்கநற்**
**கோகழிவாய்**
**மண்ணாய்ப் பிறந்தில னேஜய கோஇந்த வையகத்தே.**

**"சிரமாலை யாகவுஞ் சின்முடி யாகவுஞ் செய்யகண்ட**
**சரமாலை யாகவும் யானடி யேனினை யேன்றருவாய்**
**பரமார் கயிலைப் பரம்பரைக் கோகழிச் சுப்பிரமண்யா**
**மரமாய்நின் பாத குறடாய் வருதற் கொருவரமே"**

எனுஞ் செய்யுள்" மீனாய்ப்பிறக்கும் விதி யுடையேன் ஆகேனோ என்னும் பக்திப் பாசுரத்தை நினைவூட்டுகின்றது.

சி.வை. தாமோதரம்பிள்ளை சிறந்த இலக்கிய வரலாற்றாசிரியராகவும் திகழ்ந் தார். தமிழ் இலக்கிய வரலாற்று ஆய்வு கூர்மைப்படுத்தப்படாத அக்கால கட்டத்தில் அவர் தனது பதிப்புரைகளிலே காலப் பகுப் பாய்வு செய்ய முற்பட்டார். கலித்தொகைப் பதிப்புரையிலே இனிக் கால நிர்ணயத்தை யாவது கொஞ்சமேனும் கவனிக்கிறார் களா? என்று அக்காலத் தமிழாய்வாளர் மீது குறைபட்டுக் கொள்கின்றார். நிரம்பிய தமிழ்ப்புலமையும் அதற்குச் சமதையான ஆங்கில அறிவும் உலக இலக்கியங்களில் உள்ளபரிச்சயமும் பிள்ளையவர்களின் இலக்கியப்பகுப்பாய்வு முறைக்குப் பேருதவி யாக இருந்தன. எனலாம். 1881 ஆம் ஆண்டு தாம் பதிப்பித்த வீரசோழியப் பதிப்புரையில் **"தமிழ்ப்பாஷையின் காலவருத்தமானம் அபேதகாலம் அட்சரகாலம் இலக்கணகாலம், சமுதாயகாலம்,** அநாதாரகாலம் சமணகாலம் இதிகாசகாலம் ஆதீன காலம் பகுப்பாய்வு செய்கின்றனர். தமிழ் இலக்கிய வரலாறு அரசியலடிப் படையிலும் சமயஞ் சார்ந்த அடிப்படையி லும் இலக்கியப் பொருள் அடிப்படையிலும் பகுத்து ஆராயப்பட்டுள்ளது. பிள்ளையவர் களின் ஆய்வு முறை இன்றைய ஆய்வறிவு வளர்ச்சி நிலையில் பொருத்தமாகத்

தோன்றாவிடினும் அக்கால கட்டத்தில் புதுமையான முறையாகக் கருதப்பட்டதில் ஆச்சரியமில்லை. தமிழ் இலக்கிய வரலாற் றைச் சமூகவியல் அடிப்படையில் இன்று ஆராய்வு செய்யும் அறிஞர்களுக்கு முன் னோடியாகப் பிள்ளையவர்கள் அமைந்தார் கள் எனலாம் தமிழிலக்கிய சரிதத்தைக் கால முறைப்படி பாகுபாடு செய்ய முயன்றவர் களுள் சி. வை. தாமோதரம்பிள்ளைக்கு முத லிடம் உண்டு என்று எஸ். வையாபுரிப் பிள்ளை குறிப்பிட்டிருப்பது இவ்விடத்திலே மனங்கொள்ளத்தக்கது.

"........... பத்தொன்பதாம் நூற்றாண்டிலே தமிழாராய்ச்சியிலே சிற்சில புதுத்திருப்பங்கள் ஏற்படக் காரண மாயிருந்தவர்களில் ஒருவரும் தலையாய தமிழ்த் தொண்டர்களில் ஒருவரும் ஆய்வறி வாளருமான தாமோதரம் பிள்ளை தாம் பதிப்பித்த அந்நூலின் (வீரசோழியம்) பதிப்பு ரையிலே நூலாசிரியர் புத்தமித்திரனாரைப் பற்றிச் சில செய்திகள் கூறுமுகமாகத் தமிழி லக்கிய வரலாற்றைப் பருந்துப் பார்வையாக விவரித்தார்........."

தாமோதரம்பிள்ளையின் காலப் பாகுபாடு இன்று பார்க்கும் போது பல குறைபாடுடையதாய்த் தோன்றினும் வரலாற்றுணர்வும், காலநிர்ணய அறிவும் அவருக்கிருந்தன என்பதை எவரும் மறுக்க வியலாது. அன்றைய நிலையில் அது ஆராய்ச்சி நெறியின்பாற்பட்டதாகவே இருந்தது... தனது கல்வியையும் சுய சிந்தனையையும் ஆராய்ச்சியையும் ஆதார மாகக் கொண்டு மரபுகூறும் செய்திகளையும் மறுத்துரைக்க வேண்டுமிடங்களில் தயங் காது உரைத்தார். தாமோதரம்பிள்ளை சூளாமணிப் பதிப்புரையில் கூறியுள்ள சில கருத்துக்கள் அவரது சுதந்திரப் போக்கை யும் அவசியமேற்படின் மரபையும் நிரா கரித்து உண்மையை நாடும் மனோபாவத் தையும் ஐயத்துக்கிடமின்றிக் காட்டுகின்றன என்று பேராசிரியர் க. கைலாசபதி கூறுகின்ற னர். பேராசிரியர் கைலாசபதியின் நுண் ணியபார்வையில் சி. வை. தா. சிறந்த தமிழி லக்கிய வரலாற்றாராய்ச்சிக்கு வித்திட்டவ ராகத் தோற்றமளிக்கிறார். பேராசிரியர் க. கைலாசபதிக்கு முன் சி. வை.தாவை அணுகியவர்கள் இவ்வித அணுகுமுறை யைக் கைக்கொண்டதாகத் தெரியவில்லை.

தமிழிலக்கிய வரலாற்று ஆய்வாள ராகத் திகழும் சி.வை. தா சிறந்த உரை நடையாசிரியராகவும் காணப்படுகின்றனர். வன்னநடை, வழங்குநடை, வசனநடை, எனப் பயிற்றிவைத்த ஆசானை நண்பனாக வும் வழிகாட்டியாகவும், கொண்ட பிள்ளைய வர்கள் சிறந்த உரைநடையாசிரியராகத் திகழ்ந்ததில் வியப்பில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலே தமிழ் வசன நடை தயங்கித் தயங்கித்தான் வெளிவந்து கொண்டிருந்தது. உணர்ச்சிகளைக் கவிதை யிலேயே கண்டுவந்தவர்களுக்கு உரைநடை உணர்ச்சிகளை வெளிப்படுத்தக் கூடிய சாதனமாகத் தோன்றவில்லை. நாவலர் பொருளுக்கேற்ற விதத்தில் மொழி நடையைக் கையாண்டார். கற்றோருக்கு மாத்திரமன்றி ஓரிரண்டு வருஷத்து நூற் பழக்கமுள்ளவர்களுக்கும் விளங்கக்கூடிய வசனநடையை நாவலர் எழுதினார்.

சி.வை. தாவின் சிறப்பான உரை நடைக்கு அவரெழுதிய பதிப்புரைகளே சான்று. தமிழ் இலக்கிய வரலாற்றிலே உரை நடை பருவமெய்தியது பத்தொன்பதாம் நூற் றாண்டிலாகும் என்பார் பேராசிரியர் கைலாச பதி. இப்பருவத்தையறிந்து பயன்படுத்தி வெற்றிகண்டோருள் சி.வை. தாவும் ஒருவர்.

**"ஏடு எடுக்கும் போது ஓரஞ் சொரிகிறது. கட்டு அவிழ்க்கும் போது இதழ் முரிகின்றது. ஒற்றை புரட்டும் போது துண்டு துண்டாய் பறக்கிறது. இனி எழுத்தக்களோவென்றால் வாலுந்தலையுமன்றி**

நாலுபுறம் பாணக் கலப்பை மறுத்து மறுத்து உழுது கிடக்கின்றது. .......எத்தனையோ திவ்வியமதுர கிரந்தங்கள் காலாந்தரத்தில் ஒன்றன் பின் ஒன்றாய் அழிகின்றன. சீமான் களே இவ்வாறு இறந்தொழியும் நூல்களில் உங்களுக்குச் சற்றாவது கிருபை பிறக்கவில் லையா? ஆச்சரியம்! ஆச்சரியம்! அயலான் அழியக்காண்கினும் மனம் தளம்புகிறதோ! தமிழ்மாது நும் தாயல்லவா? இவள் அழிய நமக்கென்னவென்று வாளா இருக்கின்றீர் களா? தேசாபிமானம், பாஷாபிமானம் மதாபிமானமென்று இவை இல்லாதார் பெருமையும் பெருமையா? இதனைத்தயை கூர்ந்து சிந்திப்பீர்களாக.

என்று 1887-ல் கலித்தொகையின் பதிப்புரையிலே சி.வை.தா கழிவிரக்கப் பட்டுக் கண்ணீர் வடிக்கிறார். அவரது உள்ளத்து நாதத்தை ஆத்மாவின் கீதத்தை இவ்வுரைநடைப்பகுதியில் காணலாம். மேற்காட்டிய மேற்கோளில் அவர் தெரிந் தெடுத்து அடுக்கிச் செல்லும் சொற்கள் உணர்வு பூர்வமானவையாக அமைந்துள்ளன.

இவ்வாறு சிறந்த உரைநடையாசிரி யராகத் திகழ்ந்த சி.வை.தா தனது பன்முகப் பட்ட பணிகளுள் பாடசாலை நிறுவுவதையும் நோக்கமாகக் கொண்டிருந்தார். ஈழத்தின் மரபுரீதியிலான கல்விமரபைக் கட்டிக் காக்கவும் ஐரோப்பியருக்குப் போட்டியாக வும் நாவலர் பாடசாலை நிறுவும் முயற்சி யினை மேற்கொண்டனர். நாவலரைப் பின் பற்றிய பிள்ளையவர்கள் தனது தாயாரின் கிராமமாகிய ஏழாலையில் சைவப்பிரகாச வித்தியாசாலை எனும் பெயரிற் பாடசாலை யொன்று நிறுவினார். அப்பாடசாலைக்கு சுன்னாகம் முருகேச பண்டிதரைத் தலைமை யாசிரியராகவும் சுன்னாகம் அ. குமாரசாமிப் புலவரை உதவியாசிரியராகவும் நியமித் தார். முருகேச பண்டிதர் முதல் வருட முடிவில் வித்தியாசாலையை விட்டு விலகக் குமாரசாமிப்புலவரே தலைமையாசிரியராக நியமிக்கப்பட்டார். இவருக்கு உதவியாகச் சுந்தரம் பிள்ளையென்பவர் உதவியாசிரிய ராக நியமிக்கப்பட்டார். சகல பொறுப்புக்க ளையும் ஏற்றுக் குமாரசாமிப்புலவரவர்கள் வித்தியாசாலையைத் திறம்பட நடத்தி வந்தார்கள்.

**"இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல்**
**இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்**
**அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்**
**ஆலயம் பதினாயிரம் நாட்டல்**
**பின்ன ருள்ள தருமங்கள் யாவும்**
**பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்**
**அன்ன யாவினும் புண்ணியங் கோடி**
**ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்"**

என்று மகாகவி பாரதியார் பாடினார். இப் பாடலின் பண்பினையும், பயனையும், பிள்ளையவர்களிடத்திலே காணலாம். பல்வேறுவகையான பணக்கஷ்டத்திற்கு மத்தியிலும் பிள்ளையவர்கள் வித்தியா சாலையை நிறுவி நடத்தியமை அவரின் தொண்டு மனப்பான்மையையே வெளிப் படுத்தகிறது.

ஏழாலை சைவப்பிரகாச வித்தியா சாலையில் ஆண்டு தோறும் மாணவர்கள் பரீட்சிக்கப்பட்டு பரீட்சை அறிக்கை சி.வை. தாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அக்காலப் பத்திரிகைகளிலும் இவ்வறிக்கைகள் வெளி யாயின. இப்பாடசாலை பரீட்சகர்களாக ஆறுமுகநாவலர், கொக்குவில் ச. சபாரத்தின முதலியார் வித்துவ சிரோமணி பொன்னம் பலபிள்ளை முதலியோர் பணியாற்றினர்.

ஏழாலை சைவப்பிரகாச வித்தியா சாலைத் தலைமையாசிரியராகத் கடமை யாற்றிய சுன்னாகம் அ. குமாரசாமிப்புலவர் ஈழத்து இலக்கிய வரலாற்றின் மைல் கற்களில் ஒருவர் புலவரும் பிள்ளையவர் களும் புலமையாலிணைந்த நண்பினராய் வாழ்ந்தனர். பிள்ளையவர்கள் அவ்வப்

போது புலவருக்குக் கடிதங்கள் எழுதியுள் ளார். அக்கடிதங்கள் அவர்கள் இருவருக்கு மிருந்த கேண்மையும் பிள்ளையவர்களின் பெருமனத்தினையும், தியாகத்தினையும் காட்டுவனவாக அமைந்துள்ளன.

தங்கள் அன்பான கடிதமும் சிவப்பிரகாச பண்டிதர் திருமுகமும் பெற்றுச் சகலமும் அறியலானேன். ........எனது பாரியாரின் தேக சௌக்கியத்தை முன்னிட்டு அந்த மாதம் நெல்லூருக்குப் போக வேண்டி யிருத்தலால் மற்ற டிசெம்பர் மாதந்தான் யாழ்ப்பாணம் வருவேன். இத்துடன் ரூபா அறுபது அனுப்புகிறேன். ஐம்பது தை, மாசி, பங்குனி, சித்திரை, நான்கு மாாதங்களுக்கும் வித்தியாசாலை நிவேதனமாக எடுத்துக் கொள்ளவும் வைகாசி மாதம், முதல் மாதம் மாதம் ஒரு மாதம், பத்துரூபாவும், மற்ற மாதம் பதினைந்து ரூபாஆகவும் அனுப்பிக் கொண்டு வருவேன். சென்ற மார்கழி வரையும் தங்களுக்கு வரவேண்டிய தொகை யின் விபரங்குறித்து ஒரு கடிதம் அனுப்புக. அப்பணத்தையும் அவ்வப்போது சாவகாசப் படி சேர்ப்பித்து விடுகிறேன்.

இக்கடிதம் குமாரசுவாமிப்புலவர் வரலாறு என்னும் நூலிலே இடம்பெற்றுள் ளது. பிள்ளையவர்களின் நாடிநரம்புகளில் தூயதமிழ்த் தொண்டே புடைத்தோடியது எனில் மிகையாகாது. ஏழாலைச் சைவப் பிரகாச வித்தியாசாலையிற் கற்ற மாணவர் கள் பலர் ஈழத்திலும் தமிழ் நாட்டிலும் பெரும்புகழ் பெற்றிருந்தனர். தாமோதரம் பிள்ளை பதிப்பித்த தொல்காப்பிய உரைப் பதிப்புக்கு உரைவிளக்கத் தந்த பிரமஸ்ரீ சி. கணேசையர், பிள்ளையவர்களின் வித்தியாசாலையிற் குமாரசாமிப் புலவரிடத் துப் பாடங்கேட்டவரே தெல்லிப்பளை மகா வித்துவான் சிவானந்தையரும் ஏழாலை வித்தியாசாலை மாணவரே என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் இலக்கிய வரலாற்றில் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைத் தனது சரித்திர மாகக் கொண்ட சி.வை. தாமோதரம் பிள்ளை தனது கைவண்ணத்தைப் பலவழி களிற் புலப்படுத்தியுள்ளார். பிள்ளையவர் களின் வாழ்க்கை நிகழ்வுகள் பற்றி அறி ஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் நிலவு வதையும் நாம் அறிவோம். எவ்வித கருத்து வேறுபாடு உடையவர்களும் சி.வை. தாவின் சிறப்பான பணிக்கு மாசு கற்பிக்க முடியாது.

சி.வை. தாமோதரம்பிள்ளையின் தந்தையாரின் ஊர் சிறுப்பிட்டி தாயாரின் ஊர் ஏழாலை உயர்ந்த உத்தியோகத்தரான தாமோதரம்பிள்ளை இந்த இரு ஊர்களிலும் ஓர் ஊரிலாவது ஒரு சிறு குடிசையானது அமைத்ததில்லை. ஒரு விரலையாவது ஊன்றுதற்குச் சொந்தமாக ஒரு நிலத்தை அவர் வைத்திருக்கவில்லை. பெருகிய குடும்பத்தவராயிருந்துஞ் சந்ததியாருக்குச் சம்பாதித்து வைக்கவில்லை. சி.வை.தா. அவர்களது சரித்திரம் தமிழ்ச் சரித்திர மாகவே முடிந்திருக்கிறது. என்பர் பண்டித மணி சி. கணபதிப்பிள்ளை.

பிள்ளையவர்கள் தனக்கென்றோ தன் குடும்பத்தினர்க்கென்றோ எதையும் தேடி வைக்காது தூய்மையான உள்ளார்ந்த தமிழ்த் தொண்டினை மேற்கொண்டமை யால் தமிழ் உள்ளவரை அவர் வாழுவார் என்பதிற் சந்தேகமில்லை.

இந்நூலாக்கத்திற்கு பயன்பட்ட உசாத்துணை நூல்கள்.

1. இலக்கியவழி – பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை
2. தாமோதரம் – சி.வை தாமோதரம் பிள்ளை எழுதிய பதிப்புரைகளின் தொகுப்பு
3. தமிழ் இலக்கியத்தில் ஈழத்தறிஞரின் பெருமுயற்சிகள் கலாநிதி பொ. பூலோக சிங்கம்

4. நவீன இலக்கியத்தின் அடிப்படைகள் – கலாநிதி க. கைலாசபதி
5. தமிழியங் கட்டுரைகள் – தொகுப்பாசிரியர் எஸ். சிவலிங்கராஜா, மயிலங்கூடலூர் வி. நடராஜன்
6. நாவலர் நூற்றாண்டு மலர் – 1979 – பதிப்பாசிரியர் க. கைலாசபதி
7. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் பிரபந்தத்திரட்டு யாழ்ப்பாணம் நல்லூர் த. கைலாசபிள்ளையாற் திரட்டப்பட்டது.
8. குமாரசாமிப்புலவர் வரலாறு – கு. முத்துக்குமாரசுவாமிப் பிள்ளை
9. சி.வை.தா. ஓர் ஆய்வு – மனோன்மணி சண்முகதாஸ் (முதுமாணிப் பட்ட ஆய்வுக்கட்டுரை)
10. தமிழ்ச் சுடர் மணிகள் – எஸ் வையாபுரிப்பிள்ளை.
11. உரையாசிரியர்கள் – மு. வை. அரவிந்தன்.
12. C.W. THAMOTHARMPILLAI By V. Muttucumarasamy.

# பொதுப்பணிக்கு தம்மை அர்ப்பணித்த பெரியார். விசுவநாதர் தர்மலிங்கம் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)

திரு.த.குமாரசாமி
இணுவில் தெற்கு,
இணுவில்.

இலங்கையில் பெரும் புகழுடன் விளங்கிய தமிழ் அரசின் தலைநகராகத் திகழ்ந்த பெருமைக்குரியது கந்தரோடை கந்தரோடை இராச்சியம், அதன் சிறப்புக்கள் அங்கு வாழ்ந்த மக்களின் வியாபகம், என்பவற்றை மகாவம்சம் உட்பட பல புரதான வரலாற்று நூல்கள் விரிவாக கூறியவையில் இருந்து நாம் அறியக் கிடக்கிறது. இன்று வரை கந்தரோடை நாகரீகமும் கட்டிட அமைப்புக்களும் புதைபொருள் ஆராச்சியால் வெளிக்கொண்டு வரப்பட்டுக் கொண்டு இருக்கிறது. காலத்துக்குக் காலம் வள்ளல்கள் பலர் வாழ்ந்த காரணத்தினால் வந்தாரை வாழவைக்கும் கந்தரோடை" என்ற புகழ் இக் கிராமத்துக்கு உண்டு. இக்கிராமத்தின் ஒரு வாரிசாகப் பிறந் தவரே அமரர் விசுவநாதர் தருமலிங்கம்.

கந்தரோடையில் வாழ்ந்த அமரர் வி. தர்மலிங்கம் அவர்களின் தந்தையார் விசுவநாதர் சிறந்த கல்விமான் ஆவார். அமெரிக்காவிலுள்ள ஹாவாட் பல்கழைக் கழகத்தில் கல்வி பயிற்று எம்.ஏ. பட்டம் பெற்றவர். தாயார் இருபாலைச் சேனாதிராய முதலியார் வழி வந்தவர். இவர்களின் ஒரே மகனாக 5.02.1918ல் அமரர் வி.தர்மலிங்கம் அவர்கள் இருபாலைக் கிராமத்தில் பிறந்தார். பின் தகப்பனாரின் சொந்தக் கிராமாகிய கந்தரோடையில் வாழ்ந்தார். கந்தரோடையில் தமிழையும் சைவத்தையும் வளர்க்கும் நோக்கத்தோடு அமரர் அம்பலவாணர் கந்தையா (வடக்கர்) அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை தற்போது தமிழ்க் கந்தையா வித்தியாசாலை எனத் திகழ்கிறது. இப்பாடசாலையிலே அமரர் வி. தர்மலிங்கம் அவர்கள் தம் ஆரம்பக் கல்வியைத் தொடங்கினார். பின்னர் அமரர் சின்னத்தம்பி கந்தையா (தெற்கர்) அவர்களால் நிறுவப்பட்ட ஆங்கிலப்பாடசாலை ஆன கந்தரோடை ஸ்கந்தரோதயக் கல்லூரியில் 1925ம் ஆண்டில் இருந்து தமது கல்வியைத் தொடர்ந்தார். அமரர் வி.தர்மலிங்கம் அவர்கள் 1930 ஆண்டிலே யாழ். சம்பத்திரியார் கல்லூரியிலே சேர்ந்து கல்வி கற்று 1934 ம் ஆண்டில் ஜீனியர் கேம்பிறிட்ற் பரீட்சையில் சித்தியடைந்தார்.

1945 ம் ஆண்டில் அமரர் வி.தர்மலிங்கம் அவர் மணவாழ்வில் தம்மை ஈடு படுத்தி சுன்னாகம் கமலாம்பிகையை திருமணம் செய்து மூத்த மகளாக சித்திரலேகாவும் இளைய மகனாக சித்தார்த்தன் அவர்களையும் புத்திரப் பேறாக பெற்றுக் கொண்டார். 1949 ம் ஆண்டு மனைவி கமலாம்பிகை காலமாக 1952 ம் ஆண்டில் மனைவியின் இளைய சகோதரி சரஸ்வதி அவர்களை மறுமணம் செய்து வைத்தனர்.

அமரர் வி. தர்மலிங்கம் அவர்களது பொதுவாழ்க்கை பன்முகப்பட்டது. பணியையும், பணிவையும், அமைதியையும் அடிப்படையாகக் கொண்டது. பலரது பாராட்டுக்



விஸ்வநாதர் தர்மலிங்கம் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)

களுக்கும் இலக்கானது பல்லாயிரக்கணக் கானோருக்கு வழிகாட்டியாக இருந்து வாழ்வும் வளமும் அளித்தது.

வறுமையின் கொடுமையிற் சிக்கி யோரும், அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் பகுதியினரும் சோஷலிசம் சமதர்மம் பற்றி பேசுவதையும் சிறிது செல்வம் சேர்ந்தவுடன் அத்தகைய பேச்சை நிறுத்துவதுடன் செயற் பாடுகளையும் நிறுத்துவதை பல இடங்களில் கண்டிருக்கின்றோம். அவற்றுக்கு புற நடையாக செல்வப் பரம்பரையில் பிறந்தும் சமதர்மம் பற்றி பேசுவதுடன் அடக்கி ஒடுக் கப்பட்ட மக்களின் விடிவுக்காக அர்ப்பணிப் புடன் செயற்பட்ட உலகத் தலைவர்களின் வரலாறுகளை நாம் கண்டிருக்கின்றோம். அவர்களில் ஒருவராக அமரர் வி. தர்மலிங் கம் அவர்கள் இறுதிவரை செயற்பட்டமை யாலும் சைவ சமய வளர்ச்சிக்காக தீர்க்க தரி சனத்துடன் செயற்பட்ட காரணத்துக்காகவும் பொதுப்பணியில் அவர் ஆற்றி விட்டுச் சென்ற பெருமதிப்பு மிகு வரலாற்றுக்காக வும் அவரது வாழ்வும் பணிகளும் ஆவணப் படுத்தப்படுகிறது.

1942 ம் ஆண்டில் யாழ்ப்பாண மாணவர் பேரவையை உருவாக்குவதில் முழுமூச்சுடன் முயன்று அதில் முழு வெற்றியையும் கண்டார். அவர் ஈடுபட்ட முதலாவது பொதுப்பணியும் இதுவே. இள மைத் துடிப்பும் இலட்சியப் பிடிப்புமுடைய இளைஞர்களை ஒன்று திரட்டி அவர்களை ஆக்கப் பணியில் ஈடுபடுத்த வேண்டும் என்ற உத்வேகத்தின் விளைவே யாழ்ப்பாண மாணவர் பேரவை அவ்வாண்டிலே வங்காள தேசத்தில் வீசிய கடும் புயலும் கொட்டிய பெருமழையும் ஏற்படுத்திய பேரழிவுக்கு ஓரளவு ஈடு செய்யும் வகையில் யாழ்ப் பாணத்தில் வீடு வீடாக சென்று உணவும் உடையும் பொன்னும் பொருளும் சேகரித் தனுப்புவதில் அமரர் வி. தர்மலிங்கத்தின் வழிகாட்டலில் மாணவர் பேரவை பெரும் பணி செய்தது.

1954 ம் ஆண்டிலே உடுவில் உள்ளூராட்சி மன்றத்துக்கு கந்தரோடை வட்டாரத்தின் பிரதிநிதியாக அவர் தெரிவு செய்யப்பட்டார். உள்ளூராட்சிச் சேவையில் அவர் காட்டிய அர்ப்பணிப்பும் உழைப்பும் காரணமாக 1957 ஆம் ஆண்டில் உடுவில் உள்ளூராட்சி மன்றத்தின் தலைவராக ஏக மனதாகத் தெரிவு செய்யப்பட்டார். இரண் டாம் தடவையும் அவர் உடுவில் உள்ளூ ராட்சி சபையின் தலைவராக தெரிவு செய் யப்பட்டு சிறப்பாகச் செயலாற்றினார். ஊழ லுக்கும் இலஞ்சத்துக்கும் எள்ளவும் இடம் கொடுக்காத நேர்மையான திறமையான நிர்வாகத்துக்கு இலக்கணமாக அவரது நிர்வாகம் விளங்கியது. அவர் பாராளுமன்ற உறுப்பினர் பணியைத் தொடர்ந்தார்.

பொதுவுடமைச் சிந்தனைகளும் சோவியத் ரஷ்யாவின் பொருளாதாரத் திட்டங்களும் முன்னேற்றமும் அவரை வெகுவாகக் கவர்ந்த போதிலும் இலங்கை யில் உள்ள எந்தவொரு இடது சாரிக் கட்சி கள் எதிலும் அவர் உறுப்பினராக இருந்த தில்லை. 1948இல் சட்டக் கல்லூரியில் அமரர் அ.அமிர்தலிங்கம் அவர்களுடன் இணைந்து சட்டக் கல்லூரி தமிழ் மன்றத்தை உருவாக்கினார்.

1959ம் ஆண்டின் பாராளுமன்ற தொகுதி நிர்ணய ஆணைக்குழு யாழ் மாவட்டத்தில் உடுவில் தொகுதியை உருவாக்கியது. 1960ம் ஆண்டு பங்குனியில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. அத்தேர்தலில் தமிழரசுக் கட்சி சார்பில் அமரர் வி.தர்மலிங்கம் போட்டி இட்டு பாராளுமன்றத்துக்கு தெரிவானார். அதைத் தொடர்ந்து சுமார் 24 ஆண்டுகள் உடுவில், மானிப்பாய் ஆகிய தொகுதிகளுக்கான

பாராளுமன்ற பிரதி நிதியாக இருந்து மக்களுக்கு தன்னலமற்ற சேவையாற்றினார்.

1960 ஆண்டில் உடுவில் தொகுதி உருவாக்கப்பட்ட போது தமிழரசுக் கட்சியின் வேட்பாளராக அமரர் வி.தர்மலிங்கம் அவர்கள் நிறுத்தப்பட்டார். அப்போது அதே தேர்தலில் அமரர் வ.பொன்னம்பலம் ஆசிரியரும் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் போட்டியிட்டார். அமரர் வி.தர்மலிங்கம் அப்போது கந்தரோடை ஸ்கந்தவரோதயா பாடசாலையின் முகாமையாளராக இருந்தார். அதே நேரம் அமரர் வி.பொன்னம்பலம் அவர்கள் ஸ்கந்தவரோதயா பாடசாலையின் ஆசிரியராக இருந்தார். இப்படியான சூழ்நிலையில் பாடசாலை முகாமையாளருக்கு எதிராக தேர்தலில் போட்டியிட எந்த ஆசிரியருக்கும் அனுமதி அளிக்காது தம் அதிகாரத்தைப் பயன்படுத்தி அடக்கி ஒடுக்கும் மனப்பாங்கு மேலோங்கும் கால கட்டத்தில் தன் மனிதப் பண்பை வெளிப்படுத்தியவர் வி. தர்மலிங்கம் அவர்கள். தனக்கெதிராக 1960ம் தேர்தலில் போட்டியிட முன் வந்த அமரர் வ.பொன்னம்பலம் அவர்களுக்கு உரிய விடுமுறை அளித்தது மட்டுமல்ல தேர்தல் காலத்தே சில சமயம் போக்குவரவுக்கு தம்முடனே ஒரே காரில் அழைத்துச் சென்று அன்னியோன்ய மனப்பாங்குடன் பழகி அன்றும், இன்றும் என்றும் மனித நேயத்தையும், அரசியல் நாகரீகத்தையும் உன்னத மனப்பாங்கையும் ஜனநாயக மரபையும் முன்னுதாரணத்தையும் உலகுக்கு வெளிக்காட்டிச் சென்றவர், அமரர் வி. தர்மலிங்கம் அவர்கள்.

1961ஆம் ஆண்டில் தமிழ்ப் பிரதேசங்களில் நடைபெற்ற சத்தியாக் கிரகங்கள் தமிழ் மக்களின் எழுச்சிக்கும் ஒற்றுமைக்கும் ஒரு ஊற்றுக் காலமாக அமைந்தது. சத்தியாக் கிரகம் அமரர் பெரியவர் SJV செல்வநாயகம் அவர்களால் அறிவிக்கப் பட்டதும் கிராமம் கிராமமாக பொது மக்கள் சத்தியாக் கிரகத்தில் கலந்து கொண்டார்கள். உடுவில் தொகுதியில் இணுவில் கிராம மக்கள் அமரர் வீ. தர்மலிங்கம் தலைமையில் அணிவகுத்து யாழ்க்ச்சேரி நோக்கிச் சென்றதும் அது தீவெட்டி ஊர்வலமாக சிறப்புப் பெற்றதும் என்றும் மக்கள் மனதை விட்டு அகலா நினைவு மக்கள் வெள்ளம் அலை மோதி சென்ற காட்சி மக்களின் ஒற்றுமையும் எழுச்சியும் தமிழர்களின் உரிமைக் கோரிக்கையை நியாயப்படுத்தியதையும் வெளிப்படுத்த பெருந்தகையாக அமரர் வி. தர்மலிங்கம் உருவானார். சத்தியாக்கிரகத்தைத் தொடர்ந்து அவர் கைது செய்யப்பட்டு பனாகொடை சிறை முகாமில் மாதக் கணக்காக அடைத்து வைக்கப்பட்டார். சிறை அவரைப் புடம் போட்டு சிந்தனைத் தெளிவு உள்ளவராக மேலும் உத்வேகத்துடன் உழைக்க வைத்தது.

1962 ம் ஆண்டில் நாடாளுமன்றத் தூதுக்குழு உறுப்பினராக கிழக்கு ஜேர்மனிக்கும் சோவியத் யூனியனுக்கும் சென்று சிறுபான்மையினரின் பிரச்சனைகள் அந்த நாடுகளில் எவ்வாறு தீர்த்து வைக்கப்பட்டன என்பதை ஆராய்ந்து தெளிவு பெற்று நாடு திரும்பினார்.

**எழு பிறப்புந் தீயவை தீண்டா பழி பிறங்காப்**
**பண்புடை மக்கட் பெறின்** எனும் வள்ளுவனின் வாக்கிற்கிணங்க

அமரர் வி. தர்மலிங்கம் அவர்கள் தம் பொதுச்சேவைகள் 1985ம் ஆண்டளவில் முடிவுறுத்துப்பட்ட போது அவர் விட்டுச் சென்ற தொண்டுகளில் சிறு தேக்கம் ஏற்பட்டது. அவருக்குச் சொந்தமான 230 பரப்பு காணி கோப்பாய் இராச பாதையருகே இருந்தது. அக்காணி அவர் மகன் சித்தார்த்தனுக்கும் மகள் திருமதி சித்திரலேகா இராமச்சந்திரனுக்கும் சொந்தமாக




அமரர் விஸ்வநாதர் தர்மலிங்கம் அவர்களின் புதல்வன் திரு த.சித்தார்த்தன் அவர்களால் நன்கொடையாக வழங்கப்பட்ட
காணியில் அமைந்திருக்கும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியற்கல்லூரி

இருந்தது. யாழ்ப்பாணத்தில் ஆசிரியர்களை உருவாக்குவதற்கு ஒரு கல்வியற் கல்லூரியை அமைக்க ஏற்ற காணி இல்லாமையால் பல வருடமாக அக்கல்லூரி உருவாகும் வாய்ப்பு பின் போடப்பட்டுக் கொண்டு இருந்தது. அந்த நேரத்தில் அமரர் மகன் த. சித்தார்த்தன் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார். அரசின் தயக்கத்தைப் போக்கி தம் சொந்தக் காணியை கோப்பாய் கல்வியற் கல்லூரி அமைக்க தர்மம் செய்து இன்று எமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு முது கெலும்பாக அக் கல்லூரியை விளங்க வைத்த த. சித்தார்த்தனும் அவர் சகோதரி திருமதி சித்திரலேகா இராமச்சந்திரனும் கல்வி வளர்ச்சிக்கு தமது தகப்பனாரும் முன் சந்ததியினரும் செய்த சேவைக்கு தொடர்ச்சியாக தாம் தான் வாரிசு என நிரூபித்து உள்ளனர். சந்ததி சந்ததியாக சேவைக்குத் தம்மை ஆகுதியாக்கிய பெருமகன் தர்மலிங்கம் அவர்களின் குடும்பம் என்றும் நினைவு கூர வேண்டியவர்களே.

1970 ஆம் ஆண்டிலே கெய்ரோவில் நடைபெற்ற சமாதானக் கருத்தரங்குக்கு சென்ற இலங்கைத் தூதுக்குழுவிலே அவர் முக்கிய உறுப்பினராக இருந்தார். 1970 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் தமிழ் மக்களிடையே முக்கியமாக இரு தமிழ் கட்சிகள் செல்வாக்குப் பெற்று இருந்தன. தமிழ் மக்கள் இலங்கையில் நெருக்கடியான கால கட்டத்தில் இருப்பதை உணர்ந்த தமிழ் தலைவர்கள் வல்வெட்டித்துறை ஞான மூர்த்தி போன்ற பிரமுகர்கள் பலர் எடுத்த முயற்சியால் தமிழ் ஐக்கிய முன்னணி உருவாகி அது தமிழர் விடுதலைக் கூட்டணியாக தமிழ் மக்களின் ஒரே விடுதலை அணியாக அமைந்தது. இவ்வொற்றுமைக்கு பெரு முயற்சியும் உழைப்பும் ஈடுபாடும் காட்டியவர்களில் அமரர் வி. தர்மலிங்கம் அவர்கள் பிரதான பங்கு ஆற்றினார்கள்.

இலங்கையின் திவ்ய சேஸ்திரங்களில் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயம் ஒன்றாகக் கருதப்பட்டிருக்கிறது. இவ்வாலயம் அறங்காவலர் சபையால் நிர்வகிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாலய அறங்காவலர் சபையின் தலைவராக நீண்ட காலம் தொண்டு செய்தவர் அமரர் வி. தர்மலிங்கம் அவர்கள். இவ்வாலயத்தின் வளர்ச்சிக்கு அமரர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் அர்ப்பணிப்பு அத்தியாவசியமானது என்றும் அவரின் முயற்சிக்கு உந்து சக்தியாக அறங்காவலர் சபை செயற்பட வேண்டும் என்ற தீர்க்கதரிசனம் அமரர் வீ. தர்மலிங்கம் அவர்களுக்கு ஏற்பட்டது. ஆலய நிர்வாக சபையை அமரர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் பெரும்பாலும் சுயமாக இயங்க விட்டதன் பலாபலன் தான் இன்று தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் ஊடாக சமய எழுச்சி சமய நம்பிக்கை ஆதரவற்றோர்களுக்கு நம்பிக்கையான வாழ்விடம், கல்வி, வசதி, எதிர்கால நம்பிக்கை போன்ற பல்வேறு சேவைகளையும் வழங்க முடிகிறது என்றால் பின்புலத்தில் அமைதியாக அமரர் வி. தர்மலிங்கம் அவர்கள் செய்து வைத்த சிந்தனை தான் பெரிய அளவிலான அநாதைகள் இல்லம் அமைய 1984 ம் ஆண்டளவில் அடிக்கல்லு நாட்டி தொடங்கி வைத்ததே அமரர் தான்.

# சங்குவேலி பெற்றெடுத்த தவப்புதல்வன் சீமான் கா.வ.வைத்திலிங்கம் முதலியார்

திரு.மு.நந்தகோபாலன்
பிரதேச செயலாளர்
வலிதெற்கு, உடுவில்.

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் எனும் வாக்கிற்கு இணங்க வாழ்ந்து போனவர்களை வையகம் என்றும் மறப்பதில்லை. காலங்கள் பல கடந்தாலும் தாமியற்றிய காரியங்களினால் காலத்தை வென்று வாழ்பவர்கள் வெகு சிலர். அப்படிப்பட்ட ஒருவராகத்தான் சீமான் கா.வ. வைத்திலிங்கமுதலியார் அவர்களும் வாழ்ந்துள்ளார் என்பதை கிராமமக்களின் வாய்மொழி மூலமாகவும் கிடைக்கப் பெறுகின்ற சில ஆதாரங்களின் மூலமாகவும் அறிய முடிகின்றது.

ஊர் போற்றும் உத்தமனாக வந்தோரை வரவேற்கும் பண்பாளனாக தான் மட்டுமல்ல பிறரையும் வாழ வைக்கும் நல்ல உள்ளம் பெற்றவராக செல்வ பலத்தினால் நல்லதே செய்ய நினைத்த ஒரு நல்ல மனிதனாக இன்னும் பல முகங்களைக் கொண்டவராக சீமான் வைத்திலிங்க முதலியார் வாழ்ந்த கதையை சங்குவேலிக் கிராமம் இன்னும் நினைவில் வைத்திருக்கிறது. அதனால் பெருமையும் கொள்கிறது.

நிலவுடமையாளராகவும் செல்வந்தராகவும் வாழ்ந்த இவர் யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல மட்டக்களப்பு வரையும் செல்வாக்கும் புகழும் பெற்றவராக விளங்கினார். இதனால் இவரை மட்டக்களப்பு வைத்திலிங்கம் எனக் கூட அழைத்துள்ளனர்.

சீமான் வைத்திலிங்க முதலியார் வாழ்ந்த கால கட்டத்தில் மக்களில் பெரும்பாலானவர்கள் வறுமையின் பிடிக்குள் அகப்பட்டவர்களாகவே வாழ்ந்திருந்தனர். தம் மக்களைப் பற்றிப் பிடித்திருந்த வறுமை நிலையை விரட்டி அவர்கள் சமூகத்தில் உயர்நிலை பெறவும் முன்னேறிச் செல்லவும் இவர் வழிகாட்டியாக விளங்கினார். ஓர் இலட்சியவாதியாகவும் இலட்சாதிபதியாகவும் வாழ்ந்த மனிதர் இவர் என்பதை இவரது அரும்பணிகளின் சின்னமாக (கால ஓட்டத்தில் சில மாறுதல்களை சந்தித்த போதிலும்) விளங்குகின்ற சில சான்றுகளைக் கொண்டே அறிந்து கொள்ள முடியும் போது மனம் மகிழ்வடைகிறது.

இதன்படி இவரது சமய சமூகப் பணிகள் அளவிடற்கரியன. இந்து மதம் மீது கொண்ட அதீதமான பற்றின் காரணமாகவும் அக்கால மக்களின் வழிபாட்டுத் தேவைக்கு உகந்ததாகவும் சங்குவேலிசிவாயன் பிள்ளையார் ஆலயத்தினை தமது சொந்தப் பண பலத்தினால் அமைத்துத் தந்திருந்தார். சித்தங்கேணிப் பிள்ளையார் ஆலயம் சிறக்க பெருமளவு நிதி வளத்தை வாரி வழங்கி இருந்தார். சங்குவேலிப் பிள்ளையார் ஆலயத்திற்கு என இவரால் கேணி கூட அமைக்கப்பட்டுள்ளது. தமது கிராமத்துடன் தன் பணிகளை முடக்கி விடாமல் கீரிமலை, செல்வச்சந்நிதி போன்ற இடங்களில் மக்கள் தங்கி இளைப்பாற மடங்களையும் நிறுவி



சீமான் கா.வ.வைத்திலிங்கம்

னார். ஆயினும் அவை இன்று மாற்றமடைந்த நிலையில் காணப்படுவதாக ஊர் மக்கள் கூறுகின்றனர். கதிர்காமத்தில் யாத்திரிகள் தங்குமடம் ஒன்று அமைக்கப்பட்டதுடன் அம் மன் ஆலயம் ஒன்றும் கூட அங்கு அமைக்கப் பட்டதென தெரியவருகின்றது. இதனை கேள்வியுற்ற போது போக்குவரத்துச் சிரமங் கள் நிறைந்த காலப்பகுதியில் யாழ்ப்பாண மக்கள் பல்வேறு துன்பங்களை கடந்து கதிர் காமக் கந்தனை கண்குளிரக் கண்டு தரிசிக்க கால் நடையாகச் சென்ற காலத்தில் தம் செல்வ பலத்தினால் தங்குமிடம் அமைத்த பெரி யாரின் தயாள சிந்தை தான் என்னென்பது.

இலங்கையில் மட்டுமல்ல இந்தியா விலும் கூட இவரது பணி இடம் பிடித்திருந் தது. இந்தியாவில் வேதாரணியத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து செல்பவர்களை தங்குவதற்கு வசதியாக மடம் ஒன்றை அமைத்ததுடன் நின்றுவிடாது அதற்கு இங்கிருந்து வத்தை மூலம் ஓலை கொண்டு சென்று வேய்ந்து பராமரித்து இருந்தார். அது மட்டுமல்ல அம்மடத்தின் செயற்பாடுகளுக் காக தேவையான நிதியைப் பெற்றுக் கொள்ள இங்கு பல நிலங்களை தானமாக வழங்கினார். "துரையன் தோட்டம், தோறணக்கடவை" எனும் நிலங்கள் இவ்வாறு தானமாக வழங்கப்பட்ட நிலங்கள் எனவும் பின்னர் இவை அரசுடமையாக்கப பட்டதாகவும் ஊர்மக்கள் கூறுகின்றனர்.

தமது கிராமத்தின் இளஞ்சந்ததியின் கல்வி வளர்ச்சியை கருத்தில் கொண்டு இன்று "சங்குவேலி அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை" எனப் பெயர் மாற்றம் பெற்று விளங்குகின்ற சுப்பிரமணிய வித்தியாலயம் இவரால் தமது மகனின் பெயரில் ஆரம்பிக்கப்பட்டது தான். இது 1971-1973 காலப்பகுதிகளில் அரசுடமை யாக்கப்பட்டு தற்போதைய பெயரைப் பெற்றுள்ளது.

1914 இல் இடம் பெற்ற 1ம் உலக மகாயுத்தம் காரணமாக ஏற்பட்ட உலகப் பொருளாதார நெருக்கடி இலங்கையையும் விட்டு வைக்காத நிலையில் ஏற்கனவே வறுமை நிலையில் வாழ்ந்த மக்கள் பெரும் துன்பத்தை எதிர் நோக்கி நின்ற நெருக்கடி நிலையில் சீமான் வைத்திலிங்கம் அவர்களின் அன்பும் அபயமும் நிறைந்த கரங்கள் அம்மக்களுக்கான பணிகளைச் செய்வதில் பின்னிற்கவில்லை. இக் காலத்தில் இந்தியாவில் இருந்து வியாபாரத் துக்காக கொண்டு வரப்பட்ட அரிசி நெல் மூடைகளை தம்மை நாடி வந்த தம் கிராம மக்களுக்கு மட்டுமல்லாது வேறு பல பகுதி மக்களுக்கும் அள்ளி வழங்கி அவர் தம் பசிப்பிணி போக்கும் மருந்தாக இருந்தார். இதனை இவ்வூர் மக்கள் இன்றும் பெருமை யுடன் நினைவிற் கொள்வது மன நிறைவை தருகின்றது. இப்பணியை செய்ய ஆலயம் ஒன்றை அமைத்து அங்கு வைத்தே பொருட் களை பகிர்ந்து வழங்கி வந்தார் என்பதை யும் மக்கள் கூற்றின் வாயிலாக அறிய முடிந்தது.

அது மட்டுமா இத்தனை பெருமைக ளையும் கடந்து "நீதிமன்றில் கூட தலைப் பாகை அணிந்த படியே வீற்றிருக்கும் பெருமை பெற்றவர்" என்பதும் அதனால் தம் கிராம மக்களால் பெரிதும் நேசிக்கப்பட்டு மதிக்கப் பெற்றவர் என்பதும் மக்களிடம் இன்றும் மறையாமல் இருக்கின்றது.

அக்காலத்தில் வவுனியா யாழ்ப் பாணம் நகரங்களுக்கிடையிலான தபாற் சேவையில் தபால் பொதிகளை கொண்டு செல்ல குதிரை வண்டில்கள் பயன்பாட்டில் இருந்தன. இதற்காக பளை, கிளிநொச்சி, ஆகிய இரு இடங்களில் இவ்விரண்டு குதிரை கள் இருந்ததாகவும் இங்கிருந்து பளைக்கு சென்று குதிரை மாற்றி கிளிநொச்சி சென்று குதிரை மாற்றி வவுனியா சென்று தபால்

பொதிகளை பெற்று சென்றது போலவே வரும் போதும் குதிரைகளை மாற்றி தபால் பொதிகளை கொண்டு வந்து தபாற் சேவை திறம்பட நடைபெற கை கொடுத்தவரும் சீமான் வைத்திலிங்கம் அவர்களே என்பதை மக்கள் பெருமையுடன் சொல்கிறார்கள்.

அக்காலத்தில் இவர் ஏழு கப்பல்கள் வைத்து ஓடியதாகவும் அவற்றுள் தண்டாயுத பாணி, மாருதப்புரவீகவல்லி, மங்கையற் கரசி என்ற பெயர்களை கொண்ட கப்பல் களை மக்கள் இன்றும் தம் நினைவில் வைத் துள்ளனர். இவற்றின் அடையாளங்களை சங்குவேலிப்பிள்ளையார் ஆலயத்தில் எச்சங்களாக காண முடிகின்ற போது எம் மூதாதையர் பெருமைக்கு தலை வணங்கச் செய்கிறது. (அவை ஆலயத்தில் பாதுகாக்கப் பட்டு வருகின்றன) தண்டாயுதபாணி கப்பலில் இருந்த தண்டாயுதபாணி மரச் சிற்பம் ஒன்று அன்றைய கால கட்டத்தில் எவ்வாறு அலைகடலில் சீறிச் சென்ற தண் டாயுதபாணி கப்பலுக்கு வழித்துணையாய் கப்பல் முகப்பில் நின்றிருந்தாரோ அப்படியே இன்றும் கூட சங்குவேலி பிள்ளையார் ஆலயத்திலும் தோன்றாத் துணையாய் அருள் பாலிப்பதுடன் மட்டுமல்லாது வைத்தி லிங்க முதலியாரின் நற்பணிகளுக்கும் கட்டியம் உரைக்கிறார் என்றால் மிகை யில்லை.

சீமான் வைத்திலிங்க முதலியார் மட்டக்களப்பிலும் கூட பல நூற்றுக்கணக் கான ஏக்கர் காணிகளை வைத்திருந்தார். மிகப் பிரபல்யமான " மாருதப்புரவீகவல்லி" கப்பல் மட்டக்களப்பு யாழ்ப்பாண இடைத் தொடர்பை பேண உதவியதென மக்கள் கூறுகின்றனர்.

மேலும் இவரது மூத்த மகன் மார்க்கண்டு முதலியாரின் பிள்ளைகளி னால் 1957 இல் உருவாக்கப்பட்ட "வைத்தி லிங்கம் நிதியம்" வருமானத்தின் மூலம் சங்குவேலி சிவாயன் பிள்ளையார் கோவில் பரிபாலனம் மேற்கொள்ளப்படுவதோடு இந்நிதியம் அவுஸ்ரேலியாவில் வதியும் வைத்திலிங்க முதலியாரின் கொள்ளுப் பேரன் T. கிருபாகரன் அவர்க ளால் முகாமை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

சீமான் வைத்திலிங்க முதலியார் தமது மனையில் குதிரை யானை என்ப வற்றை வளர்ப்பதற்கான அமைவிடங்களை யும் அமைத்து இருந்தார். அவரது மனையின் தோற்றமே கலைநில மலரின் அட்டைப்பட மாகி அழகு செய்கின்றது.

குதிரை வண்டிச் சவாரிகளையும் இவர் மேற் கொண்டார். அக்காலத்தில் இவர் குதிரை வண்டியில் செல்லும் போது அரச அதிபருக்கு வண்டியை விலத்தி இடம் கொடுக்காத காரணத்தால் கைகலப்பு இடம் பெற்று வழக்காடி இருந்ததாகவும் கூறுகின் றனர். அரச அதிபர் பயன்படுத்திய குதிரை வண்டில் ஏலம் விடப்பட்ட போது அதனை அதிக பணம் கொடுத்து பெற எவரும் இல்லாத நிலையில் இவர் அதனை வாங்கிய பெருமை பெற்றிருந்தார் என்பதும் மக்களின் கூற்றாக இருக்கிறது.

தமக்குச் சொந்தமான சங்குவேலி தொடக்கம் கந்தரோடை வரையான வயல் நிலங்களை தமது உறவினர் நண்பர்கள், எனப்பலருக்கும் பகிர்ந்து வழங்கி இருந்தார். இது "செல்வர்க்கழகு செழுங் கிளை தாங்குதல்" என்றவாக்கிற்கு இணங்க வைத்திலிங்கம் முதலியாரின் வாழ்க்கை அமைந்திருந்தது என்பதனை எடுத்துக் காட்டுகின்றது. இந்நிலங்கள் இன்றும் கூட "வியால வயல்" எனும் பெயருடன் விளங்கு கின்றதை காணக் கூடியதாக உள்ளது.



சங்குவேலி சிவாயன் பிள்ளையார் கோவில்



தண்டாயுதபாணிக் கப்பலிருந்து அருள்பாலித்த
தண்டாயுதபாணி சுவாமிகள்



தண்டாயுதபாணிக் கப்பலில்
பயன்படுத்தப்பட்ட கப்பி



சீமான் வைத்திலிங்கம் அவர்களால் அமைக்கப்பட்ட சங்குவேலி சிவாயன் பிள்ளையார்
கோவிலில் காணப்படும் தீர்த்தக்கேணி

மேலும் தான் வளர்த்த யானையைப் பயன்படுத்தி கீரிமலையிலிருந்து வெள் ளைக்கற்கள் கொண்டு வந்து சங்குவேலிப் பிள்ளையார் கோவில் கட்டினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆனாலும் பிள்ளையாரின் கும்பாபிஷேக விழாவைக் காணாமலே இவர் விநாயகர் பாதங்களைச் சென்ற டைந்து விட்டதாக மக்கள் கவலையுடன் கூறினார்கள்.

1850-1910 காலப்பகுதிகளில் கொடிகட்டிப்பறந்த தன் செல்வ பலத்தினால் தன் ஊருக்கும், மக்களுக்கும், நல்லது செய்த கொடையாளன் வைத்திலிங்க முதலியார் அவர்களின் தவப்பயனாக அவரது சந்ததியி னரும் படித்த நன்மக்களாக நானிலம் புகழ வாழ்ந்து வருகின்றனர்.



சங்குவேலி சிவாயன் பிள்ளையார் கோவில்

# ஆத்மீக வாழ்வில் ஆத்மஜோதி நா. முத்தையா


**சி. சக்திகிரீவன்**
கௌரவ செயலாளர்,
இந்து சமயப்பேரவை,
யாழ்ப்பாணம்.

எமது மதத்திற்கு சோதனை ஏற்பட்ட காலங்களில் சிவபிரானுடைய திருவருளால் சிவஞானசீலர்களும் சித்தர்களும் சீரடியார் களும் தோன்றி எமது வைதீக சைவ துறையை பாதுகாத்தமை வரலாற்றுச் சான் றாகக் காணப்படுகின்றது. சமண இருளில் இருந்து மக்களை மீட்ட பெருமை நாயன் மார்களைச் சார்ந்தது. 19ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலும் 20ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் ஏற்பட்ட இந்துமத மறு மலர்ச்சியின் தந்தை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் என்றால் மிகையாகாது. நாவலர் தனித்து நின்றாற்றிய மறுமலர்ச்சி பணி களும், அவரது வாழ்க்கை முறைகளும் நாவலர் பாரம்பரியம் என்ற கூறுமளவிற்கு மக்கள் மனதில் பதிந்தது.

நாவலர் பாரம்பாரியம் எத்தனையோ சோதனைகளின் போதும் எமது நாட்டில் தொடர்கின்றதென்றால் மிகையில்லை. அத்தகைய பாரம்பரிய மரபில் பிறந்தவர் தான் ஆத்மஜோதி நா.முத்தையா ஆவார்.

உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு என்பது மூதுரை. ஊரின் பெருமை அவ்வூரில் வாழும் சான்றோர்களால் நிலைநாட்டப் படுகின்றது. பிசிராந்தையர் எனும் சங்கப் புலவர் தமது தலைமயிர் நரையாதிருப்ப தற்கு கூறிய காரணங்களில் முதன்மை யானது தம்மூரில் ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் பலர் வாழ்வதே என்கிறார். சான்றோர்களின் சவாகாசம் எவ் வகையில் மனிதனை இளமையாக்குகிறது என்பது சிந்தனைக்குரியது. உடலுக்கு உணவு அவசியம் என்பதற்கு அப்பால் மெய்யறிவும் அவன் வாழ்வை வளப்படுத்து கின்றது என்பதற்கு இதற்கு மேல் வேறென்ன வேண்டும். ஆத்மஜோதி நா.முத்தையா அவர்கள் ஏழாலைக்கிராமத்தை பிறப்பிட மாக கொண்டவர். இவ்வூரின் பெயர் ஏழா லையங்கள் அமைந்ததால் ஏற்பட்டது என்பது இவ்வூரின் ஆத்மீகச் செழிப்புக்கு சான்று பகர்கின்றது. காசிவாசி செந்தினா தையர், சி. வை. தாமோதரம்பிள்ளை போன்ற பல பெரியார்கள் அவதரித்த இடம் இது. இங்கு வாழ்வோரின் பிரதான தொழில் விவசாயம்.

ஆத்மஜோதி அவர்கள் தனது தாய் தந்தையர்கள் நல்ல விவசாயக் குடும்பத் தைச் சேர்ந்தவர்கள் என்று கூறுவார். எல்லோர் வீட்டிலும் ஆடு மாடுகளை வளர்ப்பது வழக்கமாயிருந்தது. உணவுக்கு அரிசியும் குடிப்பதற்கு பாலும் என்றும் குறை வில்லாது இருக்கும். தமது தாய் தந்தை யரிடம் குடிப்பதற்கு யாரும் பால் கேட்டால் இலவசமாகவே வழங்கினார் என்பார் ஆத்மஜோதி. காலம் செல்லச் செல்ல தமது காலத்தில் நோய்வாய்ப்பட்டவர்களுக்கு பால், தயிர், இலவசமாக வழங்கப்பட்டு வந்ததாம். பின்னர் காசுக்கு பால் விற்கலாம் என்ற நிலை வந்தது. ஆனால் தனது கண்முன்



ஆத்மஜோதி நா.முத்தையா

இன்று பாலுக்குள் தண்ணீர் கலந்து விற்கத் தொடங்கிவிட்டனர் என்று கவலையுடன் தெரிவிப்பார். பாலைப் பணத்திற்கு விற்பது பாவமான செயல் என்று கருதிய மக்கள் காசுக்கு பாலை விற்பதோடு நிற்காது பாலுக் குள் தண்ணீரும் கலந்து விற்கத் தொடங்கி விட்டனர். இப்படி தர்மம் தள்ளாடத் தொடங்கி விட்டது என்பார். இன்றோ பால் பழுதடையா திருப்பதற்கு பாலுக்குள் இரசாயனம் கலந்து விற்பதைக் கண்டு கொள்ளக் கூடியதாகவுள் ளது. பாலுக்குள் நீர் கலப்பது மட்டுமல்ல இரசாயனம் கலக்க வேண்டிய அளவிற்கு மாறுதல்கள் ஏற்பட்டு விட்டது. இத்தகைய சூழலில் நாம் வாழ்கின்றோம்.

ஆத்மஜோதி அவர்கள் பால் காசுக்கு விற்கக் கூடாது. அது பாவச்செயல் என்கின்ற தர்மச் சூழலில் 1918ம் ஆண்டு வைகாசி 25ம் நாள் பிறந்தார் இவர் தந்தையார் நாகமணி தாயார் பொன்னுப்பிள்ளை. பேராசிரியர் நந்தியவர்கள் ஆத்மஜோதி பற்றிக் குறிப்பிடு கையில் பொன்னும் மணியும் சேர்ந்து முத்தொன்றைப் பெற்றெடுத்தது எனக் குறிப்பிட்டுள்ளார். இவர் வளர்பிறையென வளர்ந்து இவர் தமது ஆரம்பக் கல்வியைக் கத்தோலிக்கப் பாடசாலையிலும், சுன்னாகம் மயிலணி சைவ வித்தியாசாலையிலும் பயின்றார். திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையில் ஆசிரியர் தராதரப் பத்திரப் படிப்பை மேற்கொண்டு சித்தி யெய்திய பின் 1937 ஆம் ஆண்டு திருநெல் வேலி சைவாசிரியார் பயிற்சிக் கலாசாலை யில் பயின்று, பயிற்றப்பட்ட ஆசிரியரானார். அக்காலப்பகுதியில் பண்டிதமணி சி.கண பதிப்பிள்ளை அவர்களின் நன் மாணாக்கனா கத் திகழ்ந்து அவரது அரவணைப்பைப் பெற்றுக் கொண்டார்.

**நாவலப்பிட்டியில் ஆசிரியப் பணி**

1939 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 15 ஆம் திகதி நாவலப்பிட்டியிலுள்ள புனித மேரிஸ் மகாவித்தியாலத்தில் ஆசிரியராகப் பதவியேற்றார். 1948 ஆம் ஆண்டு நாவலப் பிட்டியிலுள்ள கதிரேசன் வித்தியாசாலை க்கு மாற்றம் பெற்று 1976 ஆம் ஆண்டு ஓய்வு பெறும் வரை அங்கேயே கடமையாற்றினார். 1960 ஆம் ஆண்டு தொடக்கம் 1976 ஆம் ஆண்டு வரை அவ் வித்தியாசாலையின் அதிபராக இருந்து அருந்தொண்டாற்றினார். அன்பாலும், பண்பாலும், அரவணைப்பாலும் ஆசிரிய மாணவ நல்லுறவைப் பேணி அவர்கள் உள்ளங்களில் நிலை கொண்டார். அக்காலப் பகுதியில் அகில இலங்கை ஆசிரி யர் சங்க உப தலைவராகவும், செயலாளரா கவும் இருந்து ஆசிரிய உலகுக்குத் தொண்டு பல புரிந்தார்.

**சமயப்பணி**

இறைபக்தி,அடியார்பக்தி, தர்ம சிந்தனை நிறைந்த குடும்பத்தில் அவதரித்த இவர் இளமையில் தமது வீட்டிற்கு அருகிலுள்ள இலந்தை கட்டி ஞான வைரவர் ஆலயத்தில் சரியைத் தொண்டு புரிந்து அப்பெருமானால் ஆட்கொள்ளப்பட்டார்.

புராணபடனம், சமயச் சொற் பொழிவு, ஆகியவற்றில் கூடிய ஈடுபாடு இருந்த போதும் ஆத்மஜோதி அவர்கள் அடியார்கள் புடைசூழ கூட்டுப்பிராத்தனை செய்வதில் பெரு விருப்புக் கொண்டிருந் தார். பாதம் பின்னப் பின்ன அடியார் கூட்டம் முன்னும் பின்னும் செல்லத் திருத்தலங் களுக்குப் பாத யாத்திரை மேற் கொள்வார். 1995 ஆம் ஆண்டு தொடக்கம் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழா அன்று ஏழாலை இலந்தைகட்டி வைரவர் கோயிலில் இருந்து பாதயாத்திரையாக அடியார்களு டன் செல்லுவார். இந்த யாத்திரை பக்தி யாத்திரையாக இன்றும் மிளிர்கின்றது.

"ஆத்மஜோதி" எனும் மாதாந்த ஆத்மீக சஞ்சிகையின் ஆசிரியராக இருந்து

எழுதிய எழுதிவித்த ஆக்கங்கள் அனேகம், ஐயாவின் தத்துவக் கட்டுரைகள், கதைகள், சொற்பொழிவுகள் இவரது அகவுணர்வை வெளிக்காட்டும். இந்தியத் தமிழ் மக்களுடன் இணைந்து பணி புரிந்த அவர் மலையகத்தில் வாழ்நாளில் கூடிய காலம் பணி புரிந்தார்.

**ஆன்மீக ஞானிகளுடன்**

நம் நாட்டில் அவதரித்த விபுலானந்த அடிகள், யோகர் சுவாமிகள், சித்தானைக் குட்டிச் சுவாமிகள் ஆகியோருடன் ஆத்ம ஜோதி ஐயா அவர்கள் பழகிப் பெற்ற அனுபவம் பல.

இந்திய நாட்டின் ஆத்மீக தலைவர்க ளாகத் திகழ்ந்த ரமண மகரிஷியினது ஞான தரிசனமும், பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா, சுவாமி ராமதாஸ், அன்னை கிருஷ்ணாபாய், சுவாமி சிவானந்தர் ஆகியோரின் அருட் பார்வையும் சுத்தானந்த பாரதியார், பித்துக்குளி முருகதாஸ், ஹரிதாஸ்சுவாமி கள், அமெரிக்க சிவாயசுப்பிரமணிய சுவாமி கள் போன்றோரின் நட்புறவும் இவரது சமய சமூக பணிகளுக்கு ஒளியூட்டின.

காலத்திற்கு காலம் அவர் மேற் கொண்ட இந்திய திருத்தல யாத்திரைகளின் போது கேதாரநாத், பத்திரிநாத், துங்கநாத் போன்ற திருத்தலங்களைத் தரிசிக்கும் பேறும் பெற்றுள்ளார்.

**பாராட்டுகளும் விருதுகளும்**

சமூகத் தொண்டனாக இருந்து மக்களுக்காக அப்பிலே உப்புப்போல் கரைந்து கொண்ட ஆத்மஜோதி அவர்களின் சேவைகளையும் திறமைகளையும் அவ்வப் போது பொதுமக்களும் இந்து நிறுவனங் களும் பாராட்டத் தவறவில்லை.

**அவருக்குக் கிடைத்த சிறப்புப்பட்டங்கள் வருமாறு**

| பட்டம் | வழங்கியோர் |
|---|---|
| ஆத்மஜோதி | பொதுமக்கள் |
| அன்புமணி | சுவாமி சுத்தானந்தர் |
| முத்து | சுவாமி முருகதாஸ் |
| ஆத்மீக வள்ளல் | நல்லை ஆதீனம் |
| ஞானசுரபி | கனடா இந்துசமயப் பேரவை |
| சிவனருட் தொண்டன் | கனடா இந்து சங்கம் |

**ஆத்மஜோதி ஐயா எழுதிய நூல்கள் அகர வரிசையில் வருமாறு:-**

1. இந்தோனேசியாவில் இரண்டு வருடங்கள்
2. இலங்கையில் ஓர் இல்லற ஞானி
3. இளைஞருக்கு ஏற்ற இந்தோனேசியக் கதைகள்
4. ஈழத்துச் சித்தர்கள்
5. ஏழாலை
6. கந்தன் கலியுகத்தில் கண்கண்ட தெய்வம்
7. கேதாரபத்திரி யாத்திரை
8. சிவபால யோகேஸ்வர சரிதம்
9. தத்துவக் கதைகள்
10. திருமுறைச் செல்வம்
11. திருமுறைக் காட்சி
12. நிழலின் பின்னே மனிதன்
13. பக்தராஜ் – ஜலராம் மகராஜ்
14. பன்னிருமாத நினைவுகள்
15. மாணவருக்கு ஏற்ற மாண்புறு கதைகள்
16. முப்பெருஞ் சித்தர்

இவற்றுள் தத்துவக் கதைகள், ஏழாலை, ஈழத்துச் சித்தர்கள், கந்தனே கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் ஆகியவை இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற நூல்களாகும்.

அன்னார் சர்வதேச ஆன்மீக மாநாடு களில் கலந்து கொண்டு அருளுரையும் பேருரையும் ஆற்றியுள்ளார். அவர் பங்கு பற்றிய மாநாடுகள் சில குறிப்பிடத்தக்கன.

**ஆத்மீக வாழ்வோடு இணைந்தவர்**

மணிவாசகர் கூறுவது போல இயல் போடஞ் செழுத்தோதும் தன்மை பொருந் திய பெருமை பெற்ற ஐயா கனவிலும் நினைவிலும் இறைவனுடைய நினைப்பி லேயே வாழ்ந்தார். "துஞ்சலும் துஞ்சலிலாத போழ்தினும் நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்" என்ற ஞானசம்பந்தர் அருள் வாக்கை தன் வாழ்நாள் முழுவதும் கடைப் பிடித்து வாழ்ந்த பெருமை ஆத்மஜோதி ஐயா அவர்களையே சார்ந்தது.

மக்கள் அனைவரும் அத்தகைய ஆத்மீக வாழ்க்கையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதற்காக கூட்டுப்பிரார்த் தனை, சற்சங்கம், அந்தர்யாகம், திருத்தலப் பாத யாத்திரை ஆகியவற்றை முன்னின்று நடாத்துவார்.

ஆத்மஜோதி ஐயா அவர்களால் பல திருத்தலப்பாத யாத்திரைகள் நடாத்தப்பட்ட போதும் இந்து சமயப் பேரவை அமைக்கப் பட்ட பின்னர் யாழ்ப்பாணம் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு உட்பட்ட ஆலயங்களுக்கு நடாத்தப்பட்ட யாத்திரை ஐயாவால் நடாத்தப்பட்ட இறுதித் திருத்தலப் பாத யாத்திரையாகும்.

அப்பர் சுவாமிகளின் வயதை எட்டிப்பிடிக்கும் வேளையிலும் ஐயா அவர் கள் தனது வயதை எண்ணிப் பார்த்ததில்லை. கயிலைக் காட்சியைக் காண வேண்டும் என்ற பெருவிருப்போடு அப்பர் "ஆளுநாய கன் கயிலையில் இருக்கை கண்டல்லால் மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்" என்று சபதம் செய்தார்.

**இந்து சமயப் பேரவை**

நாட்டில் நடைபெற்ற போர் காரண மாக இந்துக்கள் அனுபவிக்கும் சொல் லொணாத் துயரங்களைத் துடைக்கவும், இந்துக்கள் இந்து மதத்தில் உறுதியாக நிற்க வும், இந்துக்கள் மதமாற்றம் செய்யப்படு வதை தடுத்து நிறுத்தவும், ஏனைய மதத்தவர் போல் இந்துக்களும் சரிநகர் சமானமாக வாழவும், இந்துக்களை ஒற்றுமைப்படுத்தி இந்து சமயப்பேரவை எனும் இந்துநிறு வனங்களின் கூட்டமைப்பு 1992 ஆம் ஆண்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல் வரின் ஆசியுடன் அமைக்கப்பட்டது.

இந்து மதத்தின் மேன்மை கருதி துணிச்சலான பல நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டிய தேவை இந்து சமயப் பேரவைக்கு காலத்தின் கட்டளையாயிற்று. அப்போது பேரவையின் தலைமைப் பொறுப்பை ஏற்க பல சைவப் பெரியார்கள் தயங்கினர். அப் பொறுப்பை ஆத்மீக வீரத்து டன் ஏற்ற ஆத்மீகஜோதி நா. முத்தையா அவர்கள் அமரராகும் வரை தன்னை அதற்கே அர்ப்பணித்தார்.

**பேராசிரியர் நந்தி அவர்கள் ஐயா பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.**

கடந்த ஐந்து வருடங்களாக ஆத்ம ஜோதி முத்தையா அவர்கள் சமய வளர்ச்சி க்கு ஒரு தீவிரமான திட்டவட்டமான குறிக் கோள்களை அமைத்து 1992 இல் அவர் இந்து சமயப்பேரவையின் தலைமைப்பீடத்தை ஏற்றது எமது நாட்டின் சரித்திர வரலாற்றின் செறிவான செயலாகும். சமய வளர்ச்சி என்பது வெறும் சடங்குகள் அல்ல அது சமய ஒழுக்கச் சிந்தனைக்கும் சமூகத் தொண்டிற் கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று போதித்தார். இவற்றைப் பேணுவது அவருக்குச் செய்யும் நன்றிக் கடனாகும்.

இந்து சமயப் பேரவையின் பணி களை வெளிநாட்டில் வாழும் மக்களுக்கு விளக்கிக் கூறும் நோக்கிலும் அவர்களின் ஆத்ம மேம்பாட்டிற்கு உதவும் வகையிலும் ஐயா அவர்கள் தமது இறுதிக்காலத்தில் கனடா, சுவிற்சலாந்து, இந்தோனேசியா, மலேசியா, சிங்கப்பூர், இந்தியா, போன்ற நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் மேற் கொண்டார். சென்ற நாடுகளில் ஐயாவின் பணிக்கு நிறைந்த பாராட்டும், ஆதரவும், கிடைத்தன. இப்பயணத்தின் போது கனடா, இந்து சமயப் பேரவையைக் கனடா நாட்டில் அங்குரார்ப்பணம் செய்தார். நம் நாட்டில் நடைபெற்ற யுத்தம் காரணமாகத் தாய் தந்தையினரை இழந்து பலர் அனாதைகள் ஆக்கப்பட்டுள்ளனர். அத்தகையோரைப் பேணுவதற்கு மா பெரிய நிதியம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்பது ஐயாவின் பெருவிருப்பாக இருந்தது. எனினும் அவ் விருப்பு நிறைவேறாமல் போனது எமக்கு ஏற்பட்ட தவக்குறையாகும்.

**பரிபூரண நிலை**

இந்து சமயப் பேரவையின் பணி களை மேம்படுத்தச் சென்ற வேளை ஆத்ம ஜோதி ஐயா அவர்கள் 1995 ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 8ஆம் நாள் பரிபூரண நிலையை அடைந்துள்ளார். முத்தான தொண்டரின் பணிகளை தொடர்வதே எமது சமூகத்தின் தலையாய கடமையாகும் என்பதை உணர்ந்து வாழ்வோமாக.

**“மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்”**

# நான் கண்ட வீரமணி ஐயர்


**கலாபூஷணம், வித்யாபூஷணம்**
**பிரம்மஸ்ரீ ப.சிவானந்த சர்மா** *B.A.(Hons)*
**(கோப்பாய் சிவம்)**

சுமார் பதினைந்து வயது இளைஞனாக நான் இருந்தபோது முதன் முதலில் வீரமணி ஐயரைச் சந்தித்தேன். அது ஒரு அற்புதமான சந்திப்பு. அம்பிகையின்மீது இசைப்பாடல்கள் சிலவற்றை நான் இயற்றியிருந்தேன். இசைத்துறை, நடனத்துறை முதலிய பல்வேறு துறைகளில் விற்பன்னராக இருந்ததோடு சிறந்த ஒரு வாக்கேயகாரராகவும் அவரை நான் அறிந்திருந்தேன். அவருடைய பெருமைகளில் மிகுந்த மதிப்புக் கொண்டிருந்த நான் எனது கீர்த்தனைகளை அவரிடம் காட்டி அதற்கு இராகங்கள் அமைக்கவேண்டும் என்பது பெருவிருப்பாயிருந்தது. ஆனால் இந்தச் சிறுவனை அந்தப் பெரும் கலைஞர் ஒரு பொருட்டாக மதிப்பாரா? என்ற பயமும் அடிமனத்தில் இருந்தது.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் அவர் விரிவுரையாளராக இருந்தமையால் அங்கேயே அவரைச் சந்திக்கலாம் எனத் தயக்கத்துடன் சென்றேன். அன்பாக வரவேற்று எனது பாடல்களைப் பார்த்தார். "பஞ்சதசாக்ஷரி..........." என்ற முதலாவது பாடலைப் பார்த்ததுமே கர்நாடக தேவகாந்தாரி ராகத்தில் அதனை உரத்துப் பாடினார். எனக்கு மெய்சிலிர்த்தது. அதனை இயற்றும் போது நான் அந்த ராகத்தை மனத்தில் எண்ணிக்கொண்டே இயற்றியிருந்தேன். என்றாலும் சங்கீத ஞானம் இல்லாத நான் அதனை குறிப்பிடப் பயந்து பாடலை மட்டும் எழுதியிருந்தேன். அவர் அப்பாடலை அதே இராகத்தில் பாடியதும் தயக்கத்துடன் எனது வியப்பை வெளியிட்டேன்.

சிரித்தவாறு என் முதுகில் தட்டிய வீரமணிஐயர் "இதுதான் தெய்வீகம் என்பது. உனக்கு அம்பிகையின் ஆசி நிறைய உண்டு" என்று அன்புடன் ஆசீர்வதித்துவிட்டு ஏனைய பாடல்களுக்கும் பொருத்தமான ராகங்களை எழுதிவிட்டு உடனேயே ஓர் ஆசியுரையையும் எழுதித் தந்தார். இகழ்ச்சியாகச் சிரிப்பாரோ, கேலி செய்வாரோ, என்றெல்லாம் ஐயத்துடன் சென்ற அடியேனுக்கு அந்த மகான் ஆசியுரை என்ற பெரும் பரிசும் தந்தல்லவா வழியனுப்பி வைத்தார். எத்தனை பெருந்தன்மை. சிறுபிள்ளைக் கிறுக்கல்களையும் மனமுவந்து பாராட்டி இளம் கலைஞர்களை வளரச் செய்யும் அவரது குண இயல்பைப் பின்னரும் பல சந்தர்ப்பங்களில் கண்டு மகிழ்வுற்றிருக்கிறேன்.

கலையுலகம் போற்றும் மாபெரும் கலைஞர் வீரமணி ஐயர் அவர்கள் ஈழத் தாயின் அரும் பெரும் சொத்து. அவர் வாழ்ந்த மண் இணுவில்பதி என்பதனால் இணுவிலும் இணுவிலைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் வலி தெற்கும் இறும்பூதெய்துவதில் என்ன வியப்பு?



இயலிசை வாரதி ந.வீரமணி ஐயர்

மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆகியவற்றில் தமது பணியை ஆரம்பித்தார். இக்கால கட்டத்தில் அவர் தம்மை நாடிவந்த மாணவர் களை உயர்ந்த இசைக் கலைஞர்களாயும், நடன வித்தகர்களாயும் உருவாக்கியதன் மூலம் சிறந்த ஒரு கலைப் பாரம்பரியத்தை உருவாக்கியதுடன் தமது திறமையைப் பலருக்கும் பயன்பட வைத்தார்.

பாடசாலைப் போட்டி நிகழ்ச்சிகளின் மூலம் இவரது நாட்டிய நாடகங்கள் வெளியு லகத்தின் கவனத்தை ஈர்க்கலாயிற்று. மாவட்ட மட்டத்திலும் பல பரிசுகளை வெல்லும் வாய்ப்பு அந் நாடகங்கள் பல வற்றுக்குக் கிட்டின. பல ஆலயங்களிற்கு ஊஞ்சற்பாடல்கள் பாடுதல், பல வைபவங் களுக்கு வாழ்த்துப் பாடல்கள் பாடுதல், பல திருத்தலங்கள் மீது கீர்த்தனங்கள் பாடுதல் நாட்டிய நாடகங்கள் பலவற்றை எழுதி மேடையேற்றுதல், வானொலி நிகழ்ச்சி களுக்குத் தமது இசை, நடனத் திறமைகளை வழங்குதல் எனப் பலவகையில் அவரது கலைப் பணியும் விஸ்தரித்தபோது அவரது திறமையும் வளர்ந்தோங்கி வலிவும் வனப்பும் பெற்றன. அவரது புகழும் வானோங்கியது.

தமது இருபத்தேழாவது வயதில் புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ சோமசுந்தர ஐயர் அவர்களின் புதல்வி ருக்மணி அம்மாவைத் திருமணம் செய்து இனிய இல்லறத்தை நடத்த ஆரம்பித்தார்.

வீரமணி ஐயரவர்கள் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் முப்பத்துமூன்று வருடங்கள் விரிவுரையாளராகப் பணி யாற்றி ஆயிரக்கணக்கான கலைத்துறை ஆசிரியர்களை உருவாக்கி அதன்மூலம் பாரிய ஒரு கலைப் பாரம்பரியத்தை உரு வாக்கினார்.

இதுவரை எவரும் செய்யாத சில சாதனைகளையும் வீரமணி ஐயர் செய்திருக் கிறார். ஒட்டுமொத்தமாக முப்பத்தைந்து தாளங்களிலும், நூற்றெழுபத்தைந்து தாளங் களிலும் தமிழிசைப் பாடல்கள் பாடியுள்ள ஒரேயொரு சாஹித்ய கர்த்தா இவர் ஒருவர்தான். அதேபோல திருமயிலைக் கற்பகாம்பாளின் புகழ்பாடும் எழுபத்திரண்டு மேளகர்த்தா ராகத்திலமைந்த கீர்த்தனை களையும் இவர் ஆக்கியிருக்கிறார்.

ராகமாலிகைகள் இசைப் பாடல் களில் தனியிடம் பெறுபவையாகும். ஆனால் ஒரே பாடலில் பல ராகங்களைப் பொருத்த மான முறையில் புனைந்து பாடுவதும் ஒரே அடியிலேயே இரண்டு ராகங்கள் அமைத்துப் பாடுவதும் இலகுவான விடயங்களல்ல. இங்கு முக்கியமாகக் கவனிக்கவேண்டியது அந்த உருப்படியைப் பாடும் கலைஞனுக்கு அந்த ராகங்கள் அடுத்துவரும் முறைமைகள் மாலை மாற்றத்துக்கு உகந்தவையாக அமையவேண்டும் என்பதே. அடுத்து வரும் இரு ராகங்கள் ஒன்றுக்கொன்று இசைந்து வருபவையாகவும் அமைந்துவிடும் போது தான் ராகமாலிகைகள் வெற்றிபெறுகின்றன.

ஐயரவர்களுக்குப் பெரும்புகழைத் தேடித்தந்த "கற்பகவல்லி" பாடலும் ஒரு ராக மாலிகையே. இதில் ராகங்கள் கோக்கப் பட்டிருக்கும் முறை பாடுவோராலும், கேட் போராலும் அனுபவித்து இன்புறத் தக்க பெருமைக்குரியது. உலகப் புகழ்பெற்ற பாடகர் டி. எம். சௌந்தரராஜனின் குரலில் உலகெங்கும் ஓங்கி ஒலித்து இன்றளவும் வீரமணி ஐயரின் புகழை ஒலிக்கச்செய்வது இந்தப் பாடலாகும்.

இதேபோன்ற இன்னொரு பாடல் மிகப் பிரபலமான சங்கீத வித்துவான் மஹாராஜபுரம் சந்தானம் அவர்களால் பாடப்பெற்ற "சாரங்கன் மருகனே...." என்ற

ராகமாலிகையாகும். இதில் ஒவ்வோர் அடிகளிலும் இரண்டு இரண்டு ராகங்கள் இணைந்து வரும். அவற்றில் ஒன்று ஆண் ராகமாகவும் மற்றது பெண் ராகமாகவும் அமைக்கப்பட்டிருக்கும் புதுமையும் அவ்விரு ராகங்களும் ஒன்றையொன்று தழுவிவரும் பாங்கும் இசைவிற்பன்னர்களால் சுவைத் தின்புற்றுப் போற்றி மகிழப்பட்ட பெருமைக் குரியதாகும்.

வீரமணி ஐயரவர்கள் பல பிரபந்தங் களையும் இயற்றியுள்ளார். திருமயிலைக் குறவஞ்சியைத் தொடர்ந்து திருக்கேதீஸ் வரக் குறவஞ்சி, நல்லைக் குறவஞ்சி, கண்ணப்பர் குறவஞ்சி முதலிய பல பிரபந் தங்களை இயற்றியுள்ளார்.

இவரது திருக்கேதீஸ்வரக் குறவஞ் சியைப் புகழ்ந்து பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை அவர்கள்,

**வீரமணி ஐயர் வித்தகத்தை என்னென்பேன்**
**ஈரமிகு தமிழில் ஈந்திட்டார் – மூரல்**
**கெழுமு கௌரி திருக் கேதீச்சரர்மீது**
**பழுதில் குறவஞ்சிப் பா**

எனப் பாடியுள்ளார்.

இவரது ஆவணப்பதிவில் காணப் படும் இசைப்பாடல்களுக்கான வரைவிலக் கணக் கூற்றானது இவரது ஆக்கங்கள் அத்தனைக்கும் பொருத்தமானதாக அமை வதனால் அதை இங்கே பதிவு செய்வது பொருத்தமானதாக அமையும்.

தெள்ளத்தெளிந்த அழகிய சொற்கள், நெஞ்சை அள்ளும் அரிய கருத்துக்கள், கற்பனை வளத்தைத் தூண்டிச் சிந்தனைக்கு விருந்தாக அமையும் போதனைகள், இதயத்துக்கு இதமளிக்கும் எதுகை மோனை யுடன் தவழும் சந்த அமைப்புக்கள் இவை யனைத்தையும் கொண்டதாக யாப்பிலக் கணத்தை மருவி இரசபாவங்கள் நிறைந்த பண்பாட்டுக் கருவூலங்களாக இசைப்பாடல் கள் அமை கின்றன.

வீரமணி ஐயரவர்கள் இந்துமதம் சார்ந்த பாடல்களை மட்டுமல்லாது பிறமதப் பாடல்கள் பலவற்றையும் ஆக்கித் தந்திருக் கின்றார். அவரால் இயற்றப்பட்ட பல இஸ்லா மியப் பாடல்கள் யாழ்ப்பாணம் இஸ்லாமிய மன்றத்தினரின் பாராட்டைப் பெற்றிருக் கின்றன.

முன்னரே குறிப்பிட்டதுபோல இவர் பல்துறை விற்பன்னராக இருப்பினும் இவரது முத்திரை பதிந்த துறை நாட்டிய நாடகமே யாகும். ஏறத்தாழ முன்னூறு நாட்டிய நாட கங்களை அவர் ஆக்கியுள்ளார். இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழையும் தொடர்பு படுத்தி பல்வேறு விதமான இசைக் கோலங் களுடன் பல்வேறு விதமான மாற்று வடிவங் களையும் பயன்படுத்திப் புதுப்புது மெட்டுக் களும் புதுப்புது ஜதிகளும் பொலிவு சேர்க்க அவர் ஆக்கித் தந்திருக்கும் நாட்டிய நாடகங் கள் என்றும் அவர் புகழைச் சாற்றி நிற்கும்.

சுமார் அறுபதிற்கு மேற்பட்ட ஆலயங்களிற்கு ஐயரவர்கள் ஊஞ்சற் பாடல்கள் இயற்றியிருக்கிறார். சுமார் ஐம்பது ஆலயங்களிற்குத் திருப்பள்ளி எழுச்சி பாடியிருக்கிறார். இவற்றை விட சுமார் முப்பதிற்கு மேற்பட்ட ஆலயங்களிற்கு இவர் கீர்த்தனைகள் பலவற்றை இயற்றி அவை பிரபலமான இசைக்கலைஞர்களால் பாடப்பெற்று இறுவட்டுக்களாக அவ் வால யங்களினால் வெளியிடப்பட்டிருக்கின்றன. அப்பாடல்கள் இன்றும் அவ்வாலயங்களில் நாளாந்தம் ஒலிபரப்பப்பட்டு அவர் புகழை வானில் பரப்பியவண்ணம் இருக்கின்றன. அவரது நூல்வடிவில் வெளிவந்த பிரபந்தங் கள் சுமார் இருபத்தைந்து அளவில் இருக்கும். இன்னும் பல நூல்கள் அச்சேற வேண்டி யுள்ளன.

இவரது பெரும் புலமையை உணர்ந்த தமிழகத்தின் பெரும் கலைஞர் களான எம்.டி ராமநாதன், பாபநாசம் சிவன், டாக்டர் பால முரளிகிருஷ்ணா, ஜி.என்.பி., வெங்கடராம ஐயர், முசிறி சுப்பிரமணிய ஐயர், பேராசிரியர் சாம்பமூர்த்தி, இ.கிருஷ்ண ஐயர், கிருபானந்தவாரியார், சா. கு.கணபதி ஐயர், சி.கணேசஐயர் இராமையா பிள்ளை ஆகியோர் அவ்வப்போது இவரைப் பாராட்டி எழுதியுள்ளனர்.

காலம் காலமாக இப் பெரும் கலைஞர் வீரமணி ஐயரைப் பாராட்டியும் கௌரவித்தும் விருது வழங்கியும் பாராட்டுப் பத்திரங்கள் வழங்கியும் பல நிறுவனங் களும் தனி மனிதர்களும் இறும்பூதெய்தி யுள்ளனர். அவற்றுள் சிலவற்றை இங்கே பட்டியலாகக் காணலாம்.

| | |
|---|---|
| இயலிசை வாரிதி – தியாகராஜ கான மையம், கொழும்பு | 24-061968 |
| ஸாஹித்ய சிரோமணி – நல்லை ஆதீனம் | 04-05-1971 |
| நாட்டிய சாஹித்ய கலாவேந்தன் – பரமானந்த வாசிகசாலை, இணுவில் | 15-01-1973 |
| முத்தமிழ் வாரிதி – கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை | 27-03-1980 |
| கவிமாமணி – வட இலங்கை சங்கீத சபை | 10-06-1982 |
| ஸாஹித்ய ஸாகரம் – கோப்பாய் ஆசிரிய கலாசாலை | 21-07-1986 |
| ஸாஹித்ய மாமணி – நாவலர் சபை | 23-11-1986 |
| கலாரத்னா – கலாசார அலுவல்கள் திணைக்களம் | 21-12-1986 |
| சிருஷ்டி ஞாயிறு – பிரதேச அபிவிருத்தி அமைச்சு | 03-01-1987 |
| மஹாவித்வான் – நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் | 29-03-1998 |
| அருட்கலை வாரிதி – இந்துசமய கலாசார அமைச்சு | 21-02-1993 |
| கலாபூஷணம் – கலாசார அமைச்சு | 22-05-1997 |
| சம்வாதீஸ்வரர் – நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தானம் | 08-07-1998 |
| ஞானக் கவிமணி – இந்து சமயப் பேரவை | 11-10-1998 |
| முத்தமிழ்க் கலாநிதி – சர்வதேச இந்துமத குருபீடம் | 10-04-2002 |
| லலிதகலா அபிஞர் – கும்பகோணம் அனைத்து இசைக் கலைஞர்கள் | 06-01-2003 |
| அருள் இசை வித்தகர் – சென்னை, உலகத்தமிழர் மையம் | 07-01-2003 |

இவற்றைவிட அவ்வப்போது அவருக்கு ஆசுகவி, மதுரகவி, அருட்கவிச் செம்மல், சங்கீத வித்வத் ஸாகரம், முத்தமிழ் வித்தகர், முத்தமிழ்ச் சுரபி முதலிய பட்டங்களும் வழங்கப்பட்டுள்ளன.

1999இல் இடம்பெற்ற யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வெள்ளிவிழா ஆண்டிற் கான பட்டமளிப்பு விழாவில் வீரமணி ஐயருக்கு கௌரவ முதுமாணிப் வழங்கப் பட்டது.

2000ஆம் ஆண்டில் வடக்கு, கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் ஆளுநர் விருது வழங்கப்பட்டது.

2003ஆம் ஆண்டில் இலங்கை கம்பன் கழகத்தின் கௌரவிப்பும் கிடைத்துள்ளது.

அச்சேறி வெளிவந்துள்ள அவரது முக்கியமான சில நூல்களையும் இங்கு பட்டியலிடலாம்.

நல்லைக் குறவஞ்சி நாட்டிய நாடகம்
கதிர்காமக் கந்தன் குறவஞ்சி
அர்ஜினன் தவம்
அஷ்டலக்ஷ்மி
பக்தப் பிரகலாதன்
சுபத்திரா பரிணயம்
கர்ணன்
ஸ்ரீ கிருஷ்ணாவதாரம்
நவரஸ இராமாயணம்
ராதையின் நெஞ்சம்
திருஞான சம்பந்தர்
விஸ்வரூப தர்சனம்
திருவாசகம் தந்த மணிவாசகர்
ஸத்யம் சிவம் சுந்தரம்
கண்ணப்பர் குறவஞ்சி நாட்டிய நாடகம்

இம் மாபெரும் கலைஞரது இன்னும் பல பிரபந்தங்களும் நாட்டிய நாடகங்களும் அச்சுவாகனமேறக் காத்திருக்கின்றன. நாட்டியத்திற்கேற்ற பல பதங்களும் தில்லா னாக்களும் அழியாது பாதுகாக்கப்பட்டு அடுத்த தலைமுறைக்குக் கையளிக்கப்பட வேண்டியுள்ளது.

இத்தகைய பெருமைக்கும் பெரு மதிப்புக்கும் உரியவரான ஸ்ரீமான் வீரமணி ஐயரவர்கள் தமது அறுபத்துநான்காவது வயதில் 1996இல் தமது மனைவியைப் பறிகொடுத்தார். தனிமையில் வாடிய அவரது கலை வாழ்க்கைக்கு ஒரு துணை அவசியம் என உணர்ந்த உறவினரும் ஊரவரும் நல்லூரைச் சேர்ந்த சிவஸ்ரீ இரத்தினசாமிக் குருக்களின் புதல்வி சுசீலாதேவி அவர்களை 1997 இல் திருமணம் செய்து வைத்தனர்.

சிறியதொரு இடைவெளியின்பின் ஐயரவர்களின் கலைப்பணி மீண்டும் வீறு கொண்டெழுந்து சிறக்கலாயிற்று. அவரது கலைப்பணிக்கு ஸ்ரீமதி சுசீலாதேவி அவர்கள் அருந்துணை நல்கினார்.

மஹாவித்வான் வீரமணி ஐயர வர்கள் 07-10-2003இல் கற்பகாம்பாளின் பொற்பதங்களைச் சென்றடைந்தார்.

# ஆலயக் கிரியைகள் சிறக்க இணுவிலில் ஒளிரும் மகாதேவக் குருக்கள் எனும் ஞானாக்கினி .

பிரம்மஸ்ரீ ந.சதாசிவ ஐயர்
ஓய்வு பெற்ற மேலதிக பதிவாளர் நாயகம்
பிரசித்த நொத்தாரிசு

இணுவில் பதியானது இறை மணம் கமழும் புண்ணிய பூமியாகும். அறிஞர்கள் கலைஞர்கள் நிறைந்த பூமி. ஆங்கு சைவம் தமிழோடு இசையும் வளர்ந்த போது அங்கு வேதமும் ஆகமும் வளர வேண்டும் நித்தமும் அவை அங்கு ஒலிக்க வேண்டும் என திருவுளம் கொண்ட இணுவில் வட்டு வினியில் சிற்றாலயமாக குடிகொண்டிருந்த வட்டுவினி கண்ணகை அம்மை மாவிட்ட புரத்தில் குடத்துவிளக்காக இருந்த பிரம்மஸ்ரீ தாணு நாத மகாதேவ குருக்களை தன்னுடன் அழைத்து வைத்துக்கொண்டாள்.

அன்னையின் மண்டபமும், பழமையான வீடும் வேத மந்திரங்கள் ஒலிக்கும் ஆகமங்கள் விளக்கப்படும் தர்ம சாஸ்த்தா குருகுலமாகியது. எந்தவொரு பிரதிபலனுமின்றி தேடிவந்த சிறாரை, வயதுவந்தோரை அரவணைத்து இருக்கின்ற வசதிகளுடன் தங்கவைத்து அதிகாலை முதல் அர்த்தசாமம் வரை அந்தந்த நேரத்திற்கு தகுந்தவாறு அவரவர்க்கு ஏற்றவாறு பயிற்றுவித்து நற்பழக்கம் பழக்கி நாலா திசையும் அமைந்த கோவில்களிலும் நாட்டிற்கப்பாலும் வேதம் ஓதி பக்குவமாக நித்திய நைமித்தியம் நிறைவுற தன் சக்திக்கும் மீறி சமஸ்கிருதத்தையும் ஆலயக்கிரியை முறைகளையும் செவ்வனே வளர்த்து அறிவு ஆற்றல் நடை உடை பாவனையில் சிறப்பான சிவாச்சார்யார்களை உருவாக்கிவரும் நாற்பது வருடத்துக்கு மேற்பட்ட இடையறா சேவையாளராக திகழ்பவர் மதிப்புக்குரிய மகாதேவ வாத்தியார் அவர்கள். அந்தணர் மத்தியிலும் அறங்காவலர் மத்தியிலும் வாத்தியார் என்றால் அது மகாதேவ வாத்தியார்தான்.

சமஸ்கிருதக்கல்வி, வேதம், ஆகமம், ஆலய கிரியை முறை என்பவற்றை குருகுலக் கல்வியாக இலவசமாக வழங்கி ஆலயங்கட்கு அழைத்துச்சென்று பயிற்றுவித்து, பூணூல் போட்டுவைத்து ஆசார்யாபிடேகம் செய்து வைத்து தானே உடனிருந்து கொடியேற்றப் பண்ணி கும்பாபிடேகம் செய்யப்பண்ணி ஏற்றிவிடும் ஏணியாக வழிகாட்டியாக ஆசிவழங்கி வாழ்த்தி வாழ்ந்து வருபவர் வாத்தியார்.அந்தண சமூகத்தின் ஆத்மார்த்த பரார்த்த பூசைகளை சிறப்பாக செய்யவும் வைதீக பூர்வ அபர கிரியைகளை செய்வதற்கான பயிற்சிகளை அதற்கு தகுதியானவர்கட்கு வழங்கி வழிகாட்டியும் எங்கு அந்தண சமூகமேம்பாட்டுக்கு முயற்சி மேற்கொள்ளப்படுகிறதோ அங்கு முதலாவது ஆளாக பங்கு பற்றி பதவி ஆசையின்றி தொண்டராக தன்னாலான சேவையை வழங்கி வழிகாட்டி முன்நிற்பவர் வாத்தியார். அதுமட்டுமின்றி சமஸ்கிருத நூல்கள் பத்ததிகள் என்பவற்றை ஆலயக்கிரியைகளில் இலகுவாகக் கையாளக்கூடியவாறு பதிப்பித்து வெளியிட வழிகாட்டி ஆய்வு செய்து திருத்திக்கொடுத்து பார்வையிட்டு ஊக்குவிப்பது வாத்தியாரின் மற்றொரு பெரும் பணியாகும்.

அழகான சீனப்பழமொழி யொன்றுண்டு பசித்தவனுக்கு மீனைக்கொடுக்காதே மீன் பிடிக்கக் கற்றுக் கொடு அவன் வாழ்நாள் முழுக்க பட்டினியின்றி வாழ்வானென்று. அதனை உண்மையாக கடைப்பிடிப்பவர் எமது மகாதேவ வாத்தியாராவார். தன்னை நாடிவந்த ஒவ்வொரு அந்தண மாணவனையும் வாழவழிகாட்டியவர், காட்டுபவர் வாத்தியார். எல்லோருக்கும் அருள்பாலித்துக் கொண்டு ஆலயத்துள் அமர்ந்திருக்கும் இறையாக வட்டுவினியில் அன்றுபோல் இன்றும் எளிமையாக வாழ்ந்து வருகிறாார்.

இன்று எழுபத்தைந்து அகவையை கடந்த நிலையில் எமக்கெல்லாம் பீஸ்மாச்சார்யர் போல் வழிகாட்டி தனக்கென எதுவும் கொள்ளாது அன்றுபோல் குருகுலத்தை நடாத்திவருகிறார். எந்த ஒரு சிவாச்சாரியாரை எடுத்துக்கொண்டாலும் வாத்தியாரிடம் படித்தவர், வாத்தியாரின் ஆசியுடன் கிரியை செய்பவர், வாத்தியார் பூணூல் போட்டவர், வாத்தியார் ஆசார்யாபிடேகம் செய்தவர், வாத்தியார் திருமணம் செய்து வைத்தவர், சஸ்ட்யப்த பூர்த்தி செய்தவர் என்றுதான் சொல்வார்கள்.

அதே போல் எந்த வொரு ஆலயத்தை எடுத்துக்கொண்டாலும் வாத்தியாரின் சர்வபோதகம், சர்வசாதகம் வழிகாட்டல் கொண்டவையாகத்தான் இருக்கும். அவரது இந்த வழிகாட்டல் நெறிப்படுத்தல் சேவை இலங்கையின் பல பாகத்துடன் நில்லாது உலக நாடுகள் பலவற்றில் வியாபித்துள்ளது. அண்மையில் சிங்கப்பூர் செண்பகவிநாயகர் ஆலய கும்பாபிடேகம் வாத்தியார் சர்வபோதகமாக இருந்து நடாத்திவைக்கப்பட்ட கும்பாபிடேகமாகும். இத்தனைக்கும் பெயர் புகழ் பட்டம் பதவி எதனையும் விரும்புவதுமில்லை. ஏற்றுக் கொள்ள முன்வருவதுமில்லை. தான் செய்ய வேண்டியதை செய்து விட்டு சத்தம்போடாமல் தன்வழி போய்விடும் பெருந்தகை அவர்.

இவையெல்லாம் அந்த வட்டுவினியில் அவர் இடைவிடாது வளர்க்கும் குருகுல வேதாக்கினியாகும். குருகுலத்தில் காலை முதல் இரவுவரை எப்படி வேதம் ஒலிக்கிறதோ அதே போல் ஆட்டுக்கல் அரைக்கும் ஓசையும் சமையலறை நறு மணமும் இடைவிடாதிருந்து கொண்டிருக்கும் குருகுலவாச மாணவரின் பசிப்பிணி தீர்க்கும் அன்ன பூரணியாய் அவர் மனைவியார் அல்லும் பகலும் உதவிக்கொண்டிருப்பார். சின்ன சின்ன குடியிருப்புக்கள் மக்கள், மருமக்கள், சகோதரர், அரவணைத்தோர் அவர் அருகிருந்து அவர் வழிகாட்டலில் ஆரம்பக் கல்வியை வழங்குவர். பண்ணிசையும் வீணையிசையும் கூட அங்கே ஒலித்துக் கொண்டிருக்கும். தன்வழித் தோன்றல்களும் தன்னைப்போல் செயற்பட தானிருக்கும் போதே வகை செய்து வைத்துள்ளார் மகாதேவ வாத்தியார்.

இன்று வட்டுவினியம்மன் ஆலயமும் தற்போது வாத்தியாரின் முயற்சியால் புதுப் பொலிவு பெற்று கும்பாபிஷேகம் காணுகின்றது. ஒரு குருகுலத்தில் வாத்தியாருடன் மனைவி, மக்கள், மருமக்கள், சகோதரன், அரவணைத்தோர் ஒன்றாக அவர் நெறி நின்று வழிகாட்டுகின்றதென்றால் அது வாத்தியாரின் தர்மசாஸ்தா குருகுலம்தான் அக்கிரகாரம்தான். அதுபோன்று உலகத்திலே வேறொன்று இருக்கமுடியாது.

இலங்கையில் ஆர்வமுள்ளோர் பணம் படைத்தோர் செல்வாக்குள்ளோர் அரசியலாளர் எல்லோராலும் ஆரம்பிக்கப்பட்ட குருகுலங்கள் காலத்தால் காணமற் போய்விட்டன. ஆனால் தர்ம சாஸ்த்தா குருகுலத்தின் சேவை நாற்பத்தைந்து ஆண்டுகளை கடந்து சிறப்புடன் ஆடம்பரமின்றி விளம்பரமின்றி நடைபெற்றவருகின்றதென்றால் அது வாத்தியாரின் அயராஉழைப்பாகும். அந்த வட்டுவினியாளின் அருளாகும்.



பிரம்மஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள்

# இணுவையூரின் பெருமையை உலகறியச் செய்த தவில் மேதை வி. தட்சணாமூர்த்தி

திரு. வை.பிரபாகரன்
கிராம அலுவலர்
பிரதேச செயலகம், உடுவில்.

சிவநெறி போற்றி வாழ்பவரனை வரையும் தமது மங்கள இசையால் இசைய வைத்து கலை என்னும் அபூர்வ சக்தியால் வசீகரித்து, தமது மதிநுட்ப சாதுரியத்தால் பார் போற்றும் தவில் இசையினால் இணுவை மண்ணுக்கு பெருமை தேடித்தந்தவர் இணுவை மைந்தன் தட்சிணாமூர்த்தியாவார்.

இணுவில் கிழக்கில் நூறாண்டு களுக்கு வாழ்ந்த இசை வேளாளரான விஸ் வலிங்கம் என்பவர் தமது குலத் தொழிலுக் கேற்ப ஆன்மிக நெறியின் சிந்தனையுடன் அக்காலத்தில் வாழ்ந்த பெருஞ்சித்தரான பெரிய சந்நியாசியாரின் முதன்மைச் சீடராகவும் விளங்கினார். இவரின் மூத்த பிள்ளைகள் யாவரும் சிறந்த கலைஞர்க ளாக உருவாகிக் கொண்டிருந்த வேளை முதல் மனைவியின் சிவப்பேற்றினால் வருந்திய விசுவலிங்கத்தை நோக்கிய பெரியார் உன் கவலையை மற. மறுதாரம் செய்தால் பிற்காலத்தில் உனக்கொரு மகன் பிறப்பான். அவன் வரும் போது கலையுணர் வுடன் வருவான். அவனை நீ போதிய கவனத்துடன் கற்றுக்கொடுத்தால் உனது குலத்துக்கும் எமது மண்ணுக்கும் மட்டுமன்றி உலகம் போற்றும் உத்தமனாக வருவான் என்று திருவாக்குரைத்தார். காலங்கள் பல கடந்தன.

இறையருளும் பெரியாரின் குரு வருளும் அவன் முற்பிறவியில் கற்றுணர்ந்த கலையார்வமும் ஏழிசை வாழ்ந்திடும் இணுவையம்பதியில் ஏழிசை வேந்தனாக அமையும் நற்பேறு கிடைத்தது. தவில் வித்தகர் விஸ்வலிங்கம் இரத்தினம்பாள் தம்பதியினர் செய்த மாதவப் பயனாக 26.08.1933 அன்று அவதரித்த தட்சணா மூர்த்தியின் பெருமை என்றும் எல்லோரா லும் போற்றப்படுவதால் இணுவை மண் சிறப்படைந்தது.

சிறுவன் தட்சாணமூர்த்தி பெற் றோரின் அரவணைப்புடன் ஏட்டுக் கல்விக்காக இணுவில் வித்தியாசாலையில் சேர்க்கப்பட்டான். அக்காலத்தில் இசை வேளாளர்கள் அதிகாலையிலிருந்து தமது இசைக்கருவிகளை மீட்பது வழக்கம். அதனால் மீன்குஞ்சுக்கு நீந்திக் காட்டத் தேவையில்லை என்றாற் போலத் தந்தை யின் தவில் வாசிப்பில் தம்மையும் இணை த்து எவரும் போதிக்காமலே அப்பியாசஞ் செய்வது போல கைகள் ஆடி அசையும்.

விசுவலிங்கம் தன் மகனின் ஏழாம் வயதில் ஒரு சுப முகூர்த்த வேளையில் தன் தவிலில் தீண்ட வைத்து அடிஎடுத்துக் கொடுத்தார். தவிற் கலையின் ஆரம்பம் சுமுகமாக அமைந்ததால் அக மகிழ்ந்த தந்தை தமது உறவினரான தவில் வித்தகர் சின்னத்தம்பியிடம் தவில் இசை பழக இணைத்தார். சிறுவன் தனது ஆர்வத்தினால் ஆசானின் நெறிப்படுத்தலில் சிறப்படைந்

தான். வீட்டுக்கு வந்ததும் தான் கற்றதைக் தந்தையின் தவிலில் மீட்டுக் காண்பிப்பான். விசுவலிங்கம் பெரிய சந்நியாசியார் திரு வாக்கை நிறைவேற்றும் ஆர்வமும், மகனின் தவிற் பயிற்சியின் சிறப்பும், மேலோங்கத் தனது மகனைச் சிறந்த ஆசானிடம் குருகுலக் கல்விக்காக அனுப்பச் சித்தங் கொண்டார்.

காரைநகரில் வாழ்ந்த தமது உற வினரான தவில் வித்தகரிடம் குருகுலக் கல்விக்காகச் சேர்த்தார். தட்சிணாமூர்த்தி தனது திறமையால் நன்கு கற்று மேடை யேறும் நிலை வந்ததும் அழைத்து வந்தார். சிறுவனின் சாதூரியமும் இசைக்கல்விச் சிறப்பும் அவனை மேலும் பயில வைத்தது. அக்காலத்தில் தமிழக மங்கள இசை மேதைகள் எம் மண்ணின் கச்சேரி வைத்த வேளைகளில் விசுவலிங்கம் தன் மகனைத் தோளில் கிரகிக்க வைப்பார். அவரின் முயற்சிக்கேற்ப சிறுவனும் தான் கிரகித்ததை வீட்டில் மீட்டுக்கொடுப்பான்.

பல வகையாலும் சிறப்படைந்த தன் மகனை தமிழகத் தவில் மேதையான இராகவப்பிள்ளையிடம் குருகுலக் கல்வி மூலம் தவிலிசை பயில வைத்த விஸ்வ லிங்கம்.


**"தந்தை மகற்(கு) ஆற்றும் நன்றி அவையத்து**
**முந்தி இருப்பச் செயல்"**

என்னும் வள்ளுவர் வாசகத்தின் இலக்கண மாக அமைந்து நற் சுடரேற்றினார்.

தட்சணாமூர்த்தி தான் முற்பிறவி யில் கற்ற கலையூற்றுடன் இறையருளும் குருவருளும் மண் வாசனையும் கேட்டறிந்த கேள்வி ஞானமும் துணை செய்ததால் இராகவப்பிள்ளையின் போதனை மீட்டற் பயிற்சி போலவே அமைந்தது. குரு சொல்லிக் கொடுப்பதற்கும் மேலாகவே தமது திறமையைக் காண்பித்தான். இதனை நன்குணர்ந்த இராகவப்பிள்ளை "உனக்குச் சொல்லிக் கொடுக்க இனி ஏதும் பாக்கிய மில்லை. ஒரு அபிப்பிராயம் காதில் விழுவ தற்குள்ளாகவே உன் கைகளில் அது ஒலித்து விடுமளவிற்கு கடவுளின் வரப்பிரசாதம் பெற்றுள்ள நீ இனி ஊருக்குத் திரும்பலாம். மகோன்னதமான பெரும் புகழும் உன்னை வந்தடையும் காலம் அதிக தூரம் இல்லை. என்றும் கலைஞானசுரபியாகத் திகழ்வாய்" என வாயார வாழ்த்தியனுப்பி வைத்தார்.

தாயகம் வந்த தட்சணாமூர்த்தியின் தவில் இசையைக் கேட்டறிய எண்ணிய பல இசையாளர்கள் அவரின் பயிற்சியினை அறிய எண்ணிச் சிறுவனிடமே உரையாடி னார்கள். அப்போது அவர் "பல பெரியார் களிடம் நான் தவிலிசை பயின்றேன் பல மேதைகள் வாசிப்பதையும் கேட்டேன் ஆனால் லய சம்பந்தமாக விவகாரம் என்ற அம்சத்தில் எனது ஞானக் கண்ணைக் திறந்த மானசீகக் குருநாதர் திருமுல்லைவாயில் முத்துவீரபிள்ளை தான்" என்று தமது பிற்காலத்திலும் அடிக்கடி கூறிப்பெருமைப் பட்டுள்ளார்.

தவில் இசையில் நன்கு தேர்ச்சி பெற்ற தட்சணாமூர்த்தி தமது பதின்மூன்றாம் வயதில் தாயகம் வந்ததும் இணுவில் திருவூரிலுள்ள தெய்வங்களை வழிபட்டு ஆசிர்வாதம் பெற்றார். 1946 இல் ஒரு சுபதினத்தில் இணுவில் கந்தசுவாமி கோயில் வெளி மண்டபத்தில் முதன் முதல் தமது பதின்மூன்றாம் வயதில் கலைச்சேவையை ஆரம்பித்தார். அன்றைய தினம் அங்கு கூடி யிருந்த பல நூற்றுக்கணக்கான அன்பர்கள் கலைச்செல்வனின் சிறப்பான தவிலிசையை காதாரக் கேட்டும் நேரிற் கண்டும் வியந்தனர். அன்றே தட்சாணமூர்த்தி தன் புகழுக்கு வித்திட்டார். இன்று போல் அன்று போதிய வசதியோ, அரங்கேற்றச் சிறப்பு களோ, பெரியார்களின் ஆசீர்வாத நிகழ்வுகளோ, (அரங்கேற்றம்) போதிய



தவில் மேதை லயஞானகுபேரபூபதி வி.தட்சணாமூர்த்தி

விளம்பரங்களோ இல்லாத போதும் இயற்கையான தெய்வீகக் கலை யாவரையும் கவர்ந்ததில் வியப்பில்லை.

முதன் முதல் தவில் வாசிக்கவெனத் தட்சணாமூர்த்தி வருகிறார் என அறிந்தால் முன் கூட்டியே பல இரசிகர்கள் மண்டபத்தை நிறைத்திருந்தனர். தந்தை, தனயன் வாசிக்கும் தவிலைத் தூக்கிக் கொண்டு வந்து உரிய இடத்தில் வைத்தார். தந்தையைத் தொடர்ந்து வந்த தட்சிணாமூர்த்தி முருகப்பெருமானை வணங்கிவிட்டு அங்கு குழுமியிருந்த சபையினரை வணங்கி சபை நடுவேயிருந்து இசையர்ப்பணத்தை ஆரம்பித்தார். சபையினர் கேட்ட தவில் ஓசை இன்று வரை அனைவரதும் செவிகளில் ஒலிக்கும் தெய்வீக சக்தி கொண்டதாகும்.

அவ்விடத்தில் தவிலிசையை நன்கு கேட்டனுபவித்த அயலூரைச் சேர்ந்த இசை ஞானமுள்ள ஒருவரை பிற்காலத்தில் அறிவோம். தவில் வாசிப்ப வர்களின் தேக ஆட்ட அசைவுகள் ஏதுமின்றி மேனியழகும், கலை ஞான ஒளி வீச புன்சிரிப்புடன் சபையோரை மானசீகமாக வணங்கித் தவிலை எடுத்து மடி மீது வைத்ததும் பிஞ்சு விரல்கள் தாண்டவமாட மணிக்கட்டின் கீழ்ப்பகுதி மட்டும் ஆடி அசையக் கச்சேரி ஆரம்பமானது. வாயிலிருந்து இசையின் பதங்கள் வெளிவருவது போல் வாய் மட்டும் சுர வேகத்தை காண்பித்தன. இவ்வரிய காட்சியையும் அன்றைய இசையினையும் கேட்டவர்களும் பாக்கியசாலிகளே. இச்சிறப்பு இணுவில் மண்ணுக்கே சொந்த மானது எனக் கூறினர்.

இதனைத் தொடர்ந்து சிறுவன் தட்சணாமூர்த்தியின் பெரும் புகழ் திக்கெட்டும் பரவியது. தட்ணாமூர்த்தியும் தம் பெற்றோரின் அரவணைப்பையும் அவர்களின் தியாகத்தையும் உணர்ந்து தமது சேவையாற் புகழையும் யாவரும் வியந்து சான்றோனெனக் கூறும் செய்தியையும் தந்து பெற்றோரை ஆனந்தக் கண்ணீர் சொரிய வைத்தார். விசுவலிங்கமும் தமக்குப் பெரிய சந்நியாசியார் முன் கூறிய திருவாக்கையும் எண்ணி இறையருளைப் பிரார்த்தித்தார்.

இச்சிறப்பான காலத்தில் விசுவலிங்கம் மறுமையெய்தினார். தட்சணாமூர்த்தி கலைச் சேவையின் உதவி நாடி அளவெட்டியில் வாழ்ந்த மூத்த சகோதரி இராஜேஸ்வரி கணேசுவிடஞ் சென்றடைந்தார்.

இணுவில் திருவூரில் ஆலயங்களும் இசை வேளாளர்களும் அமைந்தது போல் அளவெட்டியூரிலும் மிகுந்திருந்தனர். அளவெட்டியூர் கலைஞர்களின் பெருமதிப்புக் குரிய தகுதி தட்சணாமூர்த்தியிடமும் இருந்த தால் இவரின் கலைச் சேவையும் பிரபல்யமடைந்தது. அளவெட்டியில் தவில் கலைஞர் செல்லத்துரையின் மகளான மனோன்மணியுடன் இல்லறத்தில் இணைந்தார். இவரின் கலைச்சிறப்பால் இல்லறமுஞ் சிறப்படைந்தது. இல்லறச் சிறப்பால் ஐந்து புத்திரச் செல்வங்களையும் பெற்றனர்.

தட்சணாமூர்த்தி இலங்கை மற்றும் தமிழகத்தின் பிரபல மூத்த தவில் நாதஸ்வரக் கலைஞர்களுடன் இணைந்து சிறப்பித்தார். அக்கலைஞர்கள் தட்சணாமூர்த்தியின் திறமையை நண்குணர்ந்து பெருமதிப்பளித்தனர். தட்சாணமூர்த்திக்கு பல பட்டங்கள் வழங்கியும் சென்னையில் தங்கக் கோபுர விருது வழங்கியும் கௌரவித்தனர். 12.12.1968 இல் கரூரில் நடந்த திருவாவடுதுறை இராசரத்தினம்பிள்ளை நினைவு விழாவில் விழாச்சபையினர் தங்கக் கேடயம் வழங்கிப் பெருமைப்படுத்தினர். இவ்வாறு எண்ணற்ற பட்டங்களையும் விருதுகளையும் பெற்ற யாழ் மைந்தன் 1959 தமிழக தமிழிசைச் சங்கத்தில் வாசித்துப்

புகழ் பெற்றதைக் கௌரவிக்கும் முகமாக இவர் தாயகம் வரும் போது பலாலி விமான நிலையத்திலிருந்து ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார். இவரது அலங்கார ஊர்வலப் பவனி யாழ் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயம் வந்தடைந்ததும் வித்தியாலய வளாகம் விழாக்கோலம் பூண்டது. யாழ்ப் பாணமே வியக்கும் பிரமாண்டமான சனசமுத்திரத்தில் வித்தியாலய அதிபரான கல்விமான் ச. அம்பிகைபாகனின் தலை மையில் அரியதோர் விழா நடந்தது. அந்த விழாவில் இவருக்கு "லய ஞான குபேர பூபதி" என்னும் பட்டம் வழங்கிப் பல விருது களும் வழங்கினர். (லயத்தில் ஞானம், அந்த ஞானத்தின் செல்வனாக விளங்குபவன் குபேரன் தேவலோகத்தில் செல்வங்களுக்கு அதிபதி குபேரன். பூலோகத்தில் லய ஞானத்துக்கு குபேரன் – அதிபதி தட்சணா மூர்த்தி) இந்த உயர்ச்சியை அடைவதற்கு அவரது இளமைப் பருவத்தில் அவர் பெற்ற ஊட்டம் அடி கோலியது.

சுருங்கக் கூறின் தட்சணாமூர்த்தி ஏழையாகப் பிறந்தாலும் இறையருளால் குருவருளால், அவர் முற்பிறவியில் தேடிய தேட்டத்தினால், பெற்றோர் இவரை முன்னிலைப்படுத்த வேண்டுமென்ற சீரிய நோக்கினால், இயற்கையாகவே அமைந்த நற்பண்பு, நல்லொழுக்கம், கல்வி, கலை களில் ஆர்வம், சுறுசுறுப்பு, கீழ்ப்படிவு, மாதா, பிதா, குரு, தெய்வ பக்தி, கலைச்செருக்கு நற் குண இயல்பு போன்றவை இவரை மேலோங்க வைத்தன. உண்மையில் தவில் இசையில் குபேர பூபதியானார். இவர் மறைந்த போதும் தன் எச்சமாக ஒரு புதல்வனான உதயசங்கரைத் தன் இசைப் பணிக்கு நிறுத்தி உள்ளார். தட்சிணா மூர்த்தியின் புகழ் எவராலும் அளவிட முடியாத சிறப்புடையதென அவருடன் இணைந்து வாசித்த மங்கள வாத்தியக் (நாதஸ்வர) கலைஞர் காரைக்குறிச்சி அருணாசலம் பிள்ளை கூறியதையும் அறிவோம்.

தட்சணாமூர்த்தி அமரத்துவம் அடைந்த பின் ஒரு சமயம் தெல்லிப்பழை சிவத்தமிழ்ச் செல்வி அம்மையார் தமிழகத்திற்கு விசேட மகாநாடொன்றிற்குப் பங்குபற்றச் சென்றார். அம்மையாரைக் கண்டதும் கலைஞர் அருணாசலத்துக்கு யாழ்ப்பாணம் என்னும் நினைவு வந்தது. அம்மையார் விழா முடிவில் தனித்து ஓய் வெடுத்த போது அருணாசலம், அம்மையார் முன் சென்று ஆனந்தக் கண்ணீர் சொரிய அவரை வணங்கி அம்மாவும் யாழ்ப்பாணம் தானே? உங்கள் யாழ் மகன் தட்சணாமூர்த்தி யின் கலைச் சிறப்புக்கு அவனுக்கு யாழ்ப் பாணத்தையே பரிசாகக் கொடுத்தாலும் போதாது. அவனுக்கு முழு உலகமுமே ஈடாகாது என மகிழ்ந்துரைத்தார். இச் செய்தியை எமது தங்கச் செல்வி அம்மையார் தமது பிரசங்கங்களில் தெரிவித்துள்ளார். இணுவில் மண்ணிற் பிறந்து கலைபயின்று (அளவெட்டியைப் புகுந்தகமாகக் கொண் டாலும் பார் போற்றும் உயர் நிலையை அடைந்து புகழுடம் எம் மண்ணிற் துலங்கும் லய ஞான –குபேர பூபதி விஸ்வலிங்கம் தட்சணாமூர்த்தியால் சீர் இணுவைத் திருவூர் புகழ் பெற்றமை அவ்வூரின் தெய்வங்களினதும் அறப்பணிக்கும் நற் சான்றாகும்.

# நாதஸ்வர இசைக்கலைஞர் கலாபூஷணம் இராசு சுந்தரமூர்த்தியுடனான ஓர் நேர் காணல்

**கணபதிப்பிள்ளை கஜன்**
விரிவுரையாளர், நடனத்துறை,
இராமநாதன் நுண்கலைப்பீடம்
யாழ். பல்கலைக்கழகம்.

தென் இந்தியாவிலும் ஈழத்திலும் மற்றும் தமிழர்கள் வாழும் பிரதேசங்களிலும், ஆலயங்கள், கல்யாண வைபோகங்கள், விழாக்கள் ஊர்வலங்கள் போன்ற அனைத்து மங்களகரமான நிகழ்ச்சிகளிலும் முதன்மையாக விளங்கி வரும் மங்கள வாத்தியம் நாதஸ்வரம், தவில் ஆகும். நாதஸ்வரம் வெளிப்புற இசைக்கச்சேரிக்கு மிகவும் ஏற்ற வாத்தியம். முன்னோர்கள் நாதஸ்வரக் குழுவை பெரியமேளம் என்றும், நாட்டிய குழுவினரை சின்னமேளம் என்றும் அழைப்பதுண்டு. இவ்விரு கலைகளுமே ஆலயங்களில் வளர்ந்தவை, இதனால் மடங்கள், கோயில்கள் முதலியவற்றில் நாதஸ்வரத்தை இசைப்பதற்காக நாதஸ்வரக் கலைஞர்கள் நியமிக்கப்பட்டனர். இத்தகைய சிறப்பு பெற்ற நாதஸ்வரம் எமது செந்நெறி இசை வரலாற்றில் முதன்மையானது. மிகவும் விரிவான இராக ஆலாபனை, கணக்கு வழக்கு நுட்பங்கள், சிக்கலான சங்கதிகள் நிறைந்த நாதஸ்வர வாசிப்பு முறைமையானது ஈழத்தின் கர்நாடக இசை வளர்ச்சிக்கு மிகவும் வித்திட்டது என்பதில் எதுவித ஐயமுமில்லை.

நாதஸ்வர இசையின் எல்லா அம்சங்களையும் கையாண்டு படாந்தரம் வழுவாமல் கீர்த்தனைகள் வாசிக்கும் முறையை வளர்த்தெடுத்தவர் அகில உலக நாதஸ்வரச் சக்கரவர்த்தி திருவாவடுதுறை ரி.என். இராசரத்தினம் பிள்ளை அவர்கள். இவருடைய காலத்தில் நாதஸ்வரக் கலையானது உலக இசைகளில் முதன்மையான ஒன்றாக அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. தமிழகத்தின் தஞ்சாவூர் மாவட்டமானது இக்கலைத்துறையில் பல நூற்றுக்கணக்கான கலைஞர்களை உருவாக்கி இசையுலகிற்கு தந்துள்ளது. இக்கலையில் ஈழத்தவர்கள் தமிழகக்கலைஞர்களையும் விஞ்சியவர்களாக திகழ்ந்த வரலாறுகள் உண்டு. இந்த வகையில் ஈழத்தின் மங்கள இசைக் கலைஞர் வரிசையில் கடந்த நாற்பத்தைந்து ஆண்டுகளிற்கும் மேலாக நாதஸ்வரக் கலைஞராக பணிபுரிந்து புகழ்கொண்டு விளங்குபவர் இணுவையூர் கலாபூஷணம் இராசு சுந்தரமூர்த்தி அவர்கள்.

ஈழத்தின் வடபால் கலைவளம் நிறைந்து விளங்கும் இணுவையூரில் அமரர்களான இராசு, கௌரியம்மா, தம்பதிகளின் மகனாக 17-09-1939 இல் பிறந்தார். இவருக்கு ஓர் சகோதரியும் ஓர் சகோதரனும் உண்டு. சகோதரன் புகழ்பூத்த தவில் வித்துவான் என், ஆர். புண்ணியமூர்த்தி அவர்கள் ஆவார்.


இணுவில் சைவமஹாஜனா வித்தியாசாலையில் கல்வி கற்ற இவர் இயற்கையாகவே இசைஞானமுள்ளவராக இருந்தமையால் விஸ்வலிங்கம் கோதண்டபாணி அவர்களின் மங்கள இசைக்குழுவில் தாளக் கலைஞராக பல ஆண்டுகள் சென்று தனது

சிறுவயதிலேயே கேள்வி ஞானத்தை வளர்த்துக்கொண்டார். அக்காலத்தில் கோண்டாவிலில் தங்கியிருந்த தமிழக நாதஸ்வர கலைஞரான திருநெல்லிக்காவல் நாராயணசாமி அவர்களிடம் தனது பத்து வயதிலிருந்து இரண்டு ஆண்டுகள் குருகுல முறைப்படி கற்று பின் தனது பன்னிரண் டாவது வயதில் இணுவையூர் உருத்திராபதி அவர்களிடம் சேர்ந்து மூன்று ஆண்டுகள் அவரிடமும் இசை நுணுக்கங்களை கற்றார். பின்பு தனது பதினைந்தாவது வயதிலிருந்து மாவிட்டபுரத்தை சேர்ந்த எஸ்.கே.ராசு அவர்களிடம் தொடர்ந்து கற்றதுடன் இந்திய நாதஸ்வரக் கலைஞர்கள் ஈழத்திற்கு வரும் வேளைகளில் அவர்களிற்கு பணிவிடை செய்து அவர்களிடமும் இசை நுணுக்கங் களை கற்றுத் தேர்ந்தார்.

இவர் மாவிட்டபுரம் இராசு அவர்களி டம் கற்றகாலத்தில் அவருடன் இணைந்து அவர் குழுவில் அவருக்கு இணையாக வாசிக்கும் சந்தர்ப்பத்தைப் பெற்றார். இவ் வாறு பல இசையாளர்களிடம் பயின்று வரன் முறை தவறாத நாதஸ்வரக் கலைஞனாக வளர்ச்சி கண்டார். இதன் நிமித்தம் 1959 இல் தமிழகத்திலிருந்து வருகைதந்து ஈழத்தில் தங்கியிருந்து நாடு முழுவதும் மங்கள இசை நிகழ்வுகளை வழங்கிய திருவாரூர் இராச ரத்தினம்பிள்ளை அவர்களுடன் இணைந்து வாசித்து தனது தனித்துவமான திறன்களை நிலை நாட்டினார். தவிர அம்பல் இராமச் சந்திரன் திருமஞ்ஞானம் நடராஜசுந்தரம், கவாலக்குடி தட்சணாமூர்த்தி போன்ற இந்திய நாதஸ்வரக்கலைஞர்கள் ஈழத்திற்கு வருகை தந்த போது அவர்களுடனும் இணைந்து வாசித்து புகழ் பெற்றதுடன் அக் கலைஞர்களுடன் தங்கியிருந்து ஏராளமான கீர்த்தனைகளையும் மல்லாரி, பல்லவி, கணக்கு வழக்கு முறைகள் போன்றவற்றை யும் தெளிவாக கற்றுக் கொண்டார்.

இவ்வாறு நீண்டகாலக் கற்றலும் ஆற்றுகை அனுபவமும் பெற்ற இவர் திருவாரூர் இராசரத்தினம் அவர்களின் ஆலோசனையுடனும் ஆசிர்வாதத்துடனும் 1963 இல் தனித்துவமான குழுவை அமைத்து நாடுமுழுவதும் தனது இசைத் தொண்டை ஆற்றத்தொடங்கினார். அதே 1963 இல் பிரபல நாதஸ்வரவித்துவான் கோதண்டபாணியின் மகளான ஆனந்த வள்ளியை மணம்முடித்து ஓர் பெண் பிள்ளையையும் நான்கு ஆண் பிள்ளை களையும் பெற்றெடுத்தார். அவர்களையும் இசைத்துறைக்கு அர்ப்பணித்து மூத்த மகன் இராமதாஸ் அவர்களை தவில் வித்துவான கவும் இரண்டாவது மகன் கோபிதாஸ் அவர்களை புகழ்பூத்த வயலின் வித்துவானா கவும் மூன்றாவது மகன் தேவதாஸ் அவர் களை தன்னுடன் இணையாக நாதஸ்வரம் வாசிக்கும் நாதஸ்வர கலைஞராகவும் ஈழத் திற்கு வழங்கியதுடன் நான்காவது மகன் கிருபாகரன் அவர்களை பல்துறைக் கலைஞ னாக அண்டை நாடுகளில் பணியாற்ற ஈடு படுத்தியதும் இவர் கலைத்துறையில் கொண்ட அளவற்ற பற்றை பறைசாற்று கின்றன.

ஆலயத்திருவிழாக்களிலும், பண் பாட்டு நிகழ்வுகளிலும் இல்லங்களில் நடை பெறும் மங்கள சடங்குகளிலும், இசை விழாக்களிலும் மரபுவழிதவறாத மங்கள இசையை வழங்கிவரும் இவர் நல்லூர் கந்தசுவாமி கோவில், இணுவில் கந்தசுவாமி கோவில், இணுவில் பரராஜசேகரப்பிள்ளை யார்கோவில், தெல்லிப்பழை துர்க்கையம் மன் கோவில், இணுவில் மஞ்சத்தடி முருகன் கோயில், நயினை நாகபூசனி அம்மன் கோயில் திருவிழாக்காலங்களில் பிரதான வாத்தியக்காரராக மங்கள இசை வழங்கி னார். இவர் ஆலயங்களில் ஆற்றிய சேவை யின் பொருட்டு தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் சிவத்தமிழ்ச் செல்வி



நாதஸ்வர இசைக்கலைஞர் கலாபூஷணம் இராசு சுந்தரமூர்த்தி

தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் "நாதஸ்வர சக்கரவர்த்தி " என்ற பட்டத்தை யும் இணுவில் கந்தசாமி கோவில் நிர்வாக சபையினால் "நாதஸ்வர இசை வேந்தன்" என்ற பட்டத்தையும், இணுவில் பரராஜ சேகரப்பிள்ளையார் கோவில் பஞ்சாட்சர ஐயரிடமிருந்து "கானாமிர்த பூபதி" என்ற பட்டத்தையும் பெற்றமை கோவில்கள் இவருக்கு அளித்த கௌரவங்களில் சில,

இவர் கோவில்களில் மட்டுமல்லாது மன்றங்களிலும் தனது திறமையை பறை சாற்றியுள்ளார். நல்லூர் இளங்கலைஞர் மன்றத் திரையில் நடாத்தப்படும் வருடாந்த இசைவிழா, நல்லூர்த் திருவிழா காலங் களில் நடாத்தப்படும் தெய்வீக இசையரங்கு, தியாகராஜ சுவாமிகள் ஆராதனை போன்ற வற்றில் தொடக்க நாளில் மங்கள இசையை வருடந்தோறும் வழங்கி வருகிறார். இதை விட கம்பன் கழகம், நல்லை ஆதினம், போன்ற மன்றங்களிலும் தனது இசைப் பணியை தொடர்ந்து வருகின்றார். இதன் பொருட்டு மன்னார் சைவ மங்கையர் கழகத்திடமிருந்து 1959 இல் "நாதஸ்வர கலாரத்தினம்" எனும் பட்டத்தையும் கம்பன் கழகம் இளங்கலைஞர் மன்றத்திட மிருந்து மூத்த கலைஞருக்கான விருதினையும் பெற்றமை இசை மன்றங்கள் இவருக்கு அளித்த கௌரவங்களில் சில.

இவருடைய திறமை ஈழத்தோடு நின்றுவிடவில்லை. இவர் குடும்பத்தினருடன் 1981 இல் தென் இந்தியா சென்ற சமயம் இவருடைய வருகையை அறிந்த தமிழகத் தின் சமய புரவாழ் மக்கள் சமயபுர முத்து மாரி அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற பூச்சொரி விழாவில் நாதஸ்வரம் வாசிப்ப தற்கு பணித்தனர். அவர்களுடைய வேண்டு கோளை ஏற்று அங்கு மாலை ஆறுமணி தொடக்கம் அடுத்த நாள் காலை ஐந்து மணிவரை நாதஸ்வர இசைமழை பொழிந்து ஈழத்துக் கலைஞர்களின் பெருமையை தமிழகத்தில் முரசறைந்தார். அது மட்டுமல் லாமல் வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்களிலும் தனது இசையை வழங்கி உலகம் முழுவதும் புகழ் பெற்றார்.

எமது செந்நெறி நுட்பமான இராகங் கள் சங்கராபரணம், கல்யாணி, பைரவி, தர்பார், பேகட, காம்போதி போன்றவற் றினை வாசிப்பதில் அதிக ஈடுபாடு கொண்ட இவருடைய நிதானமான பொறுமையான வாசிப்புமுறைமை அனைவரையும் இவர் பால் கவர்ந்திழுத்தது எனலாம். இவர் புகழ் பூத்த நாதஸ்வர கலைஞர்களுடன் இணைந்து வாசித்ததை தவிர இவருக்கு தவில் வாசித்தவர்களும் இணையில்லா தவில் மேதைகள், தென்னிந்திய கலைஞர் திருமுல்லைவாசல் முத்துவீரு அவர்கள், ஈழத்தின் லயஞான குபேரபூபதி தட்சணா மூர்த்தி அவர்கள், என் ஆர் சின்னராசா அவர்கள், சகோதரன் என்.ஆர்.புண்ணிய மூர்த்தி அவர்கள், சித்தங்கேணி யோகலிங் கம், கோண்டாவில் சொர்ணலிங்கம் மகன் ராமதாஸ் என்போர் குறிப்பிடத்தக்கவர் களில் சிலர். நிதானமும், பொறுமையும், அன்பும், ஆளுமையும் கொண்ட நல் மனித ராகவும் இசை உருப்படிகளை ஸ்வர சாகித்ய அங்க அடையாளங்களுடன் எழுதிக் கொள்ளும் வல்லமை உடையவராகவும் இக்கலையை ஏனையோரிற்கு மரபுவழி தவறாமல் கற்றுக் கொடுக்கும் ஆசானாகவும் திகழ்வதினால் அதன் பொருட்டு தனது நீண்டகால இசை அனுபவத்தினால் ஏராள மான மாணவர்களை ஈழத்தின் இசை வளர்ச்சிக்கு தந்துள்ளார். சுதுமலை ஜெக நாதன், மகன் தேவதாஸ், நெல்லியடி செல்வம், திருகோணமலை பாலா, கைதடி தயா போன்றோர் அவர்களில் சிலர்.

இவர் ஈழத்தின் கலையை வளர்ப்ப தற்காக மாவிட்டபுரம் ஞானசுந்தரம் அவர்க

ளால் உருவாக்கப்பட்ட "இசையாளர் ஐக்கிய அபிவிருத்தி சங்கத்தில்" தனாதிகாரியாக பணியாற்றி வருடாந்த இசை விழாக்களை தலைமை தாங்கி நடத்தியுள்ளார்.

பலவிதமான பட்டங்களிற்கும் விருதுகளிற்கும் சொந்தக்காரரான இவருக்கு இவருடைய சேவையின் நிமிர்த்தம் 2000 இல் இலங்கை அரசினால் "கலாபூஷண விருதும்" 2006 ஆம் ஆண்டு உடுவில் பிரதேச செயலகத்தினால் "ஞான ஏந்தல்" விருதும் 2008ம் ஆண்டு கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சினால் கௌரவ ஆளுனர் விருதும் கிடைக்கப் பெற்றது. இவருடைய சேவையைப் பாராட்டு முகமாக இணுவில் கோண்டாவில் வாழ் ஊர்மக்கள் கூடி இவருக்கென சிறப்பு விழா எடுத்து "நாதஸ்வர மாமன்னன்" என்னும் பட்டமும் வழங்கி கௌரவித்தனர்.

எமது கலைப்பண்பாடுகளோடு இரண்டறக் கலந்து பிரிக்க முடியாத ஒரு நிலையைப் பெற்று புனிதமான கலையாக தேனென இனிக்கும் இசையாக விளங்குவது நாதஸ்வர, தவில் இசை, குருவிற்குரிய பணிவிடைகளை மனவிருப்புடன் செய்து குருவோடு வாழ்ந்து அவரின் பொற்பாதங்களை தினமும் வணங்கி இரவு பகல் பாராது கற்றலிலும் கடின பயிற்சியிலும் ஈடுபட்டவர்களே இத்துறையின் மன்னாதி மன்னர்களாக திகழ்ந்துள்ளனர். தற்காலத்தில் அந்நிலை மாறி வருகின்றது. மரபுவழி நாதஸ்வர முறைமையும் ஒரு சிலர் தவிர குறைந்து வருகின்றது. எமது இசை முன்னோடிகள் ஏராளமான இசை உருப்படிகளை இராக வளமும் லயநுட்பமும் மொழிச்சிறப்பும் ஒளி வீசும் வண்ணம் உருவாக்கித் தந்துள்ளனர். அவற்றை இளம் சமுதாயத்தினர் வரன்முறை தவறாது கற்று இக்கலையை தொடர்ந்து காப்பாற்ற வேண்டுமென்பது தொடர்ந்தும் தன்னை கலைத்துறைக்கு அர்ப்பணித்து சேவை ஆற்றி வரும் இணுவையூர் கலாபூஷணம் இராசு சுந்தரமூர்த்தி அவர்களின் பெருவிருப்பாக இருக்கின்றது.

# பண்ணிசைக் கலைஞர் தாவடியூர் திருஞானசம்பந்தன்

திரு.வே.நாகேந்திரராஜா
கிராம அலுவலர்
பிரதேச செயலகம்
உடுவில்.

இவர் 1946.07.04 இல் தாவடியில் பிறந்தார். தந்போது திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணத்தில் வசித்து வருகின்றார். க.பொ.த சாதாரண தரம் சித்தியடைந்த இவர் தமது தந்தையை ஆரம்பக்குருவாக ஏற்றுப் பண்ணிசையை முறையாகப் பயின்றதுடன் மேலும் குப்பிளான் செல்லத்துரை புலவர் மணி த. குமாரசுவாமிப்பிள்ளை, திருச்சி எஸ்.முத்துக்கந்தசாமி தேசிகர் ஆகியோரிட மும் முறையாகக் கற்றுத் தேர்ச்சி பெற்றுள்ளார்.

1975 முதல் பண்ணிசைப்பணி ஆற்றி வரும் இப்பண்ணிசையாளர் 1975 இல் கொக்குவில் இந்துக்கல்லூரியில் தேவார ஆசிரியராகவும் 1975 – 1978 களில் காரைநகர் வாரிவளவு கருங்காலி, மணங் காடு, ஆகிய இடங்களில் திருமுறை ஆசிரிய ராகவும் 1979 இல் கொழும்புத்துறை அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பண்ணிசைப் போதனாசிரியராகவும் பின்னர் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத் தில் ஓதுவார் மூர்த்தியாகவும் இருந்தார். இவர் இலவசமாகவே பல பாகங்களிலும் பண்ணிசை வகுப்புக்களை ஆரம்பித்து மாணவ, மாணவியர்க்கு பண்ணிசை பயிற்று வித்து வருகின்றார். இலங்கையின் பல இடங்களில் பண்ணிசைக் கச்சேரி செய்யும் இக் கலைஞர் இந்தியாவிலே தருமபுரம், திருப்பனந்தாள், திருவாவடுதுறை, ஆதினங் களின் ஆதரவில் பிரதான பல திருத்தலங் களில் ஓதுவார் பணி புரிந்துள்ளமை குறிப் பிடத்தக்கது.

தென்னிந்திய நாகை மாவட்டத்தில் அமைந்துள்ள திருவாவடுதுறை ஆதீன குருமகா சன்னிதானம் சீர்வளர் சீர் சிவப் பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகளால் ஈழத்து பண்ணிசைக் கலைஞர் பண்ணிசை வேந்தன் தாவடியூர் கே.எஸ்.ஆர். திருஞான சம்பந்தன் அருள்திரு நமசிவாயமூர்த்திகள் ஆசிக்கவசமான பட்டாடை போர்த்தி பவித்திரம் (மோதிரம்) அணிவித்து கௌர விக்கப்பட்டார்கள். அன்று இவருக்கு மூவாயிரம் இந்திய ரூபா பெறுமதியான பொற்கிழியும் வழங்கப்பட்டது. தென்னிந் திய ஆதீனம் ஒன்று ஈழத்தவருக்கு அளித்த மிக முக்கியத்துவம் வாய்ந்ததும் கௌரவம் இதுவாகும்.

1982ல் திருஞானசம்பந்தனுக்கு போராசிரியர் க.வெள்ளைவராண் முன்னி லையில் பரீட்சிக்கப்பட்டு தென்னிந்திய திருப்பானந்தாள் ஆதீனத் தேவார இசை மணி என்ற பட்டம் வழங்கப்பட்டது. இவர் தனது தந்தையான செ. இராசையாவிடம் கர்நாடக சங்கீதமும் பண்ணிசையும் வரன் முறையாகக் கற்றவர். மேலும் சைவப்புலவர் மணி த. குமாரசுவாமிப்புலவர்,குப்பிளான் செல்லத்துரை ஆகியோரிடமும் முறையாகப் பண்ணிசை பயின்றவர்.


1975 ல் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் முதலாவது குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரியார் காலத்தில் அங்கு ஓதுவாராக இருந்து பண்ணிசைப் பணி புரிந்தவர். அப்போது சுவாமிகள் பண்ணிசைப் புலவர் பண்ணிசை வேந்தர் என்ற பட்டங்கள் வழங்கி கௌரவிக்கப்படார். திரு முருக கிருபானந்தவாரியாரின் பாராட்டும் இக்காலத்தில் இவரை வந்தடைந்தது. 2002ம் ஆண்டு இந்து கலாசார அமைச்சு கலாபூசணம் விருது வழங்கி இவரை கௌரவித்தது.

நாவலர் தர்மகத்தா சபையினரால் நாவலர் மகா வித்தியாலத்திலும் புளியங்கூடல் சிறுவர் நல வாழ்வு நிலையத்திலும் நீர்வேலி ஸ்ரீகணேசா அறநெறிப் பாடசாலையிலும் நடத்தப்பட்ட இளம் சிறார்களுக்கான பண்ணிசை வகுப்புக்களில் கலந்து கொண்டு இறை சேவை புரிந்தார். தற்போது திருஞான சம்பந்தன் இந்து கலாச்சார அமைச்சின் வழிநடத்தலில் நல்லூர் நாவலர் மணி மண்டபத்திலும் அகில இலங்கை திருமுறை மன்றம், கந்தர் மடம், வேதாந்த மடம், ஆகிய இடங்களிலும் பண்ணிசை வகுப்புக்கள் நடாத்தி வருகிறார். இவ்விடங்களில் இளைஞர்கள் மட்டுமன்றி முதியோர்களும் ஆலயங்களில் பஞ்சபுராணம் ஓத நியமிக்கப் பட்டவர்களும் கலந்து கொண்டு பயன்பெற்று வருகின்றனர்.

தென்னிந்திய இசைக்கலைஞர்களுடன் இணைந்து பண்ணிசைக்கச்சேரிகளை இந்தியாவில் நடத்தும் வாய்ப்பு ஈழத்தில் இவர் ஒருவருக்கே கிடைத்தது எனலாம். எஸ். முத்துகந்தசாமி தேசிகர், திருச்சி வே.பாலசுப்பிரமணியம் ஓதுவார், திருவானைக்கா கோவில் திரு.பாண்டியன் ஓதுவார், வயலூர் திருஞானசம்பந்தம் ஓதுவார், பாண்டிச்சேரி ஸ்ரீ திருஞான சம்பந்த ஓதுவார், திருமுறைக்கலாநிதி திருவாவடுதுறை து.சோமசுந்தர தேசிகர் போன்ற தென்னிந்திய பிரபல ஓதுவார்களுடன் இணைந்து பண்ணிசைக்கச்சேரி நடத்தும் பெரும் வாய்ப்பு இவருக்கு கிடைத்தது. இது மட்டுமன்றி தென்னக முன்னனி பக்கவாத்திய இசைக்கலைஞர்களான இசைமணி, நெல்லை எஸ். ஏஸ். ரேங்கப்பா, சங்கீதபூசணம் எஸ்.எ.கோபாலன் வித்துவான் நாகை கணபதி ஐயர், திருச்சி கிருஸ்ணன், தஞ்சாவூர் இராஜேந்திரன், மலைக்கோட்டை ஆறுமுகம் போன்றோர்கள் திரு ஞானசம்பந்தனுக்கு பின்னணி வழங்கியுள்ளனர். இலங்கையின் பிரபல கலைஞர்களும் தற்போது இவருக்கு பக்கவாத்தியம் வாசித்து வருகின்றனர்.

பண்ணிசை வேந்தர் தனது இறை சேவையாக பல பண்ணிசை ஒலிப்பேழைகளை வெளியிட்டு வருகின்றார். இந்து மதத்தின் தன்மையை உலகோர் உணர இவை உதவியுள்ளன. இந்த வரிசையில் 1999ல் "தேவார இசை" மூன்று ஒலிப் பேழைகளும் 2002ல் திருப்பள்ளியெழுச்சி திருவெம்பாவை ஆகிய இரண்டும் "திருமுறைதேனமுது" என்ற ஒலிப்பேழைத் தொகுதியில் மூவர் தேவாரங்களும் வெளி வந்துள்ளன. பல இந்துக்களின் வீடுகளில் பக்தியுடன் இவை தினமும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. இந்து சமய ஸ்தாபனங்கள் ஆலயங்கள் ஒத்துழைப்பு வழங்கினால் ஒலிப்பேழைகள் அவரால் வெளியிட முடியும்.

இலங்கை இந்தியாவிலுள்ள பிரபல இசைக்கலைஞர்களின் பின்னனி இசைப் பங்களிப்புடன் 10இற்கும் மேற்பட்ட தேவார இசை இறுவெட்டுக்களை வெளியீடு செய்துள்ளார். இவரது சேவையைப் பாராட்டி யாழ்ப்பாணம் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தினால் : பண்ணிசைப்



தமிழகம் திருவாவடுதுறை ஆதீனத்தில் சிறப்பாக நடைபெற்ற 22வது குருமூர்த்திகள் அருள் திரு. அம்பலவாணர் தேசிகர் குருபூசைவிழாவின் போது ஆதீன குருமகா சன்னிதானம் சீர்வளர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரியர் சுவாமிகள் இலங்கை பண்ணிசை வாணர் கலாபூஷணம், தேவார இசை மணி, தாவடியூர் கே.எஸ். ஆர். திருஞானசம்பந்தனுக்கு பட்டாடை போர்த்தி, பாராட்டிதழ் வழங்கிக் தங்க பவித்திரம் அணிவித்து, பொற்கிளி வழங்கி அருள்வாழ்த்து நல்குவதை படத்தில் காணலாம்.

புலவர்" 1984 இல் கிருபானந்தவாரியார் சுவாமிகளால் "திருமுறை வித்தகர்" 1999 இல் கைதடி ஸ்ரீசச்சிதானந்த ஆச்சிரமத்தி னால் :அருளிசையரசு" 2001 இல் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் "கலைஞானகேசரி" 2002 இல் சர்வதேச இந்துமத குருபீடத்தினால் : பண்ணிசைக் கலாமணி" கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் "கலாபூஷணம்" யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையினால் "சிவகலாபூஷணம்" மற்றும் "பண்ணிசை வேந்தர்" போன்ற பட்டங்களுடன் 2004, 2006 களில் தமிழ்நாடு திருவாவடுதுறை ஆதீனத்தினால் பொற்கிழி, பட்டாடை, சான்றிதழ்கள், தங்க மோதிரங்கள் என்பன வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. மற்றும் 2005 இல் நல்லூர் பிரதேச செயலகத்தி னால் வழங்கப்பட்ட கலைஞான சுடர் விருதி னையும், 2013 ல் ஆளுநர் விருதையும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

17.03.2004 திருக்கயிலைப் பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து 22வது குருமகா சன்னிதானம் அருள்நிதி அம்பலமான தேசிக மூர்த்திகளது குருபூசை தற்போதைய குருமுதல்வர் சீர்வளர் சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமி கள் தலைமையில் நடைபெற்றது. அன்றைய தினம் வருடாவருடம் இந்து சமயத்திற்கு முக்கிய பங்காற்றும் ஒருவரை பல அறிஞர்களது ஆலோசனையின் பேரில் தெரிவு செய்து அவர்களை கௌரவிப்பது வழமையாகும். இந்த வகையில் ஈழத்தில் இருந்து கே.எஸ். ஆர். திருஞானசம்பந்தன் தெரிவு செய்யப்பட்டு அங்கு அழைக்கப் பட்டார். அவருக்கு பட்டாடை போர்த்தி மோதிரம் அணிவித்து பொற்கிழி வழங்கி கௌரவித்தது. மட்டுமல்லாது அன்றைய தினம் அவரது பண்ணிசைக் கச்சேரி பெருந் தொகையான அறிஞர்கள் பேராசிரியர்கள் ஓதுவார் மூர்த்திகள் முன்னிலையில் நடைபெற வாய்ப்பும் வழங்கினர். அன்று இவருக்கு தஞ்சை சுப்பிரமணியம் புல்லாங் குழலும் தில்லையடி மாரியப்பன் மிருதங்க மும் இசைத்தனர். இந்த கௌரவம் 2000 ல் காஞ்சிபுரம் ஆ. விநாயக முதலியாருக்கும் 2001ல் திருப்புகலூர் அ.அருணாசல தேசிகருக்கும் 2002ல் திருவிடை மருதூர் சம்பந்த தேசிகருக்கும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது

இவ்வளவு பெருமைகளையும் தனதாக்கிக் கொண்ட தாவடியூர் கே.எஸ். ஆர்.திருஞானசம்பந்தன், வண்ணை வைத் தீஸ்வரன் தேவஸ்தானத்தின் ஓதுவாராகவும் இறைசேவைபுரிந்து வருகிறார். இவரை சைவ ஆலயங்கள் இன்னும் அதிகமாக பயன் படுத்தினால் பண்ணிசையின் பெருமை களையும் திருமுறைகளின் மகத்துவத்தை யும் அடுத்த சந்ததிக்கு வழங்கிய அரும் பெரும் பணி புரிந்தவர்களாகச் சைவ உலகு போற்றும் இவருக்கு கிடைக்கும் கௌரவ மும் பாராட்டும் ஈழத்தில் வாழும் ஒவ்வொரு சைவனுக்கும் கிடைத்த கௌரவமாகக் கருதிக் கொள்ளலாம் என்றால் மிகை யாகாது.

# சவாரிக் கலை விற்பன்னர் திரு.பொன்னையா திருபாலசிங்கத்துடனான ஓர் சந்திப்பு

திருஞானகௌரி செல்வா
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம்,
உடுவில்.

சங்கு முழங்கும் சங்குவேலிக் கிராமத்தில் கண்களிற்கு களிப்பூட்டும் காலைப் பொழுதில் 21.05.2015 அன்று வயற்கரையோரமமைந்த அவரது இல்லத்தில் சந்திப்பு இடம் பெற்றது.

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்ற உழவுத் தொழிலின் பெருமை பேசும் இக்கிராமத்தில் அதனையே பிரதான தொழிலாகக் கொண்ட நமசிவாயம் பொன்னையாவிற்கு 28.02.1933 அன்று பிறந்தவரே சவாரிக் கலை வல்லன் திருபாலசிங்கம் அவர்கள். கலை உணர்ச்சிகள் பரம்பரை ஊடாகவே ஊடு கடத்தப்படுகின்றது. அந்த வகையில் இவரது தந்தை பொன்னையா பாட்டன் தந்தை நமசிவாயம் போன்றோரும் இச் சவாரிக் கலையில் சிறந்து விளங்கினார்கள்.


இளமையில் கல்வியினை செவ்வனே பயின்று வரும் நாளில் (SSC வரை) தந்தையாரின் சுகயீனம் காரணமாகவும், சவாரி விடுவதில் கொண்ட அதீத பிரியம் காரணமாகவும் தனது 17வது வயதில் கற்றலில் இருந்து விலகி சவாரியை பொழுது போக்கிற்கான ஒரு சாதனமாகக் கருதி தன்னை அதில் ஈடுபடுத்திக் கொண்டார். அன்று ஆரம்பித்த அவரது சவாரிப் பயணம் 2007 ம் ஆண்டு வரை தொடர்ந்தது.

**சவாரிக்கான காளையும் வண்டிலும்**

பெரும்பாலும் சவாரி வண்டில்கள் மெல்லியதாகவும் கனம், காத்திரம் குறைந்ததாகவும் $7\frac{1}{4}$ சுற்றுடையதாகவும் அமைய வேண்டும். இதன் தயாரிப்பிற்கு முதிரை, மா, பூவரசு, பனை போன்ற மரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஆரம்ப காலத்தில் இவ் உற்பத்தியில் பெயர் போனவர்களாக தெல்லிப்பளையைச் சேர்ந்த வேலுப்பிள்ளையும், சுதுமலையைச் சேர்ந்த இராசுவும் விளங்கினார்கள். தற்போது மூளாய், வட்டுக்கோட்டை பகுதியிலேயே தரமான போட்டிக்கான வண்டில்கள் தயாரிக்கப்படுவதாகவும் கூறினார்.

சவாரிக்கு பயன்படுத்தப்படும் காளைகள் தனித்தன்மை வாய்ந்தவை இவை உழவுக்குப் பயன்படுத்தப்படுவதில்லை. யாழ்ப்பாணக் காளைகள் மூன்று வயதில் (2 பற்கள் கழட்டியபின்) சவாரி ஓடுவதாகவும் வன்னிக்காளைகள் 6,7 பற்கள் கழட்டிய பின்னர் தான் சவாரி ஓடுவதாகவும் கூறினார். எனினும் சவாரி கலைப்பதற்கு சிறந்த காளைகள் மன்னார் மாதோட்டத்தைச் சேர்ந்தவையே என்றும், குறைந்தது 35 அல்லது 36 சவாரிகள் ஓடும் எனவும் கூறினார்.

போட்டிக்கான காளையைத் தானே இனங்கண்டு சிறுவயதிலிருந்தே பயிற்சி வழங்குவதுடன் மற்றவர்கள் பயன்படுத்தி



சவாரிக்கலைஞர் பொன்னையா திருபாலசிங்கம் சவாரிக்கு செல்லும் மாட்டுவண்டிலுடன் காணப்படுகிறார்

இயலாது என கைவிட்டவற்றையும் வாங்கி தனது திறமை மூலம் பயிற்சியளித்து போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளார். இவ்வாறான ஒன்று தான் அவர் வளர்த்த "பஞ்சன்ர கழுகு" என்ற காளை. இதற்காக தானும் சகோதரனான சக்திவடிவேலும் ஆக 50 காளைகள் வரை வளர்த்துப் பயிற்சியளித்துப் பெயரும் சூட்டியிருந்ததாகவும் கூறினார். அக்காலத்தில் (1 பவுணின் = 60 ரூபாவிற்கு விற்கப்பட்டது) 1000 ரூபாவிற்கு கொள்வனவு செய்ய முடிந்த காளைகள் தற்போது 10 லட்சம் வரை விலை போவதாகவும் கூறினார்.

காளைக்கான உணவு பற்றிக் குறிப்பிடுகையில் காலையில் சுடுதண்ணீரும் பின்னர் நெல்லும் மாலையில் நெல்லு மா, தவிடு, வைக்கோல், அறுகம் புல், வைப்பதாகவும் கூறினார். சவாரி செல்லும் முதல் நாள் அதற்கான உணவு ½ வாசியாகக் குறைக்கப்படுவதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

பயிற்றுவிப்பு முறை பற்றி அளாவளாவுகையில் சவாரியல்லாத நாட்களில் ஒரு கிழமையில் ஒரு நாள் சவாரித்திடலுக்கு கொண்டு சென்று இரு தடவைகள் சவாரி கலைப்பதாகவும் மிகுதி ஆறு நாட்களில் அதனை ஓய்வாக இருக்க விடுவதாகவும் கூறினார். ஆனால் இன்றைய காலத்தில் வழங்கப்படும் பயிற்சிகளான வீதியில் கலைத்தல், உழவுக்காகப் பயன்படுத்தல் போன்றன முறையற்ற பயிற்சிகளே என்கின்றார்.

போட்டி முறை பற்றித் தெரிவிக்கையில் மூன்று முறைகள் ஒரு நாளில் ஓடுதல் வேண்டும். போட்டி காளைகளின் தரத்திற்கு ஏற்ப இடம் பெறும்.

நலம் போட்ட காளை – A Group
நலம் போடாத காளை – B Group
2 பற்களுக்கு உட்பட்டது – C Group
பற்கள் இல்லாதது – D Group

என தற்காலத்தில் 4 வகையான காளைகளுக்கு இடையில் போட்டி நடைபெறுகின்றது. ஆனால் முன்னைய காலத்தில் A,B Group வகையான காளைகளுக்கான போட்டியே நடைபெற்றது என்றார். அக்காலத்தில் இலங்கையின் சுதந்திர தினத்தன்று தான் சவாரிப் போட்டிகள் முற்றவெளியில் நடைபெற்று வந்தது என்றும், இது DRO முருகையம்பிள்ளை, இளையாம்பி போன்ற கல்வியறிவாளர்களின் அனுசரணையுடனேயே ஆரம்பமானதாகவும் இங்கு நடைபெறும் போட்டிகளுக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரி அதிபராக இருந்த ஸ்ரீனிவாசம் என்பரே கொடி அசைத்ததாகவும் கூறினார். தற்போது இந்நிலைமை அருகி கொடியடிப்பதில் தவறு, தரம் கெட்ட போட்டிகள், ஊழல்கள் நிறைந்திருப்பதாகவும் சுட்டிக் காட்டினார்.

போட்டியின் போது பூட்டுக் கட்டுவதற்கு ஒருவரும் மாடு பிடிப்பதற்கு இருவரும் சவாரி விடுவதற்கும் சவாரியாளருடன் உதவியாளர் ஒருவருமாக மொத்தம் 5 பேர் வரை தேவைப்படுவதுமான நிலையில் இவர் தனது சாதுரியத் திறமையினால் உதவியாளரின் உதவியை நாடுவதில்லை என மார் தட்டிக் கூறினார்.

**சவாரியும் இவரும்**

முதற்சவாரி பற்றிக் குறிப்பிடுகையில் 1974ம் ஆண்டு மயிலிட்டி கிராம கோட்டடி எனும் சவாரித்திடலில் அச்சுவேலி மக்கள் வைத்த போட்டியில் "கிடாயன் பொச்சன்" என்ற காளையைப் பயன்படுத்தி போட்டியிட்டு வெற்றி கண்டு "சைக்கிள்" ஒன்றையும் பரிசாக பெற்றதாகக் கூறினார்.

ஒரு வருடத்தில் வைகாசி தொடக்கம் புரட்டாதி வரையான காலப்பகுதியில் 10 அல்லது 12 போட்டிகள் நடைபெறுவதாகவும் நடைபெறும் அனைத்துப் போட்டிகளிலும்

பங்கு பற்றி பரிசில்கள் பெற்றிருப்பதாகவும் கூறினார். இவர் 326 யாரை தனது திறமையினைப் பயன்படுத்தி முதற் சுற்றினை 25 செக்கனிலும் இரண்டாம் சுற்றினை 26 செக்கனிலும், 3ம் சுற்றை 27 செக்கனிலுமாக நிறைவு செய்தும் உள்ளார். இவ்வாறாக யாழ்ப்பாண மாவட்டத்தில் நடைபெற்ற போட்டிகளிலும் 1985 இனைத் தொடர்ந்து ஆனையிறவிற்கு அப்பால் (வன்னி, வவுனியா, வவுனிக்குளம்) நடைபெற்ற போட்டிகளிலும் பங்கு பற்றி வெற்றி பெற்று தங்கப்பதக்கம், குடம் குத்துவிளக்கு போன்ற பரிசுப் பொருட்களையும் பெற்றிருப்பதாக கூறினார்.

இறுதிப் போட்டியாக 2007 ம் ஆண்டு கந்தரோடைக் குளத்தடியில் நடைபெற்ற போட்டியில் "கொம்புக்கண்டு" "பஞ்சன்ர கழுகு" என்ற இரு காளைகளையும் பயன்படுத்தி போட்டியில் வெற்றி கண்டுள்ளதுடன் சங்கத்தினால் நடாத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்று வண்டில் ஒன்றையும் பரிசாகப் பெற்றதாகக் கூறினார். எனவே தொகுத்து நோக்குகின்ற போது ஆரம்ப காலங்களில் சுதந்திர தினங்களில் நடைபெற்று வந்த போட்டியானது நாட்டு நிலைமைகள் காரணமாக மருகி தற்போது கிராம மட்டங்களில் நடைபெற்று வருவதையும், சவாரிக் கலை மன்னன் திருபாலசிங்கம் பங்கு பற்றிய அனைத்துப் போட்டிகளிலும் வெற்றியுடனேயே வீடு திரும்பியுள்ளார் என்பதையும் அவருடன் அளவளாவியதில் இருந்து அறிய முடிகின்றது. மேலும் இவர் பெற்ற பரிசுகளின் அளவிற்கு சவாரிக் கலையில் வேறு ஒருவரும் பரிசுகளைப் பெறவில்லை எனக் கூறின் மிகையாகாது.



வலி தெற்கு பிரதேச செயலகமட்ட கழகங்களுக்கிடையிலான விளையாட்டு நிகழ்வின்போது விருந்தினர்கள் பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் அழைத்து வரப்படுகின்றனர்

# எனது மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய வலி தெற்குப் பிரதேச முது இசைக் கலைஞர்கள்

திருமதி.ஞானகுமாரி சிவநேசன்
சங்கீதரத்னம் கலாவித்தகர் கலைஞானகேசரி
வடமாகாண ஆளுனர் விருது பெற்றவர் கலாபூஷணம்

எனது தந்தையார் பிரபல புவியியல் ஆங்கில ஆசிரியரான த. தங்கராசா ஒரு நாடகக் கலைஞர் மட்டுமன்றி ஹார்மோனியம் வாசிப்பதிலும் வல்லவர். ஒரு முறை தென்னிந்திய நாடக நடிகர் தியாகராஜ பாகவதருக்கு ஹார்மோனியம் வாசிக்கும் அரிய சந்தர்ப்பம் கிடைத்தது. அன்று தான் நான் பிறந்தேன். அன்று அவர் பாடிய தேவகாந்தாரியில் அமைந்த ஞானகுமாரி என்று ஆரம்பிக்கும் பாடலின் பெயரை எனக்குச் சூட்டியது மட்டுமன்றி, இசை நடனக் கலைகளையும் கற்பித்து இசைக்கலைஞரா கவும் சிறந்த இசை ஆசிரியராகவும் ஆக்கி வைத்த பெருமை எனது தந்தையாருக்கே உரியது. முதலில் பிரபல நடன ஆசிரியர் ஏரம்பு சுப்பையாவி டம் (இவர் இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.) கதகளியைப் பயின்றேன். அக்கால குடும்ப அங்கத்தவர் களின் எதிர்ப்பின் காரணமாக தொடர்ந்து நடனம் கற்க முடியாது போய்விட்டது. தொடர்ந்து எனது தந்தையாரின் முயற்சி யால் பதினான்காவது வயதில் இருந்து முறையாகக் கர்நாடக இசையைக் கற்க ஆரம்பித்தேன். பதினாறு வயதில் எனது முதல் மேடைக் கச்சேரி ஆரம்பமானது அத்துடன் இசைக் கல்வியும் தொடர்ந்தது. பாடசாலைக்கல்வியும் தொடர்ந்தது. பட்டப் படிப்பும் தொடர்ந்தது. மேடைப்பாடகராக வும், வானொலிப் பாடகராகவும் இருந்தேன். இக்காலகட்டத்தில் இசைப்புலவர் என் சண்முகரட்ணம், வி.உருத்திராபதி, ஐயாக் கண்ணுதேசிகர், திருவிதாங்கூர் MA. கல்யாண கிருஷ்ணபாகவதர், மகாராஜபுரம் சந்தானம் ஆகியோரிடம் இசை நுட்பங் களைக் கற்றுக்கொண்டேன். மேற் குறிப்பிட்ட அத்தனை பேரும் மருதனார் மடத்தில் நடந்து திரிந்த வித்துவான்களாவர் இதனால் வலி தெற்குப் பிரதேசத்துக்குத் தனிப் பெருமை உண்டு. இராமநாதன் கல்லூரி முகாமையாளராக இருந்த நடேச பிள்ளை அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இராமநாதன் இசைக் கல்லூரி (இன்றைய இராமநாதன் நுண்கலைப்பீடம்) ஆரம்பிக் கப்பட்ட இடம் மருதனார்மடமாகும்.

நான் இசைத்துறையில் பிரவேசித்த காலத்திலிருந்து இன்றுவரை பழகிய இசைக் கலைஞர்களுடன் பேசிப்பழகி அவர்கள் இசைக்காற்றிய அளப்பரிய பணிகளை இக்கட்டுரை மூலம் அந்த அனுபவங்களை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்பு கின்றேன்.

வலி தெற்குப் பிரதேசம் ஒரு பரந்த பிரதேசம் குப்பிளான், ஏழாலை, சுன்னாகம், கந்தரோடை, உடுவில், இணுவில் எனப் பல கிராமங்கள் இப்பிரதேசத்திற்குட்பட்டவை. பரந்த விவசாயப் பிரதேசத்தைக் கொண்டுள் ளது. விவசாயப் பண்ணைகளும், சுருட்டுக் கொட்டில்களும், பெரிய பெரிய ஆலயங் களும், சிறிய கிராமிய வழிபாட்டு மடாலயங் களும் நிறையவே காணப்படும் இடம்.

இவ்விடங்கள் தான் கலைகள் வளர்ச்சி அடைவதற்குக் காரணமானவையாகும்.

தோட்டங்களில் வேலை செய்யும் பொழுது ஏற்றப்பாடல்கள், நடவுப்பாடல்கள், என்ற கிராமியக் கலை கர்ணபரம்பரையாக வளர்ச்சி அடைந்தது. சுருட்டுக் கொட்டில் களில் "கிராம்போன்" என்னும் சாதனம் மூலம் சின்னப்பா, தியாகராஜ பாகவதர், சுந்தராம்பாள், எம்.எஸ்.சுப்புலட்சுமி, என்.எல்.வசந்தகுமாரி, பட்டம்மாள், மகா லிங்கம், பெரிய நாயகி, போன்றவர்களின் பாடல்கள் ஒலி பரப்பப்படும் அதைக் கேட்டுக் கொண்டே சுருட்டுத்தொழில் நடை பெறும். அது மட்டுமா பெருங்கோவில்களிலும், சிறிய கோவில்களிலும், விசேட திருவிழா காலங்களில் ஏஜென்டுகள் மூலம் இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட பிரபல நாதஸ்வர தவில் வித்துவான்களின், பிரபல இசைவித்துவான்களின் கச்சேரிகளும் நடைபெறும். மாட்டு வண்டிகளிலும், துவிச் சக்கரவண்டிகளிலும், நடந்தும் அயற்கிராம இரசிகர்கள் ஒன்று கூடி அமைதியாக இரசிப்பார்கள். இதனால் சிறந்த இசை இரசிகர்கள் உருவானார்கள். கதாப் பிரசங்கங்களும் சிறந்த சாஸ்திரிய இசை இரசிகர்களை உருவாக்கத் தவறவில்லை. இதன் பயனாக ஒவ்வொரு கிராமத்திலும் இசைக்கலைஞர்கள் உருவானார்கள்.

இசைப்புலவர் என். சண்முகரட்ணம் அவர்கள் மலேசியாவில பிறந்து கர்நாடக இசை ஆர்வத்தால் இந்தியாவுக்குச் சென்று குருகுல முறைப்படி இசையையும் பயின்று பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தில் "சங்கீத பூஷணம்" பட்டத்தைத் தங்கப் பதக்கத்துடன் பெற்று யாழ்ப்பாணம் வந்து இன்று பல்கலைக்கழகமாக விளங்கும் பரமேஸ்வராக்கல்லூரியில் ஆசிரியராக இருந்தார். அன்னாரின் தலைமையில் இசைத்தமிழ் மன்றம் என்ற ஸ்தாபனம் உருவாகியது. இம் மன்றத்தில் இன்று முன்னணியில் இருக்கும் பல முதுகலைஞர் கள் இசையைக் கற்றார்கள். அதே சமயம் இராமநாதன் கல்லூரி நிர்வாகியாக இருந்த சு.நடேசன் அவர்களும் இராமநாதன் இசைக் கல்லூரியை ஸ்தாபித்து மகாராஜபுரம் சந்தானம் அவர்களை அதிபராக அமர்த்தி இசை வகுப்புக்களை நடத்தினார். இசைத் தமிழ் மன்றம் வருடா வருடம் இன்று மருதனார்மடம் சந்தையாக இருக்குமிடத் தில் பெரிய மேடை போட்டு இசை விழா நடத்தியது. பிரபல இந்திய, இலங்கை வித்துவான்கள் பத்து நாட்களுக்கு குறையா மல் இசை மழை பொழிந்தார்கள்.

ஈழத்தின் பிரபல கலைஞன் இசைப் புலவர் என்.சண்முகரத்தினம் ஒருவரே ஐம்பதாம் ஆண்டுகளில் இந்திய வானொலி யில் முழுநேரக் கச்சேரி செய்து இலங்கை யின் பெருமையை நிலை நாட்டியவர். மார்கழி மாதத்தில் சென்னையில் நடந்த இசை விழாக்களில் பாடி இலங்கையின் பெருமையை உயர்த்தியவர். இன்று மேடை களில் பாடிக் கொண்டிருக்கும் முதுகலை ஞர்கள் பலர் இவரது மாணவர்களேயாவர். அடியேனும் அவர்களில் ஒருவராவேன். எனது பதினாறாவது வயதில் மேடை யேற்றிப் பாடவைத்து மேடைக் கூச்சம் இல்லாமல் செய்ததுடன் தன்னோடு கூடவே பாட வைத்து கச்சேரி நுணுக்கங்களை கற்று தந்த பெரிய மகான். இந்திய மாபெரும் வீணை பாலச்சந்தர் அவர்கள். இவர் பாடிய "ஸாவேரி" இராக ஆலாபனையைக் கேட்டு இதைப் போல இராக நுணுக்கங்களை வெளிப்படுத்தும் இராக ஆலாபனையை இதுவரையும் தான் கேட்கவில்லை எனப் புகழ்ந்தார். பாடும் பொழுது அவருக்கு வயது 60 க்கு மேல்.

இவருடைய மகன் சண்முகராகவன் தந்தையின் மறு அச்சு என்றே கூறலாம்.

இப்பொழுது கொழும்பில் வசிக்கிறார். பத்து வயதில் இருந்து தந்தையாருடன் சரிசமமாக மேடையில் பாடி வந்தார். இவர்கள் இருவரின் இசை ஞானத்தைப் பற்றி எழுதுவதென்றால் ஒரு சில பக்கங்களில் எழுத முடியாது. பல கச்சேரிகளில் இவர்களுடன் சேர்ந்து நானும் பாடியிருக்கின்றேன். அந்த அனுபவங்களை வார்த்தைகளில் வர்ணிக்க முடியாது. மேடையில் கச்சேரி மட்டுமா நடக்கும்? கற்பித்தலும் சேர்ந்து நடக்கும். இன்றும் ராகவனின் இராக ஆலாபனை ஒரு தனித்துவமான இரசனைக்குரியதாக இருக்கும். ராகவனின் மகன் ஒரு இசை அமைப்பாளன் இவரும் இவருடைய சகோதரர்களும் சேர்ந்து அண்மையில் ஒரு இறுவெட்டு வெளியிட்டிருந்தனர். இந்திய சினிமாவில் இசையமைப்பாளராக இருக்கிறார்.

இசைப்புலவரின் அடுத்த மகன் எஸ். பிரணவநாதன் "புறூனேயில்" இருப்பதாக அறிந்தேன். திறமான மிருதங்க வித்துவான் அமைதியான சுபாவம் பிரமாதமான வாசிப்பு அப்பா, மகன்கள், நான், நால்வரும் சேர்ந்து ஓரே மேடையில் கச்சேரி செய்த படம் இன்றும் என்னிடம் இருக்கிறது.

இசைப்புலவருடைய மாணவர்களில் உடுவிலைச் சேர்ந்த விஜயசிங்கம் நல்ல சரீர வசதியுள்ள இசை ஞானஸ்தன். நானும் இவரும் இராமநாதன் நுண்கலைக் கல்லூரியில் கற்றுச் சங்கீத ரத்னம் பட்டம் பெற்றவர்கள். இப்பொழுது வெளிநாட்டில் குடும்பத்துடன் வசித்து வருகிறார். அறுபதாம் ஆண்டுக் காலப்பகுதியில் மலேசியாவிலிருந்து வருகை தந்த "சுதுமலைச் சகோதரிகள்" என்ற பெயரில் பல கச்சேரிகள் செய்த இவர்களும் இசைப்புலவரின் மாணவிகளாவர். அவர்களில் ஒருவர் இறந்துவிட்டார். மற்றவர் பிள்ளைகள் பேரப்பிள்ளைகளுடன் உடுவில் கிராமத்தில் வசித்து வருகிறார். இவருடைய மகளும் ஒரு இசையாசிரியை என்னிடம் கல்வி கற்றவர்.

நான் அன்புடன் அக்கா என்றழைக்கும் குப்பிளானைப் பிறப்பிடமாகக் கொண்ட மாது சிரோன்மணி வேலாயுதம் அவர்களின் நினைவு மகிழ்ச்சியைத் தருகிறது. சிறந்த ஞானம். இளவயதில் நல்ல கம்பீரமான சரீரம் அமைதியான சுபாவம். எப்பொழுதும் புன்னகை பூத்தமுகம். அமைதியாகக் கச்சேரி செய்வார்கள். நாம் இருவரும் இராமநாதன் கல்லூரியில் ஒன்றாகக் கடமையாற்றினோம். எம்மிருவரின் ஒற்றுமையைப் பார்த்து வியக்காதவர்கள் இல்லை என்றே சொல்லலாம்.

குப்பிளான் செல்லத்துரை எனப் பெயர் பெற்ற பண்ணிசை வித்துவானின் கச்சேரி கேட்கும் சந்தர்ப்பம் எனக்கு இள வயதில் கிடைக்கப் பெற்றது. இவ்வூரின் ஆன்மீக வளர்ச்சியை இவரது தேவாரங்களிலிருந்து அறிய முடியும். இவருடைய மாணவிகளான சாரதாதேவி, பாரதாதேவி என்னும் சகோதரிகள் பாடினால் இரு சிங்கக் குட்டி பாடுவது போல் அவ்வளவு கம்பீரமாக இருக்கும் இருவரும் இன்று உயிருடன் இல்லை.

ஏழாலை கிராமத்தைச் சேர்நத வயலின் வித்துவான் சற்குருநாதனை மறக்கவே முடியாது. சிறந்த ஞானஸ்தான் ஹார்மோனியமும் வாசிப்பார். நான் இவர் வாசிப்பதைக்கண்டு பிரமிப்படைந்தேன். என்ன அர்த்தம் என்ன நேர்த்தியான வாசிப்பு தெய்வீக இசை இப்பொழுது உயிருடன் இல்லை ஆயினும், அவருடைய வாசிப்பை மறக்க முடியாது. இவரது மனைவியும் ஒருபாடகி பின்னணிப்பாடகி சுசிலாவின் சரீரம் போன்றது. பிள்ளைகளும் இசைப்பட்டதாரிகள் அவர்களும் பாடுவார்கள்.

இசை உலகம் கந்தரோடையில் வசித்த நடராஜ ஐயரை மறக்கமுடியாது ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் இசை யாசிரியராகக் கடமையாற்றினார். அவர் அமரராகி பல வருடங்களாகி விட்டது. சுருக் கமாக அழைப்பதானால் ஈழத்து சாம்ப மூர்த்தி ஐயர் என்று அழைக்கலாம்.

இணுவில் இயல், இசை வாரிதி அமரர் வீரமணி ஐயரை மறக்கமுடியுமா? தாய் நாடும் சேய் நாடும் அறிந்து புகழப்பட்ட கலைஞர் அல்லவா! இலக்கியவாதி, இசைக் கலைஞன், நாட்டிய கலைஞன் என பன்முகப் படுத்தப்பட்ட கலைஞன். அவர் ஒரு சிறந்த நாடக நடிகர் என்பது தெரியுமா? 1944 ம் ஆண்டு எனது தந்தையார் த. தங்கராஜாவின் நெறியாழ்கையில் உடுவில் மான்ஸ் ஆங்கிலப் பாடசாலையில் மேடை ஏறிய வீரபத்தினி (சிலப்பதிகாரம்) என்னும் நாடகத்தில் மாதவியாக நடித்து நடனமாடி எல்லோருடைய பாராட்டையும் பெற்றார். ஒரு ஆங்கிலத்துரை இந்த பாடசாலையில் பெண்களும் படிக்கிறார்களா? என்று கேட் டார். என்மேல் மிகுந்த அன்புள்ளவர், ஆதலால் அவர் பாடிய பேராதனைக் குறிஞ்சிக் குமரன் புகழ் மாலையை அவரின் பிரசன்னத்துடன் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் குறிஞ்சிக் குமரன் கும்பாபி ஷேகத்தில் பாடி அரங்கேற்றினேன். சுருக்க மாகக் குறிப்பிடுவதானால் இவர் ஒருவரகவி யாவர்.

இணுவில் V.உருத்திராபதி எனது ஆரம்பகுருவாவர். இவரை எனது முதல் குருவாக தேர்ந்தெடுத்த எனது தந்தை யாரைப் பாராட்ட வேண்டும். இவர் இல்லா விட்டால் என் பாதை வேறு வழியில் சென்றி ருக்கும். ஆசிரியருக்குரிய அத்தனை சிறப்பம்சங்களும் பொருந்தப் பெற்றவர். பொறுமை இவரது முக்கிய அணிகலன். ஆரம்பத்தில் நான் இசை கற்பதை விரும்ப வில்லை. அதனால் அவர் கற்பிக்க வீடுவரும் பொழுது எவ்வளவோ குழப்பங்களைச் செய்வேன். ஆனால் எனது குரு எனக்காகக் காத்திருந்து அன்போடு பாடம் சொல்லித் தந்ததை என்னால் மறக்கமுடியாது. இன்று நினைத்தால் ஒரு நல்ல உள்ளத்தை வருத்தி விட்டேனே என்று உளம் கசிவேன். அவரிட மிருந்து இசையுடன் பொறுமையும் கற்றுக் கொண்டேன். எனது இசை அரங்கேற்றத்தில் முதல் மரியாதை அவருக்குரியதாக இருந்தது. எனக்குக் கிடைக்கும் அத்தனை பெருமையும் எனது தந்தையாருக்கும் குருவுக்கும் உரியது. இவர் ஒரு நாதஸ்வர வித்துவான் மட்டுமன்றி சிறந்த புல்லாங் குழல் வித்துவானுமாவார். வயலின் வித்து வான் ஹார்மோனியமும் வாசிப்பதில் வல்லவர் ஹார்மோனியம் வாசித்துத்தான் எனக்குப் பாடம் சொல்லித் தருவார்.

எனது அரங்கேற்றம் உடுவில் திறந்த வெளிஅரங்கில் 1969ம் ஆண்டு யூலை மாதம் நடந்தது. எனது முதல் குருவின் மகன் இராதாகிருஷ்ணன் தான் எனக்கு வயலின் வாசித்தார். எனது நான்கு குருமார்களான V.உருத்திராபதி, N.சண்முகரத்தினம், திரு ஐயாக்கண்ணுதேசிகர், திருவிதாங் கூர் வைணிக வித்துவான், MA கல்யாண கிருஷ்ணபாகவதர் புடைசூழ்ந்திருக்க எனது அரங்கேற்றம் ஜாம் ஜாம் என்று நடை பெற்றது. அரங்கேற்றத்தில் மதிப்புரை செய்த வர்கள் என்னைப் பாராட்டியது மட்டுமன்றி இராதாகிருஷ்ணனையும் பாராட்டினார்கள். பின்னர் பல கச்சேரிகளில் எனக்குப் பக்க பலமாக இருந்தார்.

கலாபூஷணம் வாமதேவன் சாவகச் சேரியைப் பிறப்பிடமாகக் கொண்டவர் தற்சமயம் இணுவிலில் வசித்து வருகிறார். சிறந்த இசை ஞானஸ்தன் மட்டுமல்ல, நல்ல இசை ஆசிரியராவார். இவரிடம் கற்ற பல மாணவர்கள் இலங்கை பூராவுமே ஆசிரியர்

களாக இருந்து இசை வளர்க்கிறார்கள். நானும், இவரும் ஐயாக்கண்ணு தேசிகரிடம் இசைக் கல்வியைப் பெற்றுக் கொண்டோம். நல்ல காத்திரமான, கனதியான குரல் வளமுள்ளவர்.

எழுபத்தைந்து வருடங்களைப் பூர்த்தி செய்த வட இலங்கை சங்கீத சபையின் நிரந்தர இடம் மருதனார்மடமாகும். கந்தரோடையின் மைந்தன் காலம்சென்ற சமூக ஜோதி தற்பரானந்தத்தை மறக்க முடியாது. அவரின் அயராத முயற்சியால் இன்று இந்த சபைக்கு ஒரு நிரந்தர காரியாலயமும் சிறந்த கலையரங்கும் கிடைக்கப் பெற்றுள்ளது. இது எமது பிரதேசத்துக்கு பெருமைக்குரிய விடயமாகும். அடுத்து யாழ் பல்கலைக்கழகத்தின் நுண்கலைப்பீடமும் நிரந்தரமாக இப் பிரதேசத்தில் அமைந்துள்ளது. இவை இரண்டும் இசைத்துறைக் காற்றும் தொண்டு இப் பிரதேசத்தின் மகிமையை எடுத்துக்காட்டுகிறது. இணுவில் இளந்தொண்டர் சபை நாடக வளர்ச்சிக்கு முக்கியம் அளித்தாலும் மிருதங்கம், வாய்ப்பாட்டு, வயலின், சித்திரமும் வடிவமைப்பும் போன்ற கலைகளை வளர்த்து வந்தது.

இவ்விதமான இசைப்பரம்பரைகள் வாழ்ந்த இந்த வலி தெற்குப் பிரதேசம் மேலும் மேலும் வளர வேண்டும் என்று வேண்டிக் கொண்டு இக்கட்டுரையை முடிக்கிறேன்.

பொது நூலகம்

# காசிவாசி செந்திநாதையர் பிறந்த ஊர், கலையும் தமிழும் சைவமும் வளர்ந்த மண் - குப்பிளான் கிராமம்

## கிராமத்தின் முந்திய நிலையும் பிந்திய நிலையும்

சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்
ஓய்வு நிலை உதவிப்பணிப்பாளர்
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

சிவபூமியாகிய ஈழமணித் திருநாட்டிலே யாழ்ப்பாணக் குடாநாடு ஞானபூமியாக மிளிர்கின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் உடுவில் பிரதேச செயலகத்தின் பரிபாலனத்தின் கீழ் சிறந்த செம்மண் வளமுள்ள பிரதேசமாகக் குப்பிளான் கிராமம் திகழ்கின்றது. பல ஆண்டு காலமாக உழவுத் தொழிலையே பிரதானமான தொழிலாகச் செய்யும் விவசாயிகளைக் கொண்ட கிராமமாகவே எங்கள் கிராமம் காணப்பட்டது. மண்ணை நம்பி வாழ்ந்த நமது மக்கள் சுயமரியாதையுடனும், கௌரவத்துடனும் பிறரிடம் கையேந்தாத வாழ்வினை வாழ்ந்து வந்தார்கள் கிராமமே ஒரு குடும்பம் போல இயங்கியது.

அனைவரும் ஒற்றுமையாக, மனித நேயம் மிக்கவர்களாக, ஆன்மீக உணர்வுள்ளவர்களாக, நிறைந்த மொழிப்பற்று உடையவர்களாக, கலைகளிலே மிகுந்த ஈடுபாடு கொண்டவர்களாக, அறவிழுமியங்களை மதிப்பவர்களாக வாழ்ந்து வந்தார்கள் எமது நாட்டிலே ஏற்பட்ட உள்நாட்டு யுத்தத்தினால் எங்கள் கிராமம் முழுவதுமே சிதைக்கப்பட்டது. மண்ணை நம்பி வாழ்ந்த நமது மக்கள் அகதிகளாக, ஏதிலிகளாக, பரதேசிகளாக அலையத் தொடங்கினார்கள். கட்டுக்கோப்பாக வாழ்ந்த நமது மக்களின் வாழ்வு சீரழிய ஆரம்பித்து உள்நாட்டிலும் புலம் பெயர் நாடுகளிலும் எமது கிராம மக்களில் பலர் சென்று குடியேறி வாழ்ந்து வருகின்றார்கள். மண்ணின் மைந்தர்களில் இருபத்தைந்து வீதமானோர் கூட இன்று நமது மண்ணில் இல்லை.

எந்த நாட்டில் வாழ்ந்தாலும் நமது மக்கள் எங்கள் கிராமத்தின் மீது பற்றுக் கொண்டவர்களாகவே வாழ்ந்து வருகின்றார்கள். சிதைக்கப்பட்ட கிராமத்தைப் புனரமைப்பதில் அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்பட்டு வருகின்றார்கள். ஆலயங்கள், பாடசாலைகள், சனசமூக நிலையம், விளையாட்டு மைதானம், மயானம் போன்ற சமுதாய நிறுவனங்கள் அனைத்தையும் புனர்நிர்மானம் செய்வதில் பெரும் பங்காற்றி வருகின்றார்கள்.

### சித்தாந்த கலாநிதி மகான் காசி வாசி செந்திநாதையர்

சைவத்தின் காவலராக இருந்த ஆறுமுகநாவலரின் மாணவரும், நாவலரால் ஸ்தாபிக்கப் பெற்ற வண்ணார் பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையின் மாணவனாகவும், ஆசிரியராகவும் இருந்த மகான் செந்திநாதையர் எங்கள் கிராமத்திலேயே திரு அவதாரம் செய்தார். வடமொழி தமிழ், ஆங்கிலம், ஆகிய மும்மொழிகளிலும் பாண்டித்தியம் மிக்க செந்திநாதையர் அவர்கள் காசியிலே பத்துவருட காலம் தங்கியிருந்து இந்து சமயத்தின் மூலநூல்களை எல்லாம் ஐயம் திரிபறக் கற்றிருந்தார். பல ஆராய்ச்சி நூல்களை எழுதி வெளியிட்டார். தேவாரம், வேதாசாரம், கந்தபுராண

நவநீதம், நீலகண்ட பாஷியம், சைவவேதாந் தம், போன்ற பல அரிய நூல்களை சைவத் தமிழ் உலகிற்கு வழங்கிய அறிஞராகத் திகழ்ந்தார். தமிழர்களின் சிந்தனையில் முகிழ்த்த உயர் தத்துவமாகிய சைவசித்தாந் தத்தின் சிறப்பினை ஆய்வு நூல்களாக எழுதி வெளியிட்ட பெருமை இவரையே சாரும். 1983 ஆம் ஆண்டு குப்பிழான் சோதி விநாயகர் ஆலய முன்றலில் இவருடைய திரு உருவச் சிலையை நிறுவித் தமது மண்ணிற்குப் புகழ் சேர்த்த மைந்தனைக் கௌரவப்படுத்தி யுள்ளார்கள்.

### இசைவல்லார் செல்லத்துரை

தமிழிசையாகிய பண்ணிசையை ஈழமணித் திருநாட்டில் வளர்த்த பெருமை இசைவல்லார் செல்லத்துரை அவர்களையே சாரும். தெய்வத் தமிழாகிய திருமுறைப் பாடல்களைப் பண்ணோடு பாடுவதில் வல்லவராகத் திகழ்ந்தார். ஈழமணித் திருநாட்டில் உள்ள பல பிரசித்தி பெற்ற ஆலயங்களில் பண்ணிசைக் கச்சேரிகளை நடாத்தி இசைப்பிரியர்கள் பலருடைய பாராட்டுதலையும் பெற்றுள்ளார். தமிழ் நாட்டின் தூத்துக்குடியில் நடைபெற்ற பண்ணிசைப் போட்டி ஒன்றில் தண்டபாணி தேசிகருடன் போட்டியிட்டுப் பாடி வெற்றி கொண்டு தங்கப்பதக்கத்தினை பெற்றுக் கொண்டதோடு "இசைவல்லார்" என்ற பட்டத் தையும் பெற்றுக்கொண்டார். இசையில் ஈடுபாடு கொண்ட வேறு பலர் எங்கள் கிராமத்தில் வாழ்ந்தார்கள். வேலையா ஆசிரியர், சொக்கலிங்கம், இரத்தினம் என்போர் இசையோடு பாடல்களைப் பாடு வதில் வல்லவர்களாகத் திகழ்ந்தார்கள். சிதம்பரம் நடராஜப்பெருமானுடைய சந்நிதானத்தில் பஞ்சபுராணத்தினை ஓதும் பேற்றினைப் பெற்ற கதிர் சுந்தரலிங்கம் பெரும் இசைக்கலைஞராக இன்றும் உலக மெல்லாம் பவனி வந்து கொண்டிருக்கிறார். இசைப்பிரியர்களாகப் பண்ணோடு திரு முறைப் பாடல்களை ஓதும் பலர் இன்றும் நமது கிராமத்தில் வாழ்ந்து கொண்டிருக்கி றார்கள்.

### நாடகக் கலை

முத்தமிழில் ஒன்றாகிய நாடகக் கலையில் நமது கிராம மக்கள் தொன்று தொட்டு ஈடுபாடு கொண்டவர்களாகக் காணப்படுகிறார்கள். அண்ணாவியார் பீதாம்பரம் நாட்டுக் கூத்துக் கலைக்காகத் தன்னையே அர்ப்பணித்து வாழ்ந்தார். இவர் பல நாடகங்களை அரங்கேற்றினார். இவ ரால் அரங்கேற்றப்பட்ட நாட்டுக்கூத்துக்களில் "கிருஷ்ணலீலா" மிகவும் சிறப்பு வாய்ந்த தாகும். இந்தக் கூத்துக்களைப் பார்த்து ரசிப்ப தற்காக கிராம மக்கள் அனைவரும் ஒன்று கூடுவார்கள். திறந்த வெளிகளிலே மேடை கள் அமைக்கப் பெற்றே இவை நடைபெறும்.

### கிராமத்தின் சமய நிலை

பிற சமய ஊடுருவல்களுக்கு இடம் கொடுக்காமல் தனித் தமிழ்ச் சைவக் கிராமமாகவே எங்கள் கிராமம் தொன்று தொட்டு நிலவி வந்தது. அந்நிய மதத்தினர் காலத்திற்குக் காலம் பல சலுகைகளைக் காட்டி மத மாற்ற முயற்சிகள் செய்த போதும் நம்மவர்கள் யாரும் அதற்கு ஈடுபடவில்லை. நமது நாட்டில் ஏற்பட்ட யுத்த சந்தத்தினால் கலையும் தமிழும் சைவமும் வளர்ந்த செம்மண் பிரதேசங்களான எங்கள் கிராமங் கள் பலவும் சிதைக்கப்பட்டன. இந்தச் சந்தர்ப் பத்தினைப் பயன்படுத்திப் பிற மதத்தவர்கள் இங்கே ஊடுருவுவதற்கு முயற்சிகள் செய்கிறார்கள். நமது கிராம மக்களின் ஒன்றுபட்ட எதிர்ப்பினால் அவர்களுடைய முயற்சிகள் செயல் வழக்கம் பெறவில்லை. விக்கினேஸ்வரப் பெருமானின் அருட் பார்வைக்கு உட்பட்ட கிராமமாகவே எங்கள் கிராமம் காணப்படுகிறது. கற்கரைக் கற்ப விநாயகராலயம், சொக்கர் வளவு சோதி விநாயகர் ஆலயம் ஆகிய இரண்டும் மகோற்

சவம் நடைபெறும் ஆலயங்களாக உள்ளன. முத்தர் வளவு பிள்ளையார் ஆலயம் என்று சிறிய ஆலயம் ஒன்றும் காணப்படுகிறது. 1933ஆம் ஆண்டிலிருந்து மகோற்சவப் பெருவிழா கற்பக விநாயகராலயத்தில் நடைபெற்று வருகிறது.

கிராமத்தில் உள்ள சகல நிறுவனங் களும் விநாயகப் பெருமானின் பெயரிலேயே இயங்கி வருகின்றன. பாடசாலை விக்னேஸ் வரா மகாவித்தியாலயம் என்றும், நூல் நிலையம் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் என்ற பெயர்களிலேயே இயங்கி வருகின்றன. கன்னிமார் அம்பாள் ஆலயம், காளி அம்பாள் ஆலயம், சிவகாமி அம்பாள் ஆலயம் (சமாதி கோயில்) ஆகிய அம்பிகை யின் ஆலயங்களும் கேணியடி வைரவர், தைலங் கடவை வைரவர், பூங்கொடி வைரவர், ஆல யங்களும் வீரபத்திரர் ஆலயம் ஒன்றும் எனப் பல சைவ ஆலயங்கள் உள்ள கோயில் கிராமமாகவே குப்பிளான் கிராமம் மிளிர்கின்றது.

**கல்வி**

நமது கிராமத்தில் வாழ்ந்த பல சைவப் பெரியார்களின் கூட்டு முயற்சியினால் 1928 ஆண்டு விக்கினேஸ்வரா மகாவித்தி யாலயம் நிறுவப்பட்டது. எங்கள் அறிவால யத்தில் ஆரம்பக் கல்வியைப் பெற்ற பலர் நமது நாட்டிலும், புலம் பெயர் நாடுகளிலும் பெரும் பதவிகளில் இருந்து பணியாற்றி வருகின்றார்கள். நமது நாட்டில் ஏற்பட்ட உள் நாட்டு யுத்தத்தினால் எங்கள் பாடசாலை யின் பிரதான மண்டபமும் முற்றாகச் சிதைக் கப்பட்டது. இம் மண்டபம் பாடசாலைக்கு மட்டுமல்லாது கிராமத்தின் பொது நிகழ்வு களுக்கு உதவும் மண்டபமாகவும் காணப் பட்டது. 1995 ஆம் ஆண்டு இடம்பெற்ற வலி காமம் இடப்பெயர்வின் கிராமமக்கள் மீண்டும் திரும்பிய பொழுது செழிப்பு மிக்க எங்கள் கிராமம் காடுகளாகவே காட்சியளித் தது. பாடசாலையின் பிரதான மண்டபத்தை புனரமைத்து தருமாறு கிராம மக்கள் விடுத்த வேண்டுகோள் எதனையும் அரசாங்கம் செவிமடுக்கவில்லை.

பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலத் திலே கல்வி கற்ற திரு கந்தையா கிருஷ்ணர் என்பவர் தொண்ணூறு வயதைத் தாண்டிச் சிங்கப்பூரிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார். சிதைக்கப்பட்ட எங்களுடைய அறிவாலயத் தைப் புனரமைக்க வேண்டும் என்று விரும் பிய அவர் புலம் பெயர் நாடுகளில் வாழும் நம்மவர்களையும் ஒன்றிணைத்துக் கொண்டு பெரும் முயற்சியில் ஈடுபட்டார். பெருந் தொகைப் பணத்தை தானும் வழங்கியிருந் தார். மண்டபம் பூர்த்தி செய்யப்பட்டு 2013 இல் திறப்பு விழாவும் மிகச் சிறப்பாக நடை பெற்றது. எங்கள் பாடசாலையில் ஆரம்பிக் கப்பட்ட கல்வியைப் பெற்ற நமது கிராமத்த வர்கள் பலர் மருத்துவர்களாக, பொறியிய லாளர்களாக, கணக்காளராக, நிர்வாக அதி காரிகளாக, பல்வேறு பதவிகளில் இருந்து நமது நாட்டிலும் புலம் பெயர் நாடுகளிலும் பணியாற்றி வருகின்றார்கள்..

**சித்த புருஷர் ஆனந்தசடாட்சர்குரு சரவணச்சாமியார்**

பக்தர்கள், ஞானிகள், சித்தர்கள், எனப் பலரும் நமது கிராமத்தில் வாழ்ந்தார் கள். இன்றும் வாழ்கின்றார்கள். பக்தி நெறி யில் நின்று இறைவனை வழிபடும் நமது கிராம மக்கள் அசைக்க முடியாத தெய்வ நம்பிக்கை கொண்டவர்களாக வாழ்ந்து வரு கின்றார்கள். "ஆடுவதும் பாடுவதும் ஆனந்த மாக நினைத்தேடுவதும் நின் அடியார் செய்கை பராபரமே" என்ற தாயுமான சுவாமிகளின் வாக்கிற்கு அமைய ஆடியும் பாடியும், அழுதும் தொழுதும் இறைவனை வழிபட்டு வரும் அடியார்கள் பலரை இன்றும் நமது கிராமத்தில் காணலாம்.

கடவுளைக் காண முயல்பவர்கள் பக்தர்கள் என்றும் கடவுளைக் கண்டு தெளிந்தவர்கள் சித்தர்கள் என்றும் மீனாட்சி சுந்தரனார் கலைக்களஞ்சியக் கட்டுரைத் தொகுதியில் குறிப்பிட்டுள்ளார். எங்கள் கிராமத்தைச் சேர்ந்த சித்த புருஷராகிய ஆனந்தசடாட்சர குரு சரவணைச்சாமியார் ஈழத்துச் சித்த புருஷர்களில் ஒருவராகப் போற்றப்படு கின்றார்கள். பாரத நாட்டிலிருந்து சிவகாமி அம்பாளின் விக்கிரகத்தினைக் கொண்டு வந்து பிரதிஸ்டை செய்து நாள் தோறும் வழிபாடு செய்து வந்தார். ஊர் மக்களிடம் பிடி அரிசி சேர்த்து புண்ணிய தினங்களில் ஆலயத்தில் அன்னதானமாக செய்து வந்தார்.

தியான நிஷ்டையில் இருந்த பொழுதே அவருடைய உயிர் உடலை விட்டுப்பிரிந்தது. 1938 ஆம் ஆண்டு பங்குனி மாதம் முதலாம் திகதி சுவாமிகள் மகாசமாதி அடைந்தார். இவர் சமாதி நிலை அடைந்ததைக் கேள்விப்பட்ட மக்கள் பலர் யாழ்ப்பாணக் குடா நாட்டின் பல கிராமங்களில் இருந்தும் வருகை தந்து அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தினார் கள். இவருடைய சமாதி வைக்கப்பட்ட இடத் திலேயே சிவகாமி அம்பாளுக்கு கோயில் அமைக்கப்பட் டுள்ளது.

### மண்ணின் மைந்தர்களாகிய கவிஞர்கள் எழுத்தாளர்கள்

சித்தாந்த இரத்தினம் பொறியியலாளர் க.கணேசலிங்கம் சிறந்த கவிஞராகவும், சைவசமயம் சார்ந்த நூல்கள் பலவற்றையும் கற்றறிந்த பேரறிஞராகவும் காணப்படு கின்றார். இற்றைக்குப் பல வருடங்களுக்கு முன்பு இவருடைய “எண்ணக்கோலம்” என்ற கவிதைத் தொகுதி நூல் எங்கள் கிராமத்தில் வெளியிடப்பட்டது. இவர் சைவசமயம் சார்ந்த பல அரிய நூல்களை அரங்கத்திலும் தமிழிலும் எழுதி வெளியிட்டுள்ளார். சிறுகதை எழுத்தாளராகிய குப்பிழான் ஐ. சண்முகன் சிறந்த எழுத்தாளர். இவருடைய சிறுகதைத் தொகுதியாகிய கோடுகளும் கோலங்களும் என்ற நூலுக்குச் சாகித்திய அக்கடமி பரிசு கிடைத்தது. கட்டுரை ஆசிரியரான இவர் சமயம், கல்வி, சார்ந்த பல கட்டுரைகளையும் நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார் அரசியல் ஆய்வாளரும் சட்டத்தரணியுமான ஜோதிலிங்கமும் அரசியல் சார்ந்த பல நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

### நிறைவுரை

கிராமங்கள் தான் ஒரு நாட்டின் இதயம் போல அமைந்துள்ளன என்பது பாரத நாட்டுத்தேச பிதா மகாத்மா காந்தியடிகள் கூற்றாகும். கிராமங்களின் வளர்ச்சியில் தான் ஒரு நாட்டின் வளர்ச்சி தங்கியுள்ளது. எமது பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் பேணிப் பாதுகாத்து அடுத்த தலைமுறையிடம் ஒப் படைப்பதில் கிராமங்களில் வாழும் மக்களே முதன்மை இடம் பெறுகின்றார்கள். இனப் பற்று, மொழிப்பற்று, சமயப்பற்று, நிறைந்த எமது கிராம மக்களை யாரும் விலைக்கு வாங்க முடியாது. இவர்களுக்கு நடிக்கத் தெரியாது. உள்ளொன்று வைத்துப் புற மொன்று பேசும் தன்மை இவர்களிடம் இல்லை.

தர்மத்திற்கு முதன்மை கொடுத்து அறவிழுமியங்களைப் பேணியே நமது கிராமத்தின் முன்னோர்கள் வாழ்ந்து வந் தார்கள். புறச் சூழ் நிலைகளின் தாக்கத்தி னால் இன்று நமது மூதாதையர்கள் வாழ்ந்து வந்த பண்பாட்டு கோலங்களிலே சிறிய சில சிதைவுகள் ஏற்பட ஆரம்பித்து விட்டன.

**“குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடிக்
குருடும் குருடும் குழிவழுமாறே”**

என்று தவயோகி திருமூலநாயனார் குறிப்பிடுவதைப் போன்று நமது மண்ணில் பிறந்து வாழும் அடுத்த சந்ததியினர் நெறி தவறிப் போகாமல் சீரான வாழ்வு வாழ்வ தற்கு விநாயகப் பெருமானின் திருவருள் துணை கிடைக்க வேண்டுமென்று உளப் பூர்வமாக பிரார்த்திக்கின்றேன்.

# வலிகாமம் தெற்கு பிரதேச செயலகப் பிரிவுக்குள் கலை இலக்கிய வளர்ச்சி

பண்டிதை திருமதி.த.மகாலிங்கம்
செந்தமிழ்ச்சோலை
அங்களப்பாய், இணுவில் கிழக்கு.

இலக்கியங்கள் காலத்தின் கண்ணாடி என்பார். உலகின் பல்வேறுபட்ட காலங்களிலே நடந்த சம்பவங்களை மக்களின் வாழ்க்கை வரலாறுகளை இலக்கியங்களின் ஊடாக நாம் அறிய முடிகிறது. இவ்வகை இலக்கியங்கள் அவயவிக் கொள்கை, அறநெறிக்கொள்கை, உணர்ச்சிக் கொள்கை, அழகியற் கொள்கை, சமுதாயக் கொள்கை, என்ற ஐந்தின் அடிப்படையிலேயே மலர்ந்திருக்கின்றன. இலக்கிய வரலாற்றைப் ச. பவானந்தம்பிள்ளை அவர்கள், கால்ட்டுவெல் ஐயர் அவர்கள், ஐயங்கார் அவர்கள், எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள், மு.வரதராசன் அவர்கள், வி.செல்வநாயகம் அவர்கள், எவ்.எக்ஸ்.சி. நடராசா அவர்கள் என்போர் ஆராய்ந்து பாகுபாடு செய்திருக்கிறார்கள்.

இந்த வகையிலே வலிதெற்கு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பிரதேசத்திலே கலை இலக்கியங்கள் வளர்ச்சி பெற்ற திறனை ஆராய்ந்து வருங்கால சமுதாயம் அறிய வைப்பதும், எம் பின்னவர்கள் கலை இலக்கியங்களை வளர்த்துச் செல்ல வைப்பதும், அறிஞர்களின் தலையாய கடனாகும். இவ்வரிய செயற்பாட்டைப் பிரதேச செயலகங்கள் முன்னெடுத்துச் செல்ல முற்பட்டமை மிக மிக வரவேற்கத்தக்கது.

வலிதெற்குப் பிரதேச செயலகப் பிரிவிற்கு உட்பட்ட கிராமங்களில் வாழ்ந்த, வாழ்கின்ற அறிஞர்கள் கலை இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய ஆற்றும் சேவையை ஆராய்வது மிக மிக கஸ்டமான ஒன்றாகும். என்றாலும் அறுபதுகளுக்கு முன் வாழ்ந்த அறிஞர்களின் பணியை ஆராய வேண்டியிருக்கிறது. இதற்கு ஒவ்வொரு கிராமங்களிலும் வாழும் அறிஞர்கள் தாம் வாழும் கிராமத்தின் கலை இலக்கிய வளர்ச்சியை ஆராய்வார்களேயானால் எமது ஆய்வு மிகவும் பூரணத்துவம் பெறும். இந்த வகையிலே கலை வளர்ச்சி, இலக்கிய வளர்ச்சி என்ற இருதுறைகளிலே அறுபதுகளுக்கு முன்னும் பின்னும் உள்ள காலப் பகுதியை மையமாகக் கொண்டு ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும். (ஆனால் இது பூரணத்துவமான ஆய்வல்ல)

இலக்கிய வளர்ச்சியிலே.....

வலிதெற்கு பிரதேச செயலக ஆட்சிப் பிரதேசத்திற்கு உட்பட்ட பகுதியிலே வாழ்ந்த வாழ்கின்ற அறிஞர்களின் பணியினை நோக்குவோம். இவர்களுள்

**இணுவில் அம்பிகைபாக உபாத்தியாயர் அவர்கள்**

இவர் சைவாசாரம் உடையவர் தினமும் சிவபூசை செய்தவர் தணிகைப் புராண உரையாசிரியர் தமிழ் அறிவு மிக உடையவர். அம்பிகைபாக வித்தியா சாலையை ஸ்தாபித்து நடாத்தியவர். அவர் ஸ்தாபித்த பாடசாலை இன்று இடம்மாறி வளம் பல பெற்று இணுவில் இந்துக்கல்லூரியாகத் திகழ்கின்றது.

**புன்னாலைக் கட்டுவன் தி. ஞானசேகர ஐயர் அவர்கள்**

இப் பெரியார் தற்போது சைவா சாரத்துடன் தமிழ்ப் பணியாற்றுகிறார் இவரது ஆக்கங்களாக

1. ஞானம் – கலை இலக்கியப் பத்திரிகை இது கலாநிதி ஆய்வு செய்பவர்களுக்குப் பாடப் பகுதி யாக அமைந்துள்ளது.
2. குருதிமலை– மதுரை அமெரிக்க மிசன் கல்லூரி பாடநூலாகும்.
3. லயத்துச் சிறைகள்– சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது.
4. பயண இலக்கியம் – அவுஸ்ரேலிய புதிய சுவடுகள் சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது
5. ஞானசேகரம் } சிறுகதை
6. காலச்சுவடு } சிறுகதை
7. அல்சேசனும் ஒரு பூனைக்குட்டியும் – சிறுகதை (சப்பிரகமுக பல்கலைக்கழகப்பாடநூல்)
8. ஈழத்துப் புலம் பெயர் இலக்கியம் (918 பக்கங்களைக் கொண்டது)
9. ஈழத்துப் போர்க்கால இலக்கியம்

எனப்பல ஆக்கங்களைத் தந்து தமிழ் உலகிற்கும் மாணவ சமுதாயத்திற்கும் நல்விருந்து அளித்துள்ளார்கள்.

**இணுவில் சின்னத்தம்பிப் புலவர் அவர்கள்**

இவர் வாழ்ந்த காலம் ஒல்லாந்தர் இலங்கையை ஆட்சிபுரிந்த காலம். சைவ ஆலயங்கள் இடிக்கப்பட்டும் தெய்வத் திருவுருவங்கள் மறைக்கப்பட்டும் இருந்த காலம் புலவர் அவர்கள் அரச கட்டளையை மீறி சிவசின்னம் அணிந்து இறைவழிபாடு செய்தமையால் அரச தண்டனைக்கு உட் படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். வெளியிலே அவருக்குக் காவற்படை. உள்ளே இருந்து தமது மனம், மொழியால் உள்ளம் உருக தன்னைச் சிறை மீட்டருளும் படி சிவகாமி அன்னையைப் பாடி வேண்டினார்.

ஆத்தாளே எங்களனைவரையும் பூத்த வண்ணம் காத்தாளே.....

என்று தொடங்கி ஆறாவது பாடலிலே

**துப்பூட்டு மென்றனது துன்னார் சிறைப்படுத்தும்**
**அப்பூட்டுத் தீயப் பதைப்பார் சிறைமீட்டிருந்தாய்**
**இப்பூட்டுத் தீயவென் சிறையை நீக்கியருள்**
**செப்பூட்டும் பொற்றாட் சிவகாம சுந்தரியே**

என்று பாட சிறைக்கதவு பெரிய சத்தத்துடன் திறந்தது. காவலன் திகைத்தான். அவனிடம் சம்பவத்தைக் கேட்ட எல்லோரும் அதிசயித்தனர். புலவர் எவ்வித கட்டுப்பாடு மின்றி வெளியே போக அனுமதிக்கப் பட்டார். வெளியிலே வந்த புலவர் கந்தப் பெருமான் மீதும் சிவகாமி அம்பாள் மீதும் திருவூஞ்சல் பாடியதுடன் பல தனிப்பாடல் களும் பாடினார்.

இது புலவரின் பக்திச் சிறப்பையும் அம்பாளின் அருட்சிறப்பையும் காட்டுகிறது.

**சேர் பொன்இராமநாதன் அவர்கள்**

இவர் அரசியற் துறையில் மட்டு மன்றி தமிழ், சைவம், எனும் இரண்டிற்கும் நற்பணியாற்றியதோடு சமூகப்பணியும் புரிந்துள்ளார்.

1. சாகுந்தல வெண்பா
2. செந்தமிழ் இலக்கணம்– எழுத்தும் சொல்லும்
3. சைவப்பெண்பிள்ளைகள் படிப்பதற் கென்று சுன்னாகம் இராமநாதன் கல்லூரியையும்
4. ஆண்பிள்ளைகள் படிப்பதற்கென்று பரமேஸ்வராக் கல்லூரியையும் தாபித் தார். இப்பாடசாலை இன்று பல்கலைக் கழகமானது.

**இணுவை பண்டிதர் வித்துவான் திரு.இ. திருநாவுக்கரசு அவர்கள்**

இவர் சிறந்த ஆசிரியரும், அதிபரு மாவார். கல்விப் பணிப்பாளர் இ.சுந்தர

லிங்கம் அவர்களுடைய அண்ணனார். சைவத்தமிழ்ச் சொற்பொழிவாளர். முருகப் பெருமான் கானகத்தே வள்ளிஅம்மை யாரைக் கண்டு காதலித்து அழைத்து வந்தபோது அச்செய்தி அறிந்த தெய்வ நாயகியார் திருக்கதவம் அடைத்து நிற்க பயமாகவும் பணிவாகவும் மன்றாட்ட மாகவும் வேண்டிப் பாடிய திருக்கடை திறப்புப் பாடல் இவராற் பாடப்பட்டது. சமஸ்கிருத அறிவும் மிக உடையவர்.

**இணுவையின் இலக்கிய வளர்ச்சி**

இங்கு பல பண்டிதர்கள் இருந் தார்கள், இருக்கிறார்கள் 1959-1962 வரை இணுவில் மத்திய கல்லூரியில் தமிழ் வளர்ச் சிக்காக பாலபண்டித வகுப்பு நடாத்தப் பட்டது. இதனை வித்துவான் த.நடராசா, வித்துவான் வே.நல்லதம்பி வித்துவான் கந்தசாமி (தமிழவேள்) நடத்தினார்கள் இவ் வகுப்பிலே சித்தியடைந்தோர் மேலும் கற்று பண்டிதர்களாக இருக்கிறார்கள்.

1. பண்டிதை திருமதி நா.தேவராசா ஆசிரியை. இவர் கல்வி ஆலோசகராக இருந்து ஓய்வு பெற்றுள்ளார்.
2. பண்டிதை திருமதி மகேஸ்வரி (இறப்பு)
3. பண்டிதர் திரு. விநாயகமூர்த்தி
4. பண்டிதை திருமதி வை. கணேசபிள்ளை ஆசிரியர் இவர் அறநெறிப்பாடசாலைப் பாதுகாவலர் இணுவில் சின்னாச்சி அம்மன் மீது திருப்பள்ளி எழுச்சி பாடியுள்ளார். ஓய்வு நிலை ஆசிரியர்
5. பண்டிதை திருமதி த. மகாலிங்கம் (இக்கட்டுரை ஆசிரியர்) சுதுமலை ஈஞ்சடி வைரவர் மீதும் சங்குவேலி சித்திர வேலாயுத சுவாமி மீதும் கிளிநொச்சி கனகபுரம் நாகபூசணி அம்மன் மீதும் திருவூஞ்சல் பாடியிருக்கிறார். தொடர்ந்து பால பண்டித வகுப்புக்களையும், பேராதனை பல்கலைக்கழக, யாழ் பல்கலைக்கழக B.A வெளிவாரி மாணவர்களுக்கு தமிழ் போதிக்கின்றார். இணுவில் மத்திய கல்லூரியில் தமிழ் ஆசிரியையாக இருந்து ஓய்வு நிலையி லுள்ளார்.

**வித்துவான் கந்சாமி ஆசிரியர் (தமிழ் வேள்)**

இவர் நடுகல் வழிபாடு என்ற நூலை எழுதியுள்ளார். இது சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது. சிறந்த தமிழ் அறிஞர் (இறப்பு)

**சிதம்பர திருச்செந்திநாதன்**

இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர் தற்போது உடுவிலில் வாழ்ந்து வருகிறார். சிறந்த சிறுகதை எழுத்தாளர் சிறு வயதில் இருந்தே பல சிறுகதைகளை எழுதி வருகிறார். அவற்றுள் வெட்டுமுகம், அம்மா வுடையதும் என்னுடையதும்.

**கவிஞர் ச. வே. பஞ்சாட்சரம் ஆசிரியர் அவர்கள்**

இவர் இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் தமது கவிதைத் திறமை யினாலே சாகித்ய மண்டலப் பரிசு பெற்ற தோடு கவிஞர் என்ற விருதும் பெற்றுக் கொண்டவர். இன்னும் இலக்கணப்பூங்கா என்ற பெயரில் இலக்கண நூல் எழுதி யுள்ளார். இது ஆறுமுகநாவலர் அவர்கள் எழுதிய இலக்கணச் சுருக்கத்திற்கு வழி நூலாக அமையக்கூடிய வகையில் அமைந் துள்ளது. க.பொ.த உயர்தரத்தில் தமிழ் படிக்கும் மாணவர்களுக்குச் சிறந்த வழி காட்டியாக இலகுவாக மாணவர்கள் புரிந்து கொள்ளக்கூடியதாக அமைந்திருக்கிறது.

இன்னும் பஞ்சாட்சரம் பாடல்கள்

பஞ்சாட்சரம் கவிதைகள்

என்ற தலைப்பிலே மரபுக் கவிதைகளும் புதுக்கவிதைகளும் பாடி யுள்ளார். சிறந்த எழுத்தாளர்.

நெருப்பு வேள்வி (சிறுகதை)
இந்தத் தீபாவளி தேவைதானா? (சிறுகதை)
வண்டி முன்னாலே மாடு பின்னாலே (சிறுகதை)
கூலிக்கு வந்தவன் (நாவல்)

இவ்விதமாக அறுபதிற்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். இன்னும் அவரது மதியூகமும், கைவண்ணமும் மிளிரப் பல ஆக்கங்கள் வெளிவர இருக்கின்றன.

### பேராசிரியர் சந்திரசேகரம் அவர்கள்

இவர் சிறந்த விரிவுரையாளர் இணுவிலை வதிவிடமாகக் கொண்டவர். "கல்வித்தத்துவம்" என்னும் ஆய்வு நூலைத் தந்துள்ளார். இந்நூல் ஆசிரிய பயிற்சிக் கலா சாலையிலே கற்கும் மாணவர்களுக்கும் பல்கலைக்கழகங்களிலே தமிழ் கற்கும் மாணவர்களுக்கும் இன்னும் தமிழ் ஆய்வு செய்பவர்களுக்கும் பலருக்கும் பயன்தரக் கூடியது.

### கலைத்துறையிலே திரு சிவகுமார் அவர்கள்

இவர் மருதனார்மடத்திலே இருக்கின்றார். சிறந்த சிற்ப, சித்திர, ஓவிய, வடிவமைப்புத் துறையிலே வல்லவர். இவருடைய ஆக்கங்கள் எல்லாம் இவர் தம் நுண்மான் நுளை புலனின் நுட்பமே என்றுதான் சொல்ல வேண்டும். பாடசாலைகளிலே சித்திர பாடம் பயிலும் மாணவர்கள் அவர் வீட்டிற்குச் சென்று அவரது கைவண்ணங்களைப் பார்வையிட்டுச் செல்கின்றார்கள். இவர் பணிவளர்வதாக.

### கந்தரோடை பண்டிதர் கலாநிதி க. வைத்தீஸ்வரக்குருக்கள்

தமது நூற்று ஓராவது வயதிலே 24.4.2015ல் இறைபதம் எய்தியவர். காரைநகர் ஈழத்துச் சிதம்பர ஆலயத்திலே பெரும் பணி ஆற்றியவர். தமிழுக்குப் பெரும்பணி செய்தவர். இவரை மக்கள் யாவரும் அறிவர்.

### கலை வளர்ச்சி


உடுவிற் பிரதேசத்திலே கலைத் துறை மிகமிகப் பூரணத்துவம் அடைந்திருப்பதை அவதானிக்க முடிகிறது. இங்குள்ள ஆலயங்கள் கட்டிட, சிற்ப, சித்திர, ஓவிய எழிலுடன் அமைந்திருப்பது கண்கொள்ளாக் காட்சியாகும். தேர்களிலே நுண்மாண் நுழைபுலனோடு சிறியதும் பெரியதுமான சிற்பங்கள் பார்த்து இரசித்தற்குரியவை. தேர்களிலே கோபுரங்களிலே புராண இதிகாச வரலாறுகள் ஓவிய சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. ஆலய கட்டிட அமைப்புகள் மூலஸ்தானத்திலே கோயில் கொண்ட மூர்த்திக்கு ஏற்றபடி அமைந்துள்ளன. சிற்ப ஓவியங்கள் உயிர் ஊட்டப் பட்ட வண்ண அமைப்புக்கள் நுண்மாண் நுளைபுலனுடன் நுணுகி ஆராய்வார்க்கு இவை தெள்ளிநிற் புலனாய்ச் சிந்தைக்கு விருந்தளிப்பன.


இன்னும் மஞ்ச அமைப்புகளும் நுணுக்கமான செயற்பாடுகளை உடையன கண்ணுக்கு விருந்தளிப்பன. இணுவில் முருகப்பெருமானது பெருமஞ்சம் 1905 ஆம் ஆண்டிலே வெள்ளோட்டம் ஓடியது. இந்திய இலங்கை கைதேர்ந்த நிபுணர் குழுவாலே அமைக்கப்பட்டது கண் கொள்ளாக் காட்சியாகும். இதுபோல் மணிக்கோபுரங்களும் நிபுணர்களது மதி நுட்பத்தைப் புலப்படுத்துகின்றன. ஒவ்வோர் வீடுகளிலுமே கலை வண்ணம் காண முடியும்.

கலை வளர்ச்சிக்கு பாடசாலைகள் மிகமிக ஆர்வம் காட்டுகின்றன. இசை, நடனம், நாடகம், கூத்து, போட்டி நோக்கோடு நடப்பதை அவதானிக்க முடிகிறது. இன்னும் மருதனார்மட நுண்கலைப்பீடம் இசை,

நடனம், யாழ், வீணை, மிருதங்கம், சித்திர மும் வடிவமைப்பும் என்ற துறைகளைத் துறைதேர்ந்த அறிஞர்களால் போதிக்கப் பட்டு வளமூட்டி வருகின்றமை வரவேற்கத் தக்க ஒன்றாகும்.

**கலைவாழி தமிழ்வாழி காசினியும் மிகவாழி**
**நிலையான சைவநெறி நீடுசிவாகமங்கள் வாழி**
**மலையன்ன செயலாற்றி மாவுடுவை செயலகமும்**
**நிலையான புகழ் பெற்று நீடூழி வாழி வாழி**





**இனுவில் திருப்பதி வெங்கடேஸ்வரர் ஆலயத்தில் காணப்படும் திருமாலின் அவதாரங்கள்**

# வலி தெற்கு பிரதேச செயலக பிரிவின் கீழ்வரும் எழுத்தாளர்கள்

பா.பாலச்சந்திரன்
மயிலணி சுன்னாகம்

எமது பெருமை மிக்க உடுவில் பிரதேசத்தில் பல அறிஞர்கள் இலக்கிய, சமய சம்பந்தமான ஆக்கங்களை செய் துள்ளனர். சின்னத்தம்பிப்புலவர், குமாரசாமி புலவர், வரதபண்டிதர், சதாசிவஐயர். இராவ் பகதூர் சி.வை.தாமோதரம்பிள்ளை, ஆகி யோர் முதலாக இன்றுவரை பலர் அதை செய்து வருகின்றனர். அவர்களின் விபரங் களை பூரணமாகப் பெறுவது மிகமிக சிரமமான காரியமாக உள்ளது, அதை செய்ய பல மாதங்கள் தேவை. சிறிய அவகாசமொன்றில் அதைசெய்வது கடின மான காரியமாகும். இருப்பினும் இயன்ற வரை அதைச் செய்வதற்கு முயலுகின்றேன்.

முதலில் சுன்னாகத்தில் வாழ்ந்த, வாழ்கின்ற படைப்பாளிகளை இயன்றவரை பதிவுசெய்ய முயல்கிறேன்.

வரதபண்டிதர்---இவர் காசியில் இருந்து ஒல்லாந்தர் காலத்தில் சுன்னாகம் வந்து வாழ்ந்த அரங்கநாதஐயருக்கு மகனாக 1656ல் பிறந்தார். இவர் தந்தை யாரிடமும், பிறரிடமும் கல்வி கற்றார். சிவ ராத்திரி புராணம், ஏகாதசிபுராணம், அமுதாகரம், பிள்ளையார்கதை, கிள்ளை விடு தூது, போன்ற நூல்களையும், தலங்கள் மீது பாக்களையும் பாடியுள்ளார். பிள்ளை யார் கதையை சுன்னாகம் சந்திரசேகர பிள்ளையார் கோவிலில் அரங்கேற்றினார். 1716வரை வாழ்ந்தார்.

முத்துகுமார கவிராயர் ---- சுன்னாகம் பகுதியில் அம்பலவாணருக்கு மகனாக1780இல் பிறந்தார். இவர் இரு பாலைசேனாதிராசா முதலியார் காலத்தவர். திருக்கு மடக்கு சிலேடைகளும் பாடுவதில் வல்லவர். ஞானக்கும்மி, யேசுமதபரிகாரம், சுன்னாகம் ஐயனார் ஊஞ்சல், நடராசர் பதிகம் ஆகியவற்றை பாடியுள்ளார். இவர்தான் சி.வை. தாமோதரம் பிள்ளையின் தமிழ் ஆசிரியர் ஆவர். 1851ல் இறந்தார்.

முருகேச பண்டிதர் இவர் சுன்னாகம் தெற்கை சேர்ந்த பூதப்பிள்ளை அவர்களின் மகனாவார். 1829ல் பிறந்த இவர் சுன்னாகம் சிவசங்கர பண்டிதரிடமும், உடுப்பிட்டி சிவ சம்பு பண்டிதரிடமும் பயின்றவர். இதன் பயனாக இலக்கணப் பிழை கண்டுபிடிப்பதில் புலியாகத் திகழ்ந்தார். இவரிடம் கல்வி கற்ற வர்கள் சுன்னாகம் குமாரசாமிப் புலவர், ஊரெழு சரவணமுத்துப் புலவர், மானிப்பாய் முத்துதம்பிப்பிள்ளை ஆகியோர். இவர் சுன்னாகம் மயிலணி திண்ணைப் பாட சாலையில் கற்பித்தார். இவர் பல ஊஞ் சல்கள், பதிகங்கள் பாடியுள்ளார்.

சுன்னாகம் அ.குமாரசாமிப்புலவர்--- சுன்னாகம் என்றால் குமாரசாமிப் புலவர் எமது ஞாபகத்திற்கு வருமளவிற்கு அவருக்கு அங்கு பிரசித்தமுண்டு.இவர் அம்பலவாணரின் மகனாவார். இவருக்கு நமச்சிவாய தேசிகர் வித்தியாரம்பம் செய்

தார். மல்லாகம் ஆங்கில பாடசாலையில் சில ஆண்டுகள் கற்றபின் முருகேச பண்டிதரிடமும், நாகநாத பண்டிதரிடமும் நூல்களைக் கற்றார். ஆறுமுக நாவலரிடமும் தமது சந்தேகங்களை கேட்டுத்தெளிந்தார். இவர் ஏழாலையிலும், நாவலர் பாட சாலையிலும் கால்நடையாக சென்று கற்பித்தார். இவர் பல நூல்களை இயற்றியுள்ளார். 23 கோவில்களுக்கு பக்தி பாக்களையும், 13 தமிழ் இலக்கிய செய்யுள் நூற்களையும், 5 இலக்கண நூல்களுக்கு உரைகளும், இலக்கண ஆராய்ச்சி நூல்களையும் எழுதி வெளியிட்டார். 10 நூல்களை பதிப்பித்துள்ளார்.

தென்கோவை பண்டிதர் ச.கந்தையாபிள்ளை----1880ல் பிறந்த இவர் சின்னப்பாபிள்ளை, சரவணமுத்துப் புலவர் ஆகியோரிடம் கல்வி கற்றார். சுண்டுக்குளி பரியோவான் கல்லூரியில் கற்றுத்தேறினார். மட்டக்களப்பு சரவணமுத்துப் புலவரின் உறவினரிடமும் கற்று அங்கு தலைமை ஆசிரியராக பணிபுரிந்தார். பின் கொழும்பு கல்விக்கந்தோரில் பரீட்சகராக கடமை புரிந்தார். அங்கு ஆங்கில ஆசிரியர் கலா சாலையில் தமிழ் ஆசிரியராகவும் கடமையாற்றினார். பின்பு இந்தியா சென்று வேதாந்த தெளிவு பெற்று, கந்தரோடையில் வந்து தங்கினார். புதுவை விநாயகர் ஒருபா ஒருபது பதிகம், எட்டு ஊஞ்சல் பாக்கள் என்பன இயற்றியதோடு, பல நூல்களுக்கு முன்னுரை எழுதியுள்ளார். வித்தகம் பத்திரிகையும் நடத்தினார். 1958ல் உறவினர்களை அழைத்து "நான் அறுபத்து மூவரிடம் போகிறேன்" எனக்கூறி கைகூப்பி கும்பிட்டு இறைவனடி சேர்ந்தார்.

முகாந்திரம் சதாசிவ ஐயர்---- இவர் அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.1882ல் தியாகராசா ஐயா அவர்களுக்கு மகனாக பிறந்தார். ஆரம்ப, இடைநிலைக் கல்வியை இலங்கையில் முடித்து, பின், பட்டப்படிப்பிற்காக கல்கத்தா சென்று எம்.ஏ பட்டம் பெற்றார். பின்னர் மல்லாகம் ஆங்கிலப் பாடசாலையில் ஆசிரிய பணி செய்தார். பின்னர் கந்தரோடை, ஆங்கிலப் பாடசாலை, கொழும்பு ஆசிரியர் கலாசாலை, ஆகியவற்றில் பணியாற்றி, மட்டக்களப்பில் உயர்கல்வி அதிகாரியானார். அங்கு வசந்தன் கவிதிரட்டு நூலை வெளியிட்டார். பின்னர் யாழ்ப்பாணம் வந்து சுன்னாகத்தில் குடியேறி, சு.நடேசபிள்ளையுடன் சேர்ந்து ஆரியதிராவிட பாஷாபி விருத்திச் சங்கத்தினை ஆரம்பித்தார். இதனால் பல பண்டிதர்கள் உருவானார்கள். அத்தோடு கலாநிதி என்னும் பத்திரிகையையும் நடத்தியதில் பல கட்டுரைகளை எழுதினார். சுன்னாகத்தில் நிலம் வாங்கி அங்கு வசித்து வந்த இவர், அந்தணப் பிள்ளைகளின் சமய வளர்ச்சிக்காக பிராசினப் பாடசாலையை நடத்தி வந்தார். பல வடமொழி. நூல்களை தமிழுக்கு மொழி பெயர்த்தார்.1950ல் இறைனவடி சேர்ந்தார்.

கு.முத்துகுமாரசாமிப்பிள்ளை---- இவர் குமாரசாமி புலவரின் இரண்டாவது மகனாவார், 1900ல் பிறந்தவர். இலங்கையில் ஆரம்ப, இடைநிலை கல்வியை முடித்துக் கொண்டு இந்தியா சென்று பட்டம் பெற்றார். பின்பு ஆசிரியராகி, அதிபருமானார். ஓய்வு நேரங்களில் கவிதை, கட்டுரைகள் எழுதினார், நூல் ஆய்வுகளும் செய்தார். தெய்வங்கள் மீது கோவைகளும், மணிமாலைகள், அந்தாதி என்பனவும் பாடியுள்ளார் பல நூல்களையும் தொகுத்துள்ளார்.

அம்பலவாணப்பிள்ளை----இவர் குமாரசாமிப்புலவரின் மூத்தமகன் 1895ல் பிறந்தவர். இவர் தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் புலமை உடையவர். ஆசிரியத் தொழில் செய்தவர். இவர் பலகட்டுரைகள் எழுதியவர்; அதோடு நூல்களையும் எழுதி

யுள்ளார், மொழிபெயர்ப்புகளும் செய்த துடன் குணரத்தினம் அவர்களுடன் சேர்ந்து பேச்சு சிங்கள நூலொன்றயும் செய்துள்ளார்.

ச அம்பிகைபாகன்--- இவர் 1908ல் சங்கரப்பிள்ளைக்கு மகனாக, சுன்னாகத்தில் பிறந்தார். இவர் ஒரு பட்டதாரி அதிபர். 32 வருடங்கள் வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபராக இருந்த இவர் ஒரு கட்டுரை எழுத்தாளர். யாழ் பல்கலைக்கழக பேரவையிலும் இருந்தவர்.

கலாகீர்த்தி பேராசிரியர் சி. தில்லை நாதன் ---- இவர் சுன்னாகத்தில் பிறந்தவர். திருஞானசம்பந்த வித்தியாசாலையிலும், ஸ்கந்தவரோதயா கல்லூரியிலும் பயின்ற வர். பேராதனை பல்கலைக் கழகத்தில் தழிழ் பேராசிரியராக பணியாற்றியவர். ஈழத்து தமிழ் இலக்கியம் போன்ற பல நூல்களை யாத்துள்ளார். நாடகங்களை எழுதி நெறி யாள்கை செய்துள்ளார். அண்மையில் "தேசத்தின்கண்" என்னும் அதியுயர் விருது அரசினால் வழங்கப் பட்டது.

சி.சிவசரவணபவன் (சிற்பி)- இன்று மூத்த எழுத்தாளராக, இலக்கிய வாதியாக திகழும் இவர் பல பெருமைகளுக்குரியவர். இவர் கந்தரோடை சிவசுப்பிரமணிய ஐயரின் மகனாவார். இவர் சுன்னாகத்தில் ஆரம்ப, இடைநிலை கல்வியையும்,இந்தியாவில் பட்டப் படிப்பையும் மேற்கொண்டார். இவர் நடத்திய "கலைச்செல்வி" பத்திரிகை இன்று இருக்கும் மாபெரும் எழுத்தாளர்களை உருவாக்கிய பெருமைக்குரியது. புகழ்பூத்த அதிபராகிய இவர் பல பரிசில்களையும், பாராட்டுக்களையும், விருதுகளையும் பெற்றவர். பலசிறுகதை தொகுப்புகளை வெளியிட்டுள்ளார். அண்மைக்காலங்களில் கவிதைத் துறையில் ஈடுபட்டுவருகின்றார்.

மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் ---- இவர் குமாரசுவாமி புலவரின் மகன் முத்துக்குமார சுவாமி அவர்களின் புதல்வி யாவார். இவர் இலங்கையில் ஆரம்ப, இடை நிலைக் கல்வியை முடித்து,இந்தியாவில் பட்டப்படிப்பை மேற்கொண்டார். பின் திருநெல்வேலி, கோப்பாய் ஆசிரிய கலா சாலைகளில் விரிவுரையாளராக கடமை யாற்றினார். இராமநாதன் கல்லூரியில் அதிபராகவும் கடமையாற்றினார். பல் கலைக்கழக பேரவையிலும் அங்கம் வகித்த வராவர். இவர் கட்டுரைகள் வரைவதில் வல்லவர். பேச்சுக்கலையில் மிகவும் கை தேர்ந்தவர்.

ஐ. இராசரத்தினம்(ஐயன்னா)---- இவர் "ஐயன்னா" என்றபுனை பெயரில் எழுதினார். இவர் சுன்னாகத்தில் பிறந்து, கந்தரோடை கந்தையா வித்தியாசாலை யிலும், மயிலணி சைவ மகாவித்தியாலயத் திலும் கற்றவர். (SSC) ஆங்கிலத்தில் கற்பதற் காக ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் சேர்ந்து கற்றுத்தேறினார். திருநெல்வேலியில் ஆசிரிய பயிற்சியை முடித்து, சைவப்புலவர், பாலபண்டிதர் ஆகிய பரீட்சைகளில் இவர் சித்தியடைந்த போதும், லிகிதர் பரீட்சையில் சித்தியடைந்து, கச்சேரியில் லிகிதராக கடமையாற்றினார். பின் அதை துறந்து, தமிழ்ப்பற்றின் நிமித்தம் ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டார். நாடகம், கவிதை, ஆகியதுறைகளில் ஈடுபட்டார்.

ஆசிரியர் அ.தம்பித்துரை---- 1932ல் சுன்னாகம் கிழக்கில் பிற்ந்தார்.இவர் ஓர் உடற்பயிற்சி ஆசிரியர், சிங்களத் திரைப் படத்திலும் நடித்தவர், தமிழ்ப் பற்று மிக்கவர். சிறுகதை, கட்டுரை ஆகியவை எழுதுபவர். இவரின் ஆக்கங்கள் வலம்புரி, மற்றும் கனடா நம்நாடு, உதயன் ஆகிய பத்திரிகை களில் வெளிவந்தன.

சி.பொன்னம்பலம் (ஆதவன்) - 1917ல் கந்தரோடையில் பிறந்தவர். ஆரம்பக் கல்வியை கந்தையாவித்தியாசாலையிலும், உயர் கல்வியை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியிலும் கற்றார். சித்திரம், நடனம், நாடகம் ஆகியதுறைகளில் துலங்கிய இவரது கட்டுரைகள், சிறுகதைகள் என்பன இலங்கை, இந்திய பத்திரிகைகளில் வெளி வந்துள்ளன.

பெரி.சண்முகநாதன் ---- இவர் சுன்னாகத்தில் பிறந்து, ஸ்கந்தவரோதயா வில் உயர்கல்வி கற்கும் போதே கலைச் செல்வி, தேசாபிமானி போன்ற பத்திரிகை களில் எழுதியவர். சிறுகதை, கட்டுரை, மரபுக் கவிதை என்பன எழுதியவர். சில மொழி பெயர்ப்பு வேலைகளும் செய்துள்ளார்.

பொ.சண்முகநாதன் (சண் அங்கிள்) இவர் 1939ல் சங்குவேலியில் பிறந்தவர். தற்போது கந்தரோடையில் வாழ்கின்றார். இவர் ஆரம்ப கல்வியை சங்குவேலி சுப்பிர மணியம் வித்தியாலயத்திலும், உயர் கல்வியை மானிப்பாய் இந்துக்கல்லூரி யிலும் கற்றவர். இவர் ஓர் எழுதுவினைஞர் ஆவார். இவர் நகைச்சுவை, அரசியல் கட்டுரைகள் வரைபவர் சிறுகதை, குறு நாவல் என்பனவும் எழுதுபவர்; வானொலி ஆக்கங்களும் எழுதியுள்ளார். உதயன் பத்திரிகையில் பத்தித் தொடருக்கு எழுதி வந்தார். அந்த தொடருக்காக விருதும் பெற்றுள்ளார். அத்துடன் பல நூல்களையும் வெளியிட்டுள்ளார். இவர் 2008ல் - கலாபூஷண விருது வழங்கி கௌரவிக்கப் பட்டார். அத்துடன், ஞானஏந்தல், கலாச்சுடர் ஆகிய விருதுகளும் வழங்கப்பட்டுள்ளன.

சபா புஸ்பநாதன்---- இவர் 1949ல் சுன்னாகத்தில் பிறந்தார். மயிலணி சைவ மகா வித்தியாலயம், ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆகியவற்றில் கற்று, கட்டுப்பத்தை பல்கலைக் கழகத்தில் பொறியியலாளர் பட்டம் பெற்றார். இவர் கட்டுரை, சிறுகதை ஆகியவை எழுதுபவர். அதற்காக பல பரிசில்கள் பெற்றுள்ளார்.

சு.ஸ்ரீகுமரன்-(இயல்வாணன்)--- இவர் சுன்னாகம் தெற்கில் பிறந்தவர். இவர் ஆரம்பக் கல்வியை சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலையிலும், உயர் கல்வியை யூனியன் கல்லூரி, மல்லாகம் மகா வித்தி யாலயமாகிய இரண்டிலும் கற்றவர். இவர் பயிற்றப்பட்ட ஆசிரியராவார் மேலும் கலை மானி, பட்டப்பின் கல்வி டிப்ளோமா. முது கல்வியியல்மானி ஆகிய பட்டங்களை பெற்று, தற்போது கல்வி நிர்வாக பரீட்சை யிலும் தேறியுள்ளார். இவர் பலதுறைகளில் மிளிரும் ஒருவராவார். சிறுகதை, நாவல், கவிதை, விமர்சனம், சிறுவர் இலக்கியம், ஊடகத்துறை, புகைப்படத்துறை, பத்தி எழுத்து ஆகிய துறைகளில் தடம் பதித்தவர். உள்நாட்டிலும், உலகலாவிய ரீதியில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியது டன், பல நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

கலாபூஷணம் சு.துரைசிங்கம்---- இவர் 1939ல் கந்தரோடையில் பிறந்தவர். தமிழ்க்கந்தையா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியையும், கந்தரோடை ஸ்கந்தவரோத யக் கல்லூரியில் உயர்கல்வியையும் கற்றார். இவர் ஒரு சிறந்த அதிபராவார். சிறுவயது முதல் கவிதை, நாடகம், சிறுகதை, கட்டுரை ஆகிய துறைகளில் ஈடுபட்டு வருகின்றார். பத்திரிகை, வானொலி ஆகிய ஊடகங் களில் இவரது ஆக்கங்கள் வெளிவந்தன. பல நூல்களையும், ஒலி நாடாக்களையும் இவர் வெளியிட்டுள்ளார். இவரது ஆக்கத்தி ற்கு கலாசார அமைச்சு சான்றிதழும், வெகு மதியும் வழங்கி கௌரவித்தது. 2004ல் கலாபூஷண விருதும் வழங்கப்பட்டது. வலம்புரியில் உதவியாசிரியராகவும் பணி புரிந்தவராவார்.

சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகா லிங்கம் இவர் இளைப்பாறிய விரிவுரை யாளர் பலாலி ஆசிரியர் கலாசாலை, இளைப்பாறிய பணிப்பாளர் கலாச்சார அலுவல்கள் திணைக்களம், ஆசிரியர் யாழ்ப்பாணக் கல்லூரி (வட்டுக்கோட்டை) இவர் பேச்சுத் துறையிலும் எழுத்துத் துறையிலும் (கட்டுரை) மிகப் பிரபல மானவர். குப்பிளான் பகுதியைச் சேர்ந்தவர் இவரின் சேவை மிகப்பெரிதாகும்.

பிரம்மஸ்ரீ சி.கணேஸ்ஐயர்---- இவர் புன்னாலைக்கட்டுவனில் பிறந்தவர். இவருடைய உருவச்சிலை ஆயக்கடவை பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக உள்ளது. இவரது சேவைகள் பன்முகப் பட்டவை. பத்து துறைகளில் தனது திறமை யைக் காட்டியவர். தமிழ்க் கடல், தொல் காப்பியத்துக்கு உரை விளக்கம் செய்த மகான். ஆயக்கடவை பிள்ளையாருக்கு திருவூஞ்சல் பாடியுள்ளார். பல நூல்கள் செய்துள்ளார்.

சிறில் சுதந்திரன்---இவர் ஒரு ஓய்வு பெற்ற அதிபர். எழுத்து. அறிவிப்பு துறைகளில் சிறந்து விளங்குகிறார். அத்துடன் சமூகப் பணிசெய்வதிலும் மிகவும் ஈடுபாடுடையவர். கட்டுரை, சிறுகதை, கவிதை என்பனவற்றில் ஆர்வம் மிக்கவர்.

இராவ்பகதூர் சி.வை.தாமோதரம் பிள்ளை--- 1832ல் ஏழாலைக் கிராமத்தில் பிறந்தார். மயிலங்காட்டு திண்ணைப்பள்ளிக் கூடத்தில் கற்றார். பின்பு சுன்னாகம் முத்துக்குமார கவிராயரிடமும், வரதராச பண்டிதரிடமும் கற்ற பின் தெல்லிப்பளை அமெரிக்கமிஷன் பாடசாலையில் ஆங்கிலம் கற்றார். பின் எட்டு வருடங்கள் வட்டுக் கோட்டை ஆங்கிலக் கல்லூரியில் கற்றுத் தேறினார், பின்னர் இந்தியா சென்று அங்கே பி.எ.பி.எல் பரீட்சைகளில் தேறினார். இவர் ஆசிரியர், பத்திரிகை ஆசிரியர், நீதிபதி ஆகிய பதவிகளை வகித்தவர். 1895ல் சென்னை சர்வகலாசாலையில் செய்த சேவைக்காக அரசு இவருக்கு "இராவ் பகதூர்" பட்டம் வழங்கி கௌரவப்படுத்தி யது. 1876ல் ஏழாலையில் ஓர் பாட சாலையை நிறுவினார். இவர் பல நூல் களைப் பதிப்பித்தார், இவரது சேவைகள் மிக மிக பெரியவை. இவரது உருவச்சிலை ஏழாலை அம்பாள் தேவஸ்தான வளவில் 2012ல் நிறுவப்பட்டது. இவர் சிறந்த கவிஞர், பதிப்பாளர், உரையாசிரியருமாவார்.

சித்தாந்தப் பேரறிஞர் ஐ.பொன் னையா அவர்கள் - இவர் 1867ல் ஏழாலை யில் பிறந்தார். சிறுவயதிலேயே தேவி உபாச கராக விளங்கினார். மருத்துவம் இவர்களின் குடும்பக் கலையாகும். 1910ல் சடைவரத சுவாமிகளின் வழிகாட்டலுடன் சாதுசங்க மடம் ஸ்தாபிக்கப்பட்டது. சுவாமி இவருக்கு அருளானந்தசிவம் என தீட்சா நாமம் சூட்டி னார். இவர் கட்டுரை, கவிதை என்பனவற்றில் வல்லவர். இவர் ஓர் அச்சகம் நிறுவி சஞ்சிகை வெளியிட்டார். திருவூஞ்சல்கள் பாடினார். இவர் வடமொழிப் புலமையும் உடையவர். அதனால் உபநிடதத்திற்கு உரையும் செய்துள்ளார். 1919ல் ஏழாலை சைவ சன் மார்க்க வித்தியாசாலையை ஸ்தாபித்தார். இவர் வைத்திய நூல்களை ஆக்கியும், பதிப்பித்தும் அருந்தொண்டு செய்தார்.

சித்தாந்த வித்தகர் மு.ஞானப்பிர காசம் அவர்கள் - இவர் 1911ல் ஏழாலையில் பிறந்து, ஆசிரியத் தொழில் செய்துகொண்டு, தமிழுக்கும், சைவத்திற்கும் தொண்டாற்றிய பெருமகனாவார். விஞ்ஞானப் பட்டதாரி யான இவர் அதிபராவார். அத்துடன் எழுத் தாளருமாவார். சமூக, சமய விழுமியங் களை காத்து வந்த பெருமகனாவார். யாழ் பல்கலைக்கழகத்திலும் அரும்பணியாற்றி

னார். கிராமத்தின் கல்வி வளர்ச்சியிலும் அக்கறை உள்ளவர். இவருக்கு யாழ் பல்கலைக்கழகம் "சித்தாந்த வித்தகர்" என்று பட்டம் வழங்கி கௌரவித்தது. இவருடைய மும்மொழிப் பாண்டித்தியம் இவரின் சேவைக்கு மிக மிக உதவியாக இருந்தது. இவர் பல நூல்களை எழுதி வெளியிட்டார். கட்டுரைகள் எழுதினார். சிறந்த பேச்சாளரு மாவார்.

சி. வைத்திலிங்கம்--- இவர் ஈழத்து சிறுகதை முன்னோடியாவார். 1911ம் ஆண்டு ஏழாலையில் பிறந்தார். இவர் மல்லாகத்தில் ஆரம்ப, இடைநிலை கல்வியை முடித்து, பரமேஸ்வரா கல்லூரியில் உயர் கல்வியை நிறைவு செய்தார். பின்பு, 1931ல் கொழும்பில் எழுதுவினைஞரானார். இவர் எழுத்திலும், சங்கீதத்திலும் ஆர்வம் உள்ளவர். பல சிறுகதைகளை எழுதியுள் ளார். "மறுமலர்ச்சி" என்னும் சஞ்சிகையை தோற்றுவித்தார். பிரபல பத்திரிகைகளில் இவருடைய ஆக்கங்கள் வெளிவந்தன. இவர் மொழிபெயர்ப்பும் செய்துள்ளார்.

இலங்கையர்கோன் – இவர் ஈழத்து தமிழ்ச் சிறுகதை மூலவர், ஆக்க இலக்கிய கர்த்தா என அழைக்கப்படுகின்றார். இவர் 1915ல் ஏழாலையில் பிறந்தார், இவரின் பெயர் சிவஞானசுந்தரம். இவர்தம் புனைப் பெயரே இலங்கையர்கோன் இவர் ஏழாலை சைவப்பாடசாலை, மல்லாகம் இந்து ஆங்கில பாடசாலை, பரமேஸ்வராக் கல்லூரி ஆகியவற்றில் கற்றவர். ஆங்கில மொழியிலே இவரின் கல்வி அமைந்த படியால் அப்பாஷையில் புலமையும், பற்றும் அதிகம் உள்ளவர். தமிழில் மிக ஆர்வம் உள்ளவர். தமிழ் கற்று பாலபண்டித பரீட் சைக்கு தோற்றியவர். இலண்டன் பல்கலைக் கழகத் தேர்வில் சித்தியடைந்து, கொழும்பு சட்டக்கல்லூரியில் படித்து, சட்டத்தரணியாக பணி புரிந்தார். பின் காரியாதிகாரியாக பணி புரிந்தார். பல சிறந்த சிறுகதைகளை தந்த இவர் அனேக மொழிபெயர்ப்புக்களையும் செய்துள்ளார்.

இலக்கிய கலாநிதி பண்டிதர் மு.கந்தையா --- இவர் ஏழாலையில் 1917ல் பிறந்தார். சைவசன்மார்க்க வித்தியா சாலையில் கற்றுத் தேறினார். பின்பு சுய மாகவே கற்று சிரேஷ்ட பாடசாலைத் தரா தரப்பத்திர பரீட்சையில் சித்தியடைந்தார். சிவஸ்ரீ கணேசையரிடம் தமிழ் கற்றார். அருளானந்த சிவம், ஞானப்பிரகாசம் ஆகியவர்களுடன் சேர்ந்து சித்தாந்தத்திலும் பெயர் பெற்று விளங்கினார். 1938ஆம் ஆண்டு சைவசன்மார்க்க வித்தியா சாலையில் பணிபுரிய ஆரம்பித்தார். 1943ல் மதுரை பண்டிதர் பரீட்சையில் சித்தியடைந் தார். பின் இலண்டன் பி.ஏ பரீட்சையிலும் சித்தியடைந்தார். இவர் மரபுவழிக் கவிஞர், கட்டுரையாளர், நூலாசிரியர், போதனா சிரியராக பல பரிமாணாமங்களில் தம்மை இனங்காட்டினார். பல ஆங்கில நூல் களையும் எழுதினார். 1998ல் இலக்கிய கலாநிதி பட்டம் யாழ் பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்டது.

மேற்குறிப்பிட்டவர்களைத் தவிர வைத்திலிங்கம் அவர்களின் சகோதரி யாரும் மதுராந்தி என்ற புனைபெயரில் சிறந்த கதைகளை படைத்துள்ளார். அத்துடன் அவரது உறவினரான நாகபூசணி அவர்களும் சிறந்த சிறுகதைகளை எழுதி யுள்ளார். மற்றும் நா.சண்முகநாதன், நாவல், சிறுகதை, நாடகம் ஆகியதுறையிலும், சிவ சண்முகவடிவேல், நாடகம், கவிதை, கட்டுரை, சி.சிவஞானசுந்தரம், சிறுகதை, நாவல், நாடகம். அ உமாசங்கர், சிறுகதை, கட்டுரை. இ.கணேசராசா நாடகம், கவிதை. ஆனந்தி சிறுகதை. கே.ஆர் ஜானா சிறுகதை, கவிதை. ஜனகன் மகள் சிவஞானம் சிறுகதை, நாடகம். தமிழ்ப் பிரியா சிறுகதை,

தொடர்கதை. சி சக்திகிரீவன் மரபுக்கவிதை, கட்டுரை. கு.ரஜீபன் புதுக்கவிதை, கட்டுரை. செந்தூரன் நாடகம். ஏழாலை வாணி, கவிதை. பவானி – கவிதை, கட்டுரை. கலாதேவி– சிறுகதை, கவிதை. சியாமளா– கவிதை போன்ற துறைகளில் ஈடுபட்டுள் ளனர் இவர்களுடன், ராமு சுப்பிரமணியம், இலக்கியம், வேதநாயகம் பிரசில்வா ராதிகா, இலக்கியம், சோ.பரமநாதன், இலக்கியம், திருமதி தங்கவேலு சிவரூபி, இலக்கியம். சி.மகாலிங்கம் நாடகம், இலக்கியம். சி.சிதம்பர செந்திநாதன், இலக்கியம். கே.சசி தரன், இலக்கியம். ஆகியோரும் உள்ளடங் குவர்.

அடுத்து இணுவில், தாவடி ஆகிய எமது பிரதேச செயலகப் பிரிவில் வாழ்ந்த, வாழும் எழுத்தாளர்களைப் பற்றிப் பார்ப்போம்.

புலவர் ம.பார்வதிநாதசிவம்--- இவர் 1936 ல் பிறந்தவர், சிறந்த ஆசிரியர், கவிஞர், பல நூல்கள் செய்தவர், பத்திரிகை ஆசிரியர், ஒப்பியல் ஆய்வாளர், தலை சிறந்த எழுத்தாளரெனப் பல பரிமாணங் களை உடையவர். அண்ணாமலை பல் கலைக்கழகத்தில் புலவர் பட்டம் பெற்றவர். பல பத்திரிகைகளில் ஆசிரியராக பணி செய்தவர்.

கலாபூஷணம் வை.க.சிற்றம்பலம் – இவர் 1914ல் இணுவிலில் பிறந்தார், பால பண்டிதர், இளந்தமிழ்ப் புலவர் ஆகிய தரா தரங்களை உடையவர். ஆசிரியத் தொழில் செய்தவர். நாற்பது வரையான பிரபந் தங்கள், ஆலய ஊஞ்சற் பாக்கள், திருப் பள்ளியெழுச்சிப் பாடல்கள், கவிதைகள், கட்டுரைகள் எழுதிய இவர், சன்னிதியான் வெளியீடான ஞானச்சுடரில் இன்றும் பல ஆக்கங்களை எழுதிக்கொண்டு இருக்கின் றார். இவருக்குப் பல விருதுகள் பலராலும் வழங்கப்பட்டுள்ளன.

கலாபூஷணம் ப.சிவானந்த சர்மா– (கோப்பாய் சிவம்) இவர் 1954ல் பிறந்தவர். மறுமலர்ச்சி எழுத்தாளரான பண்டிதர் ச.பஞ் சாட்சர சர்மாவின் மகனாவார், சிறப்பு பட்டதாரி. இவர் 13வது வயதிலிருந்து, பத்திரிகைகள், சஞ்சிகைகள், என்பனவற்றில் கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், நாடகங்கள், விமர்சனங்கள், குறுநாவல்கள் முதலிய இலக்கியப் படைப்புக்களை எழுதி வருகின்றார். இவருக்கு பல கௌரவப் பட்டங்கள், பரிசுகள், பணப்பரிசில்கள், கிடைத்துள்ளன. ஐம்பதிற்கும் மேற்பட்ட, வட மொழி, தமிழ் நூல்களை வெளியிட்டுள் ளார். 2014ம் ஆண்டு இவருக்கு கலாபூஷண விருது வழங்கப்பட்டது.

சிவஸ்ரீ குமார சரவணபவக் குருக்கள்---இவர் ஆசிரியர் குமாரசாமி குருக்களின் மகனாவார். மிகவும் இலக்கிய ஆர்வம் உள்ளவர். "என் மாதாந்த ஓய்வூ தியம்" என்னும் சிறுகதைத் தொகுப்பை எழுதி வெளியிட்டவர்.

ஞான ஏந்தல் சோ.பரமசாமி--- "நம்பி" என்னும் புனைப்பெயரில் எழுதும் இவர். ஒரு பி.எஸ்.சி பட்டதாரி இவர் மொழி பெயர்ப்பு, எழுத்துத்துறை, கவிதை, கட்டுரை ஆகியவற்றில் வல்லவர். அத்துடன் சஞ்சிகை ஆசிரியர், தொகுப்பாசிரியருமாவார். இவரு டைய வீரசைவ மரபியல் என்னும் நூல், இவருக்கு கலாசார அலுவலக திணைக்களத் தாரின் பாராட்டையும், பொற்கிளியையும் பெற்றுக்கொடுத்தது. 2012 ஞான ஏந்தல் விருதும் கிடைத்தது. சங்கச் சான்றோர் விருதும் வழங்கப்பட்டது.

கலாபூஷணம் கா சச்சிதானந்தன்– இவர் கே.எஸ்.ஆனந்தன் என்ற பெயரில், ஆக்கங்களை சஞ்சிகைகள், நாளேடுகளில் எழுதிவந்தார். இவருடைய நாடகத்திற்கு தங்கப் பதக்கமும், எழுத்துப்பணிக்கு ஞான

ஏந்தல் விருதும் கிடைத்தன. 2010ல் கலாபூஷண விருதும் கிடைத்தது. ந.ஞான சூரியர் கட்டுரை, சிறுகதை, மேடைப் பேச்சு ஆகியவற்றில் சிறந்து விளங்கினார்.

கலாபூஷணம் தம்பு சிவசுப்பிர மணியம்–இவர் சிறுகதை, கட்டுரை, கவிதை, திறனாய்வு ஆகிய துறைகளில் திறமை யுள்ளவர். இவர் 80 சிறுகதைகள், 250 கட்டுரைகள், 350 திறனாய்வுகள் வெளி யிட்டுள்ளார். 2012ல் கலாபூஷண விருது வழங்கப்பட்டது.

பண்டிதை வைகுந்தம் கணேச பிள்ளை--- இவர் 1939ல் பிறந்தவர், கட்டுரை, பிரபந்தங்கள், ஊஞ்சற் பாக்கள் என்பன எழுதியுள்ளார். இவருடைய நாட்டிய நாடகங்கள் தேசிய விருதுகளை பெற்றுள்ளன. 2011ல் கலாபூஷண விருது பெற்றார்.

செல்லத்தம்பி பரமநாதன் --- 1942ல் பிறந்த இவர், சிறுகதை, கவிதை, கட்டுரை ஆகிய துறைகளில் ஈடுபட்டுள்ளார். இவருடைய படைப்புக்கள் பல பத்திரிகை களில் வெளிவந்துள்ளன. போட்டிகளில் பல பரிசில்களைப் பெற்றுள்ளார்.

மேலே குறிப்பிடப்பட்டவர்களை நான் அடையாளம் கண்டு எழுதியுள்ளேன். இன்னும் பலர் இருப்பார்கள் அவர்களையும், வளரும் எழுத்தாளர்களையும் இதில் சேர்த்துக் கொள்வது அவசியம். அதனைச் செய்ய ஆர்வலர்களின் ஒத்துழைப்பு தேவை. எனக்குத் தரப்பட்ட பொறுப்பை, இயன்ற வரை பலரின் உதவியுடன் செய்துள்ளேன்.

# வலி தெற்கு சிற்பக் கலை பாரம்பரியம் - ஓர் பார்வை

**வேலுப்பிள்ளை பாலேந்திரன்**
(பாலா தொழிலகம்)
சுன்னாகம்

கலை
விலைமதிப்பற்றது
எல்லையற்றது
எவரும் ரசிப்பது
விமர்சிக்கப்படுவது

இது பாரம்பரிய மரபுவழிகளால் சிறப்புப் பெற்றது. இது கண்ணால் ஆர்ந்து இன்புறப்படுவது. மனதால் நுகரப்படுவது. உயிரூட்டும் அம்சங்கள் மூலம் மறை பொருள் அம்சங்களை குறிப்புப் பொருளில் தந்து நிற்பது. கலையானது இயல், இசை, நடனம், சிற்பம், கட்டடம், ஓவியம் என வடிவங்களைப் பெற்றது.

ஈழத்தின் கலைமரபுகள் பிரதேசத் திற்குப் பிரதேசம் சிறப்புகளாலானது அஞ்ஞான்றே வலி தெற்குப் பிரதேச செயலர் பிரிவில் மற்றைய பிரிவுகளுடன் ஒப்பிடக் கூடிய வகையில் சிற்ப வேலைகள் இடம் பெறுவதை பெருமையாகக் கூறவேண்டி யுள்ளது. இத் தொழிற்பாடு சுன்னாகம், உடுவில், தாவடி, ஏழாலை, ஆகிய இடங்க ளில் பாரம்பரிய தொழிலாக வளர்ச்சி அடைந்து வந்துள்ளது.

மரச் சிற்ப வகையில் ஆலய வாகனங்கள், தேர் முதலிய வாகன ஊர்தி கள், வீட்டுக் கதவு, நிலை, செடிப்பலகை, தளபாடங்களில் அலங்காரம் என்பன அடங்கியிருக்கின்றன.

உலோகச் சிற்பவகையில் பாட சாலை பெயர் வளைவுகள், கேடயங்கள், நினைவுப்பரிசில்கள், திருவாசி, வாகன மேற்படி போன்றன அமையும்.

இன்று புகழ்பூத்துப் பரந்திருக்கும் இப்பண்பாடு, வரலாற்றின் படிகளால் அமைந்தது என்று கூறுவதில் சந்தேகம் இருந்து விடாது அவற்றை உருவிப்பதில் வண்ணம் பொருந்திய பல்வல்லுனர்களும் அத்திவாரம் இட்டுள்ளனர். அவ்வண்ணம் நோக்கையிலே பல நூற்றாண்டுகளுக்கு மேலான கற்களி சிற்பங்கங்கள் அக் காலத் திலே கற்சிற்பிகளும் வாழ்ந்தார்கள் என் பதை வெளிக்கொணரும்.

சுன்னாகம், ஐயனார் கோவில் கோபுர வாசலில் அமைக்கப் பெற்ற சுமார் 15அடி உயரமான நான்கு கருங்கற் தூண்களிலும் பல நூற்றாண்டுகள் முற்பட்ட காலத்திலே சிற்பி அதனைச் சிருஷ்டித்துள் ளான் என்பதைக் காண முடிகிறது.



மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி சமாதி ஈஸ்வரர் கோயில் கற்சிற்பம் உயர் கல்வேலைப்பாடுகளுக்கு எடுத்துக் காட்டாகிறது. இவை போன்றே இணுவில் கந்தசுவாமி கோயில், மருதனார்மடம் ஆஞ்ச நேயர் கோயில் போன்ற ஆலயங்களிலும் காண முடிகிறது. இப்பிரதேச கலைப் பண்பாடு காலத்தால் அழிந்து விடவில்லை. மாறாக வலுப்பெற்றே வருகிறது என்பதற்கு சமீப காலங்களிலே புடைப்புப் பெற்ற மாபெரும் ஆஞ்சநேயர் சிலை தூணிடுகிறது.

இம் மண்ணில் தோன்றிய கலா கேசரி ஆ.தம்பித்துரை அவர்களால் அமைப் புறப்பெற்ற கதிரமலை சிவன் கோவில் தேர் புகழ் பொருந்தியது. வரலாற்றுப் பிரசித்தி பெற்ற தெல்லியூர் துர்க்காதேவி ஆலய தீர்த் தத் தடாகத்தை முற்று முழுதாக அமைத் திருப்பது இம் மண்ணின் கோட்டைக் காட்டுப்பகுதியில் விளைந்த சிற்பி திரு. பால சிங்கம் அவர்களே எவ்வித அயல் தேச உதவிகளுமின்றி இந்நாட்டு சிற்பிகளே இவற்றை அமைத்தார்கள் என்பதில் ஐய மில்லை. அது போலவே திருவருள் கொண்ட ஆலயங்களின் தெய்வ உருவச்சிலைகளை தாவடியைச் சேர்ந்த மறைந்த ஸ்தபதி சோமு ஆச்சாரி அவர்களே உயிரூட்டமாகக் கருங்கல்லில் அமைத்தார். மேலும் தாம்பூல (பஞ்ச லோகம்) விக்கிரகங்களையும் அமைப்பதில் இவர் கைதேர்ந்த வல்லுனரா யிருந்தார் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. இவை போன்றே இப்பகுதிகளில் பல கைதேர்ந்த கற்சிற்பிகளும் வாழ்ந்தார்கள், வாழுகிறார்கள் என சான்றாதாரங்கள் உறுதி செய்யும். மரச் சிற்ப வேலைப்பாடு களின் கடந்த காலத்தை எடுத்துப் பார்க்கை யில் வலி தெற்குப் பிரதேச சைவாலயங்கள் பல சிறந்த வாகனங்களையும் தேர், மஞ்சம், போன்றவற்றையும் கொண்டிருக்கிறது. உதாரணமாக இணுவில் கந்தசுவாமி கோயில் உலகப் பெருமஞ்சம் உயர்ந்த மரச் சிற்பத்திற்கு எடுத்துக் காட்டு அத்துடன் ஐயனார் தேர், இணுவில் பிள்ளையார் கோயில் தேர்கள், கோயில்கள், வாகனங்கள் போன்றன எமது பிரதேச கலைப் பொக்கிஷங்களாகும். பண்டைய சிற்ப தளபாடங்களைக் கொண்டிருக்கும் இராம நாதன் கல்லூரியும் இங்கு குறிப்பிட வேண்டிய ஒன்றாகும். மேலும் உடுவில், சுன்னாகம், பிரதேச தேவாலயங்களும் இப் பிரதேசத்தில் அமைந்துள்ள யன்னல், கதவு வேலைப்பாடுகளும் பாரம்பரிய மரச் சிற்பத்திற்கு சிறந்த எடுகோளாகும்.







மரச்சிற்பங்கள், கற்சிற்பங்கள் மூலம் தமது கற்பனைகள், தத்துவங்கள், வரலாற்றினைத் தத்ரூபமான முறையில் தருவதில் சிற்பிகள் வெற்றி பெற்றுள்ளனர். அவர்கள் மறைந்தும் அவர்தம் சிற்பங்கள் பெருமை பேணி நிற்கின்றன.



இன்றைய காலப்பகுதியை நோக் குகையில் மரச்சிற்பம் செய்வோர் பாரம் பரிய வடிவங்களையே தொடர்ச்சியாக ஆக்கும் திறன் பெற்றிருக்கின்றார்கள். நவீன வடிவங்களை ஆக்கும் ஆற்றலில் நாட்டம் குறைவாக உள்ளது. காரணம் வருவாய்

சம்பந்தமானதாக இருக்கலாம். அத்துடன் எமது பிரதேசங்களில் இன்னும் இத்தகைய கலை வடிவங்களை ரசிக்கும் மனப்பக்குவம் முற்றாக வளரவில்லை. சிற்பிகள் அவ் வடிவங்களை உருவாக்கி சந்தைப்படுத்தி மக்களை அவ் ரசனைக்குள் ஈர்க்க வேண்டும். இச்செயற்பாட்டைப் பொறுப்பானவர்களும் உணர்விக்க வேண்டும். புதுமையும் புத்தாக்கமும் ஒவ்வொரு செயற்பாட்டாலும் ஊக்கப்பட வேண்டும்.

நவீன நாகரிகத்துக்குப் பொருந்தும் வண்ணத்தில் உலோகச் சிற்பவேலையைப் பொறுத்தமட்டில் கேடயங்கள் பரிசுப் பொருட்கள் இன்று தெற்கின் பொருட்களுடன் போட்டியிடக்கூடிய வகையில் உள்ளது பெருமைப்பட வேண்டியதாகும்.

இத்துறை சார்ந்தவர்கள் மேலும் நுட்பங்களைப் பெற உரிய பயிற்சி பெற பிற நிறுவனங்கள் இவர்களை அணுக முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இம் முயற்சிகள் மூலம் வலி தெற்குப் பிரதேச மண்ணின் கலைப்பாரம்பரியம் மைல் கல்லை எட்டும் என்பது சந்தேகமற புலப்படும்.



**சுன்னாகம், ஐயனார் கோவில் கோபுர வாசலில் அமைக்கப் பெற்ற சுமார் 15அடி உயரமான பல நூற்றாண்டுகள் முற்பட்ட நான்கு கருங்கற் தூண்கள்**

# சுதேச மருத்துவ வளர்ச்சியில் வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த சுதேச மருத்துவர்களின் பங்களிப்பு அன்றும் - இன்றும்

Dr.சே.சிவசண்முகராஜா
தலைவர், சித்தமருத்துவப்பிரிவு
யாழ். பல்கலைக்கழகம்.

வலிகாமம் தெற்குப் பிரதேச செயலகப் பிரிவானது யாழ்ப்பாண நகரிலிருந்து வடதிசையில் சுமார் பத்துக் கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது. 3271 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்டுள்ள இப்பிரதேச செயலர் பிரிவின் எல்லைகளாக வடக்கே வலிகாமம் வடக்குப் பிரதேச செயலர் பிரிவும் (தெல்லிப்பளை), கிழக்கே வலி கிழக்குப் பிரதேச செயலர் பிரிவும் (கோப்பாய்), தென்மேற்கே வலி தென் மேற்குப் பிரதேச செயலர் பிரிவும் (சண்டிலிப்பாய்), தென் கிழக்கே நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவும் (நல்லூர்) அமைந்துள்ளன. இப்பிரதேச செயலர்பிரிவில் வாழ்ந்த, வாழ்ந்து வருகின்ற சுதேச மருத்துவர்களிற் பலர் இப்பிரதேசத்தின் சுதேச மருத்துவ வளர்ச்சிக்கு மட்டுமன்றி இலங்கையின் சுதேச மருத்துவ வளர்ச்சிக்கும் அரும் பணியாற்றியுள்ளனர். அம்மருத்துவர்கள் பற்றியும் அவர்களது மருத்துவப்பணி பற்றியும் எடுத்துக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இப்பிரதேசத்தில் வாழ்ந்த வைத்தியர்களில் முதலில் வைத்து எண்ணப் படத்தக்கவராகச் சுன்னாகம் வரதபண்டிதர் விளங்குகிறார். இவர் இற்றைக்குச் சுமார் முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர் இங்கு வசித்தவர். அரங்கநாதையர் என்பது அவரின் தகப்பனார் பெயராகும். தமிழ், சமஸ்கிருதம், சோதிடம், சமயம், மருத்துவம் ஆகிய துறைகளிற் பாண்டித்தியம் பெற்றிருந்த இவர் அமுதாகரம் என்னும் விஷவைத்திய நூலை எழுதியுள்ளார். இந்நூல் 1892 ஆம் ஆண்டு திருகோணமலையைச் சேர்ந்த சு.தம்பையா என்பவரால் அச்சிற் பதிப்பிக்கப் பட்டுள்ளது.[1] ஏட்டுச்சுவடிகள் அச்சுவாகனமேறத் தொடங்கிய காலத்தில் இலங்கையில் முதன்முதலாக அச்சுவாகனமேறிய தமிழ் மருத்துவ நூல் என்ற பெருமையும் இந் நூலுக்கேயுரியது. வலி தெற்குப்பிரதேச செயலர் பிரிவில் தோன்றிய முதல் தமிழ் மருத்துவ நூல் என்ற பெருமையும், இதற்குள்ளது. தனிவிருத்தம் உட்பட 324 செய்யுட்களைக் கொண்டுள்ள இந்நூலின் முழுமையான ஏட்டுப் பிரதி ஒன்று தற்போதும் யாழ்.பல்கலைக்கழகப் பிரதான நூலகத்திலுள்ளது.[2]

**“ஐயமின் முன்னூற்றையிரு விருத்தம்**
**செய்ய செந்தமிழாற் றெரிந்துரை செய்தனன்**
**கங்கை மா நதிசூழ் காசிமாநகரும்**
**பங்கமில் பங்கயப் பைந்துணர் மாலையும்**
**ஆதிநான்மறை சேரந்தணராணை யும்**
**கோதக லோதிமக் கொடியுமிங் குடையோன்**
**கன்னியங் கமுகிற் கயலினங் குதிக்கும்**
**துன்னிய வளவயற் சுன்னைனாடன் ...”**

என்ற அமுதாகரம் சிறப்புப் பாயிரச் செய்யுளடிகளால் இந்நூலாசிரியர் பற்றியும், அமுதாகரம் செய்யுட் தொகை பற்றியும் அறியக்கூடியதாகவுள்ளது.

அண்மைக்காலத்தில் சுன்னாகத்தில் வாழ்ந்து வைத்தியப்பணி செய்தவர்களுள் ஆ.நடராஜா, பேதுரு அருளப்பன், கபிரியேல் ஜோர்ஜ் ஆகியோர் குறிப்பிடத்தக்கவராவர். இவர்களுள் ஆ.நடராஜா (1914 - 1999) சுன்னாகம் கந்தரோடைவீதியில் வசித்தவர். பொரளை சுதேச வைத்தியக்கல்லூரியில் பயின்று DIMS பட்டம் பெற்றவர். ஐயாப் பரியாரியார் என்று மக்களால் அன்புடன் அழைக்கப்பட்ட இவர் சுதேசவைத்திய சாலையுடன் மூலிகைத் தோட்டம், மருந்து செய்கூடம் என்பவற்றையும் அமைத்து சிறந்தமுறையில் வைத்தியம் செய்தவர். யாழ்ப்பாணம் லங்கா சித்த ஆயுள்வேதக் கல்லூரியில் விரிவுரையாளராகவும், அதிபராகவும் கடமையாற்றியுள்ளதுடன், யாழ். பல்கலைக்கழகச் சித்தமருத்துவ மாணவர்களுக்குப் பரம்பரை மருத்துவம் போதிக்கும் விரிவுரையாளராகவும் பணி புரிந்துள்ளார். ஆயுள்வேதத் திணைக்களத்தில் ஆயுள்வேத கல்விச்சபை உறுப்பினராகவும், அகில இலங்கைச் சித்த வைத்தியசங்கத் தலைவராகவும் இருந்துள்ளார்.[3] தற்போது இவரின் மகனான கிருஷ்ணராசா இவரின் பணியைத் தொடர்ந்து வருவதுடன் வலி தெற்குப் பிரதேசசெயலர் பிரிவு ஆயுள் வேத பாதுகாப்புச்சபையின் தலைவராகவும் சேவையாற்றி வருகின்றார்.

சுன்னாகத்தில் பிரபல வைத்தியராக விளங்கிய பேதுரு அருளப்பன் (1922 – 2006) அவர்களும் பொரளை சுதேச மருத்துவக்கல்லூரியில் கல்வி பயின்று DIMS பட்டம் பெற்றவர். கைநாடி பார்த்து நோயை நிதானித்து வைத்தியம் செய்வதில் வல்லவர். தற்போது இவரின் மகள் திரேஸ் அன்ரநிற்றா யோசேப், மகன் அனஸ்தின் ஆகியோர் இவரின் பணியைச் செய்து வருகின்றனர்.

சுன்னாகத்தில் பிரபல்யம் பெற்று விளங்கிய மற்றொருவர் கபிரியேல் ஜோர்ஜ் (1930 – 2000)ஆவார். இவரின் தகப்பன் மிருக வைத்தியத்திலும் சிறந்து விளங்கி யுள்ளார்.[4] குழந்தைப்பிள்ளை வைத்தியத் தில் இவர் சிறந்து விளங்கியுள்ளதுடன் தற்போது இவரின் மருமகள் ஆன்மேரி யாழ். பல்கலைக் கழகத்தில் BSMS பட்டம் பெற்று இவரின் பணியைத் தொடர்ந்து வருகின்றார்.

காலஞ்சென்ற வைத்தியர்களான சுவாமிநாதர், முத்துக்கிருஷ்ணர் ஆகியோரும் சுன்னாகத்தில் பிரசித்தி பெற்று விளங்கியவர்களாவர். இவர்களுள் சுவாமிநாதர் ஏழாலையைச் சேர்ந்த ஐ.பொன்னையா அவர்களுக்குப் பரராசசேகர வைத்தியம் சம்பந்தமான பல ஏட்டுச்சுவடிகளை வழங்கி அவை பதிப்பிக்கப்படுவதற்குத் துணை நின்றார் என்று தெரியவருகிறது. முத்துக் கிருஷ்ணர் பல வைத்திய மாணவர்களை உருவாக்கியுள்ளார்.

அடுத்து. இணுவிலை எடுத்துக் கொண்டால் காரைக்கால் சுவாமியார், செல்லப்பாப் பரியாரியார், நடராச ஐயர், தியாகராசா வைத்தியர் என்று பல சுதேச வைத்தியர்கள் வைத்தியப்பணி செய்துள்ளனர். இணுவில் காரைக்கால் ஒரு காலத்தில் மனநோய் வைத்தியத்திற்குப் பேர்பெற்று விளங்கியுள்ளது. அதற்குக் காரண கர்த்தாவாக விளங்கியவர் காரைக்கால் சுவாமியாராவார். காரைக்கால் மணியம் என்றும் அழைக்கப்பட்ட இவரின் இயற்பெயர் கதிரித்தம்பி அம்பலவாணர் என்பதாகும். இவர் கொக்குவிலைச் சேர்ந்த வைத்தியர் நடராசா என்பவரிடம் வைத்தியம், சோதிடம், மாந்திரீகம் என்பவற்றைக் கற்றுக் காரைக்காலில் பணிபுரிந்தவர். இறையருளால் மணி மந்திர வைத்திய முறைகள் கைவரப் பெற்று மனநோய்களையும் குணப்படுத்துவதில் சிறந்து விளங்கினார். அக்கால வழக்கப்படி

கடுமையான மன நோயாளிகளைத் "துலங்கு" எனப்படும் மரக்குற்றிகளுக்கிடையில் கால் கைகளுக்கு விலங்கிட்டு நசியம், எண் ணெய்க்குளியல் போன்ற சிகிச்சை முறை களையும் மேற்கொண்டுள்ளார்.[5] பல ஊர் களிலிருந்தும் மனநோயாளிகள் இவரிடம் சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டனர் என்பதிலிருந்து இவரின் வைத்தியச் சிறப்பை அறிந்து கொள்ளலாம்.

நடராச ஐயர் இந்தியாவில் முறைப் படி வைத்தியங் கற்றுச் சேவையாற்றியவர். விஷக்கடிவைத்தியத்திலும் இவர் சிறந்து விளங்கியுள்ளார். இவரின் புதல்வரான மிருத்தியுஞ்ச ஜெயம் என்பவர் யாழ். லங்கா சித்த ஆயுள்வேதக் கல்லூரியில் கல்வி பயின்று நாவற்குளியில் வைத்தியராக இருந்தார். அண்மையில் வெளிநாடு சென்று விட்டார்.[6]

செல்லப்பாப் பரியாரியார் வைர முத்து என்பவரின் புதல்வராவார். இவர் இணுவில் கந்தசுவாமி கோவிலின் வட கிழக்குப்பகுதியல் வைத்தியத் தொழிலில் ஈடுபட்டிருந்தார். யோகர் சுவாமிகளின் அருளாசி பெற்ற இவர் கை நாடி பார்த்து வைத்தியம் செய்வதில் வல்லவராக விளங்கி யுள்ளார். இவரின் நாடி பார்க்கும் திறமைக் குச் சான்றாகப் பின்வரும் சம்பவம் எடுத்துக் கூறப்படுவதுண்டு. இவர் காலத்தில் யேசு பக்தரொருவர் கடுமையான நோயினாற் பீடிக்கப்பட்டு இறக்குந் தறுவாயிலிருந்த போது பல வைத்தியர்கள் அழைக்கப்பட்ட னர். அவர்களுள் செல்லப்பாப் பரியாரி யாரும் ஒருவராவர். இவர் அந்த நோயாளியை நாடி பிடித்துப் பரிசோதித்த பின்னர் "இந்த நோயாளிக்கு மருந்து கொடுப்பதால் பிர யோசனமில்லை, நாக்கு வரளும்போது ஆத்மசாந்திக்காகத் துளித்துளியாகப் பால் கொடுக்கலாம் என்றும் 96வது நாள் நோயாளி மரணமடைவார் என்றும் உறுதிபடக் கூறி விட்டார். அதன்படியே அந்த நோயாளி குறிப் பிட்ட தினத்தில் மரணமடைந்தார். இவரின் புகழ் ஆங்கிலேயர் மத்தியிலும் பரவுவதற்கு இச்சம்பவம் ஒரு காரணமாயிற்று. இவர் 1944ஆம் ஆண்டு காலமானார்.[7] இவரின் புதல்வர்களான செ.கந்தையா, செ.பாலசுப்பிர மணியம் ஆகியோர் இவரின் வைத்தியத் தொழிலைத் தொடர்ந்து செய் துள்ளனர்.

இவர்களுள் செல்லப்பா கந்தையா (1904 – 1989) என்பவர் தந்தையைப் போலவே வைத்தியத்திற் சிறந்து விளங்கி யுள்ளார். இவரையும் செல்லப்பாப் பரியாரி யார் என்றே பலரும் அழைத்து வந்துள்ள னர். தூதன்குறி, கைநாடி, சரவோட்டம், ஓரை என்பவற்றைக் கொண்டு நோயை நிதானிப் பதில் வல்லவராக விளங்கினார்.[8] நோயாளி யைப் பார்த்த மாத்திரத்திலேயே அவருக்கு நோய் குணமாகுமா, இல்லையா, அவருக்குச் சிகிச்சையளிக்கலாமா, சிகிச் சையளிக்கக் கூடாதா என்ற விபரங்களைத் துல்லியமாகத் தீர்மானித்துவிடுவார். இவரிடம் சிகிச்சை பெறப் பல மணிநேரம் அல்லது பலநாட்கள் காத்திருக்க வேண்டி வரும் என்று கூறுவர். இவராக விரும்பி ஏற்றுக் கொண்டால்தான் நோயாளிக்குச் சிகிச்சை கிடைக்கும். அவ்விதம் சிகிச்சை பெறும் நோயாளி குண மடைவார் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருப்பதில்லை. இவரின் மற்றொரு சகோ தரனான பாலசுப்பிரமணியம் என்பவரும் வைத்தியத்தொழில் புரிந்து அண்மையில் காலமாகிவிட்டார்.

இணுவிலில் பிரபலமாக இருந்த மற்றொரு வைத்தியர் பெரியதம்பி தியாக ராசா என்பவராவர். இணுவில் கட்டைப்பரி காரி என்றழைக்கப்பட்ட இவர் சுன்னாகம் முத்துக்கிருஷ்ணரிடம் வைத்தியங்கற்று இணுவிலிலும், குரும்பசிட்டியிலும் வைத்தியம் செய்து 1965 இல் காலமானார்.[9] இணுவிலைச் சேர்ந்த பொன். அப்புத்துரை

என்பவர் கிளிநொச்சிப் பிரதேசத்தில் விஷக் கடி வைத்தியத்தில் சிறந்து விளங்கியுள்ளார். இவரின் வைத்தியத் திறமைக்குப் பின்வரும் சம்பவம் எடுத்துக் கூறப்படுகிறது. "அக்காலத் தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண் ணொருவர் மன்னாரில் வசித்தபோது காலக் கடி என்னும் கடும் விஷந்தீண்டப்பட்டு உயிரி ழந்தவர் போலானார். அவரின் உறவினர்கள் மிகவருந்தி உடலை ஒரு பிரேதப்பெட்டி யிலிட்டு காரில் வைத்து யாழ்ப்பாணம் நோக் கிக் கொண்டு சென்றபோது கிளிநொச்சியில் சிறிது நேரம் கார் தரித்து நிற்க நேர்ந்தது. அந்தச் சமயத்தில் பிரேதப்பெட்டியுள் ஏதோ அசைவது போன்ற சத்தத்தை அருகில் நின்ற சிலர் அவதானித்துள்ளனர். உள்ளே விஷந் தீண்டப்பட்ட பெண்ணின் பிரேதம் இருப்பதை அறிந்த அவர்கள் உடனடியாக அருகிலிருந்த விஷக்கடி வைத்தியரான அப்புத்துரையிடம் கொண்டு செல்லும்படி கூறினர். அப்புத்துரையவர்கள் அடக்கத்தி லிருந்த அப்பெண்ணுக்கு மூலிகை வைத்தியம் மற்றும் மந்திர ஜபம் செய்து சில மணிகளுள் அப் பெண்ணைக் குணப்படுத்தி எழச்செய்தார்."[10] இவரின்புதல்வர்களான தாமோதரம்பிள்ளை, இரகுபதி, ஸ்ரீரங்க நாதன், இராதாகிருஷ்ணன் ஆகியோர் தற்போது இணுவிலிலும், கிளிநொச்சியிலும் தமது பரம்பரை வைத்தியத்தைத் தொடர்ந்து வருகின்றனர்.

கந்தரோடையில் வைத்தியஞ்செய்த கார்த்திகேச ஐயர் சுப்பிரமணிய ஐயர்(1880 – 1935) இந்தியா சென்று வைத்தியம் கற்று வந்தவர். குழந்தைப்பிள்ளை வைத்தியத்தில் சிறந்து விளங்கியுள்ளார். அக்காலத்தி லேயே மலேயா, சிங்கப்பூர் போன்ற இடங் களிலிருந்தும் சிலர் இவரிடம் வைத்தியம் செய்ததாக அறியக் கிடக்கிறது. இவரின் வைத்தியமுறைகளைச் "சித்தமருத்துவ வாகடம்" என்னும் பெயரில் இக்கட்டுரை யாசிரியர் அண்மையில் நூலுருவில் வெளி யிட்டுள்ளார்.[11] கந்தரோடையில் வாழ்ந்த மற்றொரு பிரபல வைத்தியர் முத்துப் பரிகாரியார். இவரின் மூத்த மகனின் மகளையே பிரபல ஆங்கில வைத்தியரான சி.சுப்பிரமணியம் திருமணஞ் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. கந்தரோடையில் இளையப்பாப்பரியாரியார் என்பவரும் சென்ற நூற்றாண்டில் வைத்தியம் புரிந்துள்ளார்.

ஈழத்துச் சித்தமருத்துவர்களின் பெருமதிப்புக்கும் நன்றிக்குமுரியவராகக் கருதப்படுபவர் ஏழாலையைச் சேர்ந்த ஐ. பொன்னையா (1867 –1948) அவர்களா வார். ஏழாலையில் ஐயம்பிள்ளை வைத் தியரின் மகனாகப் பிறந்த இவர் சிவஞானச் செம்மலாகவும், வைத்திய அறிஞராகவும் விளங்கினார். கி.பி. பன்னிரண்டாம் நூற் றாண்டளவில் யாழ்ப்பாண மன்னர் காலத் தில் இயற்றப்பட்ட பரராசசேகரம் பன்னீரா யிரம் என்னும் வைத்திய நூலையும், பிற ஈழத்துச் சித்தமருத்துவ நூல்களையும் அச்சுவாகனமேற்றிய பெருமை இவரையே சாரும். ஈழத்துச் சித்தமருத்துவ ஏட்டுச்சுவடி களைத் தேடியெடுத்து யாழ்ப்பாண வைத்திய நூல் வெளியீடு என்ற பெயரில் 1927 – 1938 காலப்பகுதியில் இவர் வெளியிட்ட நூல் களே தற்போதும் இலங்கையின் சித்தமருத் துவ பாரம்பரியத்தை எடுத்துக்காட்டும் முக்கிய ஆவணங்களாகவுள்ளன.[12] இவரால் பதிப்பிக்கப்பட்ட நூல்களின் விபரம் பின்வருமாறு :-

1. இருபாலைச் செட்டியார் வைத்திய விளக்கம், பதார்த்த சூடாமணி (1927)
2. பரராசசேகரம் முதலாம்பாகம் (1928)
3. அங்காதிபாதம் (முதற்பதிப்பு) (1928)
4. வைத்தியத்தெளிவு (1930)
5. வைத்திய சிந்தாமணி (1932)
6. பரராசசேகரம் இரண்டாம் பாகம் (1932)
7. பரராசசேகரம் மூன்றாம் பாகம் (1932)
8. சொக்கநாதர் தன்வந்திரியம் (1933)

9. பரராசசேகரம் நான்காம் பாகம் (1934)
10. பரராசசேகரம் ஐந்தாம் பாகம் (1935)
11. பரராசசேகரம் ஆறாம்பாகம் (1935)
12. பரராசசேகரம் ஏழாம் பாகம் (1936)
13. அங்காதிபாதம் (வாகடதத்துவத்துடன்) (இரண்டாம் பதிப்பு) 1936)
14. வைத்தியபூரணம் 205 (1938)

செகராசசேகரம் என்னும் வைத்திய நூலின் சிலபகுதிகளையும் இவர் அச்சில் பதிப்பித்ததாகக் கூறப்படுகின்ற போதிலும் அதுபற்றிய விபரமேதும் கிடைத்திலது. இவராற் பதிப்பிக்கப்பட்ட நூல்களிலும் அது பற்றிய குறிப்புகள் ஏதும் காணப்படவில்லை. ஆயினும் வடகிழக்கு மாகாணசபையினால் 19 மீள்பதிப்புச் செய்யப்பட்ட செகராசசேகர வைத்தியநூலில் மூலநூற் பதிப்பாசிரியரின் பெயர் ஐ.பொன்னையா என்று குறிப்பிடப்பட்டுள்ளது.[13] அதனைத் தொடர்ந்து ந.கணேச லிங்கநாதன் என்பவர் செகராசசேகர வைத்திய நூலுக்கு உரையெழுதி "செகராச சேகரத் திறவுகோல்" என்ற பெயரில் ஆயுள்வேதத் திணைக்களத்தினூடாக வெளியிட்டுள்ளார்.

அதிலும் செகராசசேகரம் பதிப்பாசிரியராக ஐ.பொன்னையாவின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையில் இது தவறானதாகும். இங்கு குறிப்பிடப்பட்ட செகராச சேகர வைத்திய நூலானது முதன்முதலில் 1932 ஆம் ஆண்டு அச்சுவேலியைச் சேர்ந்த ச.தம்பிமுத்துப்பிள்ளை என்பவராற் பதிப்பிக்கப்பட்டதென்பதே உண்மையாகும். ஐ.பொன்னையா அவர்களாற் பதிப்பிக்கப்படாத ஒரு நூலுக்கு அவரைப் பதிப்பாசிரியராக்குவது ஒரு வரலாற்றுத் தவறு என்பதுடன் அது ஐ. பொன்னையா அவர்களுக்கும் பெருமை சேர்ப்பதாக அமையமாட்டாது என்பதற்காகவே இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஐ.பொன்னையா அவர்களின் இளைய சகோதரரான ஐ.பேரம்பலம் (1889 –1990) என்பவரும் தகப்பன், தமையன் வழியைப் பின்பற்றி வைத்தியத் தொழிலில் சிறந்து விளங்கியுள்ளார்.[14] ஏழாலைப் பேரம்பலப் பரிகாரியார் என்றழைக்கப்பட்ட இவர் தரமான மூலிகை மருந்துச்சரக்குகள் வைத்தியர்களுக்கும், மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்ற நன்நோக்குடன் சுன்னாகத்தில் ஒரு தமிழ் மருந்துக்கடையையும் ஆரம்பித்தார். அக்கடை பேரம்பலம் மருந்துக் கடை என்ற பெயரில் தற்போதும் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. இவரின் புதல்வரான பத்மநாதன் பொரளை சுதேச மருத்துவக் கல்லூரியில் பட்டம் பெற்று வைத்தியத் தொழிலில் ஈடுபட்டுவருவது குறிப்பிடத் தக்கது.

புன்னாலைக்கட்டுவனில் திருமதி இந்திரா சத்தியநாதன் அவர்கள் பொரளை சுதேசவைத்தியக் கல்லூரியில் DAMS பட்டம் பெற்று வைத்தியராக விளங்கியுள்ளார். இவர் கைதடி ஆயுள்வேத வைத்திய சாலையின் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். அண்மையிற் காலமாகிவிட்டார்.

தாவடியில் பரமுப்பரியாரியார் என்றழைக்கப்பட்ட சி.ஆ.பொன்னம்பலம் (1898 – 1979) வாதரோக சிகிச்சையில் சிறந்து விளங்கியுள்ளார்.[15] தற்போது இவரின் மகனான இராமநாதன் அவரின் பணியைத் தொடர்ந்து செய்து வருகிறார். இவர் பொரளை ஆயுள்வேத வைத்தியக் கல்லூரியில் கல்வி பயின்று DAMS பட்டத்தைப் பெற்றுள்ளதுடன் தமிழ்நாடு, பாளையங்கோட்டை அரச சித்த மருத்துவக் கல்லூரியில் குணபாடத் துறையில் MD பட்டத்தையும், யாழ்.பல்கலைக்கழகத்தில் PHD பட்டத்தையும் பெற்றுள்ளார். வைத்திய அதிகாரியாகவும், லங்கா சித்த ஆயுள்வேதக்கல்லூரி, யாழ்.

பல்கலைக்கழகச் சித்த மருத்துவப்பிரிவு என்பவற்றில் விரிவுரையாளராகவும் பணியாற்றித் தற்போது ஓய்வு பெற்றுள்ளார். சித்தமருத்துவம் சம்பந்தமாக ஐந்து நூல்கள் வரை எழுதியுள்ளார்.

அடுத்து, தற்காலத்திலும் பல சுதேச மருத்துவர்கள் வலி தெற்குப் பிரதேச செயலர் பிரிவில் தனிப்பட்ட முறையிலும் அரச வைத்திய நிலையங்களிலும் பணிபுரிந்து வருகின்றார்கள். பரம்பரை மருத்துவர்களும் பட்டதாரி வைத்தியர்களும் இதில் அடங்குவர். யாழ்.பல்கலைக்கழகத்தில் BSMS பட்டம் பெற்ற வைத்தியர்களுள் க.செல்வநாதன் (புன்னாலைக்கட்டுவன்), கி.மேகலை (ஏழாலை), சி.சிவரஞ்சனி (உடுவில்), சி.கஜமாலா(தாவடி), வ.பாமினி (இணுவில்) ஆகியோர் குறிப்பிடத்தக்கவராவர். பொரளை சுதேசவைத்தியக் கல்லூரியில் DAMS பட்டம் பெற்றவர்களுள் க.பாலசுப்பிரமணியம் (இணுவில்), பே.பத்மநாதன் ஆகியோரும், யுனானி மருத்துவத்தில் BUMS பட்டம் பெற்ற ச.பானுமீரா (சுன்னாகம்). லங்கா சித்த ஆயுள் வேதக்கல்லூரியில் DAM பட்டம் பெற்ற வைத்தியர்களுள் திருமதி கிருஷ்ணராஜா (சுன்னாகம்), சி.சிவபாலன் (சுன்னாகம்), கு.விக்னேஸ்வரன் (ஏழாலை), விமலா ஒலின்றா மரிசிலின் (உடுவில்), அ.சற்குண சறோஜினி (சுன்னாகம்), க.பாமநளினி (ஏழாலை), கி.சம்பூரணராணி (சுன்னாகம்), சி. குலசெல்வராணி (இணுவில்), உ.ஸ்ரீசங்கா (வரியப் புலம்), ஸ்ரீநாககௌரி (சுதுமலை) ஆகியோரும் குறிப்பிடத்தக்கவ ராவர்.

இவர்களைவிடப் பதிவு செய்த பரம்பரை வைத்தியர்களாக ஜெ.நித்திகா (உடுவில்), நாசர் கணபதிப்பிள்ளை (உடுவில்), க.இலட்சுமணன்(உடுவில்) பொ.சிவஞானசுந்தரம் (ஏழாலை), கே.சிவானந்தம் (சுன்னாகம்), சி.அரியரட்ணம் (உடுவில்), செ.கிருபாரத்தினம் (சுன்னாகம்), டி.சோமசுந்தரம் (சுன்னாகம்), தே.பத்மாவதி (தாவடி), வீ.தணிகைவேல் (ஏழாலை), சி.சௌந்தர ராஜன் (சுன்னாகம்), கோ.ஞானசவுந்தரி (சுன்னாகம்), கி.பராசக்தி (சூராவத்தை) ஆகியோரும் பணிபுரிந்து வருகின்றனர்.

குறிப்பு - இக்கட்டுரையாசிரியரான சித்தமருத்துவ கலாநிதி சே.சிவசண்முகராஜா அவர்கள் கந்தரோடையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இக்கட்டுரையிற் குறிப்பிடப் பட்டுள்ள வைத்தியர் கா.சுப்பிரமணிய ஐயரின் பேரனாவார். யாழ்.பல்கலைக் கழகத்தில் BSMS பட்டமும். தமிழ்நாடு டாக்டர் எம்.ஜீ.ஆர் மருத்துவப் பல்கலைக் கழகத்தில் குழந்தை மருத்துவத்துறையில் MD பட்டமும் பெற்றுள்ளதுடன் 35 இற்கும் மேலான சித்தமருத்துவ நூல்களையும் பல ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ள துடன் கந்தரோடை பற்றிக் காலத்தை வென்று நிற்கும் கந்தரோடை என்னும் நூலையும் எழுதியுள்ளார். தற்போது யாழ். பல்கலைக்கழகச் சித்தமருத்துவத் துறையின் தலைவராகவும் சிரேஷ்ட விரிவுரையாள ராகவும் பணிபுரிந்து வருகிறார். இணுவிலைச் சேர்ந்த இவரின் துணைவியார் திருமதி பிரேமா சிவசண்முகராஜா அவர்களும் தமிழ் நாடு டாக்டர் எம்.ஜீ.ஆர் மருத்துவக்கல்லூரியில் சிறப்பு மருத்துவத்துறையில் MD பட்டம் பெற்றுத் தற்போது கைதடி சித்தபோதனா வைத்தியசாலைப் பொறுப் பதிகாரியாகவும் வைத்திய நிபுணராகவும் பணிபுரிந்து வருகின்றார். யாழ்ப்பாணத் திலுள்ள இரண்டு சித்தமருத்துவ உயர் நிறுவனங்களான பல்கலைக்கழகச் சித்தமருத் துவப்பிரிவு, சித்தபோதனா வைத்தியசாலை என்பவற்றில் வலி தெற்குப் பிரதேச செயலகப் பிரிவிற் பிறந்த இவ்விரு மருத்துவர்களும் தலைமைப்பதவி வகிப்பது குறிப்பிடத்தக்கது.

**உதவியவை**

1. தம்பையாபிள்ளை சு. (பதிப்பாசிரியர்) அமுதாகரம் விக்டோரியா ஜுபி அச்சுக் கூடம், சென்னைப்பட்டினம்.1892
2. சுவடி இலக்கம் 135. யாழ்பல்கலைக் கழகப் பிரதான நூலகம்
3. சுதேசமருத்துவம் (சஞ்சிகை)- சுதேச வைத்திய அபிவிருத்திச் சங்கம், கைதடி. 1994. பக். 2
4. ஆன்மேரி, தகவல்
5. சிவலிங்கம் மூ. சீர் இணுவைத் திருவூர் – சைவத்திருநெறிக்கழகம், இணுவில், 2004. பக். 179–181
6. மிருத்யுஞ்சஜெயம்.ந. தகவல்
7. பாலசுப்பிரமணியம் செ. – கைநாடி மூலம் நோயினை அறிந்து குணமாக்கும் வைத்தியநிபுணர் செல்லப்பா கந்தையா (கட்டுரை) — வலம்புரி பத்திரிகை — 11.11.2002 பக். 9
8. மேற்படி கட்டுரை
9. குரும்பசிட்டி திருவாட்டி தங்கம்மா தியாகராசா நினைவுமலர் 26.10.1994
10. ரகுபதி அ.– கிளிநொச்சி மாவட்டத்தின் தொன்மைமிக்க பாரம்பரிய வைத்திய சேவை — கிளிநொச்சி மாவட்ட தொன் மையின் மூலங்கள் நூலில் இடம்பெற்ற கட்டுரை — 2014. பக். 397
11. சிவசண்முகராஜா சே. சித்தமருத்துவ வாகடம் – சித்தமருத்துவ வளர்ச்சிக் கழகம், யாழ்ப்பாணம். 2007 பக். iii
12. சிவசண்முகராஜா சே. – இருபதாம் நூற்றாண்டில் ஈழத்துச் சித்தமருத்துவம் – சித்தமருத்துவ வளர்ச்சிக் கழகம், யாழ்ப்பாணம். 2000 பக். 63–66
13. செகராசசேகரம் – மீள்பதிப்பு சுகாதார சுதேச மருத்துவத் திணைக்களம், வட கிழக்கு மாகாணசபை. 2000
14. இந்திராணி மு. — ஏழாலைக் கிராமத்தின் நவமணிகள் – 2012. பக். 40–41
15. இராமநாதன் பொ. தகவல்

# அமெரிக்கன் மிசனரியின் வருகையும் உடுவில் மகளிர் கல்லூரியின் வளர்ச்சியும்


வைலற் சுபாசினி பிரபாகர்
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், உடுவில்.


1806ம் ஆண்டு ஒரு மதிய வேளையில் அமெரிக்காவில் உள்ள வில்லியம் கல்லூரியில் கல்வி கற்றுக் கொண்டிருந்த ஐந்து இளவயது நிரம்பிய மாணவர்கள் சந்தித்து கலந்து ஆலோசித்து கொண்டிருந்தனர் அவர்கள் வாரத்திற்கு ஒருமுறை இவ்வாறு சந்திப்பது அவர்களுடைய வழக்கமாகும். அன்றைய தினம் ஆன்மிகச் செயற்பாடுகளை ஆசியாக்கண்டத்திலும் பரப்புவது தொடர்பாக அம் மாணவர்கள் கதைத்துக் கொண்டிருந்தனர். அச்சந்தர்ப்பத்தில் பாரிய புயல் வீசத் தொடங்கியது. அவர்கள் ஓடிச் சென்று வைக்கோல் பட்டடைக்கு அருகில் உள்ள கூடாரத்திலே புயல் கடக்கும் வரை தங்கியிருந்தனர்.

அக்கூடாரத்திலே தங்கியிருந்து தங்களிடையே விவாதித்து இறுதியாக ஆசியாக் கண்டத்திற்கு சென்று ஆன்மீக செயற்பாடுகளை பரப்புவது என முடிவு எடுத்தனர். இதன் வழியாகவே அமெரிக்கன் மிசனரிமார் ஆசியாக்கண்டத்திற்கு வருவதற்கு அடிப்படையாக அமைந்தது. அமெரிக்கன் மிசனரிமாரின் வருகையால் உடுவில் பிரதேசத்தில் பலவாறான முன்னேற்றங்கள் ஏற்பட்டன. அவற்றில் ஒன்றே உடுவில் மகளிர் கல்லூரி நிறுவப்பட்டது ஆகும். இலங்கையிலே முதன் முதலில் உருவாக்கப்பட்ட பெண்கள் பாடசாலை ஆகும். இக்கல்லூரி 2015ம் ஆண்டில் 190 ஆவது நிறைவு விழாவை கொண்டாடியுள்ளது.

இலங்கைக்கு வந்த முதல் அமெரிக்கன் மிசனரி பெண்மணி "கரியட் வின்சிலோ" அம்மையார் ஆவார். இவர் தனது கணவருடன் 1819 ம் ஆண்டு யாழ்ப்பாணத்திற்கு வந்து தெல்லிப்பளையில் தனது பணிகளை ஆரம்பிக்கத் தொடங்கினார்.

1820ம் ஆண்டு கரியட் வின்சிலோ அம்மையார் யாழ்ப்பாண மாவட்டம் முழுவதும் சுற்றிப் பார்த்தார். வைகாசி மாத அதிகாலையிலே அவர் சுற்றிப்பார்த்துக் கொண்டிருக்கும் போது அமைதியான இடத்தைக் கண்டார். அப்பிரதேசத்திலே தனது பணிகளை தொடரலாம் என எண்ணினார். அப்பிரதேசமே உடுவில் பிரதேச மாகும். உடுவில் பகுதியை சுற்றி பார்க்கும் போது ஒரு கைவிடப்பட்ட பழைய குருமார் தங்கும் இல்லம் தனது பணியை தொடர்வதற்கு தகுந்த இடம் என முடிவு செய்து அவ் இல்லத்தை பனையோலைகளால் வேய்ந்து யன்னல் கதவு போன்றவற்றையும் அமைத்து அதனை மிசன் இல்லமாக மாற்றினார். அங்கிருந்து தனது பணிகளை ஆரம்பித்தார்.

அக்கால கட்டத்தில் பெண்கள் கல்வி கற்பதே இல்லை என்பதை அறிந்து ஒரு நாள் அவ் அம்மையார் அப்பகுதி மக்களை அழைத்து பெண்களுக்கான கல்வியின் அவசியம் பற்றி விளக்கிக் கூறினார். இதன் மூலம் அவர் பல எதிர்ப்புக்களை சந்தித்தும் அவர் முயற்சியை கைவிடவில்லை அவ் ஊர்

மக்களுக்கு சமயப் போதனைகளையும் வழங்கினார். காலம் செல்ல அவருடைய கருத்துக்களையும் போதனைகளையும் ஏற்றுக் கொண்ட மக்கள் தங்களுடைய பிள்ளைகளை அவரிடம் கல்வி கற்க அனுப்பினார். அச்சிறுவர்களுக்கு இலவசமாக கல்வியை புகட்டினார்.

1820ம் ஆண்டு செப்டெம்பர் 20ம் திகதி திங்கட்கிழமை காலையில் அவரிடம் கல்வி கற்ற மாணவரில் ஒருவன் பன்னிரண்டு சிறுவர்களோடு வந்து கரியட் வின்சிலோ அம்மையாருடன் தங்க விரும்பினான். அச்சிறுவர்களின் தாய் தகப்பன் பிள்ளைகளை கரியட் வின்சிலோ அம்மையாரிடம் ஒப்படைத்து விட்டு சென்றனர். அவ்வாறு உருவாகியதே இக்கல்லூரியின் விடுதி. விடுதியுடன் கூடிய முதலாவது பாடசாலை இதுவாகும். இக்கல்லூரியின் முதலாவது அதிபர் கரியட் வின்சிலோ அம்மையார் ஆவார்.

உடுவில் மகளிர் கல்லூரியின் இரண்டாவது அதிபர் எலிசா அக்னு அம்மையார் ஆவார். இவர் அமெரிக்காவிலுள்ள நியூயோர்க் பட்டணத்தில் 1809ம் ஆண்டு மாசி மாதம் இரண்டாம் திகதி பிறந்தார். இவர் தனது சிறுவயதிலே பல ஆன்மீக பணிகளை செய்து வந்தார். பல முதியோர்களை தனது பரா மரிப்பின் கீழ் வைத்திருந்தார். அவர்கள் இறந்த பின் தன்னை ஊழியத்திற்கு ஒப்புக் கொடுத்து 13000 மைலுக்கு அப்பாலிருந்து ஆறு மாத காலம் பாய்க்கப்பலில் நன்னம்பிக்கை முனையை சுற்றியோடிப் பல கஸ்டங்களை அனுபவித்து 1839 ம் ஆண்டு மார்கழி மாதம் உடுவில் மகளிர் கல்லூரியை வந்தடைந்தார். உடுவில் பிரதேசத்தின் உயர்வுக்காக பெண்பாலாரைப் படிப்பிப்பதே முதல் கடமை என்று கண்டு ஊக்கமாக உழைத்தார். ஆங்கில அறிவை பெண்களுக்கு கூடுதலாக புகட்டினார். வசதி குறைந்த பிள்ளைகளை விடுதியிலே தங்க வைத்து அவர்களுக்கான உணவு உடுப்பு புத்தகச் செலவுகள், பிறசெலவுகளும் இனாமாக அமெரிக்காவில் உள்ள நல்லுபகாரிகளால் வழங்குவதற்கு ஏற்பாடு செய்தார். அக்காலத்தில் அனேக பெண்பிள்ளைகளின் வீடு அப்பாடசாலையாகவே இருந்தது. படிக்கும் காலத்தில் நன்னடத்தை உள்ளவர்களுக்கு விவாகம் ஏற்படும் போது 75 இறைசால் சீதனமும் கல்யாண செலவுக்காக 15 இறைசாலும் கொடுத்து அவர்களுடைய இல்லற வாழ்க்கைக்கு உதவி செய்தார். இவ் அம்மையார் திருமணம் செய்யாது தனது வாழ்க்கையை பெண்களுக்கு என்றே அர்ப்பணித்தவராவார். உடுவில் பிரதேசத்தின் நன்னிலைக்கு ஆதிகாரராய் இருந்தவராவர்.

இப்பாடசாலையின் மூன்றாவது நான்காவது அதிபர்கள் முறையே "சூசன் கௌலண்ட் "அம்மையார்", லூலு "புக் வோல்டர்" அம்மையார்" ஆவார். இவர்கள் இருவரும் அமெரிக்கன் மிசனரி பெண்கள் இவர்களும் பெண்களின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டனர்.

செல்வி அரியம் பரமசாமி அம்மையார். உடுவில் மகளிர் கல்லூரியின் ஐந்தாவது அதிபர், இவர் இலங்கைப் பெண்மணியான முதல் அதிபராக 1941ம் ஆண்டிலிருந்து பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

Dr. செல்வி C.V செல்லையா அம்மையார் அதிபராக இருந்த காலமே இக்கல்லூரியின் வசந்த காலம் என கூறலாம். சகல செயற்பாடுகளிலும் உடுவில் மகளிர் கல்லூரி மாணவிகள் ஏனைய கல்லூரி மாணவிகளை விட சிறந்து விளங்கினர்.

இயற்கை அன்னையின் எழில் நிறைந்த இக்கல்லூரி இன்று தனது 190

ஆவது ஆண்டில் காலடி பதிக்கிறது. இக் கல்லூரியின் சிறப்பம்சங்களில் ஒன்று இங்கு காணப்படும் பச்சைப்பசேல் என்ற மரங் களும் பூக்களும் தான். உடுவில் மகளிர் கல்லூரி ஒரு அழகிய பூக்களின் சாம்ராச்சி யம். ஒவ்வொரு மரங்களும் நாம் கடந்து வந்த நாட்களை நினைவூட்டும் ஞாபகச் சின்னங்கள் ஆகும். கல்லூரியினுள் காலடி எடுத்து வைக்கும் ஒவ்வொருவர் மனதையும் இனம் புரியாத சந்தோசம் வருடிச் செல்லும். பாடசாலை வாயிலை அடைந்தவுடன் வந்தாரை வரவேற்பது போல் நீண்டு வளர்ந்த அசோகமரங்களின் அணி வகுப்பை காணலாம். இக்கல்லூரியினுள் நுழைந்த வுடன் ஏதோ தாவரவியல் பூங்காவிற்குள் நுழைந்து விட்டோமோ என எண்ணத் தோன்றுமளவிற்கு பூக்களும் செடிகளும் காணப்படுகின்றன. இப்பாடசாலையின் "Jubilel Hall" இற்கு முன்னால் காணப்படும் மகிழமரம் மிகப் பழமையான ஒரு சொத்து. ஏறக்குறைய 1840 களிலேயே இம்மரம் பாடசாலையில் காணப்பட்டமைக்கான சான்றுகள் உள்ளன. பனை வகைகளில் அரிதான கிளை வைத்த மடுப்பனை கூட இங்கு காணப்படுகிறது. உடுவில் மகளிர் கல்லூரி எனும் ராணியை மெருகூட்டும் அம்சங்களில் பூமரச் சாம்ராச்சியத்தின் பங்களிப்பு அளப்பெரியது.

இன்று உடுவில் மகளிர் கல்லூரி சிறந்த பாடசாலையாக யாழ் மாவட்டத்தில் திகழ்கிறது. கடந்து வந்த சில வருடங்களை மேலோட்டமாக பார்க்கும் போது இக் கல்லூரி மாணவர்கள் மாகாண மட்டத்தில் பல வெற்றிகளை ஈட்டியுள்ளனர். தேசிய மட்டத்தில் உடற் பயிற்சி, கொக்கி, வலைப் பந்தாட்டம், புதிர்ப் போட்டிகள், நாடகங்கள், இசை போன்றவற்றில் சாதனை படைத்துள் ளனர். மேலத்தேய கீழைத்தேய சங்கீதத்திலும் முன்னணி வகிக்கிறது. க.பொ.த. சாதாரண தரத்திலும் உயர்தரத்திலும் சாதனை படைத்த பல மாணவர்களையும் இக்கல்லூரி கொண்டுள்ளது. குறிப்பாக ஆங்கில போட்டி களில் இங்கு உள்ள மாணவர்கள் தேசிய மட்டத்தில் பங்கு பற்றி வெற்றி பெற்று வரு கின்றனர். இக்கல்லூரியில் கல்வி பயின்ற பல மாணவர்கள் மேற்படிப்புக்காக புலமைப் பரிசில் கிடைத்து வெளிநாடு சென்றுள்ளனர். ஒரு சிலர் பெரிய பதவிகளில் இருப்பதையும் அவதானிக்கலாம். தற்போதைய அதிபர் திருமதி சீரணி மில்ஸ் அம்மையார் உடுவில் மகளிர் கல்லூரியை மேலும் முன்னேற்ற அரும்பாடுபட்டு வருகிறார்.

அமெரிக்கன் மிசனரி உடுவில் பிரதேசத்திற்கு அளித்த வரமே உடுவில் மகளிர் கல்லூரி ஆகும். இக்கல்லூரி எமது பிரதேச செயலகப் பிரிவில் அமைந்திருப் பதை இட்டு நாம் பெருமை அடைகின்றோம்.

# இணுவில் இந்துக்கல்லூரியின் வளர்ச்சிப் பாதை

மு.செல்வஸ்தான்
அதிபர்,
யா/இணுவில் இந்துக்கல்லூரி.

இந்து சமுத்திரத்தின் நித்திலம் என அழைக்கப்படும் இலங்கைத் திருநாட்டிலே விளங்கும் சைவத்தமிழ் பாடசாலைகளுள் வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலை க்கு அடுத்து மூத்த பாடசாலையாகப் பதிவு பெற்ற வரலாறு எமது பாடசாலைக்கு உரித்தானதாகும். 1860 களில் திண்ணைப் பாடசாலையாக இப்பாடசாலை ஆரம்பிக் கப்பட்டது.

ஈழத்து திருவாரூர் என சிறப்புப் பெறும் இணுவையம்பதி கலை மலிந்த புண்ணிய பூமியாகும். மருத நில மண் ணிலே மலர்ந்த தேனினும் இனிய நம் மொழி பொலிவுற விளங்குகின்ற இம் மண்ணிலே கலங்கரை விளக்கென கேடில் விழுச் செல்வத்தை வாரி வழங்கிக் கொண்டிருக் கும் கல்விக்கூடமாக இன்று இணுவில் இந்து அன்னையவள் மிளிர்கின்றாள்.

19 ம் நூற்றாண்டிலே உத்தியோக மோகம்,சமூக அந்தஸ்து, அதிகார ஆசை காட்டி யாழ்ப்பாணத்தில் ஏராளமான சைவர்களை ஆங்கிலக் கல்வியை நாடும் கிறிஸ்தவர்களாக மதம்மாற்றி வந்த அன்னியர் ஆட்சிக்காலத்திலேயே தேசிய வாதியும் தமிழ் ரட்சகருமாகிய ஆறுமுக நாவலர் தோன்றி சைவமும் தமிழும் தழைக்க என 1848 ல் வண்ணார்பண்ணை யிலும் 1864 ல் சிதம்பரத்திலும் பாடசாலை கள் நிறுவினார்.

இணுவில், கோப்பாய், கந்தர்மடம், மாதகல், புலோலி முதலிய ஊர்களில் தமது சிஷ்யர்களுக்கு கட்டளையிட்டு சைவத்தமிழ் பாடசாலைகளை நிறுவ வேண்டும் என்ற நாவலர்பெருமானின் பேராவல் பூர்த்தியாக அவரது மாணவர்களும் சகபாடிகளுமாகிய பலர் தமது கிராமங்களில் திண்ணைப் பள்ளிகளைத் தொடக்கி சமய நூல்களையும் கருவி நூல்களையும் இலவசமாக கற்பித்து வந்தார்கள். இவ்வாறு இணுவிலிலும் நாவலரது மாணவர் ஆகிய இணுவிலைச் சேர்ந்த சித்தானந்தபானு நடராசாஐயர், நாவலரின் நண்பர் மு. வெங்கடாசல ஐயர், சுப்பிரமணியம், சரவணச்சட்டம்பியார், சின்னத்தம்பி சட்டம்பியார் ஆகியோரால் திண்ணைப் பள்ளிகள் தொடக்கப்பட்டு நடாத்தப்பட்டு வந்தன.

இணுவில் திண்ணைப் பாடசாலை ஒன்றை அமைத்து வெங்கடாசலஐயர் நடாத்தி வந்தார். சிறிது காலத்தின் பின்னர் உறவினர்களைச் சந்திப்பதற்காகவும் தல யாத்திரையின் பொருட்டும் இந்தியா பயண மானார். இதன் காரணமாக இத்திண்ணைப் பாடசாலையை பொறுப்பேற்ற இணுவையூர் அம்பிகைபாகரின் செயல் திறமையால் இப்பாடசாலை வித்தியாசாலை என வளர்ச்சி கண்டது. இப்பாடசாலையின் சிறப்பை கண்ணுற்ற பலரும் இதனை அம்பிகைபாகர் பள்ளிக்கூடம்" என அழைக்கலாயினர்.

1903 ல் அம்பிகைபாகர் இறைவனடி சேர திரு.எஸ்.கே. லோட்டன். திரு. சந்திர சேகரம் அதிபராகக் கடமையாற்றினார். பின்னர் அம்பிகைபாகரின் மகனாகிய A.K இளையதம்பி என்பவர் அரசினால் இப்பாட சாலையின் அடுத்த முகாமையாளராக 1918ல் நியமிக்கப்பட்டார். இவருக்குப்பின் 1924ல் திரு.M.S.இளையதம்பியை முகாமை யாளராக நியமித்தனர். இவரின் விருப் பத்திற்கேற்ப 1936 ல் இருந்து 1970 வரை S. கந்தையாவையும் முகாமையாளராக அரசாங்கம் அங்கீகரித்தது. இவர் 1927ல் இளைப்பாற அம்பிகைபாகரின் மகன் அ.க வைத்திலிங்கம் தலைமை ஆசிரியரானார். இவரின் பின் எஸ்.கந்தையா அதிபராகப் பொறுப்பேற்றார். அதன் பின் சில கசப்பான சம்பவங்கள் ஏற்பட்ட காரணத்தால் 1941ல் இப்பாடசாலை "இந்துபோட்டிடம்" கையளிக் கப்பட்டது.

இக்கால கட்டத்தில் பாடசாலைக்கு என 18 பரப்புக்காணி கொள்வனவு செய் யப்பட்டது. இக்காலத்தில் முகாமையாளராக திரு.S அட்சலிங்கமும் தலைமை ஆசிரியராக நீர்வேலிப் பண்டிதர் திரு. தம்பையாவும் நியமிக்கப்பட்டனர்.

இவர் காலத்தில் ஓலைக் கொட்டகை யாக இருந்த இந்த பாடசாலை கல்வித்தரத் திலும் பௌதிக வளத்திலும் அபிவிருத்தி அடையத் தொடங்கியது. இவரின் பின் குப்பிளான் இராமலிங்கம், இணுவில் கனகசுந்தரம், நீர்வேலி சின்னத்துரை, திரு நெல்வேலி கனகரத்தினம், புங்குடுதீவு நல்ல தம்பி ஆகியோர் தலைமை ஆசிரியர்களாக கடமையாற்றினர். திரு. நல்லதம்பி இளைப் பாற இணுவில் பண்டிதர் திரு.இ. இராசலிங் கம் அதிபராக கடமையைப் பொறுப்பேற்று திறம்பட நடாத்தி வந்தார். இக்காலத்தில் இப் பாடசாலையை மகா வித்தியாலயம் ஆக்க வேண்டும் என்று பாடசாலைச் சமூகமும் ஊர் மக்களும் முனைப்புடன் செயற்பட்டனர்.

உயர்தர வகுப்புக்கள் எமது பாட சாலையில் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதே இவர்களின் அவாவாக இருந்தது. இந்த அவாவை உடுவில் கிராமசபைத் தலைவராக இருந்த திரு. ச.முத்துலிங்கமும், பாராளுமன்ற உறுப்பினர் திரு.வி.தர்மலிங்கமும் தமது தளராத முயற்சியால் 1978 ம் ஆண்டு மகா வித்தியாலயமாக தரம் உயர்த்தப்பட்டது.

1991ல் அதிபராக கடமையேற்ற திரு.சு.தம்பித்துரை காலத்திலேயே எமது பாடசாலையின் பழைய மாணவனும், வட மாகாண கல்விப் பணிப்பாளராக இருந்த வருமாகிய திரு.இ.சுந்தரலிங்கம் அவர் களின் பெருமுயற்சியால் 1993 ம் ஆண்டு இந்துக்கல்லூரி என அந்தஸ்து பெற்று மிளிர்ந்தது. எமது பாடசாலையின் அதிபர்க ளாக இருந்த ஒவ்வொருவரும் தமது திறமையான நிர்வாகத்தால் பாடசாலையின் பௌதீக வளங்கள் கல்வி மேம்பாடு ஆகிய துறைகளில் பெரிதும் கவனம் செலுத்தி வந்தனர். பாடசாலையின் சமூகத்தை இணைத்துச் சென்ற அதிபர்கள் யாவரும் பயனுள்ள பல சேவைகளைச் செய்து சாதனைகள் பல புரிந்துள்ளனர்.

எமது பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறை செலுத்திய பெரியோர்கள் ஆகிய கல்கி தொழில் அதிபர் திரு.சி. சின்னத்துரை அவர்களாலும், சுபாஸ்கபே உரிமையாளர் திரு. சங்கரன் அவர்களாலும், விஞ்ஞான கூடமும், தொழில்கூடமும், அமைக்கப்பட்டன. தற்பொழுது பாடசாலையின் தேவை கருதி யும் இவற்றைப் புதிப்பிக்க முடியாமை யாலும் இவற்றின் தொழிற்பாடுகள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. மில்க்வைற் அதிபர் சிவதர்மவள்ளல் திரு.க.கனகராசா அவர் களால் மாணவருக்கான குடிநீர் வசதிக்குரிய நீர்த்தாங்கி அமைக்கப்பட்டது.

# இராமநாதன் கல்லூரியும் நூற்றாண்டு விழாவும்

திருமதி.க.கிருஷ்ணபிள்ளை
அதிபர்,
யா/சுன்னாகம் இராமநாதன் கல்லூரி.

இந்துபண்பாட்டு மறுமலர்ச்சியின் சின்னமாக விளங்குவது இராமநாதன் கல்லூரி. 1913ல் ஆரம்பிக்கப்பட்ட இக் கல்லூரி இலங்கையின் இந்துப் பெண்களுக் கென அமைக்கப்பட்ட முதல் கல்லூரியாகும். தனித்துவமானதும் ஏனைய கல்லூரிகளுக் கெல்லாம் முன்மாதிரியாக விளங்கிய சிறப் பினையுடையதும் வெள்ளி விழா, பொன் விழா, வைரவிழா, பவளவிழாக்களைக் கண்ட கல்லூரி, 2014ல் நூற்றாண்டு விழாவையும் கொண்டாடியமை இன்னொரு தனிச் சிறப்பாகும். 2014 ஜனவரி மாதம் 18ம், 19ம், 20ம் திகதிகளில் நூற்றாண்டு விழாவை இராமநாதன் கல்லூரி சிறப்பாகக் கொண்டா டியது.

### கல்லூரிப் பெருமை

இக்கல்லூரியைக் கட்டியவர் சேர்.பொன் இராமநாதனாவார். இவர் பெண் கல்வியில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய மகானாவார். காலமெல்லாம் நிலைத்திருக்க வேண்டுமென்ற நினைவோடு இக்கல்லூரி கட்டப்பட்டது. எந்த ஒரு வள்ளலாலும் நினைத் துப் பார்க்க முடியாத பெருந்தொகைப் பணத் தைச் செலவு செய்து இக்கல்லூரி கட்டப் பட்டது. 1927ம் ஆண்டில் கல்லூரிக்கு வருகை தந்த மகாத்மாகாந்தியடிகள் "இராமநாதன் அவர்களின் பரோபகாரப் பண்பின் நினைவாலயமாக இக்கல்லூரி நிலைத்து நிற்குமென" வாழ்த்திச் சென்றார். "சிறுவர் சிறுமியர்க்கு இரு கல்விக் கூடம் நிறு வினான் பெயர் என்றும் நிற்கும் பெரும் பெயரன் சென்னைக்குப் பச்சையப்பன், சீர் யாழ்ப்பாணத்திற்கு மன்னு இராமநாதன் என பிரான்சில் கிங்ஸ்பரி தனது ஆய்வில் குறிப்பிட்டுள்ளார். இது இராமநாதன் கட்டிய கல்லூரியின் பெருமையை கூறுவதாகும். சேர் பொன் இராமநாதன் மானிப்பாயில் பிறந்த ஒரு மகான். சைவப் பெருங்குடி மகன் பொன்னம்பலம் முதலியாருக்கும் செல்லாச்சி அம்மையாருக்கும் தவப்புதல் வராக அவதரித்தவர். தமிழர்களின் தலைம கன் அரசியலில் அரைநூற்றாண்டு காலம் இன,மத, மொழி, வேறுபாடின்றி எல்லா இனத்தவர்களுக்கும் அவர் ஆற்றிய சேவை யால் இவர் இலங்கை வாழ் மக்களின் இதயங்களில் இன்றும் வாழ்ந்து கொண் டிருக்கிறார். இவரது பணிகள் அரசியல், சமயம், சமூகம், ஆத்மீகம், கல்வி, சார்ந் தவையாக அமைந்துள்ளன. யாவற்றிலும் கல்விப்பணியே மேலோங்கி நிற்கின்ற மையை யாவரும் அறிவர்.

### கல்லூரி அமைத்தலின் அவசியம்

அந்நியராதிக்கத்தின் பிடியில் இலங்கை சிக்கித்தவித்தது. மக்கள் பண்பாடு, பாரம் பரியம், கலாச்சாரம் மறந்தவராய் பேண முடியாதவராய் வாழ்ந்தனர். கிறிஸ்தவ பாதிரி மார் மதமாற்றம் ஒன்றையே குறிக் கோளாக்கி புகட்டினார். இதன்பயனாக யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவ பாடசாலைகள் பல தோற்றம் பெற்றன. வேறு வழியின்றிச்

சைவப் பிள்ளைகள் கிறிஸ்தவ பாடசாலைகளை நாடினார். இளைய தலைமுறையினர் சைவத்தைக் காட்டிலும் கிறிஸ்தவத்தை நன்கு அறிந்திருந்தனர். உடை, நடை, யாவும் மேல் நாட்டுப்பாணியில் அமைந்தன. பெற்றோர் நெஞ்சங்கள் வெடித்து புரட்சி உருவாகும் நிலை ஏற்பட்டது. சமய மறுமலர்ச்சிக்கு வித்திட்ட ஆறுமுகநாவலரின் வழி நின்று அஞ்சா நெஞ்சத்துடன் துணிவுடனும் பெண்கள் கல்வியில் பாரிய மாற்றத்தை புரட்சியை ஏற்படுத்தும் வகையில் 1913ல் மருதனார்மடத்தில் கட்டப்பட்டதே இராமநாதன் கல்லூரி.

## இந்துப்பண்பாட்டின் சின்னம்

மருதனார்மடத்தின் வடகீழ்திசையில் 25 ஏக்கர் நிலப்பரப்பில் 1910ம் ஆண்டு யூன்மாதம் 3ம் திகதி சான்றோர் முன்னிலையில் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அன்றைய தினம் செல்லப்பாச் சுவாமிகள் அவ்விடத்திற்கு வருகை தந்து பனைஓலை விசிறி ஒன்றை இராமநாதனிடம் கொடுத்து ஆசிர்வதித்துள்ளார். பாரிய நிலப்பரப்பில் அமைந்த இக்கல்லூரி பலம் வாய்ந்த கட்டட அமைப்புக்களுடன் கூடியதும் 150 அடிச்சதுரமான முற்றத்தைச் சுற்றிய மண்டபங்கள் வகுப்பறைகள் நூல் நிலையம், ஆராதனைக் கூடம், கலாசார மண்டபம், விளையாட்டிடம், விடுதி, எனப்பல வசதிகளோடு நவீனமாகக் காட்சிதரும் வகையில் நிர்மாணிக்கப்பட்டது. மேல் மாடியில் நடராஜர் ஆலயம் சரஸ்வதி மண்டபமும் திட்டமிட்ட வகையில் பண்பாட்டுப் புரட்சியின் சின்னமாகக் கல்லூரி அமைந்தது.

இத்தகைய கல்லூரி 1913ம் ஆண்டு ஜனவரி மாதம் 20ம் திகதி நல்ல முகூர்த்தத்தில் சம்பிரதாயச் சடங்குகளுடன் திறந்து வைக்கப்பட்டது. கல்லூரியின் மகுடவாசகம்.

"கருத்தரிய சிற்சபையில் ஆனந்த தர்த்த மிடும் – கருணாகரக் கடவுளே – திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் அருள்வாய்" என அமைந்தது. இதனை இந்து ஓகன் பத்திரிகை தமிழர் வரலாற்றில் புதிய சகாப்தத்தை உருவாக்கும் என்றும் தேசிய மறுமலர்ச்சிப்பணி என்றும் விபரித்தது. ஒரு சமூகத்தை விழிப்படையச் செய்வதும் உயர்த்துவதும் சமயக்கல்வியே என்ற கொள்கையை நடைமுறைப்படுத்தியவர் சேர் பொன் இராமநாதன்.

இங்கே கல்விபயிலும் மாணவர்கள் சமூகத்தில் இனங்காணப்பட்டனர். கல்வி முறை, நடைமுறை, நடை, உடை, பாவனை பண்பு, வழிபாடு, ஒழுக்கம், யாவற்றிலும் இனங்காணப்பட்டனர். பாதம் வரை நீண்ட பாவாடை, சட்டை, தாவணி, மாலை சூடிய பின்னல் திருநீற்றுப் பூச்சின் மேல் பொட்டு வைத்து மங்கலகரமாகக் காட்சியளிப்பர். இதனை திரு.சு.நடேசபிள்ளை அவர்கள் சேர் வான் முகத்தார் திருநீற்றுப் பூச்சுடதே – மங்களஞ்சேர் வாழ்வு பயில் மாண் புடைத்திக் கல்லூரி" என்று சுட்டிக்காட்டுவார். ஆரம்பத்தில் சேர் பொன் இராமநாதன் அவர்களே கட்டுப்பாடு, ஒழுங்கு, கல்விமுறைகள், வரையறுத்து முன்னின்று நடத்தினார். அவருக்கு பின் லேடி இராமநாதன், திரு சு.நடேசபிள்ளை, இப்பணியை ஏற்று நடாத்தினார்கள்.

ஆழமான சமய அறிவும் ஆசாரசீலமும் உள்ள ஆசிரியர்களை நியமித்து மாணவர்கள் ஆசிரியருடன் இணைந்து வாழ்ந்து கற்கும் குருகுலக் கல்வி முறை பேணப்பட்டது. மாணவர்கள் ஆலயப்பணிகளிலும் ஈடுபடுத்தப்பட்டனர். இசைப் பயிற்சியும் அளிக்கப்பட்டது. மாணவர்கள் புராண இதிகாசங்களில் கூறப்படும் இலட்சியப் பெண்களைப் போலவும் சிறந்த இல்லத்தரசிகளாகவும் உருவாக்கும் பாணியில் கல்வி புகட்டப்பட்டது. இந்த வகையில் சிறந்த இல்லத்தரசிகள் உருவாக்கப்பட்டனர். வைத்தியத்துறை, நீதித்துறை, கல்வித்துறை, இசைத்துறை, போன்ற பல்வேறு துறை

களிலும் பெண்கள் உருவாக்கப்பட்டுக் கல்லூரிக்குப் பெருமை சேர்த்தனர். மாணவர்கள் இலங்கையின் பல்வேறு பாகங்களிலும் இருந்து வந்து தங்கிக் கல்வி பெற்றனர்.

1913 தொடக்கம் 1936ம் ஆண்டு காலப் பகுதிவரை தகுதி வாய்ந்த தமிழ் பெண் ஆசிரியர்கள் இல்லாததனால் ஆளுமை மிக்க ஆங்கிலப் பெண்மணிகளே அதிபர்களாக இருந்து கல்லூரிப் பண்பாட்டை கல்வியைப் பேணிக்காத்தனர். முதல் அதிபராக இருந்தவர் சிறந்த கல்வியாளரும் ஆத்மீகப் பண்புமுடைய திருமதி புளோறன்ஸ் எமறி ஆவர். 1937ல் இருந்து கல்லூரி உருவாக்கிய பெண்பட்டதாரிகளே அதிபர்களாக இருந்தனர். இவ்வாறு இற்றைவரை 15ற்கும் மேற்பட்ட தமிழ் அதிபர்கள் இக் கல்லூரியை வளர்த்தெடுத்தனர். 1987 வரை எல்லா வகையிலும் கொடிகட்டிப்பறந்த கல்லூரி நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்கள் காரணமாகக் கல்வியில் ஏற்றத்தாழ்வுகளைச் சந்தித்தாலும் தனித்துவத்தை இழக்கவில்லை. மீண்டும் தொடங்கியது மிடுக்கு.

## நூற்றாண்டுவிழா

இவ்விழா இராமநாதன் கல்லூரியில் மட்டுமல்ல இங்கே கல்விபயின்ற பழைய மாணவர்களினால் லண்டன், கனடா, அவுஸ்ரேலியா போன்ற இடங்களில் உணர்ச்சி பூர்வமாகக் கொண்டாடப்பட்டது. இது வெறுங் கொண்டாட்டங்கள் அல்ல. சேர் பொன் இராமநாதன் அவரது பாரியார் லேடி இராமநாதன், சீமாட்டி, செனற்றர் சு.நடேசபிள்ளை அவர் தம் பாரியார் திருமதி சுந்தரி நடேசன் இவர்களையும் இவர்கள் கல்லூரிக்கு ஆற்றிய பாரிய பணிகளையும் நன்றி கூறும் வகையில் கொண்டாடப்பட்ட நன்றிக்கடன் விழாக்களாகும். சேர் பொன் இராமநாதன் வள்ளலால் உருவாக்கப்பட்ட கல்லூரியானது திருத்த வேலைகளுடன் புதுப்பொலிவோடு நன்றிக்கடன் விழாவை ஏற்றுக் கொண்டது. சைவத்தமிழ் உலகம் இராமநாதவள்ளலின் கல்விப்பணியை என்றும் மறக்காது சேர்.பொன் இராமநாதன் பெண்களுக்கு கட்டிய இராமநாதன் கல்லூரி போல, திருநெல்வேலியில் ஆண்களுக்கும் பரமேஸ்வராக் கல்லூரியை நிறுவினார். அது இன்று யா/பல்கலைக் கழகமாக உயர்ந்து நிற்கின்றது. நூற்றாண்டு விழாக் கொண்டாடிய கல்லூரிச் சமூகமும் விழாவில் கலந்து கொண்டோரும் நன்றியுடையவர்கள்.

கீழைத்தேசத்தில் ஒப்பற்ற கல்வி நிறுவனமாக விளங்கிய இக்கல்லூரிக்கு சிறந்த அதிபரைத் தெரிவு செய்வதில் இராமநாதன் அவர்களின் முயற்சியின் பேறாகக் கிடைத்த முதல் அதிபரே திருமதி புளோறன்ஸ் எமேறி ஆவார். இவர் இங்கிலாந்து திரும்பச் செல்வதில்லை என்ற முடிவோடும் முழுமையான அர்ப்பணிப் போடும் அதிபர் பதவியை ஏற்றுக் கொண்டவர் 101 மாணவர்களோடும் 12 ஆசிரியர்களோடும் ஆரம்பித்த கல்லூரி காலப்போக்கில் ஆயிரத்துக்குமதிகமான மாணவர்களையும் 55 க்கு மேற்பட்ட ஆசிரியர்களையும் கொண்டு விளங்கிப் பல சாதனைகளை நிலை நாட்டியது.

மேற்றிசை லௌதீக ஞானமும் கீழத்திசை ஆன்மீக ஞானமும் இணைந்த கல்வியை அளிக்க வேண்டுமென்பதே இராமநாதன் அவர்களின் அவாவாகும். 1913 ல் இருந்து 1936 ம் ஆண்டு வரை ஆங்கிலப் பெண்மணிகளே ஆசிரியர்களாகக் கடமையாற்றினர். 1937 ஆண்டு முதல் தமிழ்ப் பெண்கள் கல்லூரி அதிபர்களாகக் கடமையாற்றினர். அக்காலத்தில் விஞ்ஞானத் துறையில் பட்டம் பெற்றவர்கள் இருக்கவில்லை. பெரும்பாலும் பாரத நாட்டைச் சேர்ந்தவர்களே ஆசிரியர்களாக இருந்தனர். சமயம், தமிழ், இசை, கற்பிக்கப் பிரபல நவநீத கிருஷ்ணபாரதியார் இராமச்சந்திர

ஐயர், மகாலிங்கசிவம் போன்ற ஆண் ஆசிரியர்களும் இருந்தனர். 1933 ல் திருமதி சு.சு. நவரட்ணம் அவர்களே முதல் தமிழ் பெண்பட்டதாரி ஆசிரியராகக் கடமை ஆற்றியவர் ஏனையோர் பாரத நாட்டைச் சேர்ந்தவர்கள்.

1930 ல் சேர் .பொன் இராமநாதன் அவர்கள் சமாதி அடையும் வரை தானும் தனது பாரியார் லேடி இராமநாதனும் கல்லூரிக் கடமைகளைக் கவனித்து வந்தனர். தனக்குப்பின்னும் இக்கல்லூரி நல்ல முறையில் நடைபெறுவதற்கு வசதியாக நிலங்களையும், தென்னந்தோட்டங்களை யும் எழுதி வைத்தார். கல்லூரியின் தலைவ ராக லேடி இராமநாதனையும் அறங்காவல் குழுவினரையும் நியமித்திருந்தார். அதிபர்கள், ஆசிரியர்கள், ஊழியர்களை நியமிக்கவும் நீக்கவும் கண்காணிக்கும் பொறுப்பினையும் லீலாவதி அம்மையாரு க்கு அளித்திருந்தார். சேர். பொன். இராம நாதன் மறைவிற்குப்பின் 1953 ம்ஆண்டு வரை லேடி இராமநாதன் அவர்களே கல்லூரிப் பணிகளை திறம்பட நடத்தினார். அவருடைய மறைவிற்கு பின் மருமகன் செனற்றர் திரு. சு. நடேசபிள்ளை அவர் களும் அவரது பாரியார் திருமதி சுந்தரி நடேசபிள்ளை அவர்களும் கவனித்து வந்தார். 15.7..1962 ல் அரசு பாடசாலை யைப் பொறுப்பேற்றது.

1943 ல் கல்லூரி தரமுயர்த்தப்பட்டு H.S.E. வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டது. விஞ்ஞானக் கல்வி வளர்ச்சியடையத் தொடங்கியது. மாணவிகள் கேம்பிரிட்ஜ் ஜீனியர் சீனியர் பரீட்சைகளிலும் லண்டன் மற்றிக் குலேசன் பரீட்சைகளிலும் தேர்ச்சி பெற்று ஆசிரியர்களாகயினர். விஞ்ஞான மாணிப்பட்டதாரிகள், கலைமாணிப் பட்டதாரிகள், லண்டன் இந்தியா இலங்கைப் பல்கழைக்கழகங்களில் படித்து ஆசிரியர்க ளாக வரப் பட்டதாரி ஆசிரியர்கள் தொகை கூடிற்று.

தகுதி வாய்ந்த பெண்ணாசிரியர்க ளைத் தோற்றுவிப்பதற்காக 1926-1947 வரையான காலப்பகுதியில் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை இங்கே நிறுவப்பட்டது. 1947 வரை பல பெண் ஆசிரியர்கள் தோற்று விக்கப்பட்டார்கள். 1926ல் சிரேஷ்ட தாரதரப் பத்திர வகுப்பு வரை கற்பிக்கும் சாதாரண பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இங்கு கற்ற வர்களே ஆசிரியப் பணியை மேற்கொண்ட னர். கல்லூரியின் ஒரு பகுதியில் அநாதைச் சிறுவர் இல்லம் அமைக்கப்பட்டது. 1930 ல் பெண் பிள்ளை கூட்டுத் தையல் கலைப் பயிற்சி வழங்கப்பட்டது. இங்கு கற்றோர் நாடெங்கிலும் தையற் பயிற்சி நிலையங்கள் அமைத்துத் தொண்டாற்றி வருகின்றனர். பெண்கள் தமிழில் ஆழ்ந்த அறிவும், ஆங்கிலத்தை புரிந்து கொள்ள போதுமான அறிவைப் பெற்றுக் கொள்ளவும் 1914 ல் தனித் தமிழ்ப் பகுதி ஆரம்பிக்கப்பட்டது. இதன் அதிபராக திருமதி ருக்மணி வெற்றிவேலு தலைமை ஆசிரியராகக் இருந்து கடமையாற்றினார்.

1960 முதற் கொண்டு ஆண்டு தோறும் பெருந்தொகையான மாணவிகள் பல்கலைக்கழகம் சென்றனர். வருடந் தோறும் 27, 30, 34 மாணவர்கள் வரை பல்கலைக்கழகம் சென்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்தனர். இவர்களில் மருத்துவ நிபுணர்கள் விஞ்ஞானப்பட்டதாரிகள் அடங்குவார். 1970ல் மொழிவாரித் தரப் படுத்தல் காரணமாக பல்கலைக்குச் செல்லுந் தகுதி பெற்றும் குறைந்த வீதத்தினரே பல்கலைக்கழகம் சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. எனினும் உயர் கல்வி பெற்ற பட்டதாரிகள் இலங்கையில் பல பாகங்களிலும் பல துறை களிலும் பிரசித்தி பெற்று விளங்குகின்றனர்.

அரசு பொறுப்பேற்ற பின் அரசாங்க பாடத்திட்டத்திற்கு அமைவாகக் கற்பித்தாலும் கல்லூரி நிறுவுனருடைய நோக்கத்தை நிறைவேற்றி வருகிறது. சமய அனுஷ்டானங்கள் பேணுதல், சீருடை ஒழுக்கம், புனித விழாக்கள், குருபூசைத் தினங்கள் என்பன நடைபெறுகின்றன. பண்ணோடிசை பாடலில் தமிழ் பாரம்பரியம் பேணியும், சீருடை தமிழ் விழுமியங்களைக் காத்தும், உயர்தர மாணவர் சீருடை தேசிய பண்பாட்டை மிளிரவைக்கும் சிறப்பைக் காணலாம். வணக்கத்தலங்களாக நடராஜர் ஆலயமும், சமாதி ஆலயமும் விளங்குகின்றன.

நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்கள் காரணமாக, இடிபாடுகள், இடப்பெயர்வுகள், போன்றவற்றிற்கு கல்லூரி முகங்கொடுத்து சேதமடைந்த கட்டிடங்கள் எல்லாம் மீள புனரமைக்கப்பட்டு மீண்டும் மீண்டும் இராமநாதன் கல்லூரி மிடுக்கும் இளமையும் குன்றாது புதுப்பொலிவுடன் எழுந்து நின்று நூற்றாண்டு விழாவை மூன்று நாட்கள் கொண்டாடியுள்ளமை பெருமைக்குரிய விடயமாகும். இதற்கு உறுதுணையாக இருந்தோர் வெளிநாட்டு உள்நாட்டு, பழைய மாணவர்கள், இராமநாதனின் வாரிசாக விளங்கும் சுவாமிநாதன், பேராசிரியர் திரு.க.சிற்றம்பலம், நலன் விரும்பி சச்சிதானந்தம், அதிபர்கள், ஆசிரியர்கள். இவர்கள் அனைவரினதும் ஆதரவுமே காரணமாகும்.

கல்லூரியானது கலைத்துறையில் பல சாதனைகளை நிலை நாட்டியுள்ளது. நாட்டிய நாடகங்கள் 10க்கும் மேற்பட்டவை தேசிய மட்டப்பரிசில்களைப் பெற்றுள்ளன. இதே போல் இராமநாதன் அக்கடமி செல்வோர் தொகை கூடி வருகிறது. விளையாட்டுத்துறை கணிதம், முதலியவற்றிலும் அரச விருதுகள் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கலாசார அபிவிருத்தி செயற்றிட்டம் 2014

**திருமதி பத்மராணி சிவஞானராசா**
**கலாசார உத்தியோகத்தர்,**
**உடுவில்.**

கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, பிரதேச செயலகங்களில் மேற்கொள்ளப்படும் கலாசார அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்காக பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஊடாக, 2014 ஆம் ஆண்டு ஒவ்வொரு பிரதேச செயலகத்திற்கும் ஐந்து இலட்சம் ரூபாவினை ஒதுக்கியிருந்தது. இந்நிதி மூலம் பல அபிவிருத்தி செயற்றிட்டங்களை பிரதேச செயலகங்கள் ஊடாக செயற்படுத்தக்கூடியதாக இருந்தன.

இந்த வகையில் கடந்த வருடம் வலிதெற்கு பிரதேச செயலகத்தினால் பின்வரும் கலாசார அபிவிருத்தி செயற்றிட்டங்கள் நிறைவேற் றப்பட்டன.

01. கலாசார விழிப்புணர்வுக் கருத்தரங்கு
இன்றைய காலத்தின் தேவை கருதி பெருகிவரும் கலாசார சீரழிவுகளை தடுக்கும் வகையிலும், அவை பற்றிய விழிப்புணர்வினை மாணவர்கள் மத்தியிலும் பெற்றோர்கள் மத்தியிலும் ஏற்படுத்தும் முகமாகவும் தெரிவு செய்யப்பட்ட மூன்று பாடசாலைகளிலும், இரண்டு கிராமங்களிலும், சிறுவர் துஸ்பிரயோகம், ஏனைய கலாசார சீரழிவுகளை எவ்வாறு தவிர்ப்பது, தொடர்பான கருத்தரங்கினை நிறைவேற்றியிருந்தோம்.

02. இசைப்பயிற்சிப்பட்டறை க.பொ.த உயர்தர வகுப்பு மாணவர்களின் நலன் கருதி உடுவில் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட சங்கீதத்தை ஒரு பாடமாகக் கற்கின்ற உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு ஐந்து நாட்கள் தொடர்ந்து பயிற்சிகளை வழங்கி யிருந்தோம். இதன்மூலம் அம்மாணவர்கள் சிறந்த பலனைப் பெற்றிருந்தார்கள். பயிற்சியின் இறுதியில் இவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

03. சித்திரப் பயிற்சிப்பட்டறை
க.பொ.த. சாதாரணதரம் மற்றும் உயர்தரத்தில் சித்திரத்தை பாடமாகக் கற்கின்ற மாணவர்களுக்காக ஐந்து நாட்கள் பயிற்சி வகுப்புகள் நடாத்தப்பட்டன. பயிற்சிக்கான காகிதாதிகளும், கலர்ப்பெட்டிகளும் பயிற்சியில் பங்குபற்றிய அனைவருக்கும் எம்மால் வழங்கப்பட்டன. அத்துடன் பயிற்சி நாள் இறுதியில் அவர்களால் வரையப்பட்ட படங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. பயிற்சியின் இறுதியில் இவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

04. நாடகமும் அரங்கியலும் பயிற்சிப்பட்டறை
க.பொ.த.உயர்தரத்தில் நாடகமும் அரங்கியலை ஒரு பாடமாகக் கற்கின்ற மாணவர்களுக்கு மூன்று நாட்கள்

பயிற்சி வகுப்புகள் நடாத்தப்பட்டன. இதன் மூலம் இம்மாணவர்கள் சிறந்த பலனைப் பெற்றுக் கொண் டார்கள்.

05. மன்றங்களுக்கான ஊக்குவிப்பு

மன்றங்களின் வளர்ச்சிக்காக ஒவ் வொரு மன்றத்திற்கும் ரூபா பத்தாயிரம் வீதம் எட்டு மன்றங்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டது.

06. எழுத்தாளர் ஊக்குவிப்பு

பிரதேசத்தை சேர்ந்த எழுத்தாளர் திருமதி. மு.இந்திராணி அவர்களின் கவிதைத் தொகுதி வெளியீட்டிற்காக ஊக்குவிப் புத் தொகையாக ரூபா இருபத்தையாயி ரம் வழங்கப்பட்டது.

07. ஆவணப்படுத்தல்

ஆவணப்படுத்தல் திட்டத்தின் கீழ் எமது முன்னோர்களால் பாவிக்கப்பட்டு இன்று மறைந்து போய்க்கொண்டிருக்கின்ற பாரம் பரிய பாவனைப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டது.

08. கலாசார விழா

பிரதேச கலாசார விழா கொண்டாடப் பட்டது. பிரதேச கலைகளையும், கலை ஞர்களையும் ஊக்குவிக்கு முகமாக அவர்களது கலை நிகழ்வுகள் நடை பெற்றன. அத்துடன் ஆறு கலைஞர்கள் "ஞானஏந்தல்" விருது வழங்கிக் கௌர விக்கப்பட்டார்கள். கலாசாரத் திணைக் களத்தினால் வருடாந்தம் நடாத்தப்படும் தேசிய கலை இலக்கியப் போட்டி களில் பங்குபற்றி பரிசுகளை வென்றவர்களுக் கான பரிசளிப்பும் இவ் விழாவில் இடம் பெற்றது.

09. பிரதேச மலர் வெளியீடு

பிரதேச மலர் வெளியீட்டிற்காக ஒரு இலட்சம் ரூபாவினை ஒதுக்கியிருந்தது. அதன் செயற்பாடாகவே "கலைநிலம்" என்ற பண்பாட்டு மலர் வெளிவருகின்றது.





2012ல் நடைபெற்ற கலாசாரவிழா



2012ல் நடைபெற்ற கலாசாரவிழாவில் காலை அமர்வில் பிரதமவிருந்தினராகக் கலந்து சிறப்பித்த திரு சி.சத்தியசீலன் செயலாளர், வடமாகாண கல்விபண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு



கிராமத்தில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு



பாடசாலைகளில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு - 2013




இசைப் பயிற்சிப்பட்டறை




சித்திரப் பயிற்சிப்பட்டறை



பயிற்சிப்பட்டறையில் வரைந்த ஓவியம்
காட்சிப்படுத்தப்பட்டமை



பாடசாலைகளில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு - 2014



பாடசாலைகளில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு - 2014



பாடசாலைகளில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு - 2014

# பிரதேச செயலக கலாசாரப் பேரவை



இருப்பவர்கள்

**இ.வ:** திரு.ஆ.தெய்வேந்திரம் *(உப தலைவர்)*, திரு.சி.மகாலிங்கம் *(நிர்வாக உறுப்பினர்)*, திருமதி.சி.பத்மராணி *(செயலாளர்)*, திரு.மு.நந்தகோபாலன் *(தலைவர்)*, திருமதி.சி.ஞானகுமாரி *(நிர்வாக உறுப்பினர்)*, செல்வி.சி.யோகேஸ்வரி *(நிர்வாக உறுப்பினர்)*, திரு.எஸ்.சண்முகானந்தன் *(நிர்வாக உறுப்பினர்)*

நிற்பவர்கள்

**இ.வ:** திரு.மு.பொன்னுத்துரை *(நிர்வாக உறுப்பினர்)*, திரு.ந.பரமேஸ்வரன் *(நிர்வாக உறுப்பினர்)*, திரு.க.கஜன் *(நிர்வாக உறுப்பினர்)*, திரு.இ.எயூயீன் மசனட் *(நிர்வாக உறுப்பினர்)*, திரு.வே.நாகேந்திரராஜா *(நிர்வாக உறுப்பினர்)*, திரு.பொ.ஜெயகரன் *(நிர்வாக உறுப்பினர்)*

சமுகமளிக்காதவர்கள்

திரு.கா.சசிதரன் *(உப செயலாளர்)*, திரு.மா.சீவரத்தினம் *(பொருளாளர்)*




2014ம் ஆண்டு வலிதெற்கு, உடுவில் பிரதேச கலாசாரப் பெருவிழாவிலே ஞானஏந்தல் விருதுவழங்கிக் கௌரவிக்கப்பட்ட கலைஞர்களுடன் கலாசாரப் பேரவையின் அங்கத்தவர்களும் நிகழ்வின் விருந்தினர்களும் காணப்படுகின்றனர்

19 2124
24 DEC 201
2124

# வலிகாமம் தெற்கு பிரதேச செயலகம்




Printed by : Mathi Colours, Muthiraisanthi. 021 2229285